*க0. "பிரஹ்மமில்லை" என்பதாகப் பிரஹ்மத்தினது அசத்தத் (இல்லையென்) தன்மையை ஆபாதகஞ்செய்யும் (சம்பாதிக்கும்) ஆவரணம் (மறைப்பு) அசத்துவாபாதகஆவரணமாம்.

கஅ. வினா :—பரோக்ஷப்பிரஹ்மஞானம் எப்போது பூரணமாகும் ?

விடை :—(ச. அவதி) பரோக்ஷப்பிரஹ்மஞானம் பிரஹ்மநிஷ்டகுரு வேதாந்தசாஸ்திராதி சாரமாகப் பிரஹ்மசொரூபத்தை நிச்சயஞ்செய்யப் பூரணமாகும்.

கக. வினா :— அபரோக்ஷப்பிரஹ்மஞானமென்பது யாது ?

விடை :— (க. சொரூபம்) "சச்சிதானந்தமாகிய பிரஹ்மம் நான்" என்று அறிதல் *கக. அபரோக்ஷப்பிரஹ்மஞானமாம்.

கஉ. வினா:—அபரோக்ஷப்பிரஹ்மஞானம் எதனுலுண்டாம் ?

விடை :—(உ. ஏது) "आचार्यवान् पुरुषो वेद ஆசாரியனையுடைய புருஷன் அறிகிறன்." என்னும் சாந்தோக்கியசுருதியினல் குருமுகமாகத் "தத்துவமஸி" முதலிய மகாவாக்கியத்

---

* கக. "अहं ब्रह्मेति चेद्वेद साक्षात्कारस्स उच्यते

நான் பிரஹ்மம் என்று அறியின், அது சாக்ஷாத்காரம் அதாவது அபரோக்ஷஞான மெனப்படும்" என்பது வாசகோபநிஷத்து.

தின் சிரவணத்தால் அபரோக்ஷப்பிரஹ்மஞான மூண்டாம்.

கஙூ. வினா :— அபரோக்ஷப்பிரஹ்மஞானம் எத்தனை வகையாம் ?

விடை :— அபரோக்ஷப்பிரஹ்மஞானம் அதிடம் (உறுதியில்லாதது) திடம் (உறுதியானது) என்னும் பேதத்தால் இரண்டுவகையாம்.

கச. வினா :— அதிடஅபரோக்ஷப்பிரஹ்மஞான மென்பது யாது ?

விடை :—(க. சொரூபம்) *கஉ. அசம்பாவனை

---

* கஉ. க. வேதாந்தத்தில் ஜீவப்பிரஹ்மங்களின் பேதம் பிரதிபாதிக்க சொல்லப்பட்டிருக்கின்றதா ? அல்லது அபேதம் பிரதிபாதிக்கப்பட்டிருக்கின்றதா ? என்பது பிரமாணகதசமசயம்.

உ. "ஜீவப்பிரஹ்மங்களின் பேதம் சத்தியமா ? அல்லது அபேதம் சத்தியமா ? " என்பது பிரமேயகத சமசயம்.

இவ்விருவகைச்சமசயமும் அசம்பாவனை யெனப்படும். சமசயம் = ஐயம். அது இரண்டு (பல) கோடி (பகூங்)களையுடைய ஞானம். அசம்பாவனையினை அபேதமுதலியன சம்பவியாமை (பொருந்தாமை) லக்ஷணமெனக்கொண்டு சம்சயத்தினும் வேறெனக் கொள்வது மூண்டு.

* கஙு. விபரீதபாவனைகளோடு உண்டாகும் பிரஹ்மாத்ம ஐக்கியநிச்சயம் அதிடஅபரோகூஷ்ப் பிரஹ்மஞானமாம்.

சுரு. விஞ:—அதிட அபரோகூஷ்ப்பிரஹ்மஞானம் எதனலுண்டாகும் ?

விடை :—(உ. ஏது) க. சிறிது *கச. மலவிகூஷபதோஷ முளதாகச் சுருதிநாகரத்துவத்தின் ஞானமும்,

உ. பிரஹ்மத்தின் அத்வைதத்தன்மையின் அசம்பவஞ்ஞானமும்,

ஙு. பேதவாதிபாமரபுருஷர்களது சங்கத்தின் சம்ஸ்காரமும்

ஆகிய இவற்றோடுகூடிய புருஷனுக்குக் குருமுகமாக மகாவாக்கியசிரவணத்தால் அதிடஅபரோகூஞானம் உண்டாம்.

கசு. விஞ :—அதிடஅப்பரோகூஞானத்தால் உண்டாவது யாது ?

கஙு. " ஜீவப்பிரஹ்மங்களின் பேதமும் சத்தியம் ; தேகாதிப்பிரபஞ்சமும் சத்தியம." என்னும் விபரீதநிச்சயம் விபரீதபாவனையாம். விபரீதம்=திரிபு.

*கச. மலம்=பாபம். விகூஷபம்=சித்தத்தின் சஞ்சலத்தன்மை.

விடை :— (க. பலம்) அதிடஅபரோகஜ்ஞானத்தால் க. உத்தமலோகப்பிராப்தியும், உ. புனிதமாகிய ஸ்ரீமான்களது குலத்திலேனும் அல்லது நிஷ்காமத்தன்மையால் ஞானவான்களது குலத்திலேனும் ஜன்ம முண்டாம்.

கஎ. வினு:— அதிடஅபரோகஜ்ஞானம் எப்போது பூரணமாகும் ?

விடை :— (க. அவதி) சத்து சித்து ஆநந்த முதலிய பிரஹ்மவிசேஷணங்களின் அபரோகஜ்ஞானம் உண்டாகியும் சமூசயவிபரீதபாவனைகளிருக்குமாயின், அப்போது அதிட அபரோகஜ்ஞானம் பூரணமாகும்.

கஅ. வினு :— திட அபரோகஜ்ஞான மென்பது யாது ?

விடை :— (க. சொரூபம்) அசம்பாவனாவிபரீதபாவனைகளில்லாமல் உண்டாகும் பிரஹ்மாத்மைக்கியநிச்சயம் திடஅபரோகஜ்ப்ரஹ்மஞானமாம்.

கக. வினு :— திடஅபரோகஜ்ப்ரஹ்மஞானம் எதனுலுண்டாம் ?

விடை:—(உ. ஏது) குருமுகமாக *கரு. ம்கார வாக்கிய அர்த்தத்தின் சிரவணமனனநிதித்தியாசனமாகியவிசாரம் செய்வதால் நிடஅபரோக்ஷப்பிரஹ்மஞான முண்டாம்.

உ0. வினு:—நிடஅபரோக்ஷஞானத்தால் உண்டாவது யாது?

விடை:—(ரு. பலம்) *கசு. அபாணுபாதக ஆவரணமும் *கள. விக்ஷேபமுமாகிய காரியத்தோடு அவித்தையி (அஞ்ஞானத்தி)ன் நிவிருத்தியுண்டாய்ப் பிரஹ்மப்பிராப்தியாகிய மோக்ஷமுண்டாம்.

உக. வினு:—நிடஅபரோக்ஷஞானம் எப்போது பூரணமாகும்?

---

*கரு. ஜீவப்பிரஹ்மங்களின் ஐக்கியர்த்த (ஆத்மாவும் பிரஹ்மமும் ஒன்று என்னுந் தன்மையை) அறிவிக்கும் வாக்கியம் மகாவாக்கியம்.

*கசு. "பிரஹ்மம் தோற்றவில்லை" என்பதாக அபாண்மாகிய பிரஹ்மத்தின் அப்பிரதீதி (தோற்றுமை)யை ஆபாதகஞ்செய்யும் (சம்பாதிக்கும்) ஆவரணம் அபாணுபாதகஆவரணமாம்.

*கள. ஸ்தூலசூக்ஷுமசரீரத்தோடு கூடிய சிதாபாசனும், அன்னது தருமமாகிய கருத்திருத்துவ போக்திருத்துவ ஜனனமரணுதிகளும் விக்ஷேபமாம்.

விடை :—(உ. அவதி) தேகத்திலுள்ள நானென்னும் ஞானத்தைப் பாதித்து, இதைப்போலப் பிரஹ்மாபின்னமாகிய ஆத்மாவில் எப்போது ஞான முண்டாகுமோ, அப்போது திடஅபரோக்ஷஞானம் பூரணமாகும்.

உஉ. வினு :—விசார மென்பதுயாது ?

விடை :—(க. சொரூபம்) ஆத்மாநாத்மாக்களை வேறுபிரித்தறிதல் விசாரமாம்.

உங. வினு:—இந்த விசாரம் எதனை யுண்டாகும் ?

விடை :—(உ. ஏது) இந்த விசாரம் ஈசுவரன், வேதம், குரு, தனது அந்தக்கரணம் என்னும் *கஅ. இந்நான்கன் கிருபையா லுண்டாகும்.

---

* கஅ. க. சற்குருமுதலிய ஞானசாமக்கிரி (சாதனங்) களின் பிராப்தி ஈசுவரகிருபை.

உ. சாஸ்திரார்த்தத்தின் தாரண (ஞாபக) சக்தி வேதகிருபை.

ங. சாஸ்திரானுசாரமாகவும் தனதுஅநுபவானுசாரமாகவும் யதார்த்த உபதேசத்தைச் செய்தல் குருகிருபை.

ச. சாஸ்திரானுசாரமாகவும் குருவாக்கியானுசாரமாகவும் சாதனங்களைச்சம்பாதித்தல் தனது அந்தக்கரணத்

உச. வினா:—இந்த விசாரத்தாலுண்டாவது யாது?

விடை:—(சு. பலம்) *ककக. இந்த விசாரத்தால் திடஅபரோக்ஷஞானம் உண்டாம்.

தின்கிருபை, குருகிருபை வேண்டுமென்பது மகோபநிஷத்தின் சுவது அத்தியாயத்திலும், மகாநாராயணோபநிஷத்தின் டுவது அத்தியாயத்திலும், பிரஹ்மவித்தியோபநிஷத்திலும், அத்வயதாரகோபநிஷத்திலும், அந்தக்காணக்கிருபை வேண்டுமென்பது,

"चित्तस्य हि प्रसादेन हन्ति कर्म शुभाशुभम् ।
प्रसन्नात्मात्मनि स्थित्वा सुखमव्ययमश्नुते ॥

இத்தத்தின் பிரசாதத்தினாலேயே சுபாசுபமான கர்மத்தினைக் கெடுக்கின்றான். பிரசன்னந்தக்காண முடையவன் ஆத்மாவில் நிலைத்து அவ்யயசுகத்தை யநுபவிக்கின்றான்." என்று மைத்தியாயணியுபநிஷத்தின் சுவது பிரபாடகத்திலும், மைத்தியுபோபநிஷத்தின் முதலத்தியாயத்திலும் கூறியிருத்தல் காண்க ஈசுவரகிருபையும் வேதகிருபையும் வேண்டுமென்பது பிரசித்தம்.

* ककक. "अविचारकृतो बंधो विचारान्मोक्षो भवति। तस्मात्सदा विचारयेत् । अध्यारोपापवादतस्स्वरूपं निश्चयीकर्तुं शक्यते ॥

உடு. வினா :—இந்த விசாரம் எப்போது பூரணமாகும் ?

விடை :—(சு. அவதி) இந்த விசாரம் நிடஅபரோக்ஷஞான முண்டாகுமாயின் பூரணமாகும்.

உசு. வினா :—எதை விசாரிக்கவேண்டும் ?

விடை :—(டு. விஷயம்) கு. நான் யார் ? உ. பிரஹ்மமென்பது யாது? கூ. பிரபஞ்சமென்பது யாது ? என்று *உ0. இம்மூன்று வஸ்துக்களையும் விசாரிக்கவேண்டும்.

உஎ. வினா :—இம்மூன்று வஸ்துக்களின் சாக்ஷாரணவடிவம் யாது ?

அவிசாரத்தினாலாகியது பந்தம். விசாரத்தினால் (நிடபரோக்ஷஞானவாயிலாக) மோக்ஷ முண்டாகின்றது. ஆதலால் எப்போதும் விசாரிக்கவேண்டும். அத்தியாரோபாபவாதத்தினால் சொரூபம் (தனதுவடிவம்) நிச்சயஞ்செய்யக்கூடியதாம்.” என்னும் பைங்கலகுருதியினால் விசாரமே ஞானவாயிலாக மோக்ஷமென்பது வென்பது பெறப்படுகின்றது.

*உ0. “ तस्मात्सदा विचारयेज्जगज्जीवपरमात्मनः॥

ஆதலால், ஜகத்து ஜீவன் பரமாத்மா இம்மூன்றையும் எப்போதும் விசாரிக்கவேண்டும்.” என்பது பைங்கலகுருதி.

விடை :—"க. ஞானும், உ. பிரஹ்மமும், சைதன்னியம்; ங. *உ. பிரபஞ்சம் ஜடம்."

உஅ. வினா :—சைதன்னிய மென்பதுயாது?

விடை :—

(க) எது ஞானவடிவமாய்,

(உ) சகல கடாதிப் பிரபஞ்சங்களையும் அறிகிறதோ,

(ங) எதை அந்தியமாகிய மன இந்திரியாதிகளெவையும் அறியமாட்டாவோ,

அது சைதன்னியம்.

உக. வினா :—ஜடமென்பது யாது?

விடை :—

(க) தன்னை யறியாததும்,

(உ) மற்றவைகளை யறியாததுமான

---

* உக. சமஷ்டி வியஷ்டி ஸ்தூல சூக்ஷ்ம காரண தேகங்களும், அவற்றின் அவஸ்தைகளும், தர்மங்களும் பிரபஞ்ச மெனப்படும்.

*உஉ. அஞ்ஞானமும், அதனது காரியமாகிய *ஊக. பூத *உச. பௌதிகபதார்த்தங்களும் ஜடமாம்.

கூ. வினா:—மேற் கூறப்பட்ட மூன்று வஸ்துக்களின் விசாரம் எந்தவிதமாக உபயோகப்படும்?

விடை:—(கு. உபயோகம்) க. "தத்துவமஸி" மகாவாக்கியத்திலுள்ள "துவம்" பத "தத்" பதங்களின் வாச்சியார்த்தமாகிய *உரு. ஜீவ *உசு. ஈசுவரர்களது *உள. உபாதியாகிய

---

*உஉ. "யான் அறியேன்" என்னும் வியவகாரத்திற்கு ஏதுவாகிய ஆவரணவிக்ஷேபசக்திகளையுடைய அக்ஞானஸ்வரூபம் அஞ்ஞானம்.

*உக. ஆகாசமுதலிய ஐந்தும் பூதம்.

*உச. பூதங்களின் காரியமாகிய பிண்டப்பிரஹ்மாண்டாதிகள் பௌதிகம்.

*உரு. சிதாபாசஞ்ஞேடுகூடிய அந்தக்கரணத்தோடுகூடஸ்தசைதன்னியம் ஜீவன்.

*உசு. சிதாபாசஞ்ஞேடுகூடிய மாயையோடு பிரஹ்மசைதன்னியம் ஈசுவரன்.

*உள எது தனது ஆசிரயத்தின் சொரூபத்திற்பிரவேசியாமல், அதனைப் பிறவற்றினின்றும் வேறுபடுத்தறிவிக்கின்றதோ அது உபாதியாம். அது கடம் தனது

*உ அ. பிரபஞ்சத்தைப் பழுதையில் பாம்புபோலும், கட்டையில் புருஷன்போலும், மருபூமியில் கானற்சலம்போலும் விசாரத்தால் மித்தை யென வறிந்து நீக்குதல் பிரபஞ்சவிசாரத்தின் உபயோகமாம்.

உ. "யாஞ்சிய ("துவம்" பதலக்ஷியார்த்த) ஆத்மா, அந்த ("தத்" பதலக்ஷியார்த்த)ப் பிரஹ்மமமா யிருக்கிறேன்," என்று *உகூ. பிரஹ்மாத்ம ஐக்கியத்தை விசாரத்தினல் சத்திய மென்றறிந்து மிஞ்சவைத்தல், "நான்யார்?"

ஆசிரயமாகிய ஆகாயத்தின் சொரூபத்தில் பிரவேசியாது, அக்கடாகாயத்தைப் பிற மகாகாயமுதலியவற்றினின்றும் வேறுபிரித்தறிவித்தலால் உபாதியாதல் போலவாம்.

* உ அ. சமஷ்டிவியஷ்டியாகிய மூன்றுசரீரம், பஞ்சகோசம், மூன்றவஸ்தைமுதலிய நாமரூபங்கள் பிரபஞ்சமெனப்படும்.

*உகூ. "जीवभावजगद्भावबोधे प्रत्यगभिन्नब्रह्मैवावशिष्यते ॥

ஜீவத்தன்மைஜகத்தன்மைகளே யறிந்தகாலத்தில் பிரத்தியகபின்னபிரஹ்மமே மிஞ்சுகின்றது." என்னும் பைங்கலகருதியினல் பிரஹ்மாத்மவைக்கியம் மிஞ்சுதல் காண்க.

"பிரஹ்மமென்பது யாது?" என்னும் விசாரத்திற்கு உபயோக (பல) மாம்.

ஙக. வினா:—இந்த விசாரத்திற்கு அதிகாரியாவன்? அவன் என்ன செய்யவேண்டும்?

விடை:— (எ. விசாரத்தினதிகாரி) க. இந்த விசாரத்திற்கு அதிகாரி *ஙo. உத்தமஜிஞ்ஞாசு. உ. அவன் சற்குருகிருபையால் உபோற்காதமுதலிய *ஙக. பிரக்கிரியைகளை விசாரித்து, "நான்தானே பிரஹ்மமாயிருக்கிறேன்" என்று பிரஹ்மாத்மாவைஅபரோக்ஷமாக அறியவேண்டும்.

ஙஉ. வினா:—அந்தப்பிரக்கிரியைகளின்பெயர்க ளெவை.

---

*ஙo. விவேகம், வைராக்கியம், ஷட்சம்பத்தி, மும்முக்ஷுத்துவம் என்னு மிந்நான்கு சாதனங்களோடு கூடினவனுயும், பிரஹ்மநிஷ்டராகிய குருவினது வாக்கியத்திலும் வேதாந்தசாஸ்திரத்திலும் பரமவிசுவாசமுடையவனுயும். ஒருபோதும் குதர்க்கஞ்செய்யாத வனுயும், சொரூபத்தை அறியவேண்டுமென்னும் தீவிர இச்சையுள்ளவனுயு மிருக்கும் அதிகாரி உத்தமஜிஞ்ஞாசு (ஞானவிருப்பமுள்ளவன்).

*ஙக. அத்வைதத்தைப் போதிக்கும் யாதேனும் ஓர் பிரகாரம் (விதம்) பிரக்கிரியையாம்.

விடை:—

க. உபோற்காதம்.

உ. பிரபஞ்சத்தின் ஆரோப அபவாதங்கள்.

ங. தேக மூன்றற்கும் நான் திருஷ்டா (பார்க்கிறவன்).

ச. நான் பஞ்சகோசாதீதன்.

ஞ. அவஸ்தை மூன்றற்கும் நான் சாக்ஷி.

சு. பிரபஞ்சத்தின் மித்தியாத்தன்மை.

எ. ஆத்மாவின் விசேஷணம்.

அ. சச்சிதானந்தவிசேஷவர்ணனம்.

கூ. அவாச்சியசித்தாந்தவர்ணனம்.

கஅ. சாமானியசைதன்னியம்; விசேஷசைதன்னியம்.

கக. "தத்" பத "துவம்" பதங்களின் வாச்சியார்த்தலக்ஷியார்த்தங்களும்; அவ்விரண்டிலக்ஷியார்த்தங்களினது ஐக்கியமும்.

கஉ. ஞானியின் கர்மநிவிருத்தி.

கங. ஞானபூமி ஏழு.

கச. ஜீவன்முக்தி விதேகமுக்தி.

கரு. வேதாந்தப்பிரமேயம்.

ககூ. வேதாந்தபதார்த்தங்களின்பெயர் அல்லது இலகூவேதாந்தகோசம்.

இவை *ஙஉ. அந்தப் பிரகிரியைகளின் பெயர்களாம்.

ஸ்ரீ விசாரசந்திரோதயம் முதற்கலை
உபோற்காதவர்ணகம்
முற்றிற்று.

---

*ஙஉ. க. பிரபஞ்சத்தின்விசாரம் க-வது, உ-வது, சு-வது, கஉ-வது, கங-வது பிரக்கிரியை (கலை)களிலும்,

உ. பிரபஞ்சத்தோடு "நான் யார்?" என்னும் விசாரம் ங-வது, ச-வது, ஞ-வது, பிரக்கிரியைகளிலும்,

ங. "பரமாத்மா யார்?" என்னும் விசாரம் கo-வது பிரக்கிரியையிலும்,

ச. பிரஹ்மாத்மாக்க ளிருவர்களது சொரூபத்தின் விசாரம் எ-வது, அ-வது, கூ-வது, ஙக-வது, ஙச-வது பிரக்கிரியைகளிலும்,

ஞ. பிரபஞ்சபிரஹ்மாத்மாக்களது சொரூபவிசாரம் கஞ-வதுபிரக்கிரியையிலும்செய்யப்பட்டிருக்கின்றது. சகலப்பிரக்கிரியைகளுக்கும் "தத்" பத "துவம்" பதார்த்தங்களின் சோதனமும், அவற்றின் ஐக்கியநிச்சயமும் பிரயோஜனமாம்.



ஸ்ரீ விசாரசந்திரோதயம்.

இரண்டாங்கலை.

* க. பிரபஞ்சாரோபாபவாதம்.

பிரபஞ்ச மதனு ரோபா பவாத
மெனுமிவை தம்மா னிட்பிர பஞ்ச
வத்துவே பிரஹ்ம மற்றைமா யாதி
யவத்துவென் றன்ப வறிவாய் நீயே. (க)
பிரமம் மாயை யவற்றின் னியைபு
சீவனே டீச னவற்றின் பேத
மென்பவை யாறு மநாதி யாகு
மவற்றிற் பிரம மநந்த மெனப்படும். (உ)
வத்துவி லவத்துவைக் கூறலா ரோபம்
பாதித் தவத்துவை வத்துவை யியம்ப
லபவாத மென்றே யுறையப் படுமேற்
குரவ னருளி* னீப் பொருந்துமா றுணர்ந்து
தமத்துக ளொழித்துத் தனையே யுணர்க. (ங)

---

*க. இதனைப் பைங்கலசுருதியிற் காண்க.
* (இப்பொருந்துமாறு-இந்தயுக்தி)

ஙஙூ. வினா :—சுத்தப்பிரஹ்மத்தில் பிரபஞ்சத்தின் * உ. ஆரோபம் எப்படி உண்டாயிருக்கிறது ?

விடை :— *ஙூ. அநாதிசுத்தப்பிரஹ்மத்தில் *ச. அநாதி *ஞி. கற்பிதமாகிய பிரகிருதிஉண்டு. அந்தப் பிரகிருதிக்குப் பிரஹ்மத்தோடு அநாதி கற்பிததாதாத்மிய (கற்பிதபேதத்தோடு வாஸ்தவஅபேதமாகிய) சம்பந்த முண்டு.

அந்தப்பிரகிருதி, க. மாயை, உ. அவித்தை, ங. தமப்பிரதானப் பிரகிருதியெனப் பிரிவைஅடைகின்றது. அவற்றுள்,

க. *சு. சுத்தசத்துவகுணத்தோடு கூடியது மாயை.

உ. *எ. மலினசத்துவகுணத்தோடு கூடியது அவித்தை.

ங. தமோகுணத்தின்முக்கியத்தன்மையோடு கூடியது தமப்பிரதானப்பிரகிருதி.

---

* உ. வஸ்துவி(பிரஹ்மத்தி)ல் அவஸ்துவை (அஜ்ஞானத்தை)யும் அதன் காரியத்தையும் கூறுதல் ஆரோபமாம்; இதனையே அத்தியாரோப மென்றும் கூறுவர். வஸ்து = மெய்ப்பொருள். அவஸ்து = பொய்ப்பொருள்.

*ஈ. அநாதிசுத்தப்பிரஹ்மத்தில் அநாதிகற்பிதமாகிய பிரகிருதி உண்டு என்பதற்கு,

"तस्मिन्मरुशुक्तिकास्थाणुस्फटिकादौ जलरौप्य-पुरुषरेखादिवल्लोहितशुक्लकृष्णगुणमयी गुणसाम्याऽनिर्वाच्या मूलप्रकृतिरासीत् ॥

அவ்வத்விதீயப்பிரஹ்மத்தில் கானல் சுத்தி தாணு படிக முதலியவற்றில் நீர் வெள்ளி புருஷன் இரேகை முதலியவற்றைப்போல வெண்மை செம்மை கருமை யென் னும் குணமயமானதும், குணசாம்மியமும், அநிர்வாச்சியமு(இத்தன்மையதென்று உறுதியாய்ச்சொல்ல முடியாதது)மான மூலப்பிரகிருதி இருந்தது." என் னும் பைங்கலசுருதியும், மற்றச் கோபாலதாபநீயம், வராகம், நிராலம்பம், ஸர்வசார முதலிய சுருதிகளும் பிரமாணமாதல் காண்க.

*உ. உற்பத்தியில்லாத பொருள் சொரூபமாக அநாதியாம். அப்படிப்பட்டவை சுத்தப்பிரஹ்மம், பிரகிருதி, அவற்றின் சம்பந்தம், ஈசுவான், ஜீவன், அவற்றின் பேதம் என்னும் ஆறுமாம். பிரவாகரூபமாகப் பிரபஞ்சமும் அநாதியாம்.

*ஊ. எது இல்லாததாய்ச் சோப்பனபதார்த்தங்களைப்போலப் பிராந்தியினால் விளங்குகின்றதோ, அது கற்பிதமாம் (கற்பிக்கப்பட்டதாம்). மாயை கற்பிதமென்பதனைப் பாருபசேதாபநிஷத்திற் காண்க.

* சு. "शुद्धसत्त्वप्रधानायां मायायां बिंबितोऽजः । सत्त्वप्रधाना प्रकृतिर्मायेति प्रतिपाद्यते ॥ सा माया स्ववशोपाधिस्सर्वज्ञस्येश्वरस्य हि । वश्यमायत्वमेकत्वं सर्वज्ञत्वं च तस्य तु ॥

சுத்தசத்துவப்பிரதானமான மாயையில் பிரதிபிம்பித்தவரே அஜர் அதாவது ஈசுவரன். சத்துவப்பிரதானம் பிரகிருதி மாயை யென்று சொல்லப்படுகின்றது. அந்த மாயை சர்வஜ்ஞருகிய ஈசுவரனுக்குத் தன் வசப்பட்ட உபாதியாம். ஆதலால் அவ்வீசுவரனுக்கு வசப்பட்டமாயையினை யுடைமையும், ஏகத்தன்மையும், சர்வஜ்ஞத்தன்மையும் உண்டு." என்னும் சாஸ்வதீபிரஹ்ஸ்யோபநிஷத்தின் கரு-கரு வாக்கியத்தால் சுத்தசத்துவப்பிரதானம் மாயை யென்பதும், அதிற்பிரதிபிம்பித்தவன் ஈசுவரன் என்பதும், அவன் சர்வஜ்ஞன் ஏக னென்பதும் காண்க. சூத்திரியசூத்திரர்களாகிய மந்திரிகளால் அமிழ்த்தப்படாத பிராஹ்மணருகிய இராஜாவைப்போல, இரஜோதமோகுணங்களால் அமிழ்த்தப்படாது தான் அவற்றை அமிழ்த்தியிருப்பதாகிய சத்துவகுணம் சுத்த சத்துவகுணமாம்.

*எ. இரஜோதமோகுணங்களே அமிழ்த்தாமல் சூத்திரர்களாகிய இரண்டு இராஜகுமாரர்களால் அமிழ்த்தப்படும் பிராஹ்மணருகிய ஒரு மந்திரியைப்போல, இரஜோ

க. *அ. மாயையிலுள்ள பிரஹ்மத்தின் பிரதிபிம்பம், அதிஷ்டான (பிரஹ்ம) த்துடனும்

தமோகுணங்களால் தான் அமிழ்த்தப்பட்டிருப்பதாகிய சத்துவகுணம் மலின சத்துவகுணமாம்.

*அ. "ब्रह्मैव स्वशक्तिं प्रकृत्यभिधेयमाश्रित्य लोकान् सृष्ट्वा प्रविश्यांतर्यामित्वेन ब्रह्मादीनां बुद्धींद्रियनियन्तृत्वादीश्वरः।" "ईश्वर एव ब्रह्मविष्ण्वीशानेंद्रादीनां नामरूपद्वारा स्थूलोहमित्यध्यासवशाज्जीवः॥ सोऽयमेकोऽपि देहारंभकभेदवशाद्बहुजीवः॥"

"பிரஹ்மமேபிரகிருதி யென்னும் பெயருடைய தனதுசக்தியினை ஆசிரயித்து அதாவது இடமாகக்கொண்டு உலகங்களைச் சிருஷ்டித்து, பிரவேசித்து, அந்தரியாமித்தன்மையாகப் பிரஹ்மாமுதலியோரின் புத்தீந்திரியங்களை நியமிப்பதாயிருத்தலால் ஈசுவரனும்." "ஈசுவரனே பிரஹ்ம விஷ்ணு ஈசான இந்திராதியரின் நாமரூபவாயிலாகத் தூலன் யான் என்னும் அத்தியாசவசத்தால் ஜீவ னாகின்றான். அத்தன்மைய இவன் ஒருவனாயினும், தேகாரம்பகபேதவசத்தால்வெகுஜீவ னாவன்." என்னும் சுக்கிலயஜுர்வேதத்திலுள்ள நிராலம்போபநிஷத்தும்,

"ममत्वेन भवेज्जीवो निर्ममत्वेन केवलः।

(யான்) எனதெனுந்தன்மையால் ஜீவ னுகின்றன் எனதெனுந்தன்மையின்மையால் கேவல (சிவ) னுகின் றன்." என்னும் யோகசூடாமணியுபநிஷத்தும்,

"पशुपतिरहंकाराविष्टस्संसारी जीवः स एव पशुः ॥ सर्वज्ञः पंचकृत्यसंपन्नस्सर्वेश्वर ईशः पशुपतिः ॥

பசுபதியே அகங்காரத்திற் பிரவேசித்துச் சம்சாரி ஜீவனும், அவரே பசுவாகின்றார். சர்வஜ்ஞ ரப்பஞ்சகிருத்தியத்தோடு கூடிய சர்வேசுவரான ஈசன் பசுபதியாவர்." என்னும் சாமவேதீய ஜாபாலியுபநிஷத்தும்,

"अहंकाराभिमानेन जीवस्स्याद्धि सदाशिवः

அகங்காராபிமானத்தினுல் சதாசிவன் ஜீவனுகின்ற ன்." என்னும் திரிசிகிபிராஹ்மணோபநிஷத்தும்,

"शक्तिद्वयं हि मायाया विक्षेपावृतिरूपकं ॥ विक्षेपशक्तिर्लिंगादिब्रह्माण्डांतं जगत्सृजेत् । अंतर्दृश्ययोर्भेदं बहिश्च ब्रह्मसर्गयोः ॥ आवृणोत्यपरा शक्तिस्सा संसारस्य कारणम् । साक्षिणः पुरतो भातं लिंगदेहेन संयुतम् । चितिच्छायासमावेशाज्जीवस्स्याद्व्यावहारिकः । अस्य जीवत्वमारोपात्साक्षिण्यप्यवभासते ॥

மாயைக்கு விக்ஷேபம் ஆவரண மென்னும் இரண்டு சக்திகளுண்டு, அவற்றுள், விக்ஷேபசக்தி இலிங்காதிப்

பிரஹ்மாண்டாந்தமான ஜகத்தைச் சிருஷ்டிக்கின்றது. மற்றைச்சக்தி உள்ளில் திருக்கூத்திருசியங்களின் பேதத்தையும், வெளியில் பிரஹ்மசர்க்கங்களின் பேதத்தையும் மறைக்கின்றது. அது ஸம்சாரத்திற்குக் காரணம்; சாக்ஷிக்குமுன் விளங்குகின்றது; இவிங்கபேதத்தோடு கூடியதா யிருக்கின்றது. அதில் சிற்சாயையின் பிரவேசத்தால்வியாவகாரிகஜீவ ரூபின்றான். இதன்ஜீவத்துவம் ஆரோபத்தினால் சாக்ஷியினிடத்துத் தோற்றுகின்றது." என்னும் ருக்வேதத்தின் சாஸ்வதிராஹஸ்யோபநிஷத்தும்,

" घटाकाशमठाकाशौ महाकाशे प्रतिष्ठितौ ।
एवं मयि चिदाकाशे जीवेशौ परिकल्पितौ ॥

கடாகாசமடாகாசங்கள் மகாகாசத்தில் நிலைத்திருக்கின்றன. இவ்வாறு சிதாகாசமாகிய என்னிடத்து ஜீவேசர்கள் கற்பிக்கப்பட்டிருக்கின்றனர்." என்னும் யஜுர்வேதிய வாராகோபநிஷத்தும்,

" मयि जीवत्वमीशत्वं कल्पितं वस्तुतो नहि ॥

என்னிடத்து ஜீவத்துவமும் ஈசத்துவமும் கற்பிதமாம்; உண்மையாக இல்லை." என்னும் ருக்வேதிய சாஸ்வதிராஹஸ்யோபநிஷத்தும்,

" सर्वज्ञेशो मायालेशसमन्वितो व्यष्टिदेहं प्रविश्य ।
तया मोहितो जीवत्वमगमत् । शरीरत्रयतादात्म्यात्क-

*கூ. மாயையுடனும் கூடி ஜகத்கர்த்தாவாகிய சர்வஜ்ஞேசுவர னெனப்படும்.

तूरीत्वभोक्तृत्वमगमत् । जाग्रत्स्वप्नसुषुप्तिमूर्छामरण धर्म-युक्तो घटीयंत्रवदुद्विग्नो जातो मृत इव कुलालचक्रन्या-येन परिभ्रमति ॥

சர்வஜ்ஞ ஈசன் மாயாலேசத்தோடு கூடியவனுய் விசுத்தசைதன்யத்திற் பிரகேசித்து, அதனுல் மோகிக்கப்பட்டவனுய், ஜீவத்தன்மையை அடைந்தான்; சரீரத்திரயதாதாத்மியத்தால் கர்த்திருத்தன்மை போக்திருத்தன்மையை யடைந்தான். ஜாக்கிர சொப்பன சுழுத்தி மூர்ச்சா மரணதர்மங்களோடு கூடியவனுய்க் கலசங்கள்கட்டிய ஏற்றம் போல் கலக்கமுடையவனுய்ப் பிறந்தவன் இறந்தவன்போலக் குலாலசக்காரியாயத்தால் (குயவன் சக்காம்போலச்) சுழல்கின்றன்.” என்னும் பைங்க லோபநிஷத்துமாகிய இவைமுதலிய சுருதிகள் பிரஹ்மமே ஜகத்துக்குக் காரணமென்பதற்கும், பிரஹ்மமே மாயை அவித்தையுபாதிகளால் ஈசனும் ஜீவனுமாமென்பதற்கும், ஜீவேசுவரர் கற்பிதரென்பதற்கும், மாயைக்கு ஆவரணம் விக்ஷேப மென்று இரண்டு சக்திகளுண்டென்பதற்கும், அவை சொரூபத்தை மறைத்துப் பிரபஞ்சத்தைக் காட்டுமென்பதற்கும் பிரமாணமாதல் காண்க.

*க. இங்கே மாயை யென்னும் சத்தத்தால் மாயையும் தமப்பிரதானப்பிரகிருதியுமாகிய இவ்விரண்டு ஈசுவரனது உபாதிகளும் கொள்ளப்படும். அவற்றுள்,

உ. அவித்தையிலுள்ள பிரஹ்மத்தின் பிரதிபிம்பம், அதிஷ்டானத்து (கூடஸ்தரு)டனும்அவித்தையுடனும் கூடிப்போக்தாவாகிய அற்பஞ்ஞஜீவ னெனப்படும்.

அந்த ஈசுவராஜீவர்களும் அநாதிகற்பிதராவர்.

அவர்களுள்,

க. ஈசுவரனது உபாதியாகிய மாயை ஏகமா (ஒன்று)யும் *க0. ஆபேக்ஷிகவியாபகமாயு மிருத்தலால் ஈசுவரனும் ஏகமாயும் வியாபகமாயு மிருக்கின்றனர்.

க. மாயையாகிய உபாதியைக்கொண்டு ஈசுவரன் குலாலனைப்போல ஜகத்திற்கு நிமித்தகாரணமும்,

உ. தமப்பிரதானப்பிரகிருதியைக்கொண்டுமண்போல ஜகத்திற்கு உபாதானகாரணமு மாகின்றார்.

* க0. ஒன்றன் அபேக்ஷையால் வியாபகமாயும் மற்றொன்றன் அபேக்ஷையால் பரிச்சின்னமாயு மிருப்பது ஆபேக்ஷிகவியாபக மெனப்படும். வீடானது கடாதிகளின் அபேக்ஷையால் வியாபகமாயும், கிராமத்தின் அபேக்ஷையால் பரிச்சின்னமாயுமிருக்கின்றது ஆகையால் ஆபேக்ஷிகவியாபகமாம். அதுபோல மாயையும்

உ. ஜீவனது உபாதியாகிய அவித்தை நாநாவாயும் பரிச்சின்னமாயு மிருத்தலால் ஜீவனும் நாநாவும் பரிச்சின்னமுமாம்.

அந்த ஜீவேசுவரர்களுக்கு அநாதிகற்பிதபேத முண்டு.

க. சிருஷ்டிக்கு முன்னே, அந்த ஜீவர்களது உபாதியாகிய அவித்தை ஜீவர்களது கர்மத்துடனே மாயையில் ஒடுங்கியிருக்கிறது. அந்த மாயை சுழுத்தியில் அவித்தையைப்போலப் பிரஹ்மத்துக்கு வேறுபத் தோற்று (சித்திக்)கிறதில்லை. ஆகையால் *கக. சிருஷ்டிக்கு முன்னே சஜாதீயவிஜாதீயசுவகதபேத மில்லாத ஒரே அத்துவிதீயசச்சிதானந்தப் பிரஹ்ம மிருந்தது.

பிருதிவிமுதலியவற்றின் அபேக்ஷையால் வியாபகமா (அதிக தேசத்திலுள்ளதா)யும், பிரஹ்மத்தின் அபேக்ஷையால் பரிச்சின்னமா (குறைந்தவிடத்துள்ளதா)யு மிருக்கின்றது. ஆகையால் ஆபேக்ஷிகவியாபகமாம்.

*கக. இதனை "सदेव सौम्येदमग्र आसीदेकमेवाद्वितीयं तद्ध एक आहुः ॥

உ. அந்தப் பிரஹ்மத்திற்குச் சிருஷ்டியின் ஆரம்பத்தில் ஜீவர்களது பரிபக்குவப்பட்ட கர்

சௌமியனே! இது முன் ஒரே அத்விதீயப்பிரஹ்மமான சத்தாகவே இருந்தது. அதனை நிச்சயமாக ஒன்றென்று கூறுவர்." என்னும் சாந்தோக்கியம்ஆருவது பிரபாடகத்தின் முதல் கண்டமும்,

"आत्मा वा इदमेक एवाग्र आसीन्नान्यत् किंचन मिषत् ॥

இது முன் நிச்சயமாக ஒரே ஆத்மாவாயிருந்தது; ஒரு சிறிதும் வியாபாரமுடையதாய் வேறு இருந்ததில்லை." என்னும் ஐதரேயத்தின் முதலத்தியாயம் முதல் கண்டமும்,

"आत्मैवेदमग्र आसीत् ॥

இது முன் ஆத்மாவாகவே இருந்தது." என்னும் பிருகதாரணியகம் முதல் அத்தியாயம் நான்காவது பிராஹ்மணம் முதலாவது சுருதிவாக்கியமும்,

"सदेव सौम्येदमग्र आसीत् ॥

சௌமியனே! இது முன் சத்தாகவே யிருந்தது." என்னும் பைங்கலத்தின் முதலத்தியாயமும், மற்றும் அநேக சுருதிகளும் கூறுதல் காண்க.

மமாகிய நிமித்தத்தால் "*கஉ. ஒன்றுகிய யான் அநேகரூப மாவேன்." என்னும் இச்சை யுண்டாயிற்று.

ங. அந்த இச்சையினால் பிரஹ்மத்தின் உபாதியாகிய மாயையில் *கங. க்ஷோபமுண்டாய்க்

*கஉ. "सोऽकामयत बहुस्यां प्रजायेयेति। स तपोऽतप्यत। स तपस्तप्त्वा। इदं सर्वमसृजत यदिदं किंच। तत्सृष्ट्वा। तदेवानुप्राविशत्।

அவர் (வெகு ஆவேன் அநேகமாகப் பிறப்பேன் என்று விரும்பினர். அவர் ஆலோசனையைச் செய்தார். அவர் ஆலோசனையாகிய தபத்தைச்செய்து, இவ்வெல்லாவற்றையும் சிருஷ்டித்தார். யாதொரு இந்த ஜகத்துண்டோ அதனைச் சிருஷ்டித்து, அதன்கண்ணேயே பிரவேசித்தார்." என்னும் தைத்திரீயம் உ-வதுவல்லி சு-வது அநுவாகத்திலும், இவ்வாறே சாந்தோக்கியம் சு-வது பிரபாடகம் உ-வதுகண்டத்திலும், ஐதரேயம் முதல் அத்தியாயம் முதல் கண்டத்திலும், பிரசிஷ்னோபநிஷத்து ஆறுவதுபிரசினத்திலும், முண்டகோபநிஷத்து முதல் முண்டகம் முதல் கண்டத்திலும், யஜுர்வேதத்தின் யோகசிகோபநிஷத்து முதல் அத்தியாயத்திலும் பிரஹ்மத்தில் சிருஷ்டிக்குக் காரணமான ஈக்ஷணம் அதாவது சங்கற்பம் உண்டானமை காண்க.

*கங. காரியமாதற் கெதிர்ப்பமே நிலைமையினே க்ஷோப மென்றும், கலக்க மென்றும் கூறுவர்.

கிரமமாக ஆகாயம் வாயு தேயு அப்பு பிருதிவி யென்னும் பஞ்சமகாபூதங்களும் உண்டாயின,

ச. அவற்றிற்குப் * கச. பஞ்சீகரணமுண்டாகாதிருந்தது; அப்போது அவை * கஙி. அபஞ்சீகிருதமா யிருந்தன. அவற்றினின்றும் சமஷ்டிவியஷ்டியாகிய சூக்ஷ்மசிருஷ்டி யுண்டாய்ப், பின்னர் ஈசுவரனது இச்சையால் அவற்றிற்குப் பஞ்சீகரண முண்டானகாலத்து அவை பஞ்சீகி

---

* கச. அவ்வைந்தாகச் செய்தலைப் பஞ்சீகரண மென்பர். அவ்வைந்தாக்கப்பட்டதனைப் பஞ்சீகிருத மென்பர். பஞ்சீகரணம் செய்தலை ஈ-வது கலையிற் காண்க.

* கஙி. பிரஹ்மமாகிய ஆத்மாவினின்றும் அபஞ்சீகிருதபூதங்க ளுண்டாயின என்பதற்கு

"ब्रह्मभूतात्मनस्तस्मादेतस्माच्छक्तिमिश्रितात् । अपंचीकृत आकाशस्संभूतो रज्जुसर्पवत् । आकाशाद्वायुसंज्ञस्तु ॥

அந்த இச்சைச் சக்தியோடுகலந்த பிரஹ்மவடிவ ஆத்மாவினின்றும் பழுதையிற் பாம்புபோல அபஞ்சீகிருத ஆகாய முண்டாயிற்று. ஆகாயத்தினின்றும் வாயுவென்னும் பெயருடைய துண்டாயிற்று." என்னும் கடோபநிஷத்து, பைங்கலம் முதலத்தியாயம், தைத்திரீயம் இரண்டாவது வல்லி முதல் அநுவாக முதலியனவும் பிரமாணமாதல் காண்க.

ருத மாயின. *ககசு. அவைகளினின்றும் சமஷ்டி வியஷ்டியாகிய ஸ்தூலசிருஷ்டி உண்டாயிற்று.

ரூ. அவற்றில் சமஷ்டிஸ்தூலசூக்ஷ்மகாரணப் பிரபஞ்சத்திற்கு அபிமானி, ஜீவனது பார்வையால் ஈசுவரனும், வியஷ்டிஸ்தூலசூக்ஷ்மகாரணப்பிரபஞ்சத்திற்கு அபிமானி ஜீவனுமாவர். அவர்களுள், ஈசுவரன் சர்வஜ்ஞனுயிருத்தலால் நித்தியமுக்தனும், ஜீவன் அற்பஜ்ஞனுயிருத்தலால் பெத்தனுமாவர்.

இவ்வாறு சுத்தப்பிரஹ்மத்தில் பிரபஞ்சத்தின் ஆரோப முண்டாயிருக்கிறது.

நச. வினு:—இவ்வாரோபம் சத்தியமா? மித்தையா?

விடை :—இவ்வாரோபம் பழுதையில் பாம்பு போலவும், சாக்கியில் சொப்பனம் போலவும்,

---

*ககசு. இதனை "ईशः पंचीकृतमहाभूतलेशानादाय व्यष्टिसमष्ट्यात्मकस्थूलशरीराणि यथाक्रममकरोत् ।

ஈசுவரன் பஞ்சீகிருதமகாபூதங்களின் இலேசங்களைக் கொண்டு வியஷ்டி சமஷ்டிவடிவஸ்தூலசரீரங்களைக்கிரமப்படி செய்தார்," என்னும் பைங்கலோபநிஷத்திற் காண்க.

கண்ணுடியில்நகரப்பிரதிபிம்பம்போலவும்* கள. மித்தையாம்.

---

* கள.ஆரோபம் மித்தையா மென்பதற்கு,

"अथ कतिपदार्था इति । सदसन्मिथ्या चेति त्रयः । सदेव तत्र ब्रह्म असत्तुच्छं । जगत्कल्पितं ब्रह्मण्यसत्यं मिथ्या ॥

இனிப்பதார்த்தங்கள் எத்தனையெனின், அவை சத்து அசத்து மித்தை யெனமூன்றும். அவற்றுள், சத்தே பிரஹ்மம். அசத்து துச்சம் அதாவது ஒன்று மில்லாததாம். மித்தை யென்பது பிரஹ்மத்தின்கண் இல்லாததாய்க் கற்பிக்கப்பட்டுள்ள ஜகத்தாம்." என்னும் சர்வசாரோபநிஷத்தும்,

"स्वप्नजगदभ्रगजादितुल्यं । तद्रज्जुसर्पवत्कल्पितम् ॥

அந்த ஜகத்து சொப்பனஜகத்தையும் மேகத்திற்றோன்றும்யானைமுதலியவற்றையும் ஒத்ததாம். அது இரஜ்ஜுசர்ப்பம்போற் கற்பிதமாம்" என்னும் ருக்வேதத்தின் நிர்வாணோபநிஷத்தும்,

"लीलया कल्पयामास चित्रास्संकल्पतः प्रजाः । नानाचारसमारंभा गंधर्वनगरं यथा" "विरिंचिरूपान्म-

நடு. வினா:—இவ்வாரோபம் எதனாலுண்டாகிறது?

விடை:—இவ்வாரோப மஞ்ஞானத்தினாலுண்டாகிறது.

நகூ. வினா:—இவ்வாரோபம் எக்காலத்தது? ஏனுண்டாயிருக்கும்? என்னும் விசாரம் எப்படியுண்டாகும்?

விடை:—ஓர் புருஷனது வஸ்திரத்தில் எண்ணூறு கறை பட்டிருக்குமாயின், அதை அறிந்து நீக்குதற்கு உபாயந் தேடவேண்டும்; அப்படிக்கில்லாமல் "இக்கறை எக்காலத்தது? எப்படிப் பட்டிருக்கும்?" என்று விசாரித்தலால் ஒரு பிரயோஜனமு மில்லாதது போல, "இந்தப்பிரபஞ்

नसः कल्पितत्वाज्जगत्स्थितेः । तावत्स्थितिरियं प्रोक्ता तन्नाशे नाशमाप्नुयात् ॥"

"நாநா ஆசாரத்தோடுகூடியவர்களாய்ப் பலவித பிரஜைகளைக் கந்தர்வநகரம் போலத் தமது சங்கற்பத்தால் விளையாட்டாகக் கற்பித்தார்." "பிரஹ்மவடிவ மனதினின்றும் கற்பிக்கப்பட்டதாயிருத்தலின் ஜகத்தின் ஸ்திதிக்கு அதுவரையிலுமே இந்த ஸ்திதி சொல்லப்பட்டுள்ளது. அம்மனதின் நாசத்தில் நாசத்தினை யடைகின்றது." என்னும் மகோபநிஷத்தும் பிரமாணமாம்.

சத்தின் ஆரோபம் எக்காலத்தது ? ஏன்உண்டா யிருக்கும் ? " என்று விசாரித்தலாலும் ஒரு பிரயோஜனமும் மில்லை. ஆனால் இதை நிவர்த்திக்க உபாயம் செய்தல் தகுதியாம்.

ஈஎ. வினா :—இவ்வெல்லா ஆரோபங்களும் எப்படி நிவர்த்தியாகும் ?

விடை :—

க. பிரஹ்மஞானத்தால் மாயை அவித்தைகளின் நிவிருத்தி உண்டாகின்றது.

உ. அதனால் காரியத்தோடு பிரகிருதியின் நிவிருத்தி உண்டாகின்றது.

ங. அதனால் பிரகிருதிப்பிரஹ்மங்களின் சம்பந்தநிவிருத்தி உண்டாகின்றது.

ச. *கஅ. அதனால் ஜீவத்தன்மை ஈசுவரத்தன்மைகளின் நிவிருத்தி உண்டாகின்றது.

ஞ. அதனால் ஜீவேசுவர்களின் பேதநிவிருத்தி உண்டாகின்றது;

---

*கஅ. " मायातत्कार्यविलये नेश्वरत्वं न जीवता ।

(பிரஹ்மஞானத்தால்) மாயையும் அதன் காரியமும் நீங்கியபோது ஈசுவரத்தன்மையுமில்லை; ஜீவத்தன்மையுமில்லை." என்பது வாகோபநிஷத்து,

சு. அதனால் பந்தநிவிருத்தி உண்டாய் மோக்ஷம் சித்தமாகின்றது.

இவ்வாறு ஒரேகாலத்தில் சகலஆரோபங்களின் நிவிருத்தியாகிய *ககூ. அபவாத மூண்டாகின்றது.

ஈஅ. வினு :—இந்தப் பிரஹ்மஞானம் எதனால் உண்டாகும் ?

விடை :—இந்தப் பிரஹ்மஞானம் மேற் சொல்லப்படும் விசாரத்தால் உண்டாகும்.

ஸ்ரீ விசாரசந்திரோதயம் இரண்டாங்கலை

பிரபஞ்சாரோபாபவாதம்

முற்றிற்று.

---

* ககூ. சர்ப்பத்தையும் அதனது ஞானத்தையும்பாதித்தலால் இரஜ்ஜுவாகிய அதிஷ்டானம் அவசேஷமா (மிஞ்சு)வது போலப் பிரபஞ்சத்தையும் அதனது ஞானத்தையும் பாதித்தலால் அதிஷ்டானமாகிய சுத்தப்பிரஹ்மம் மிஞ்சுதல் அபவாதமாம். பாதித்தல்=மித்தை (பொய்)யென நிச்சயித்தல்.



ஸ்ரீ விசாரசந்திரோதயம்.

மூன்றுங்கலை.

* க. தேகமூன்றற்கும் நான் திருஷ்டா.

மூவகை யுடலையுங் காண்பவன் யானே
தூலஞ் சூக்குமங் காரண மெனுமிம்
மூவுட றிருகிய மகான்மா வென்றுணர். (க)

அவ்வைந் தாகிய வைம்பெரும் பூதத்
தைந்தோ டிருபான் றத்துவத் தினதாந்
தூலம் போகா யதந மெனப்படு
மையைந் தாக்கப் படாதவைம் பூதப்
பதினெழு தத்துவத் தினதாஞ் சூக்குமம்
போகசா தனமாப் போற்றப் படுமஃ
தறியாமை காரண தேகங் குடம்போற்
றிருகிய மிதனைக் காண்பான் யானென்
றுணர்ந்து திருகிய மொழித்திடு வாயே. (உ)

---

* க. இந்தஸ்தூலதேகமுதலியன நானல்லஎன்பதற்கு,

கூ. வினா :— முதற்பிரக்கிரியை "மூன்று தேகங்களுக்கும் நான் திருஷ்டா." அம்மூன்று தேகங்கள் எவை ?

விடை :—ஸ்தூலதேகம் சூக்ஷமதேகம் காரணதேகம் என்னுமிவை மூன்றுதேகங்களாம்.

க. ஸ்தூலதேகத்திற்கு நான் திருஷ்டா.

ச. வினா :—ஸ்தூலதேக மென்பது யாது ?

"நாஹं தேஹோ ந ச ப்ராணோ நேந்த்ரியாணி மனோ நஹி ।
ஸதா ஸாக்ஷிஸ்வரூபத்வாச்சிவ ஏவாஸ்மி கேவலः ॥

யான் தேகமல்லன்; பிராணனல்லன்; இந்திரியங்களல்லன்; மனதல்லன். எப்போதும் சாக்ஷிசொரூபமாயிருத்தலால் சிவமே நான்." என்னும் தரிசனோபநிஷத்து,

"ஸ்தூலதேஹவிஹீனாத்மா ஸூக்ஷ்மதேஹவிவர்ஜிதः காரணாதி-விஹீனாத்மா ।

ஆத்மா ஸ்தூலதேக மில்லாதது, சூக்ஷ்மதேக மில்லாதது, காரணதேக மில்லாதது." என்னும் தேஜோபிந்தூபநிஷத்து,

"அகாயமவ்ரணமஸ்நாவிரँ ॥

அவ்வாத்மா சரீரமில்லாதது, புண்ணில்லாதது, நரம்பில்லாதது". என்னும் ஈசாவாஸ்யம் முதலிய அநேக சுருதிகள் பிரமாணமாதல் காண்க.

விடை :—*உ. ஸ்தூலதேகம் பஞ்சீகிருதபஞ்சமகாபூதங்களின் இருபத்தைந்து தத்துவங்களினதாம்.

சக. வினா :—பஞ்சமகாபூதங்கள் எவை?

விடை :—ஆகாயம், வாயு, தேயு, ஜலம், பிருதிவி என்னும்இவை பஞ்சமகாபூதங்களாம்.

சஉ. வினா :—பஞ்சமகாபூதங்களின் இருபத்தைந்து தத்துவ(பதார்த்தி)ங்கள் எவை?

க-டி. விடை :—ஆகாயத்தின் ஐந்து தத்துவங்கள் :—சோகம், *ங. காமம், குரோதம், *ச. மோகம், பயம் என்பனவாம்.

சு-கo. வாயுவின் ஐந்து தத்துவங்கள் :—நடத்தல், இருத்தல், ஓடல், விரிதல் (நிமிர்தல்), சுருங்குதல் (வளைதல்) என்பனவாம்.

---

*உ. ஸ்தூலசரீரம் பஞ்சீகிருத பஞ்சமகாபூதங்களின் இருபத்தைந்து தத்துவமாயிருத்தலையும், அவற்றின் கூறுபாட்டையும் இந்நூலிற் கூறியபடியே சாரீரகோபநிஷத்தும், பைங்கலோபநிஷத்தின் உ-வது அத்தியாயமும் கூறுதல் காண்க.

*ங. யாதேனும் ஓர் போகத்தின் இச்சை காமமெனப்படும்.

*ச. அகந்தை மமதை வடிவமாகிய புத்தி மோகமாம். அகந்தை=யானெனல், மமதை=எனதெனல்.

கக-கஙி. தேயுவின் ஐந்து தத்துவங்கள் :— பசி, தாகம், சோம்பல், நித்திரை, காந்தி(ஒளி) என்பனவாம்.

கசு-உ0. ஜலத்தின் ஐந்து தத்துவங்கள் :— சுக்கிலம்(வீரியம்), சோணிதம் (உதிரம்),உமிழ் நீர்(வாய்நீர்), மூத்திரம், சுவேதம் (வியர்வை) என்பனவாம்.

உக-உஙி. பிருதிவியின் ஐந்து தத்துவங்கள்:— எலும்பு, மாமிசம், நாடி(நரம்பு), தோல், உரோமம் என்பனவாம்.

இவை பஞ்சமகாபூதங்களின் இருபத்தைந்து தத்துவங்களின் பெயர்களாம்.

சஙு. வினா :—பஞ்சீகிருதபஞ்சமகாபூதங்கள் எவை?

விடை :—எந்தப் பூதங்களுக்குப் *ஙி. பஞ்சீகரண மூண்டாயிருக்கிறதோ, அவை பஞ்சீகிருதபஞ்சமகாபூதங்களெனப்படும்.

சச. வினா :—பஞ்சீகரண மென்பது யாது?

---

* ஙி. முதலில் அபஞ்சீகிருதபஞ்சமகாபூதங்களிருந்தன. அவற்றிற்கு ஈசுவர இச்சையால் ஸ்தூலசிருஷ்டி வாயிலாக ஜீவர்களது போகத்தின்பொருட்டு ஒன்றற் கொன்று கலத்தலாகியபஞ்சீகரண மூண்டாயிருக்கின்றது.

விடை :— *கூ. ஐந்து பூதங்களினின்றும் ஒவ்வொன்றை இரண்டிரண்டு பாகஞ் செய்ய, அவை பத்தாயின. அவற்றினின்றும் முதல் ஐந்து பாகங்களையும் நிறுத்திவிட்டு, மற்ற ஐந்து பாகங்களினின்றும் ஒவ்வொரு பாகத்தையும் நந்நான்கு பாகமாக்கி, அந்த நந்நான்கு பாகங்களையும் ஆகாயாதி பூதங்களின் யாதொரு தத்தம் அரை அரை மூக்கிய பாகங்கள் நிறுத்தப்பட்டிருக்கின்றனவோ, அவற்றிற்சேர்க்காமல் தத்தம்மின் வேறுகிய நான்கு பூதங்களின் அரை அரைப்பாகங்களில் சேர்த்தல் பஞ்சீகரண மெனப்படும்.

சகு. விஞ :—பஞ்சபூதங்களுக்குப் பரஸ்பரம் (ஒன்றற்கொன்று) எப்படிக் கலப்புண்டாகிறது ?

விடை :—திருஷ்டாந்தம் :—ஓர் ஐந்து சிநேகிதர்கள் மா வாழைமுதலிய ஒவ்வொரு பழத்தை ஒன்றுய்ச் சேர்த்துத்தின்னத் தொடங்கிச் சகலரும் தங்கள் தங்கள் பழத்தை இரண்டிரண்டாகச் செய்து, அரை அரைப்பாகத்தைத் தங்கள் பொருட்டு வைத்துக்கொண்டு, மிஞ்சிய அரை அரைப்பங்கை நந்நான்காக்கி, நான்கு சிநேகித

* கூ. இவ்விதத்தினைப் பைங்கலோபநிஷத்து உரைவது அத்தியாயத்திற் காண்க.

ர்களுக்கும் பிரித்துக் கொடுப்பார்களாயின், அப்போது ஐந்துபழங்களுக்கும் ஒன்றற் கொன்று கலப்புண்டாகிறது.

சித்தாந்தம் :—

க. அதுபோல ஆகாயத்தை இரண்டுபங்கு செய்து, அவற்றுள்,

(க) ஒருபாகத்தை வைத்து,

(உ) மற்றப் பாகத்தை நான்கு பாகஞ்செய்து, அவற்றினின்றும் ஆகாயத்திற் சேர்க்காமல்,

[க] ஒன்றை வாயுவிலும்,
[உ] ஒன்றைத் தேயுவிலும்,
[ங] ஒன்றை அப்புவிலும்,
[ச] ஒன்றைப் பிருதிவியிலுமாகச் சேர்த்தல்வேண்டும்.

உ. இப்படியே வாயுவை இரண்டுபங்குசெய்து, அவற்றுள்,

(க) ஒருபாகத்தை வைத்து,

(உ) மற்றப் பாகத்தை நான்குபாகஞ்செய்து, அவற்றினின்றும் வாயுவிற் சேர்க்காமல்,

[க] ஒன்றை ஆகாயத்திலும்,
[உ] ஒன்றை அக்கினியிலும்,

[ங] ஒன்றை அப்புவினும்,

[ச] ஒன்றைப் பிருதிவியினுமாகச் சேர்த்தல்வேண்டும்.

ங. இப்படியே தேயுவை இரண்டுபங்கு செய்து, அவற்றுள்,

(க) ஒருபாகத்தை வைத்து,

(உ) மற்றப் பாகத்தை நான்கு பாகஞ்செய்து, அவற்றினின்றும் தேயுவிற் சேர்க்காமல்,

[க] ஒன்றை ஆகாயத்தினும்,

[உ] ஒன்றை வாயுவினும்,

[ங] ஒன்றை அப்புவினும்,

[ச] ஒன்றைப் பிருதிவியினுமாகச் சேர்த்தல்வேண்டும்.

ச. இப்படியே அப்புவை இரண்டுபங்கு செய்து, அவற்றுள்,

(க) ஒருபாகத்தை வைத்து,

(உ) மற்றப் பாகத்தை நான்கு பாகஞ்செய்து, அவற்றினின்றும் அப்புவிற் சேர்க்காமல்,

[க] ஒன்றை ஆகாயத்தினும்,

[உ] ஒன்றை வாயுவினும்,

[ங] ஒன்றை அக்கினியினும்,

[ச] ஒன்றைப் பிருதிவியிலுமாகச் சேர்த்தல் வேண்டும்.

ரு. இப்படியே பிருதிவியை இரண்டுபங்கு செய்து, அவற்றுள்,

(க) ஒருபாகத்தை வைத்து,

(உ) மற்றப் பாகத்தை நான்கு பாகஞ்செய்து, அவற்றினின்றும் பிருதிவியிற் சேர்க்காமல்,

[க] ஒன்றை ஆகாயத்திலும்,
[உ] ஒன்றை வாயுவிலும்,
[ங] ஒன்றை அக்கினியிலும்,
[ச] ஒன்றை அப்புவிலுமாகச் சேர்த்தல்வேண்டும்.

இவ்வாறு இருபத்தைந்து தத்துவங்கள் உண்டாவதனால் பஞ்சமகாபூதங்களுக்கு ஒன்றற் கொன்று கலப்புண்டாகிறது.

சசு. வினு :—பஞ்சமகாபூதங்களின் இருபத்தைந்து தத்துவங்கள் எப்படியுண்டாயின ?

விடை :—சகலபூதங்களுக்கும் தத்தம் முக்கியபாகம் ஒன்றும், மற்றப்பூதங்களினது அமுக்கியபாகங்கள் நான்கும் சேர்ந்திருக்கின்றன. அதனால் ஒவ்வொருபூதத்திற்கும் ஐந்து ஐந்து தத்துவங்களாயின. அவைகளெல்லாஞ் சேர்ந்து இருபத்தைந்து தத்துவங்களாயின.

சன. வினு :—ஸ்தூலதேகத்தில் இந்த இருபத்தைந்து தத்துவங்களும் எப்படி யிருக்கின்றன ?

விடை :—

க-ரு. *எ. ஆகாயத்தின் ஐந்துதத்துவங்கள்:—(க) சோகம், (உ) காமம், (ங) குரோதம், (ச) மோகம், (ஞ) பயம் என்பனவாம். அவற்றுள்,

---

*எ. சில நூல்களில் சிரம், கண்டம், இதயம், உதரம், இடை என்னும் இடங்களிலுள்ள ஆகாயங்களின் ஆகாயத்தின் ஐந்து தத்துவங்க ளெனப்படும். அவற்றுள்,

க. ஆகாசத்(அடித்தல் முதலிய நிமித்தமின்றியெழும்) சப்தத்திற்கு ஆசிரயமா யிருத்தலால், சிரத்திலுள்ள ஆகாயம் ஆகாயத்தின் முக்கியபாகமாம்.

உ. சுவாசப் பிரசுவாசங்களுக்கு ஆசிரயமா யிருத்தலால், கண்டதேசத்திலுள்ள ஆகாயம் வாயுவின் பாகமாம்.

ங. பித்தத்திற்கு ஆசிரயமா யிருத்தலால், இதயதேசத்திலுள்ள ஆகாயம் தேயுவின் பாகமாம்.

ச. குடிக்கப்பட்ட ஜலத்திற்கு ஆசிரயமா யிருத்தலால், உதாதேசத்திலுள்ள ஆகாயம் ஜலத்தின் பாகமாம்.

ஞ. கந்தத்திற்கு ஆசிரயமா யிருத்தலால், இடையிலுள்ள ஆகாயம் பிருதிவியின் பாகமாம்.

இவ்வாற்றால் சோககாமக்குரோதாதிகள் ஸ்தூலதேகத்தின் தத்துவங்களன்று; ஆனால் இலிங்கதேகத்தின்

க. *அ. சோகம் :—ஆகாயத்தின் முக்கியபாக மாம். ஏனெனில், சோகமுண்டாகும்போது சரீரம் சூந்தியம்போலாகின்றது; ஆகாயமும் சூந்தியம்போன் றிருக்கிறது. ஆகையால் இது ஆகாயத்தின் முக்கியபாகமாம்.

(உ). *கூ. காமம் :—ஆகாயத்தில் வாயுவின் பாகம்சேர்ந்திருக்கிறது. ஏனெனின், காமமாகிய

தருமங்களாம். அந்தியநிரந்தரத்தின் நிரமமாகவோ சோகாதிகள் இலிங்கதேகத்தின் முக்கியதர்மங்களாம்; குடத்தில் நீரினது குளிர்ச்சியின் ஆவேசம்போல இவற்றின் ஆவேசம் ஸ்தூலதேகத்தில் உண்டாகிறது. ஆதலால் ஸ்தூலதேகத்திற்தும் கௌணதர்மமாக எனப்படும்.

*அ. வாயுமுதலிய பூதங்களின் பாகங்களிலும் ஆகாயத்தின் அந்திய ரண்டு பாகங்களினின்றும் ஒவ்வொரு பாகஞ் சேர்ந்திருக்கிறது; அவை ஆகாயத்தின் முக்கிய பாகமாகச் சொல்லப்படாவிடினும், சோகத்திற்கும் ஆகாயத்திற்கும் சமானத்தன்மை இருத்தலால், சோகம் ஆகாயத்தின் முக்கியபாகமாம்.

சிலவிடத்தில் உலோபமும் ஆர்பத்தைப்போல பதார்த்தங்களின் பிராப்தியால் நிறைவிலலாததாயிருத்தலால், ஆகாயத்தின் முக்கியபாகமாகச் சொல்லப்பட்டிருக்கின்றது.

இப்படியே மற்றப் பூதங்களிலும் அறிந்துகொள்ளுக.

*கூ. பிதாவிற்குச் சமானமாகப் புத்திரன் இருத்தல்போலக் காமம் வாயுவிற்குச் சமானமாயிருக்கின்றது.

விருத்தி சஞ்சலமாம்; வாயுவும் சஞ்சலமாம். ஆகையால் இது வாயுவின் பாகமாம்.

(கூ) குரோதம்:—ஆகாயத்தில் தேயுவின்பாகம்சேர்ந்திருக்கிறது. எனெனின், கோபம் வரும்போது சரீரம் கொதிப்புடைய தாகின்றது; தேயுவும் கொதிப்புடையதாயிருக்கிறது. ஆகையால் இது தேயுவின் பாகமாம்.

(ச) மோகம்:—ஆகாயத்தில் ஜலத்தின்பாகம் சேர்ந்திருக்கிறது. ஏனெனின், மோகம் புத்திராதிகளிடத்தில் பாவுகின்றது; ஜலபிந்துவாகிய நீர்த்துளியும் பாவுகின்றது. ஆகையால் இது ஜலத்தின் பாகமாம்.

(ரு) பயம்:—ஆகாயத்தில் பிருதிவியின் பாகஞ் சேர்ந்திருக்கிறது. ஏனெனின், பயம் உண்டாகும்போது சரீரம் ஜடமா(செயற்றதன)கின்றது; பிருதிவியும் ஜடத்தன்மைபாகிய சுபாவமுடையது. ஆகையால் இது பிருதிவியின் பாகமாம்.

சு-கூ. வாயுவின் ஐந்து தத்துவங்கள்:—(சு) விரிதல், (எ) ஓடுதல், (அ) இருத்தல், (கூ) நடத்தல், (கூ) சுருங்குதல் என்பனவாம். அவற்றுள்,

---

ஆகையால் அது வாயுவின்பாகமாம்: இப்படியே மற்றத் தத்துவங்களிலும் அறிந்துகொள்க.

(கூ) விரிதல் :—வாயுவில் ஆகாயத்தின் பாகம் சேர்ந்திருக்கிறது. ஏனெனின், விரித லென்பது பரவுதற்காம்; ஆகாயமும் பரவியிருக்கிறது. ஆகையால் இது ஆகாயத்தின் பாகமாம்.

(எ) ஓடுதல் :—வாயுவின் முக்கியபாகமாம். ஏனெனின், ஓடுத லென்பது விரைவாய்ச் செல்லுதற்காம்; வாயுவும் விரைவாய்ச் செல்லுகின்றது. ஆகையால் இது வாயுவின் முக்கியபாகமாம்.

(அ) இருத்தல் :—வாயுவில் தேயுவின் பாகம் சேர்ந்திருக்கிறது. ஏனெனின், இருத்த லென்பது சரீரத்தின் நிமிர்ச்சிக்காம்; தேயுவின் பிரகாசமும் நிமிர்கின்றது. ஆகையால் இது தேயுவின் பாகமாம்.

(கூ) நடத்தல் :—வாயுவில் ஜலத்தின் பாகம் சேர்ந்திருக்கிறது. ஏனெனின், நடத்த லென்பது போகுதற்காம்; ஜலமும் போகின்றது. ஆகையால் இது ஜலத்தின் பாகமாம்.

(கo) சுருங்குதல் :— வாயுவில் பிருதிவியின் பாகம் சேர்ந்திருக்கிறது. ஏனெனின், சுருங்குதலென்பது சங்கோசம் செய்தற்காம்; பிருதிவியும் சங்கோசத்தை (குவிதலை) அடைந்திருக்கிறது. ஆகையால் இது பிருதிவியின்பாகமாம்.

கக-கரு. தேயுவின் ஐந்து தத்துவங்கள்:-(கக) நித்திரை, (கஉ) தாகம், (கஙு) பசி, (கச) காந்தி, (கரு) சோம்பல் என்பனவாம். அவற்றுள்,

(கக) நித்திரை :—தேயுவில் ஆகாயத்தின் பாகம் சேர்ந்திருக்கிறது. ஏனெனின், நித்திரை வரும்போது சரீரம் சூன்யமாகின்றது; ஆகாயமும் சூன்யத்தன்மையுடையதா யிருக்கின்றது. ஆகையால் இது ஆகாயத்தின் பாகமாம்.

(கஉ) தாகம்:—தேயுவில் வாயுவின்பாகம் சேர்ந்திருக்கிறது. ஏனெனின், தாகம் கண்டத்தை உலர்த்துகின்றது. வாயுவும் சரவஸ்திர மூதலியவற்றை உலர்த்துகின்றது. ஆகையால் இது வாயுவின் பாகமாம்.

(கஙு) பசி :— தேயுவின் முக்கியபாகமாம். ஏனெனின், பசி உண்டாகும்போது எதைச்சாப்பிடுகிறோமோ அது பஸ்மமாகிறது; அக்கினியிலும் எதைப் போடுகிறோமோ அதுபஸ்பமாகிறது. ஆகையால் இது தேயுவின் முக்கியபாகமாம்.

(கச) காந்தி :— தேயுவில் ஜலத்தின் பாகம் சேர்ந்திருக்கிறது. ஏனெனின், காந்தி வெயிலால் குறைகின்றது; ஜலமும் வெயிலால் குறைகின்றது. ஆகையால் இது ஜலத்தின் பாகமாம்.

(கரு) சோம்பல்:—தேயுவில் பிருதிவியின் பாகம் சேர்ந்திருக்கிறது. ஏனெனின், சோம்பல் வரும்போது சரீரம் ஜடமாய்ப் போகின்றது; பிருதிவியும் ஜடசுபாவமுடையது. ஆகையால் இது பிருதிவியின் பாகமாம்.

கசு—உ0. ஜலத்தின் ஐந்து தத்துவங்கள்:—(கசு) உமிழ்நீர், (கஎ) வியர்வை, (கஅ) மூத்திரம், (கஃ) சுக்கிலம், (உ0) சோணிதம் என்பனவாம். அவற்றுள்,

(கசு) உமிழ்நீர்:—ஜலத்தில் ஆகாயத்தின் பாகம் சேர்ந்திருக்கிறது. ஏனெனின், உமிழ்நீர் மேலுங்கீழுமா யிருக்கின்றது; ஆகாயமும் மேலுங்கீழுமா யிருக்கின்றது. ஆகையால் இது ஆகாயத்தின் பாகமாம்.

(கஎ) வியர்வை:—ஜலத்தில் வாயுவின்பாகம் சேர்ந்திருக்கிறது. ஏனெனின், வியர்வை உழைப்பதனால் உண்டாகின்றது; வாயுவும் விசிரிமுதலியவற்றால் உழைப்பதனால் உண்டாகின்றது. ஆகையால் இது வாயுவின் பாகமாம்.

(கஅ) மூத்திரம்:—ஜலத்தில் தேயுவின்பாகம் சேர்ந்திருக்கிறது. ஏனெனின், மூத்திரம் சூடா யிருக்கிறது; தேயுவும் சூடா யிருக்கிறது. ஆகையால் இது தேயுவின் பாகமாம்.

(ககூ) சுக்கிலம்:—ஜலத்தின் முக்கியபாகமாம். ஏனெனின், சுக்கிலம் (வீரியம்)வெண்ணிறமாயும் கருப்பத்திற்கு ஏதுவாயு மிருக்கின்றது; ஜலமும் வெண்ணிறமாயும் விருத்திற்கு ஏதுவாயும் இருக்கிறது. ஆகையால் இது ஜலத்தின் முக்கியபாகமாம்.

(உ0) சோணிதம்:—ஜலத்தில் பிருதிவியின் பாகம் சேர்ந்திருக்கிறது. ஏனெனின், சோணிதம் (இரத்தம்) சிவப்புவர்ணமாம்; பிருதிவியும் ஓவ்வோரிடத்துச் சிவப்பாயிருக்கிறது. ஆகையால் இது பிருதிவியின் பாகமாம்.

உக-உரு. பிருதிவியின் ஐந்து தத்துவங்கள்:—(உக) உரோமம், (உஉ) தோல், (உங) நாடி, (உச) மாம்சம், (உரு) எலும்பு என்பனவாம். அவற்றுள்,

(உக) *க0. உரோமம்:—பிருதிவியில் ஆகாயத்தின் பாகம் சேர்ந்திருக்கிறது. ஏனெனின், உரோமம் சூனியமாயிருக்கிறது. அதை வெட்டுவதால் துக்க முண்டாகிற தில்லை; ஆகாயமும் சூனியமாயிருக்கிறது. ஆகையால் இது ஆகாயத்தின் பாகமாம்.

---

* க0. கேசம் (தலைமயிர்) உரோமத்தி(சரீரத்தின்மயிரி)லடங்கும்.

(உ உ) தோல் :—பிருதிவியில் வாயுவின் பாகம் சேர்ந்திருக்கிறது. எனெனின், தோலால் சீதம், உஷ்ணம், வன்மை, மென்மை, யெனும் பரிசங்கள் அறியப்படுகின்றன ; வாயுவும் பரிசகுணமுடையதா யிருக்கின்றது. ஆகையால் இது வாயுவின் பாகமாம்.

(உ ங) நாடி :—பிருதிவியில் தேயுவின் பாகம் சேர்ந்திருக்கிறது. எனெனின், நாடியால் தாபத்தின் பரீட்சை உண்டாகின்றது; தேயுவும் தாபரூபமா யிருக்கின்றது. ஆகையால் இது தேயுவின் பாகமாம்.

(உ ச) மாமிசம் :—பிருதிவியில் ஜலத்தின் பாகம் சேர்ந்திருக்கிறது. எனெனின், மாமிசம் ஈரமா யிருக்கிறது ; ஜலமும் ஈரமா யிருக்கிறது. ஆகையால் இது ஜலத்தின் பாகமாம்.

(உ ஞ) * கக. எலும்பு :—பிருதிவியின் முக்கியபாகமாம். எனெனின், எலும்பு கடினமாயும் மஞ்சள் நிறமாயு மிருக்கின்றது; பிருதிவியும் கடினமாயும் சிலவிடத்தில் மஞ்சள் நிறமாயு மிருக்கின்றது. ஆகையால் இது பிருதிவியின் முக்கியபாகமாம்.

---

* கக. ஈசமும் பல்லும் எலும்பி லடங்கும்.

இவ்வாறு ஸ்தூலதேகத்தில் இருபத்தைந்து தத்துவங்களிருக்கின்றன.

சஅ. வினா:—இருபத்தைந்து தத்துவங்களையும் அறிதற்குப் பிரயோசனமென்ன?

விடை:—

க. இருபத்தைந்து தத்துவங்களும் நானல்ல;

உ. என்னுடையவு மல்ல;

ங. இவைபஞ்சீகிருதபஞ்சமகாபூதங்களுடையனவாம்;

ச. இவற்றையறியும் திருஷ்டாவாகிய நான் கூடத்திருஷ்டாவைப்போல இவற்றினும் வேறாயிருக்கிறேன்.

இவ்வாறு நிச்சயஞ்செய்தல் இருபத்தைந்து தத்துவங்களையும் அறிதற்குப் பிரயோசனமாம்.

சகூ. வினா:—"இருபத்தைந்து தத்துவங்களும் நானல்ல; என்னுடையவு மல்ல" என்று அறிவதெப்படி?

விடை:—

க-ரு. ஆகாயத்தின் ஐந்து தத்துவங்களில்,

க. (சு) சோகம் உண்டாகும்போதும் நான் அறிகிறேன்.

(உ) சோகம் உண்டாகாதபோது அதன் *கஉ. அபாவத்தையும் நான் அறிகிறேன்.

ஆகையால்,

(க) இந்தச் சோகம் நானல்ல ;

(உ) என்னுடையது மல்ல ;

(ங) இது ஆகாயத்தினுடையதாம்.

(ச) இதை அறியும் திருஷ்டாவாகிய நான் கடதிருஷ்டாவைப்போல இதனினும் வேறாயிருக்கிறேன்.

இவ்வாறு சோகம் நானல்ல என்னுடையது மல்ல வென் றறிக.

உ. (க) காமம் உண்டாகும்போதும் நான் அறிகிறேன்.

(உ) காமம் உண்டாகாதபோது அதன் அபாவத்தையும் நான் அறிகிறேன்.

ஆகையால்,

(க) இந்தக் காமம் நானல்ல ;

(உ) என்னுடையது மல்ல ;

---

*கஉ. அபாவம் இன்மை. இதனை நால்வகையாகவினருள், ஐவகையாகப் பிராசீனரும் கொள்வர். இதன் இலக்கணம் இதன் பதினைஞ்சாவது கலையிற் காண்க.

(ங) இது ஆகாயத்தினுடையதாம்.

(ச) இதை அறியும் திருஷ்டாவாகிய நான் கடதிருஷ்டாவைப்போல இதனினும் வேறாயிருக்கிறேன்.

இவ்வாறு காமம் நானல்ல என்னுடையதுமல்ல வென்றறிக.

ஙு. (க) குரோதம் உண்டாகும்போதும் நான் அறிகிறேன்.

(உ) குரோதம் உண்டாகாதபோது அதன் இன்மையையும் நான் அறிகின்றேன்.

ஆகையால்,

(க) இக்குரோதம் நானல்ல;

(உ) என்னுடையது மல்ல;

(ங) இது ஆகாயத்தினுடையதாம்.

(ச) இதை அறியும் திருஷ்டாவாகிய நான் கடதிருஷ்டாவைப்போல இதனினும் வேறாயிருக்கிறேன்.

இவ்வாறு குரோதம் நானல்ல என்னுடையதுமல்லவென்றறிக.

ச. (க) மோகம் உண்டாகும்போதும் நான் அறிகிறேன்.

(உ) மோகம் உண்டாகாதகாலத்து அதன் அபாவத்தையும் நான் அறிகிறேன்.

ஆகையால்,

(க) இந்த மோகம் நானல்ல ;

(உ) என்னுடையதுமல்ல ;

(கூ) இது ஆகாயத்தினுடையதாம்.

(ச) இதை அறியும் திருஷ்டாவாகிய நான் கடதிருஷ்டாவைப்போல இதனினும் வேறுயிருக்கிறேன்.

இவ்வாறு மோகம் நானல்ல என்னுடையது மல்லவென் றறிக.

கூ. (க) பயம் உண்டாகும்போதும் நான் அறிகிறேன்.

(உ) பயம் உண்டாகாதகாலத்து அதன் இன்மையையும் நான் அறிகிறேன்.

ஆகையால்,

(க) இந்தப் பயம் நானல்ல ;

(உ) என்னுடையது மல்ல ;

(கூ) இது ஆகாயத்தினுடையதாம்.

(ச) இதை அறியும்திருஷ்டாவாகிய நான் கடதிருஷ்டாவைப்போல இதனினும் வேறுயிருக்கிறேன்.

இவ்வாறு பயம் நானல்ல என்னுடையதுமல்லவென் றறிக.

சு-கo. வாயுவின் ஐந்து தத்துவங்களில்,

சு. (க) விரிதல்:—சரீரம் விரியுங்காலத்தும் நான் அறிகிறேன்.

(உ) சரீரம் விரியாதகாலத்து அவ்விரிதலின் இன்மையையும் நான் அறிகிறேன்.

ஆகையால்,

(க) இவ்விரிதல் நானல்ல ;

(உ) என்னுடையது மல்ல ;

(ங) இது வாயுவினுடையதாம்.

(ச) இதை அறியும் திருஷ்டாவாகிய நான் கடதிருஷ்டாவைப்போல இதனினும் வேறுபட்டிருக்கிறேன்.

இவ்வாறு விரிதல் நானல்ல என்னுடையது மல்லவென் றறிக.

எ. (க) ஓடுதல் :—சரீரம் ஓடும்போதும் நான் அறிகிறேன்.

(உ) ஓடாதகாலத்து அவ்வோடுதலின் இன்மையையும் நான் அறிகிறேன்.

ஆகையால்,

(க) இவ்வோடுதல் நானல்ல ;

(உ) என்னுடையது மல்ல ;

(ங) இது வாயுவினுடையதாம்.

(ச) இதை அறியும் திருஷ்டாவாகிய நான் கடதிருஷ்டாவைப்போல இதனினும் வேறுபி ருக்கிறேன்.

இவ்வாறு ஓடுதல் நானல்ல என்னுடையது மல்லவென் றறிக.

அ. (க) இருத்தல் :—சரீரம் இருக்கும்போ தும் நான் அறிகிறேன்.

(உ) அது இராதகாலத்து இவ்விருத்தலின் இன்மையையும் நான் அறிகிறேன்.

ஆகையால்,

(க) இவ்விருத்தல் நானல்ல ;

(உ) என்னுடையது மல்ல ;

(ங) இது வாயுவினுடையதாம்.

(ச) இதை அறியும் திருஷ்டாவாகிய நான் கடதிருஷ்டாவைப்போல இதனினும் வேறுபி ருக்கிறேன்.

இவ்வாறு இருத்தல் நானல்ல என்னுடையது மல்லவென் றறிக.

கூ. (க) நடத்தல்:—சரீரம் நடக்கும்போதும் நான் அறிகிறேன்.

(உ) சரீரம் நடவாதகாலத்து அந்த நடையின் இன்மையையும் நான் அறிகிறேன்.

ஆகையால்,

(க) இந்த நடை நானல்ல;

(உ) என்னுடையது மல்ல;

(கூ) இது வாயுவினுடையதாம்.

(ச) இதை அறியும் திருஷ்டாவாகிய நான் கடதிருஷ்டாவைப்போல இதனினும் வேறாயிருக்கிறேன்.

இவ்வாறு நடத்தல் நானல்ல என்னுடையது மல்லவென் றறிக.

கo. (க) சுருங்குதல்:— சரீரம் சுருக்கத்தை அடையும்போதும் நான் அறிகிறேன்.

(உ) சரீரம் சுருக்கத்தை அடையாதகாலத்து அதன் இன்மையையும் நான் அறிகிறேன்.

ஆகையால்,

(க) இச்சுருங்குதல் நானல்ல,

(உ) என்னுடையது மல்ல;

(ங) இது வாயுவினுடையதாம்.

(ச) இதை அறியும் திருஷ்டாவாகிய நான் கடதிருஷ்டாவைப்போல இதனினும் வேறுயிருக்கிறேன்.

இவ்வாறு சுருங்குதல் நானல்ல என்னுடையது மல்லவென் றறிக.

ஙக-ஙரு. தேயுவின் ஐந்து தத்துவங்களில்:—

ஙக. (க) நித்திரை உண்டானால் அதையும் நான் அறிகிறேன்.

(உ) நித்திரை உண்டாகாதகாலத்து அதன் இன்மையையும் நான் அறிகிறேன்.

ஆகையால்,

(க) இந்த நித்திரை நானல்ல;

(உ) என்னுடையது மல்ல;

(ங) இது தேயுவினுடையதாம்.

(ச) இதை அறியும் திருஷ்டாவாகிய நான் கடதிருஷ்டாவைப்போல இதனினும் வேறுயிருக்கிறேன்.

இவ்வாறு நித்திரை நானல்ல என்னுடையது மல்ல வென் றறிக.

கஉ-(க) தாகம் உண்டானால் அதையும் நான றிகிறேன்.

(உ) தாகம் உண்டாகாதகாலத்து அதன் இன்மையையும் நானறிகிறேன்.

ஆகையால்,

(க) இந்தத் தாகம் நானல்ல ;

(உ) என்னுடையது மல்ல ;

(ங) இது தேபுஷினுடையதாம்.

(ச) இதை அறியும் திருஷ்டாவாகிய நான் கடதிருஷ்டாவைப்போல இதனினும் வேறுயிருக்கிறேன்.

இவ்வாறு தாகம் நானல்ல என்னுடையதுமல்ல வென் றறிக.

கங-(க) பசி உண்டானால் அதையும் நானறிகிறேன்.

(உ) பசி உண்டாகாதகாலத்து அதன் இன்மையையும் நானறிகிறேன்.

ஆகையால்,

(க) இந்தப் பசி நானல்ல ;

(உ) என்னுடையது மல்ல;

(ஈ) இது தேயுவினுடையதாம்.

(ச) இதை அறியும் திருஷ்டாவாகிய நான் கடதிருஷ்டாவைப்போல இதனினும் வேறுபி ருக்கிறேன்.

இவ்வாறு பசி நானல்ல என்னுடையதுமல்ல வென் றறிக.

கச-(க) காந்தி உண்டாவுல் அதையும் நான றிகிறேன்.

(உ) காந்தி உண்டாகாதகாலத்து அதன் இ ன்மையையும் நானறிகிறேன்.

ஆகையால்,

(க) இந்தக் காந்தி நானல்ல;

(உ) என்னுடையது மல்ல;

(ஈ) இது தேயுவினுடையதாம்.

(ச) இதை அறியும் திருஷ்டாவாகிய நான் கடதிருஷ்டாவைப்போல இதனினும் வேறுபி ருக்கிறேன்.

இவ்வாறு காந்தி நானல்ல என்னுடையது மல்ல வென் றறிக.

கஞ-(க) சோம்பல் உண்டானால் அதையும் நானறிகிறேன்.

(உ) சோம்பலுண்டாகாதகாலத்து அதன் இன்மையையும் நானறிகிறேன்.

ஆகையால்,

(க) இந்தச் சோம்பல் நானல்ல;

(உ) என்னுடையது மல்ல;

(ங) இது தேயுவினுடையதாம்.

(ச) இதை அறியும் திருஷ்டாவாகிய நான் கடதிருஷ்டானைப்போல இதனினும் வேறாயிருக்கிறேன்.

இவ்வாறு சோம்பல் நானல்ல என்னுடையது மல்ல வென் றறிக.

கசு-உ. ஆகாத்தின் ஐந்து தத்துவங்களில்:—

கசு-(க) உமிழ்நீர் ஒழுகினால் அதையும் நானறிகிறேன்.

(உ) உமிழ்நீர் ஒழுகாதகாலத்து அதன் இன்மையையும் நானறிகிறேன்.

ஆகையால்,

(க) இந்த உமிழ்நீர் நானல்ல;

(உ) என்னுடையது மல்ல ;

(ரு) இது ஜலத்தினுடையதாம்.

(ச) இதை அறியும் திருஷ்டாவாகிய நான் கடதிருஷ்டாவைப்போல இதனினும் வேறுயிருக்கிறேன்.

இவ்வாறு உமிழ்நீர் நானல்ல என்னுடையது மல்ல வென் றறிக.

கள-(க) வியர்வை உண்டானால் அதையும் நானறிகிறேன்.

(உ) வியர்வை உண்டாகாதகாலத்து அதன் இன்மையையும் நானறிகிறேன்.

ஆகையால்,

(க) இந்த வியர்வை நானல்ல ;

(உ) என்னுடையது மல்ல;

(ரு) இது ஜலத்தினுடையதாம்.

(ச) இதை அறியும் திருஷ்டாவாகிய நான் கடதிருஷ்டாவைப்போல இதனினும் வேறுயிருக்கிறேன்.

இவ்வாறு வியர்வை நானல்ல என்னுடையது மல்ல வென் றறிக.

கஅ-(க) மூத்திரம் வந்தால் அதையும் நான றிகிறேன்.

(உ) மூத்திரம் வாதகாலத்து அதன் இன் மையையும் கானறிகிறேன்.

ஆகையால்,

(க) இந்த மூத்திரம் நானல்ல;

(உ) என்னுடையது மல்ல;

(ங) இது ஜலத்தினுடையதாம்.

(ச) இதை அறியும் திருஷ்டாவாகிய நான் கடதிருஷ்டாவைப்போல இதனினும் வேறாயி ருக்கிறேன்.

இவ்வாறு மூத்திரம் நானல்ல என்னுடையது மல்ல வென் றறிக.

கக-(க) சுக்கிலம் சரீரத்தில் அதிகரித்தால் அதையும் கானறிகிறேன்.

(உ) சுக்கிலம் குறைந்தகாலத்து அதன் இன் மையையும் கானறிகிறேன்.

ஆகையால்,

(க) இந்தச் சுக்கிலம் நானல்ல;

(உ) என்னுடையது மல்ல;

(சு) இது ஜலத்தினுடையதாம்.

(ச) இதை அறியும் திருஷ்டாவாகிய நான் கடதிருஷ்டாவைப்போல இதனினும் வேறுபி ருக்கிறேன்.

இவ்வாறு வீரியம் நானல்ல என்னுடையது மல்ல வென் றறிக.

உ0-(க) சோணிதம் சரீரத்தில் அதிகரித்தால் அதையும் நானறிகிறேன்.

(உ) சோணிதம் சூறைந்தகாலத்து அதன் இன்மையையும் நானறிகிறேன்.

ஆகையால்,

(க) இச்சோணிதம் நானல்ல ;

(உ) என்னுடையது மல்ல ;

(சு) இது ஜலத்தினுடையதாம்.

(ச) இதை அறியும் திருஷ்டாவாகிய நான் கடதிருஷ்டாவைப்போல இதனினும் வேறுபி ருக்கிறேன்.

இவ்வாறு சோணிதம் நானல்ல என்னுடை யது மல்ல வென் றறிக.

உசு-உடு. பிருதிவியின் ஐந்து தத்துவங்களில்:—

உசு-(க) உரோமம் அதிகமா யிருந்தால் அ தையும் நானறிகிறேன்.

கலை.] தேகமூன்றற்கும் நான் திருஷ்டா. எக

(உ) உரோமம் குறைந்தகாலத்து அதன் குறைவையும் நானறிகிறேன்.

ஆகையால்,

(க) இந்த உரோமம் நானல்ல ;

(உ) என்னுடையது மல்ல ;

(ங) இது பிருதிவியினுடையதாம்.

(ச) இதை ஆதியும் திருஷ்டாவாகிய நான் கடதிருஷ்டாவைப்போல இதனினும் வேறுபிருக்கிறேன்.

இவ்வாறு உரோமம் நானல்ல என்னுடையது மல்ல வென் றறிக.

உஉ-(க) தோல் பரிசத்தைக் கிரகிக்குமாயின் அதையும் நானறிகிறேன்.

(உ) பரிசத்தைக் கிரகியாதகாலத்து அந்தக் கிரகணஞ்செய்தலின் இன்மையையும் நானறிகிறேன்.

ஆகையால்,

(க) இந்தத் தோல் நானல்ல ;

(உ) என்னுடையது மல்ல ;

(ங) இது பிருதிவியினுடையதாம்.

(ச) இதை அறியும்திருஷ்டாவாகிய நான் கடதிருஷ்டாவைப்போல இதனினும் வேறுயிருக்கிறேன்.

இவ்வாறு தோல் நானல்ல என்னுடையதுமல்ல வென் றறிக.

உங-(க) நாடி நடக்குமாயின் அதையும் நானறிகிறேன்.

(உ) நடவாதகாலத்து அதன் இன்மையையும் நானறிகிறேன்.

ஆகையால்,

(க) இந்த நாடி நானல்ல;

(உ) என்னுடையது மல்ல;

(ங) இது பிருதிவியினுடையதாம்.

(ச) இதை அறியும் திருஷ்டாவாகிய நான் கடதிருஷ்டாவைப்போல இதனினும் வேறுயிருக்கிறேன்.

இவ்வாறு நாடி நானல்ல என்னுடையதுமல்ல வென் றறிக.

உச-(க) மாமிசம் அதிகரிக்குமாயின் அதையும் நானறிகிறேன்.

(உ) அது குறையுங்காலத்து அதன் இன்மையையும் நானறிகிறேன்.

கூலி.] தேகமூன்றற்கும் நான் திருஷ்டா. எங

ஆகையால்,

(க) இந்த மாமிசம் நானல்ல ;

(உ) என்னுடையது மல்ல ;

(ங) இது பிருதிவியினுடையதாம்.

(ச) இதை அறியும் திருஷ்டாவாகிய நான் கடந்திருஷ்டாவைப்போல இதனினும் வேறாயி ருக்கிறேன்.

இவ்வாறு மாமிசம் நானல்ல என்னுடையது மல்ல வென் றறிக.

உரை-(க) எலும்பு ஒழுங்கா யிருக்குமாயின் அதையும் நானறிகிறேன்.

(உ) ஒழுங்கா யிராதகாலத்து அதன் இன்மை யையும் நானறிகிறேன்.

ஆகையால்,

(க) இந்த எலும்பு நானல்ல ;

(உ) என்னுடையது மல்ல ;

(ங) இது பிருதிவியினுடையதாம்.

(ச) இதை அறியும் திருஷ்டாவாகிய நான் கடந்திருஷ்டாவைப்போல இதனினும் வேறாயி ருக்கிறேன்.

இவ்வாறு எளிய்பு ஞானல்ல என்னுடையது மல்ல வென் றறிக.

இவ்வாறு இருபத்தைந்து தத்துவங்களும் ஞானல்ல ; என்னுடையவு மல்ல வென் றறிக.

சசு. வினா :— "இருபத்தைந்து தத்துவங்களும் ஞானல்ல ; என்னுடையவு மல்ல" என்று அறிதலால் என்ன பிச்சய முண்டாயிற்று ?

விடை :— ஸ்தூலதேகமும், அதன் தர்மங்களாகிய க. பெயர் உ. ஜாதி ங. ஆசிரமம் ச. வருணம் (நிறம்) ஞ. சம்பந்தம் ட. பரிமாணம் (அடிவம்) எ. ஜனனமரணம் என்பவைகளும் ஞானல்ல ; *சசு. என்னுடையவு மல்ல என்னும் நிச்சய முண்டாயிற்று.

நிற. வினா:— க. பெயர் ஞானல்ல ; என்னுடையது மல்லவென் றறிவ தெப்படி ?

---

* சசு. ஜாதி முதலியஸ்தூலதேகதர்மங்கள் ஆத்மாவிற்கில்லை யென்பதனை நேஜோபிந்தூபநிஷத்து, வராகோபநிஷத்தின் இரண்டாம் அத்தியாயமு தலியவற்றில் காண்க. அச்சருதிகளிற்தானே சூக்ம காரணதேகங்களின் தர்மங்களில்லை யென்பதனையும் காண்க.

கலை.] தைத்திரீயோபநிஷத்து. எடு

விடை:—க. பிறப்பதற்கு முன் பெயரில்லை.

உ. பிறந்த பிறகு கற்பிக்கப்பட்டிருக்கிறது.

ங. அன்றியும் சரீரத்தின் வேறு வேறுகிய அவயவங்களிலும் விசாரிக்குமிடத்துப் பெயர் அகப்படுமேதில்லை.

ஆகையால்,

க. இந்தப் பெயர் நானல்ல;

உ. என்னுடையது மல்ல;

ங. இது ஸ்தூலதேகத்தில் கற்பிக்கப்பட்டிருக்கிறது.

ச. இதை அறியும் திருஷ்டாவாகிய நான் கடதிருஷ்டாவைப்போல இதனினும் வேறாயிருக்கிறேன்.

இப்படிப் பெயர் நானல்ல என்னுடையது மல்ல வென் றறிக.

ஞக. வினா:—உ. ஜாதி(வருணம்) நானல்ல; என்னுடையது மல்லவென் றறிவ தெப்படி?

விடை:—க. பிராஹ்மணன்முதலிய ஜாதிஸ் தூலதேகத்தின் தர்மமாம்; சூக்ஷ்மதேக ஆத்மாக்களின் தர்ம மாகாது. ஏனெனின், மூன்றேதகத்திலிருந்த இலிங்கதேகமும் ஆத்மாவேம இந்த

வர்த்தமானதேகத்திலும் இனிவரும் தேகத்திலு மிருக்கின்றன. ஜாதியோ மூன்றேகத்திருந்தது இந்தத் தேகத்திலில்லை ; இந்தத் தேகத்திலிருப்பது இனிவரும் தேகத்திராது. ஆகையால் ஜாதி ஸ்தூலதேகத்தின் தர்மமா மன்றிச் சூக்ஷ்மதேகஆத்மாக்களின் தர்ம மாகாது.

உ. சரீரத்தின் அவயவங்களில் விசாரித்துப் பார்க்குமிடத்து *கச. ஜாதி யென்பது ஸ்தூல தேகத்திலும் அகப்படுகிறதில்லை.

ஆகையால்,

க. இந்த ஜாதி நானல்ல ;

உ. என்னுடையது மல்ல ;

கூ. இது ஸ்தூலதேகத்தில் ஆரோபிதமாம்.

ச. இதை அறியும் திருஷ்டாவாகிய நான் கடதிருஷ்டாவைப்போல இதனினும் வேறாயிருக்கிறேன்.

---

* கச. பிராஹ்மணத்வாதிஜாதி ஸ்தூலதேக முதலிய வற்றி லில்லை யென்னும் விசாரத்தினை வஜ்ரசூசிகோபநிஷத்திற் காண்க.

கலை.] தேகமூன்றற்கும் நான் திருஷ்டா. எள

இப்படி* கரு. ஜாதி நானல்ல என்னுடையது மல்ல வென் றறிக.

நூ. வினா:—கு. ஆசிரமம் நானல்ல ; என்னுடையது மல்ல வென் றறிவ தெப்படி ?

விடை :—க. பிரஹ்மசாரி, கிருகஸ்தன், வானப்பிரஸ்தன், சந்நியாசி என்னும் நான்கு ஆசிரமங்களையும் வேறு வேறு கர்மத்தைச்செய்விக்கும்பொருட்டாரோபித்து ஸ்தூல தேகத்தில் ஒப்பியிருக்கிறார்கள்.

உ. அவைகளும் மனிதர்மாத்திரத்தில் சம்பவிக்கிறதில்லை.

---

* கரு. "जातिगुणक्रियाहीनम् !

ஜாதிகுணக்கிரியைகளின்றியது." என்பது வஜ்ரசூசிகோபநிஷத்து.

"तस्मादन्यगता वर्णा आश्रमा अपि नारद ।
आत्मन्यारोपिताः सर्वे भ्रान्त्या ते नात्मवेदिना ॥

ஆதலால் நாரதரே! வர்ணங்களும் ஆசிரமங்களும் பிறவற்றி லிருப்பனவாயினும், யாவும் பிராந்தியினால் ஆத்மாவி லாரோபிக்கப்பட்டனவாம். அவை ஆத்மஞானிகளுக்கில்லை." என்பது நாரதபரிவ்ராஜகோபநிஷத்து.

ஆகையால்,

க. இவ்வாசிரமங்கள் நானல்ல ;

உ. என்னுடையவு மல்ல ;

ங. இவை ஸ்தூலதேகத்தில் ஆரோபிதமாம்.

ச. இவற்றை அறியும் திருஷ்டாவாகிய நான் கடதிருஷ்டாவைப்போல இவற்றினும் வேறாயிருக்கிறேன்.

இப்படி ஆசிரமம் நானல்ல என்னுடையது மல்ல வென் றறிக.

நாங. வினா:—ச. வருணம்(நிறம்) நானல்ல ; என்னுடையது மல்ல வென் றறிவ தெப்படி ?

விடை :—க. வெண்மை, கருமை, செம்மை, பொன்மைமுதலிய நிறங்கள் ஸ்தூலதேகத்தில் பிரத்தியக்ஷமாகக் காணப்படுகின்றன.

உ. நான் ஸ்தூலதேக மல்லாமையால்,

க. இந்த நிறங்கள் நானல்ல ;

உ. என்னுடையவு மல்ல ;

ங. இவற்றை அறியும் திருஷ்டாவாகிய நான் கடதிருஷ்டாவைப்போல இவற்றினும் வேறாயிருக்கிறேன்.

கலை.] தேகமூன்றற்கும் நான் திருஷ்டா. எகு

இப்படி வருணம் நானல்ல என்னுடையது மல்ல வென் றறிக.

தெ. வினு:—ரூ. சம்பந்தம் நானல்ல; என்னுடையது மல்ல வென் றறிவ தெப்படி?

விடை :—

க. பிதா புத்திரன், குரு சிஷ்யன், ஸ்திரீ புருஷன், எஜமானன் சேவகன் என்னும் இவை முதலிய ஸ்தூலதேகத்தின் சம்பந்தத்தைத் தருவுக்குக்கொருவர் பிரித்தமாய்பிதையாகக்கொண்டிருக்கிறார்கள்.

உ. அவற்றை விசாரித்துப் பார்க்குமிடத்து அகப்படுகிறதில்லை.

ங. நான் ஸ்தூலதேகத்திற்கு வேறாய் அசங்கனுயிருத்தலால்,

க. இச்சம்பந்தங்கள் நானல்ல;

உ. என்னுடையவு மல்ல;

ங. இவை ஸ்தூலதேகத்தில் ஆரோபிதமாம்.

ச. இவற்றை அறியும்திருஷ்டாவாகியநான் கடதிருஷ்டாவைப்போல இயற்றினும் வேறாயிருக்கிறேன்.

இவ்வாறு சம்பந்தம் நானல்ல என்னுடையது மல்ல வென் றறிக.

நடு. விஷ :—சூ. பரிமாணம்(வடிவம்) நான ல்ல; என்னுடையதுமல்லவென் றறிவதெப்படி?

ஜினை:— க. நெட்டை, குட்டை, பருமன், மெலிவு, கோணல், ஒழுங்கு இவை முதலியவடி வங்களும் பிரசித்தமாக ஸ்தூலசரீரத்தில் கா ணப்படுகின்றன.

உ. நான் ஸ்தூலசரீரத்திற்கு வேறாய் நிரா காரனாயிருத்தலால்,

க. இந்த ஆகார(வடிவ)ங்கள் நானல்ல;

உ. என்னுடையவு மல்ல;

ங. இவை ஸ்தூலசரீரத்தினுடையவாம்.

ச. இவற்றை அறியும் திருஷ்டாவாகிய நான் கடதிருஷ்டாவைப்போல இவற்றினும் வேறாயி ருக்கிறேன்.

இப்படிப் பரிமாணம் நானல்ல என்னுடைய தும் மல்ல வென் றறிக.

நடு. விஷ:—எ. நான் ஜனனமரணமுடைய வனல்லன்; எனக்கு ஜனனமரண முண்டாகா தென் றறிவ தெப்படி?

விடை :—க. ஆத்மாவிற்கு ஜன்மம் ஒப்புவோமாயின், ஆத்மா அநித்தியமாகும். இந்த வார்த்தை மீமாம்ஸகன் முதலாயுள்ள பரலோகவாதிகளாகிய ஆஸ்திகர்களுக்கும் உடன்பாடல்ல ; ஏனெனின், ஆத்மா உற்பத்தியுடைய தாகுமாயின் நாசமுடையது மாகும். அதனால்,

(க) பூர்வஜன்மத்திற் செய்யப்படாத கர்மத்தால் சுகதுக்கங்களின் அநுபவமும்,

(உ) இந்த ஜன்மத்திற் செய்யப்பட்ட கர்மம் அநுபவமின்றி நசித்தலுமாகிய,

இவ்விரண்டு தோஷங்களும் உண்டாகும்.

ஆகையால் கர்மவாதிகளின் மதப்படி ஆத்மாவைக் கர்த்தா போக்தாவென வொப்பினும் ஜனனமரணமில்லாததாகவே ஒப்பவேண்டியதாகும்.

உ. அன்றியும், ஆத்மாவின் ஜன்மத்திற்கு யாதொருகாரணமும் சம்பவிக்கவில்லை. ஏனெனின், ஆத்மாவிற்குக் காரண மிருக்குமாயின் ; அது ஆத்மாவைவிட வேறாகவே யிருக்கவேண்டும்.

(க) ஆத்மாவிற்கு வேறாகவோ அநாத்மாவாகிய நாமரூபங்க ளிருக்கின்றன ; அவைகள் ஆத்

மாவில் இரஜ்ஜு சர்ப்பம்போலக் கற்பிதமாயி ருத்தலால் காரணமாகா.

(உ) பிரஹ்மமோ கடாகாயத்தின் சொரூப மாகிய மகாகாயம்போல ஆத்மாவைவிட வேறு காமல் அதன் சொரூபமாகவே யிருத்தலால் கா ரண மாகாது.

அதனல் ஆத்மாவிற்கு ஜன்ம மில்லை.

ங. ஜன்மமில்லாமையால் மரணமு மில்லை.

ச. ஆத்மாவினிடத்தில் ஜனனமரண மில்லா மையால், அது க. பிறப்பு, உ. இருப்பு, ங. வள ர்ச்சி, ச. விகாரம், ரு. குறைவு, சு. மரணம் என னும் ஆறுவிகாரங்களும் இல்லாததாயிருக்கின் றது.

ஆகையால்,

க. நான் ஜனனமரண முடையவ னல்லன்.

உ. என்னிடத்து ஜனனமரண முண்டாகிற தில்லை.

ங. இவை ஸ்தூலதேகத்திற்குக் கர்மத்தினு லுண்டாகின்றன.

ச. இவற்றை யறியும் திருஷ்டாவாகியநான் கடதிருஷ்டாவைப்போல இவற்றினும் வேறாயி ருக்கிறேன்.

கலை:] தேகமுன்றற்கும் நான் திருஷ்டா. அங.

இப்படி நான் ஜனனமரணமுடையவ னல்லன்; எனக்கு ஜனனமரண முண்டாகா வென வறிக.

ரூள. வினு:—பஞ்சமகா பூதங்களின் நிவிருத்தியில் திருஷ்டாந்தம் யாது?

விடை :—திருஷ்டாந்தம் :— ஒருவனுக்குப் பூதம் பிடித்திருக்குமாயின், அவன் பூசாரியை அழைத்து, உடுக்கடிப்பித்து, உப்புமுதலிய ஐந்து பதார்த்தங்களைச் சேர்த்து, அதற்குப் பலி கொடுத்துப் பூதத்தை நிவர்த்திக்கிறான்.

சித்தாந்தம் :— அதுபோல ஆகாயமுதலிய பஞ்சமகாபூதங்கள் சரீரரூபமாய் ஜீவனைப்பிடித்திருக்கின்றன. அவற்றின் நிவிருத்தியின்பொருட்டுப் பிரஹ்மநிஷ்டகுருவாகிய பூசாரியை *கச.

---

*கச. விவேகமுதலியநற்குணங்களோடு மோக்ஷஇச்சையுள்ளவனுன அதிகாரி.

க. கையில் சன்னிப்புக்குரிய பதார்த்தங் (பத்திராபுஷ்ப பலாதிகளைக் கொண்டு குருவைச் சரணம்புகுந்து,

உ. சாஷ்டாங்கநமஸ்காரஞ்செய்து,

ங. "ஐயனே, எனக்குப் பிரஹ்மவித்தையை உபதேசஞ்செய்தருளுவீராக" என்று சொல்லி, "பந்தமென்பது யாது? மோக்ஷமென்பது யாது? அவித்தையென்பது யாது?" என்னு மிவைமுதலிய பிரசினைகளைச் செய்து,

விதியோடு சரணாபுகுந்து, வேதசாஸ்திரமாகிய உடுக்கடிப்பித்து, மேற்கூறப்பட்ட இருபத்தைந்து தத்துவங்களிலிருந்து ஐந்து ஐந்து தத்துவங்களாகிய பலியை ஒவ்வொரு பூதத்திற்கும் தன் தன் பாகத்தைக்கொடுத்து, நானிந்த இருபத்தைந்து தத்துவங்களுக்கும் திருஷ்டாவாயிருக்கிறேன் என்று இப்படி நிச்சயம் செய்வதால் இந்தப் பஞ்சமகாபூதங்களுக்கும் *கரு. அத்தியந்தநிவிருத்தி உண்டாகின்றது.

இவ்வாறு ஸ்தூலதேகத்திற்கு நான் திருஷ்டாவாயிருக்கிறேன்.

உ. சூக்ஷ்மதேகத்திற்கு நான் திருஷ்டா.

இ அ. வினா:—சூக்ஷ்மதேக மென்பது யாது?

விடை:—சூக்ஷ்மதேகம் அபஞ்சீகிருதபஞ்சமகாபூதங்களின் பதினேழுதத்துவங்களினாலாம்.

ச. குருவினது சந்தோஷத்தின்பொருட்டுச் சரீரம், மனம், தனம், வாக்கு என்பவைகளை அர்ப்பணஞ்செய்து சேவைசெய்யவேண்டும்.

இது பிரஹ்மவித்தையையும் ஏற்றுக்கொள்ளும் விதியாம்.

* கரு. மறுபடியும் தொடராதிருத்தல் அத்தியந்தநிவிருத்தி.

நகூ. வினா:—சூக்ஷ்மதேகத்தின் பதினேழு தத்துவங்க ளெவை ?

விடை :— க-நு. ஐந்து ஞானேந்திரியம், கூ-க0. ஐந்து கர்மேந்திரியம், ககூ-கநு. ஐந்து பிராணன், ககூ. மனம், கள. புத்தி என்னு மிவை * ககூ. பதினேழுதத்துவங்களாம்.

கூ0. வினா :— ஐந்து *கள. ஞானேந்திரியங்கள் எவை ?

விடை :—க—நு. சுரோத்திரம், துவக்கு, சக்ஷு, சிங்குவை, கிராணம் என்னு மிவ்வைந்தும் ஞானேந்திரியங்களாம்.

---

*ககூ. "बुद्धिकर्मेन्द्रियप्राणपंचकैर्मनसा धिया ।
शरीरं सप्तदशभिस्सूक्ष्मं तल्लिगमुच्यते ॥

ஞானேந்திரிய கர்மேந்திரிய பிராணபஞ்சகங்கள் மனது புத்தி என்னும் பதினேழினல் சூக்ஷ்மசரீரமாம். இது லிங்கமெனப்படும்." என்பது யோகசிகோபநிஷத்து.

*கள. ஞானத்திற்குச் சாதனமாகிய இந்திரியம் ஞானேந்திரியம்.

கூக. வினா :—ஐந்து *கஅ. கர்மேந்திரியங்களெவை ?

விடை :—கூ-கo. வாக்கு, பாணி, பாதம், உபஸ்தம், குதம் என்னும் இவ்வைவந்தும் கர்மேந்திரியங்களாம்.

கூஉ. வினா :—ஐந்து பிராணன் (பஞ்சவாயு) எவை ?

விடை :—கக-கஞ. பிராணன், அபானன், சமானன், உதானன், வியானன் என்னு மிவை பஞ்சவாயுக்களாம்.

கூங. வினா :—மனமென்ப தெது?

விடை :—கசு. சங்கற்பவிகற்பமாகிய விருத்தி மன மெனப்படும்.

கூச. வினா :—புத்தியென்ப தெது ?

விடை :— கள. நிச்சயரூபமாகிய விருத்தி புத்தி யெனப்படும்.

கூஞ. வினா :—அபஞ்சீகிருதபஞ்சமகா பூத மென்ப தெது ?

விடை :—எந்தப் பூதங்களுக்கு முன் சொன்னபடி பஞ்சீகரண முண்டாக வில்லையோ,

---

*கஅ. கர்மத்திற்குச் சாதனமாகிய இந்திரியம் கர்மேந்திரியம்.

க. அந்தப் பூதங்கள் அபஞ்சீகிருதபஞ்சமகா பூதங்க ளெனப்படும்.

உ. அவற்றையே சூக்ஷ்மபூதங்க ளென்றும்,

கூ. தன்மாத்திரைக ளென்றும் கூறுவர்.

சுசூ. வினா :—அபஞ்சீகிருதபஞ்சமகாபூதங்க ளின் பதினேழுதத்துவங்களை அறிவ தெப்படி?

விடை:—

ஞானேந்திரியகர்மேந்திரியபஞ்சகங்களில் :—

க. ஆகாயத்தின் * ககூ. சத்துவகுணபாகம் சுரோத்திரம்.

உ. ஆகாயத்தின் இரஜோகுணபாகம் வாக் கிந்திரியம்.

(க) சுரோத்திரேந்திரியம் சப்தத்தைக்கேட் கின்றது.

(உ) வாக்கிந்திரியம் சப்திக்கின்றது.

(க) சுரோத்திரம் ஞானேந்திரியம்.

---

* ககூ. சர்வபதார்த்தங்களிலும் சாத்துவிகம், இராஜத மும், தாமதமென மூன்றுகுணங்க ளிருக்கின்றன. கூறிய இக்குணவிவரங்களைப் பைங்கலசுருதியிற் காண்க. எம்மாற்செய்யப்பட்டுள்ள அஷ்டாங்கயோகசூத்திரத் தின் குறிப்புரையிலும் விரிவாய்க் காணலாம்.

(உ) வாக்கு கர்மேந்திரியம்.

இவ்விரண்டற்கும் சிதேக மூண்டு.

ங. வாயுவின் சத்துவகுணபாகம் துவக்கு.

ச. வாயுவின் இரஜோகுணபாகம் பாணி.

(க) துவக்கிந்திரியம் பரிசத்தைக் கிரகிக்கின்றது.

(உ) பாணீந்திரியம் அதை நிருவாகம் செய்கின்றது.

(க) துவக்கு ஞானேந்திரியம்;

(உ) பாணி கர்மேந்திரியம்;

இவ்விரண்டற்கும் சிதேக மூண்டு.

ஞ. தேயுவின் சத்துவகுணபாகம் சக்ஷு.

ட. தேயுவின் இரஜோகுணபாகம் பாதம்.

(க) சக்ஷு இந்திரியம் உருவத்தைக் கிரகிக்கின்றது.

(உ) பாதேந்திரியம் நடக்கின்றது.

(க) சக்ஷு ஞானேந்திரியம்;

(உ) பாதம் கர்மேந்திரியம்;

இவ்விரண்டற்கும் சிதேக மூண்டு.

ண. ஜலத்தின் சத்துவகுணபாகம் சிங்ஙுவை.

அ. ஜலத்தின் இரஜோகுணபாகம் உபஸ்தம்.

(க) சிங்குவேந்திரியம் இரசத்தைக் கிரகிக்கின்றது.

(உ) உபஸ்தேந்திரியம் இரசத்தை விடுகின்றது.

(க) சிங்குவை ஞானேந்திரியம்;

(உ) உபஸ்தம் கர்மேந்திரியம்;

இவ்விரண்டற்கும் சிதேக முண்டு.

கூ. பிருதிவியின்சத்துவகுணபாகம் கிராணம்.

கo. பிருதிவியின் இரஜோகுணபாகம் குதம் (பாயுரு).

(க) கிராணேந்திரியம் கந்தத்தைக் கிரகிக்கின்றது.

(உ) குதேந்திரியம் கந்தத்தை விடுகின்றது.

(க) கிராணம் ஞானேந்திரியம்;

(உ) குதம் கர்மேந்திரியம்;

இவ்விரண்டற்கும் சிதேக முண்டு.

பஞ்சப்பிராணமனோபுத்திகளில்:—

கக–கஙி. இந்தப் பஞ்சமகாபூதங்களின்

*உ0. இரஜோகுணபாகங்கள் சேர்ந்து பஞ்சப் பிராண ரூயின.

ககூ-கள. இந்தப் பஞ்சபூதங்களின் *உக. சத்து வகுணபாகங்கள் சேர்ந்து அந்தக்கரணமாயின. இவ்வந்தக்காணமே மனரூபமாயும் புத்திரூபமா யு மிருக்கின்றது.

இங்கே சித்தமும் அகங்காரமும் மனதிலும் புத்தியிலு மடங்கும்.

இப்படி அபஞ்சிகிருதபஞ்சமகாபூதங்களின் காரியமாகிய பதினேழுதத்துவங்களையுமறிக.

சுஎ. வினா — பதினேழுதத்துவங்களையும் அறிதற்குப் பிரயோஜன மென்ன ?

விடை :—இந்தப் பதினேழுதத்துவங்களும் நானல்ல ; என்னுடையவு மல்ல; இவைகள் அபஞ்சிகிருதபஞ்சமகாபூதங்களுடையனவாம் என்பது இப்பதினேழுதத்துவங்களையும் அறிதற்குப் பிரயோஜனமாம்.

சுஅ. வினா :—இந்தப் பதினேழுதத்துவங்களும் நானல்ல ; என்னுடையவு மல்ல வென்றறிவ தெப்படி ?

---

*உ0. * உக. பைங்கலசுருதி.

விடை:—இந்தப் பதினேழுதத்துவங்களையும் நான் அறிகிறவனு யிருக்கிறேன். எவன் எதை அறிகிறானே, அவன் அதனினும் வேறுவன் என்பது நியம மாகையால், இந்தப் பதினேழுதத் துவங்களும் நானல்ல; என்னுடையவுமலல வென் றறியவேண்டும்.

கூகூ. வினு:—இதில் அறியத்தக்க திருஷ்டாந்தம் யாது?

விடை:—திருஷ்டாந்தம்:— (க) நாடகசாலையிலுள்ள (உ) தீபமானது, (ங) இராஜா, (ச) மந்திரி, (ஞ) வேலைக்காரன், (கூ) நாயகி, (எ) வாத்தியகாரர்கள், (அ) மற்றச் சபையிலுள்ள ஜனங்க ளென்னும், (கூ) இவர்கள் உட்கார்ந்திருந்தால் அப்போதும் பிரகாசிக்கிறது. (கo) எல்லோரும் எழுந்து போனகாலத்துச் சூந்யமாகிய வீட்டையும் பிரகாசிக்கிறது

சித்தாந்தம்:—அதுபோல (க) ஸ்தூலதேகமாகிய நாடகசாலையில் (உ) சாக்ஷியாகிய நான் தீபமா யிருக்கிறேன்; (ங) அந்த நான், சிதாபாசனுகிய இராஜா, (ச) மனமாகிய மந்திரி, (ஞ) பஞ்சப்பிராணனுகிய சேவகர்கள், (கூ) புத்தியாகிய நாயகி(கூத்தாடிச்சி), (எ) தசேந்திரியங்களாகிய வாத்தியகாரர், (அ) சப்தமுதலிய பஞ்ச

விஷயமாகிய சபையின் ஜனங்க ளென்னு (க) மிவர்கள் ஜாக்கிரசொப்பனசமயங்களில் இருந்தால் அப்போது இவர்களை அறிகிறேன்; (கo) சுழுத்திசமயத்தில் இவர்களில்லாதபோது இவர்க ளில்லாமையையும் நான் அறிகிறேன்.

என்றிப்படி இதில் சொல்லப்பட்ட திருஷ்டாந்தத்தை அறிக.

எo வினை:—அதை எப்படி அறியலாம்?

விடை:—க. ஜாக்கிராவஸ்தையில் இந்திரிய அந்தக்கரணங்க ளிரண்டினது உதவியால் நான் அறிகிறேன்;

உ. சொப்பனவஸ்தையில் இந்திரியமின்றி அந்தக்கரணமாத்திரத்தின் சகாயத்தினால் நான் அறிகிறேன்;

ங. சுழுத்தியவஸ்தையில் இந்திரியம் அந்தக்கரண மென்னும் இரண்டினது சகாயமின்றி யான்மாத்திரமே அறிகிறேன்.

எக. வினை:—இதில் வேறு திருஷ்டாந்தம் யாது?

விடை:—திருஷ்டாந்தம்:—(க) ஐந்து துவாரமுள்ள குடத்திற்குள் பாத்திரம் திரிகளோடு தீபம் எரிகிறது.

(உ) அந்தத் தீபமானது பாத்திரம், எண்ணெய், திரி, குடத்தின் உள்ளவயவம், குடத்தின் துவாரங்க ளென்னும் இவற்றைப் பிரகாசிப்பதாய்க் குடத்திற்கு வெளியில் துவாரங்களுக்கு நேரே வைக்கப்பட்டுள்ள வீணை, புஷ்பக்கொத்து, இரத்தினம், இரசபாத்திரம், அத்தர்ப்புட்டி யென்னும் இவை எல்லாவற்றையும் துவாரத்தின்வழியாகப் பிரகாசிக்கிறது.

(ஊ) சூரியரூபமாகச் சகல பிரஹ்மாண்டத்தையும் பிரகாசிக்கிறது.

(ச) மகாதேஜோமயமாகிய சாமானியரூபத்தால் சருவவியாபியா யிருக்கிறது.

சித்தாந்தம்:—அதுபோல, (க) பஞ்சஞானேந்திரியமாகிய துவாரமுள்ள ஸ்தூலதேகமாகிய குடத்தினுள் இதயதாமரையாகிய பாத்திரத்தில் மனமாகிய எண்ணெயும் புத்தியாகிய திரியும் இருக்கின்றன. அதன்பேரில் ஆருடமாயுள்ள ஆத்மாவாகிய தீபம் இருக்கிறது.

(உ) அது இதயமாகிய பாத்திரத்தையும், மனமாகிய எண்ணெயையும், புத்தியாகியதிரியையும், தேகத்தின் உள்ளவயவங்களையும், இந்திரியமாகிய துவாரங்களையும் அறிவதாய், இந்திரி

யங்களோடு சம்பந்தமுள்ள சத்தமுதலிய விஷ யங்களையும் இந்திரியவாயிலாக அறிகிறது.

(ஙூ) ஈசுவரரூபமாகப் பிரஹ்மாண்டமுதலிய சகல வெளிப்பிரபஞ்சத்தையும் அறிகிறது.

(ச) சாமானியசைதன்னியமாகிய பிரஹ்மரூ பத்தால் சருவவியாபியா யிருக்கிறது.

இஃது இதில் வேறு * உஉ. திருஷ்டாந்தமாம்.

எஉ. வினா:—இப்படிச் சொல்லுவதால் என்ன நிச்சயமுண்டாயிற்று?

விடை:—மேற் கூறப்பட்டுள்ள பதினேழுத த்துவங்களும் யானல்ல; இவை என்னுடையவு மல்ல; இவை பஞ்சமகாபூதங்களினுடையவாம். இவற்றை அறியும் திருஷ்டாவாகிய நான் கட திருஷ்டாவைப்போல இவற்றினும் வேறு யிருக் கிறேன் என்னும் நிச்சய முண்டாயிற்று.

எங. வினா:—பதினேழுதத்துவங்களும் நா னல்ல என்னுடையவு மல்ல வென் றறிவ தெப் படி?

---

* உஉ. இங்கே வேறு யாகசாலையின் திருஷ்டாந் தம் உண்டு. அது மேல் எழாவது கலையில் உபதிருஷ் டாவென்னும் ஆத்மாவினது விசேஷணத்தின் பிரசங் கத்திற் செல்லப்படும்.

விடை :—க-டு. ஞானேந்திரியமைந்தில்,

க. சுரோத்திரம்

(க) சத்தத்தைக் கேட்குமாயின், அதையும் நானறிகிறேன் ;

(உ) கேளாதகாலத்து, அக்கேட்டலின் இன்மையையும் நானறிகிறேன்.

ஆகையால் இந்தச் சுரோத்திரம் நானல்ல ; என்னுடையது மல்ல; இது ஆகாயத்தினுடையதாம். இதை அறியும் திருஷ்டாவாகிய நான் கடதிருஷ்டாவைப்போல இதனினும் வேறாயிருக்கிறேன்.

உ. துவக்கு

(க) பரிசத்தைக் கிரகிக்குமாயின், அதையும் நானறிகிறேன் ;

(உ) கிரகியாதகாலத்து, அந்தக் கிரகித்தலின் இன்மையையும் நானறிகிறேன்.

ஆகையால் இந்தத்துவக்கு நானல்ல ; என்னுடையது மல்ல; இது வாயுவினுடையதாம். இதை அறியும் திருஷ்டாவாகிய நான் கடதிருஷ்டாவைப்போல இதனினும் வேறாயிருக்கிறேன்.

கூ. சகஷ்டு

(க) உருவத்தைப் பார்த்தால், அதையும் நானறிகிறேன்;

(உ) பாராதகாலத்து, அப்பார்த்தலின் இன்மையையும் நானறிகிறேன்.

ஆகையால் இந்தச் சகஷ்டு நானல்ல; என்னுடையது மல்ல; இது தேயுவினுடையதாம். இதை அறியும் திருஷ்டாவாகிய நான் கடதிருஷ்டாவைப்போல இதனினும் வேறாயிருக்கிறேன்.

ச. சிங்ஙவை

(க) இரசத்தின் உருசியைக் கிரகித்தால், அதையும் நானறிகிறேன்;

(உ) உருசியைக் கொள்ளாதகாலத்து, அந்த உருசியைக் கொள்ளுதலின் இன்மையையும்நானறிகிறேன்.

ஆகையால் இந்தச் சிங்ஙவை நானல்ல; என்னுடையது மல்ல; இது அப்புவினுடையதாம். இதை அறியும் திருஷ்டாவாகிய நான்கடதிருஷ்டாவைப்போல இதனினும் வேறாயிருக்கிறேன்.

கு. கிராணம்

(க) கந்தத்தைக் கிரகிக்குமாயின், அதையும் நானறிகிறேன்;

(உ) கிரகியாதகாலத்து, அந்தக் கிரகணம் செய்தலின் இன்மையையும் நானறிகிறேன்.

ஆகையால் இந்தக் கிராணம் நானல்ல; இது என்னுடையது மல்ல; இதுபிருதிவியினுடையதாம். இதை அறியும் திருஷ்டாவாகிய நான் கடதிருஷ்டாவைப்போல இதனினும் வேறுயிருக்கிறேன்.

கூ-கo. கர்மேந்திரியம் ஐந்தில்,

கூ. வாக்கு

(க) வசனிக்குமாயின், அதையும் நானறிகிறேன்;

(உ) வசனியாதகாலத்து, அதனின்மையையும் நானறிகிறேன்.

ஆகையால் இந்தவாக்குநானல்ல; இது என்னுடையது மல்ல; இது ஆகாயத்தினுடையதாம். இதை அறியும்திருஷ்டாவாகிய நான் கடதிருஷ்டாவைப்போல இதனினும்வேறுயிருக்கிறேன்.

எ. பாணி (கை)

(க) கொடுக்கல் வாங்கல் செய்தால், அதையும் நானறிகிறேன்;

(உ) செய்யாதகாலத்து, அதன் இன்மையையும் நானறிகிறேன்.

ஆகையால் இந்தப் பாணி நானல்ல; இது என்னுடையது மல்ல; இது வாயுவினுடையதாம். இதை அறியும் திருஷ்டாவாகிய நான் கடதிருஷ்டாவைப்போல இதனினும் வேறுபிருக்கிறேன்.

அ. பாதம்

(க) நடந்தால், அதையும் நானறிகிறேன்;

(உ) நடவாதகாலத்து, அதனின்மையையும் நானறிகிறேன்.

ஆகையால் இந்தப் பாதம் நானல்ல; இது என்னுடையது மல்ல; இது தேயுவினுடையதாம். இதை அறியும் திருஷ்டாவாகிய நான் கடதிருஷ்டாவைப்போல இதனினும் வேறுபிருக்கிறேன்.

கூ. உபஸ்தம்

(க) இரசத்தை(மூத்திரவீரியங்களை) விடுமாயின், அதையும் நானறிகிறேன்;

(உ) விடாதகாலத்து, அதன் இன்மையையும் நானறிகிறேன்.

ஆகையால் இந்த உபஸ்தம் நானல்ல; இது என்னுடையது மல்ல; இது ஜலத்தினுடையதாம். இதை அறியும் திருஷ்டாவாகிய நான் கடதிருஷ்டாவைப்போலஇதனினும்வேறு யிருக்கிறேன்.

க0. குதம்

(க) மலத்தை நீக்குமாயின், அதையும் நானறிகிறேன்;

(உ) நீக்காதகாலத்து, அதன் இன்மையையும் நானறிகிறேன்.

ஆகையால் இந்தக் குதம் நானல்ல; இது என்னுடையது மல்ல; இது பிருதிவியினுடையதாம். இதை அறியும் திருஷ்டாவாகிய நான் கடதிருஷ்டாவைப்போலஇதனினும்வேறு யிருக்கிறேன்.

கக-கள. பிராணஅந்தக்கரணங்களில்,

கக-கரு. பஞ்சப்பிராணன்

(க) கிரியையைச் செய்யுமாயின், அதையும் நானறிகிறேன்;

(உ) கிரியையைச்செய்யாதகாலத்து, அதன்மையையும் நானறிகிறேன்.

ஆகையால் இந்தப் பிராணன் நானல்ல; இது

என்னுடையது மல்ல; இது சேர்ந்துள்ள பஞ்ச மகாபூதத்தினுடையதாம். இதை அறியும்திருஷ்டாவாகிய நான் கடதிருஷ்டாவைப்போல இதனினும் வேறு யிருக்கிறேன்.

கசு. மனம்

(க) சங்கற்பவிகற்பஞ் செய்யுங்காலத்து, அதையும் நானறிகிறேன்;

(உ) சங்கற்பவிகற்பம் செய்யாதகாலத்து, அதன் இன்மையையும் நானறிகிறேன்.

ஆகையால் இந்த மனம் நானல்ல; இது என்னுடையது மல்ல; இது சேர்ந்துள்ள பஞ்சமகாபூதத்தினுடையதாம். இதை அறியும் திருஷ்டாவாகிய நான் கடதிருஷ்டாவைப்போல இதனினும் வேறு யிருக்கிறேன்.

கள. புத்தி

(க) நிச்சயஞ்செய்யுமாயின், அதையும் நானறிகிறேன்;

(உ) நிச்சயஞ்செய்யாதகாலத்து, அதன் இன்மையையும் நானறிகிறேன்.

ஆகையால் இந்தப் புத்தி நானல்ல; இது என்னுடையது மல்ல; இது சேர்ந்துள்ள பஞ்சமகாபூதத்தினுடையதாம். இதை அறியும் திருஷ்டா

வாகிய நான் கடதிருஷ்டாவைப்போல இதனினும் வேறுயிருக்கிறேன். இவ்வாறு இந்தப்பதினேழுதத்துவங்களும் நானல்ல ; என்னுடையவு மல்லவென் றறிக.

எச. வினு :—இப்படிச் சொல்லுவதனல் என்ன நிச்சயம் உண்டாயிற்று ?

விடை:—க. இலிங்கதேகமும், அதன் தர்மமாகிய புண்ணியபாவங்களின் கர்த்திருத்துவமும், அவற்றின் பலமாகிய சுகதுக்கங்களின் போக்திருத்துவமும்,

உ. இகலோகபரலோகங்களில் கமனகமனமும் (போக்கு வரவும்),

ங. வைராக்கியசமதமாதி சாத்துவீகவிருத்திகளும் ; இராகத்துவேஷஹர்ஷாதி இராசதவிருத்திகளும், நித்திரை சோம்பல் மறதிமுதலிய தாமதவிருத்திகளும்,

ச. அப்படியே பசி, தாகம், அந்தமந்தபுத்துவ (குருட்டுத்தன்மை மந்தத்தன்மை தெளிவு) முதலியவைகளும்,

நானல்ல ; என்னுடையவுமல்ல என்னும் நிச்சயம் உண்டாயிற்று.

எஞ். வினா:—புண்ணியபாவங்களின் கர்த்தாவும் அவற்றின் பலமாகிய சுகதுக்கங்களின் போக்தாவும் நானல்ல ; அக்கருத்திருத்துவ போக்திருத்துவங்கள் என்னுடைய தர்மமுமல்லவென் றறிவ தெப்படி ?

விடை:—க. எந்த வஸ்து விகாரியோ அது கிரியையுடையதா யிருத்தலால் கர்த்தாவெனப் படும். நான் நிர்விகாரகூடஸ்தனு யிருத்தலால் கிரியைக்கு ஆசிரயனல்லன். அதனால் புண்ணிய பாவமாகிய கிரியைக்குக் கர்த்தாவு மல்லன். எவன் கர்த்தா வல்லனோ, அவன் போக்தாவு மல்லன். ஆகையால் இவை அந்தக்கரணத்தின் தர்மமாம் ; என்னுடைய வல்ல. இவற்றை அறியும் திருஷ்டாவாகிய நான் கடதிருஷ்டாவைப் போல இவற்றினும் வேறு யிருக்கிறேன் என்றிப்படி அறிக.

எசு. வினா:—இகலோசபரலோகங்களில் கமனாகமனம் என்னுடைய தர்ம மல்ல வென்றறிவது எப்படி ?

விடை:—உ. அந்தக்கரணம் (இலிங்கதேகம்) பரிச்சின்னமா யிருக்கிறது. அதற்குப்பிராசப்த கர்மத்தின் வலியால் கமனாகமனம் சம்பவிக்கிறது. நான் ஆகாயத்தைப்போல வியாபகமா யிரு

க்கிறேன். ஆகையால்கமனகமனம் என்னுடைய தர்ம மல்ல என்றிப்படி யறிக.

எஎ. வினா :—சாத்துவீக இராசத தாமதவிருத்திகள் நானல்ல ; என்னுடையவு மல்ல இவன் றறிவ தெப்படி ?

விடை:—கூ. திருஷ்டாந்தம்:— (க) ஓர் அரண்மனையில் உட்கார்ந்திருக்கும் (உ) இராஜாவின் விநோதத்தின் பொருட்டு (கூ) ஓர் மாயாவி (ச) நீர்க்குழல் ஒன்று செய்து, (ஞ) அதன் துவாரத்தைத் திறக்குங்கால் அதினின்றும் மூன்று நீர்த்தாரைகள் வெளிப்படுகின்றன; (சு) அந்த மூன்று தாரைகளினின்றும் பிரவாகரூபமாக அநேகம் தாரைகள் எழும்புகின்றன. (எ) அந்தத் துவாரத்தை அடைக்கும்போது அம்மூன்று தாரைகளும் தடைப்பட இராஜாமாத்திரம் தனித்து மிஞ்சுகிறான்.

சித்தாந்தம்:—(க) அதுபோல ஸ்தூலசரீரமாகிய அரண்மனையில் (உ) அதிஷ்டான கூடஸ்த சொரூபமாயுள்ள பரமாத்மாவாகிய இராஜா விருக்கின்றார். அவருடைய விநோதத்தின் பொருட்டு (கூ) மாயையா (அஞ்ஞானமா) கிய மாயாவி, (ச) அந்தக்காரணமாகிய நீர்க்குழலைச்செய்து, (ஞ) சாக்கிரசெப்பனங்களில் அதன் பிராணத்

துவமாகிய துவாரத்தைத்திறக்க, அதினின்று ம் மூன்றுகுணத்தின் பிரவாகமாகிய மூன்றுதா ரைகள் வெளிப்படுகின்றன. (சு) அந்த மூன்று தாரைகளினின்றும் அளவில்லாத விருத்திகள் எழும்புகின்றன. (எ) சுழுத்தியில் பிராரத்துவ கர்மமாகிய துவாரங்கள் தடைப்படவே, அந்த விருத்திகளின் பாவாபாவங்(உண்மையின்மை) களை அறியும் ஆநந்தரூபகேவலபரமாத்மா வாகிய இராஜா மிஞ்சுகிறார். அவரே நாணுகை யால், இந்தச் சாத்துவிக இராசத தாமத விருத்திகள் நானல்ல; என்னுடையவு மல்ல; இவை அந்தக்கரணத்தினுடையவாம். இவற்றை அறியும் திருஷ்டாவாகிய நான் கடதிருஷ்டாவைப் போல இவற்றினும் வேறு யிருக்கிறே னென்றிப்படி அறிக.

எஅ. வினா:—அந்த மந்தபடுத்துவங்கள் நான ல்ல; என்னுடையவுமல்லவென் றறிவ தெப்படி?

விடை:—சு-(க) நேத்திரமுதலிய இந்திரிய ங்கள் தத்தம் விஷயங்க ளொன்றையுப்(எதிரி யும்)கிரகியாதிருத்தல் அவற்றின் அந்தத்துவம். அதையும் நானறிகிறேன்.

(உ) விஷயங்களைச் சொற்பமாகக் கிரகித்தல் அ வற்றின் மந்தத்துவம். அதையும் நானறிகிறேன்.

(ஈ) விஷயங்களைத் தெளிவாகக் கிரகித்தல் அவற்றின் படுத்துவம். அதையும் நானறிகிறேன்.

ஆகையால் இவை நானல்ல; என்னுடையவுமல்ல; இவை இந்திரியங்களின் தர்மமாம். இவற்றை அறியும் திருஷ்டாவாகிய நான் கடதிருஷ்டாவைப்போல இவற்றினும்வேறுயிருக்கிறேன்.

இப்படிச் சூக்ஷ்மதேகத்திற்கு நான் திருஷ்டாவா யிருக்கிறேன்.

ஊ. காரணதேகத்திற்கு நான் திருஷ்டா.

எஊ. வினா:—காரணதேக மென்பது யாது?

விடை:—க. புருஷன் சுழுத்தியினின்றும் எழுந்த காலத்து, "எனக்கு இன்றைக்கு ஒன்றும் தெரியவில்லை." என்று சொல்லுவதினால்,* உஊ. சுழுத்தியில் அஞ்ஞான மிருக்கிறதெனச்சித்திக்கிறது. அன்றியும்,

உ. ஜாக்கிரத்திலும் "நான் பிரஹ்மத்தை அறியேன்; என்னுடையது எனக்குத் தெரியவில்

*உஊ சுழுத்தியினின்றும் எழுந்த புருடனுக்கு "எனக்கு ஒன்றுந்தெரியவில்லை." என்னும் ஞானம் உண்டாகிறது. அந்த ஞானம் அநுபவரூபமன்று ஆனால் அது சுழுத்திகாலத்து அநுபவிக்கப்பட்ட அஞ்ஞானத்தின் ஸ்மிருதியாம். அந்த ஸ்மிருதிக்கு விஷயம் சுழுத்திகாலத்தின் அஞ்ஞானமாம்.

லை; நான் இதை அறியேன்.'' என்னும் அநுபவத்திற்கு விஷயம் அஞ்ஞானமாம்.

சு. அன்றியும் சொப்பனத்திற்குக் காரணமும் நித்திரையாகிய அஞ்ஞானமாம். இப்படிப்பட்ட அஞ்ஞானம் எதுவோ, அது *உசு. காரணதேகமாம்.

அ0. வினா:—காரணதேகம் நான் அல்ல; என்னுடையது மல்ல வென் றறிவது எப்படி?

விடை:—''நான் அறிகிறேன்'' ''எனக்குத்தெரியவில்லை.'' என்றிப்படி உண்டாகும் அந்தக்கரணத்தின் விருத்திகளே ஞாத (அறியப்பட்ட) அஞ்ஞாத (அறியப்படாத) வஸ்துக்களாகிய விஷயங்களோடு நான் அறிகிறேன். ஆகையால்

---

* உசு. க. அஞ்ஞானத்தை ஸ்தூலசூக்ஷ்மதேகங்களுக்குக் காரணமா யிருத்தலால் காரண மென்றும்,

உ. தத்துவஞானத்தால் தகிக்கப்படுவதால் தேகமென்றும் கூறுவர்.

இந்த அஞ்ஞானம் கருப்பக்கிரகத்தின் இருளைப்போலப் பிரஹ்மத்தின் ஆசிரிதமாய்ப் (பிரஹ்மத்தை இடமாகக்கொண்டு) பிரஹ்மத்தையே ஆவரணஞ்செய் (மறைக்) கிறது.

இதனையே சுவாசிரயசுவவிஷய மென்பர்.

இந்தக் காரணதேகம் நானல்ல; என்னுடையது மல்ல; இது * உடு. அஞ்ஞானத்தினுடையதாம். இதை அறியும் திருஷ்டாவாகிய நான் கட திருஷ்டாவைப்போல இதனினும் வேறு யிருக்கிறேன் என்றிப்படி அறிக.

இவ்வாறு காரணதேகத்திற்கு நான் திருஷ்டாவா யிருக்கிறேன்.

ஸ்ரீ விசாரசந்திரோதயம் மூன்றுங்கலை

தேகமூன்றற்கும் நான் திருஷ்டா வென்பது

முடிந்தது.

---

* உடு. காரணதேகமே அஞ்ஞானமா யிருக்க, அதை "அஞ்ஞானத்தினுடைய" தென்று கூறியது இராகு வையே இராகுவின் தலையென்று கூறுவது போலாம்.

ஸ்ரீ விசாரசந்திரோதயம்.

நான்காங்கலை.

* க. நான் பஞ்சகோசாதீதன்.

கோச மைந்துங் கடந்தவன் யானே
† மயச்சொ லொடுர்ந்த வந்நம் பிராணன்
மநோ தி விஞ்ஞாந மாநந்த மெனப்படு

---

* க. "आत्मा पञ्चकोशविवर्जितः ।

ஆத்மா பஞ்சகோசங்களுக்கு வேறானவன்." என்பது தேஜோபிந்தூபநிஷத்து மற்றும் தைத்திரீயம் கடோபநிஷத்துமுதலிய உபநிஷத்துக்களிலும் இவ்விஷயத்தினைக் காண்க.

† மயச்சொற்றொடர்ந்த அந்நம் ..... என்பவற்றை அந்நமயம் பிராணமயம் மநோமயம் விஞ்ஞானமயம் ஆநந்தமயம் என்று கூட்டிப் பொருள் கொள்க.

மைந்து கோசமு மான்மா வன்றித்
தூல வுடலே வந்த மயமாம்
பிராணம் மநமே விஞ்ஞாந மெனமுக்
கோசமாக் கூறுவ ரிலிங்கந் தன்னைக்
காரண மாநந்த மயமா மிவைதாங்
காரியஞ் சடமே விகாரி விநாசி
வியபிசாரி யாகலி னநாத்மா வாகு
மவற்றை யறியு மாத்மா யானே
பிறப்பிலன் சித்த விகாரி நித்தியன்
வியபிசார மிலனு யிருத்தலி னானே.

அக. வினா :—பஞ்சகோசாதீதன் என்றால் என்ன ?

விடை :—பஞ்சகோசாதீதன் என்பது நான் பஞ்சகோசங்களுக்கும் அதீதமா (வேறு) யிருக்கிறேன் என்பதாம்.

அஉ. வினா :—கோச மென்பது யாது ?

விடை :—கோச மென்பது க. கத்தியினுறைக்கும், உ. திரவியப்பொக்கிஷத்திற்கும், ங. கோசகார மென்னும் புழுவின் கூட்டிற்குமாம்.

*உ. அதுபோலப் பஞ்சகோசங்கள் ஆத்மாவை மறைத்திருக்கின்றன. ஆகையால் அந்நமயாதிகளும் கோச மெனப்படுகின்றன.

அங. வினா:—பஞ்சகோசங்களின் பெயர்களெவை?

விடை:—க. அந்நமயகோசம், உ. பிராணமயகோசம், ங. மனோமயகோசம், ச. விஞ்ஞானமயகோசம், ஞ. ஆநந்தமயகோசம் என்னுமிவை பஞ்சகோசங்களின் பெயர்களாம்.

அச. வினா:—க. அந்நமயகோசம் என்பது யாது?

விடை:—க. *ங. மாதாபிதாக்கள் உண்ட அந்நத்தினால் உண்டாகிய சுரோணிதசுக்கிலங்களால் மாதாவின் உதரத்தில் உற்பத்தியாய்,

---

*உ. "कोशकारकृमिरिव स्वेच्छया याति बन्धनम्

ஆத்மா கோசகாரப்புழுவினைப் போலத் தனது இச்சையினால் பந்தனத்தை அடைகின்றது." என்பது மஹோபநிஷத்து.

*ங. "अन्नरसेनैव भूत्वान्नरसेनाभिवृद्धिं प्राप्यान्नरसमयपृथिव्यां यद्विलीयते सोऽन्नमयकोशस्तदेव स्थूलशरीरम् ॥

அந்நரசத்தினாலேயே உண்டாய், அந்நரசத்தினால்

உ. ஜனித்தபிறகு பால்முதலிய அந்நத்தால் விருத்தியடைந்து,

ஊ. மரித்தபின் அந்நமயமாகிய பிருதிவியில் ஒடுங்கும் ஸ்தூலதேகம் அந்நமயகோசமாம்.

அரு. வினு:—அந்நமயகோசம் எப்படி இருக்கிறது?

விடை :—சுகதுக்கங்களின் அநுபவமாகிய போகத்திற்கு இடமா யிருக்கிறது.

அசு. வினு :— அந்நமயகோசத்திற்கு நான் வேறு யிருக்கிறேன் என் றறிவ தெப்படி?

விடை :—க. பிறத்தற்கு முன்னும் மரித்த பின்னும் அந்நமயகோசம்(ஸ்தூலசரீரம்) இல்லை. ஆகையால் இது உற்பத்திநாசமுடையதாயிருத்தலால் கடத்தைப் போற் காரியமாம்.

உ. நான் எப்போதும் உண்மைவடிவு(பாவ ரூப)மா யிருக்கிறேன். அதனால் உற்பத்தி நாச

அபிவிருத்தியடைந்து, அந்நாசமயப்பிருதிவியில் எது ஒடுங்குகின்றதோ, அது அந்நமயகோசம். அதுவே ஸ்தூலசரீரம்." என்று பைங்கலோபநிஷத்திலும், அவ்வாறே ஸர்வசாரோபநிஷத்திலும் இவ்விலக்கணம் கூறப்பட்டிருத்தல் காண்க.

மில்லாதவனுயிருக்கும் நான் இதனினும் வேறு யிருக்கிறேன்.

ஆகையால் இந்த அந்நமயகோசம் நானல்ல; இது என்னுடையது மல்ல; இது ஸ்தூலவடிவ மாம். இதை அறியும் ஆத்மாவாகிய நான் இத னினும் வேருயிருக்கிறேன். இப்படி அந்நமய கோசத்திற்கு நான் வேறு யிருக்கிறேனென்ற றிக.

அ. வினு:—உ. பிராணமயகோச மென்பது யாது?

விடை:—* ச. கர்மேந்திரியம் ஐந்துடன்கூ டிய பஞ்சப்பிராணன் பிராணமயகோசமாம்.

அஅ. வினு:—கர்மேந்திரியம் ஐந்தும் பஞ் சப்பிராணனும் எவை?

விடை:—கர்மேந்திரியம்ஐந்தும் பஞ்சப்பிரா ணனும் முன் ஞக்ஷுமதிகத்தின் பிரக்கிரியையில் சொல்லப்பட்டிருக்கின்றன.

---

* ச. "कर्मेन्द्रियैः सह प्राणादिपञ्चकं प्राणमयकोशः॥

கர்மேந்திரியங்களோடு கூடப் பிராணாதி ஐந்தும் பிராணமாகோசம்." என்று பைங்கலோபநிஷத் திலும், தவிர்த்தே சிவசாரோபநிஷத்திலும் கூறி யிருத்தல் காண்க.

அகூ. வினா:—பஞ்சப்பிராணனது ஸ்தானங்களும் கிரியைகளும் எவை ?

விடை :—க. பிராணவாயு

(க) இருதயஸ்தானத்திலிருக்கின்றது ;

(உ) பகலிரவாகியவ்வொருநாளும் உகசுஂ உசுவாசநிசுவாசங்களைக் கொள்ளுதலாகிய கிரியையைச் செய்கின்றது.

உ. அபானவாயு

(க) குதஸ்தானத்திலிருக்கின்றது ;

(உ) மலமூத்திரங்களை நீக்குவதாகிய கிரியையைச் செய்கின்றது.

கூ. சமானவாயு

(க) நாபிஸ்தானத்திலிருக்கின்றது ;

(உ) இணற்றுரைத் தோட்டத்திற் செலுத்தும் தோட்டக்காரனைப் போல, உண்ட அந்நசத்தை எடுத்து நாடியின் வழியாய்ச் சரீரமுழுவதிலும் சேர்ப்பித்தலாகிய கிரியையைச் செய்கின்றது.

சு. உதானவாயு

(க) கண்டஸ்தானத்திலிருக்கின்றது ;

(உ) உண்ணப்பட்டனவும் பருகப்பட்டனவு மாகிய அந்நஜலங்களின் விபாகத்தைச் செய்கின் றது. அப்படியே சொப்பனம் இழுப்பு விக்கல் முதலியவைகளைக் காட்டுதலாகிய கிரியையைச் செய்கின்றது.

(ஐ). வியானவாயு

(க) சருவாங்கமாகிய ஸ்தானத்தி லிருக்கின் றது;

(உ) சருவ அங்கங்களின் மூட்டுகளையும் இரு ப்புதலாகிய கிரியையைச் செய்கின்றது.

இப்படிப் பஞ்சப்பிராணனுக்கு முக்கியஸ்தா னங்களும் கிரியைகளு மிருக்கின்றன.

கூ0. வினு :—பிராணதிவாயுக்கள் சரீரத்தி லென்ன செய்கின்றன ?

விடை :—

க. பிராணதிவாயுக்கள் சரீரத்தில் நிரம்பிச் சரீரத்திற்கு வல்லமையைத் தருகின்றன.

உ. அன்றியும், இந்திரியங்கள் தத்தம் காரிய ங்களில் பிரவிருத்திக்கலாகிய கிரியைக்குச் சா தனமாயு மிருக்கின்றன.

கூக. வினு :—பிராணமயகோசத்திற்கு நான் வேறாயிருக்கிறே னென் றறிவ தெப்படி ?

விடை :—

க. புருஷன் தூங்குங்காலத்துப் பிராணன் விழிப்பாயிருந்தபோதிலும், அப்போது ஓர் சிநேகன் வருவானாயின், அவனுக்கு உபசாரம் செய்கிறது மில்லை ;

உ. திருடன் நகைகளைக் கொண்டு போவானாயின், அவனைத் தடுக்கிறது மில்லை.

அதனால் இந்தப் பிராணவாயு கடத்தைப் போல ஜடமாம். சைதன்னியரூபமாகிய நான் இதனினும் வேறு பிருக்கிறேன். ஆகையால் இந்தப் பிராணமயகோசம் நானல்ல ; என்னுடையது மல்ல ; இது சூக்ஷ்மதேகவடிவமாம். இதை அறியும் ஆத்மாவாகிய நான் இதனினும் வேறு பிருக்கிறேன். இவ்வாறு பிராணமயகோசத்தினும் நான் வேறு பிருக்கிறேன் என்றறிக.

கூஉ. வினா :—ங. மனோமயகோச மென்பது யாது ?

விடை :— * கு. ஞானேந்திரியம் ஐந்துடன் கூடிய மனது மனோமயகோசமாம்.

---

*கு. "ज्ञानेंद्रियैः सह मनो मनोमयकोशः ॥

ஞானேந்திரியங்களோடு கூட மனம் மனோமயகோசமாம்." என்று பைங்கலோபநிஷத்திலும், அவ்வாறே

கூஉ. வினா :—ஞானேந்திரியம் ஐந்தும் மன மும் எவை ?

விடை :—இவை முன் சூக்ஷ்மதேகத்தின் பி சக்கிரியையில் சொல்லப்பட்டிருக்கின்றன.

கூச. வினா :—மனம் எப்படி இருக்கிறது ?

விடை :—தேகத்தில் அகந்தையும் கிரகமுத லியவற்றில் மமதையுமாகிய அபிமானத்தைச் செய்துகொண்டு, இந்திரியவாயிலாக வெளியே செல்லுவதாய்க் காணரூபமா யிருக்கின்றது.

கூந. வினா :—மனோமயகோசத்திற்கு நான் வேறு யிருக்கிறேன் என் றறிவு தெப்படி ?

விடை :—க. காமக்குரோதாதி விருத்திக ளோடு கூடியிருத்தலால் மனம் நியமமில்லாத சு பாவமுடையதா யிருக்கிறது. அதனல் விகாரி யாம்.

நான் சகல விருத்திகளுக்கும் சாக்ஷியாகிய நிருவிகாரனு யிருக்கிறேன்.

ஆகையால் இந்த மனோமயகோசம் நானல்ல ; என் னுடையதுமல்ல; இதுசூக்ஷ்மதேகரூபமாம்.

சர்வசாரோபநிஷத்திலும் இதன் இலக்கணம் கூறியி ருத்தல் காண்க.

இதை அறியும் ஆத்மாவாகிய நான் இதனினும் வேறு யிருக்கிறேன். இப்படி மனோமயகோசத்தினும் நான் வேறு யிருக்கிறேனென் றறிக.

கூசு. வினு:—சு. விஞ்ஞானமயகோச மென்பது யாது?

விடை:—* கு. ஞானேந்திரியம் ஐந்துடன் கூடிய புத்தி விஞ்ஞானமயகோசமாம்.

கூன. வினு:—ஞானேந்திரியமும் புத்தியும் எவை?

விடை:—இவை முன் இலிங்கதேகப்பிரக்கிரியையில் சொல்லப்பட்டிருக்கின்றன.

கூஅ. வினு:—புத்தி எப்படி யிருக்கிறது?

விடை:—க. சுழுத்தியில் சிதாபாசனோடு புத்தி இலயமா (ஒடுங்கி) யிருக்கின்றது.

---

* கு. "ज्ञानेंद्रियैः सह बुद्धिर्विज्ञानमयकोशः । एतत्कोशत्रयं लिंगशरीरम् ॥

ஞானேந்திரியங்களோடு கூடப் புத்தி விஞ்ஞானமய கோசமாம். இந்த (பிராணமயம் மனோமயம் விஞ்ஞானமயம் என்னும்) கோசமூன்றும் லிங்கசரீரமாம்." என்று பைங்கலதந்திரும், அவ்வாறே சர்வசாரத்திலும் இதனிலக்கணம் கூறியிருத்தல் காண்க.

உ. ஜாக்கிரத்தில் நக நுனிமுதல் சிகைவரையிலும் சரீரத்தில் வியாபித்திருப்பதாய்க் கர்த்தாரூபமாயிருக்கின்றது.

கூ. வி:— விஞ்ஞானமயகோசத்திற்கு நான் வேறு யிருக்கிறேன் என் றறிவ தெப்படி?

வி:—க. புத்தியானது குடமுதலியவற்றைப்போல இலயமுதலிய அவஸ்தைகளையுடையதா யிருத்தலால் விநாசியா(நாசமுடையதா)ம்.

உ. நான் இலயமுதலிய அவஸ்தை யில்லாதவ னாயிருத்தலால், இந்தப் புத்திக்கு விலக்ஷணமாகிய அவிநாசியா யிருக்கிறேன்.

ஆகையால் இந்த விஞ்ஞானமயகோசம் நானல்ல; என்னுடையது மல்ல; இது சூக்ஷ்ம தேகரூபமாம். இதை அறியும் ஆத்மாவாகிய நான் இதனினும் வேறு யிருக்கிறேன். இப்படி * எ

---

* எ. க. நீபத்தின் பிரகாசமும் ஆகாசமும் அபின்னமாய்த் தோற்றினாலும் பின்னமாகவே யிருத்தல்போலும்,

உ. காய்ச்சிய இரும்பில் அக்னியும் இரும்பும் அபின்னமாய்த் தோற்றினாலும் பின்னமாகவே யிருத்தல் போலும்,

ஆத்மாவும் அந்தக்காணமும் அபின்னமாய்த் தோற்றியபோதிலும் பின்னமாகவே யிருக்கின்றன; எனை

விஞ்ஞானமயகோசத்தினும் நான் வேறுயிருக்கிறேன் என்றறிக.

க00. வி:—ரு. ஆநந்தமயகோச மென்பது யாது?

வி:—க. புண்ணியகர்மபலத்தை அநுபவிக்குங்காலத்து, ஒருகால்புத்தியிருத்தி அந்தர்முகமாய், ஆத்மசொரூபமாகிய ஆநந்தத்தின் பிரதிபிம்பத்தை யடைகின்றது.

உ. பிரியமோகப் பிரமோதரூபமாகச் சொல்லப்படுகின்றது.

ங. அந்த விருத்தியே, புண்ணியகன்மபல போகம் நிவிருத்தியாகும்போது நித்திரைவடிவமாக விலீனமா(ஒடுங்கு)கின்றது;

அந்த விருத்தி *அ. ஆநந்தமயகோசமாம்.

க0க. வி:—ஆநந்தமயகோச மெப்படி யிருக்கிறது?

னின், சுழுத்தியில் அந்தக்காரணம் இலயமா யிருக்க, ஆத்மா அஞ்ஞானத்திற்குச் சாக்ஷியாகத் தோற்றுவதால்.

*அ. "स्वरूपाज्ञानमानंदमयकोशः । तत्कारण-शरीरम् ॥ சொரூபாஞ்ஞானம் ஆநந்தமயகோசமாம்.

விடை:—க. எதற்கு இஷ்டவஸ்துவின் திரிசனத்தால் உண்டாகிய பிரியவிருத்தி சிரசாயும்,

உ. இஷ்டவஸ்துவின் இலாபத்தா லுண்டாகிய மோதவிருத்தி ஒரு (வலது) சிறகாயும்,

ங. இஷ்டவஸ்துவின் அநுபவத்தால் உண்டாகிய பிரமோதவிருத்தி இரண்டாவது (இடது) சிறகாயும்,

ச. புத்திவிருத்தியில் அல்லது அஞ்ஞானவிருத்தியில் உள்ள ஆத்மசொரூபமாகிய ஆநந்தத்தின் பிரதிபிம்பம் சொரூபமா(உடலா)யும்,

ஞ. ஆத்மாவின் சொரூபமாகிய பிம்பாநந்தம் * கூ புச்ச(ஆதார)மாயு மிருக்கிறதோ,

---

அது காரணசரீரம்". என்று பைங்கலத்திலும், அவ்வாறே சர்வசாரத்திலும் இதனிலக்கணம் கூறியிருத்தல் காண்க.

"जडत्वप्रियमोदत्वधर्माः कारणदेहगाः ॥

ஜடத்துவ பிரியமோதத்துவதர்மங்கள் காரணதேகத்துள்ளனவாம்." என்பது ஆத்மபோதோபநிஷத்து.

* கூ பிரஹ்மமாகிய ஆநந்தம் ஆதாரமா யிருத்தலால் தைத்திரீயசுருதியின் ஞ-வது அநுவாகத்தில் அது புச்ச சத்தத்தாற் சொல்லப்பட்டிருக்கிறது.

அப்படிப்பட்ட பக்ஷியாகிய போக்தாவாய் * க0. ஆநந்தமயகோச மிருக்கிறது.

க0உ. வினு:—ஆநந்தமயகோசத்திற்கு நான் வேறுயிருக்கிறே னென்று அறிவ தெப்படி?

விடை:—

க. ஆநந்தமயகோசம், மேகமுதலிய பதார்த்தங்களைப்போல ஒவ்வோர்காலத்தி லுண்டாவதாகையால், அது க்ஷணிகமாம்.

உ. நான் எப்போது மிருத்தலால் நித்யன். ஆகையால் இந்த ஆநந்தமயகோசம் நானல்ல; என்னுடையது மல்ல; இது காரணரூபமாம். இதை அறியும் ஆத்மாவாகிய நான் இதனினும் வேறு யிருக்கிறேன்.

இப்படி ஆநந்தமயகோசத்திற்கு நான் வேறுயிருக்கிறே னென் றறிக.

---

* க0. இப்படியே மற்ற நான்கு கோசங்களின் பக்ஷிரூபத்துவமும் தைத்திரீயஉபநிஷத்தின் உரை ஆநந்தவல்லி க—நி அநுவாகங்களில் சொல்லப்பட்டிருக்கிறது இச்சையுள்ளவர்கள் அங்கே பார்த்துக்கொள்ளுக. எம்மால் வெளிப்படுத்தப்பட்ட தமிழ் ஸ்ரீபாலபோதம் எவது உபதேசத்திலும் காணலாம்.

௧0௬. வினா :—இருப்பனவாகிய அந்நமயாதி கோசங்கள் ஆத்மா வல்ல வெனின், அப்போது ஆத்மா வென்பது யாது ?

விடை :—

க. புத்திமுதலியவற்றிற் பிரதிபிம்பரூபமாயுள்ளதும்,

உ. பிரியமுதலிய சொற்களால் சொல்லப்படுவதுமாகிய

ஆநந்தமயகோசத்திற்குப் பிம்பரூபகாரணமாயுள்ள ஆநந்தம், நித்தியமாயிருத்தலால் ஆத்மாவாம்.

௧0௭. வினா :—பஞ்சகோசங்கள்தான் அநுபவத்தில் வருகின்றன. இவற்றிற்கு வேறாக ஓர் ஆத்மா அநுபவத்தில் வராமையால், ஆத்மா பஞ்சகோசங்களுக்கு வேறாய் இருக்கிறதென்னும் நிச்சயம் எப்படி உண்டாம் ?

விடை :—பஞ்சகோசங்கள்தான் அநுபவத்தில் வருகின்றன. இவற்றிற்கு வேறாய் ஓர் ஆத்மா அநுபவத்தில்வராவில்லை என்னும் வார்த்தை சத்தியம். ஆயினும், எந்த அநுபவத்தால் இந்தப் பஞ்சகோசங்களும் அறியப்படுகின்றனவோ, அந்த அநுபவத்தை நிவர்த்திக்கக்கூடியவன்

யாவன் ? ஒருவனும் இல்லை. ஆகையால் * கக
பஞ்சகோசங்களின் அநுபவரூபமாகிய சைதன்

---

* கக. "अस्थिस्थाण्वादिरूपोयं शरीरं भाति देहिनां ।
योयमन्नमयो ह्यात्मा भाति सर्वशरीरिणः ।
ततः प्राणमयो ह्यात्मा विभिन्नश्चांतरस्थितः ॥

ततो मनोमयो ह्यात्मा विभिन्नश्चांतरस्थितः ।
ततो विज्ञान आत्मा तु ततोन्यश्चांतरस्थितः ।
आनन्दमय आत्मा तु ततोन्यश्चांतरस्थितः ॥

योयमन्नमयस्सोयं पूर्णः प्राणमयेन तु ।
मनोमयेन प्राणोपि तथा पूर्णस्स्वभावतः ।
तथा मनोमयो ह्यात्मा पूर्णो ज्ञानमयेन तु ॥

आनन्देन सदा पूर्णस्सदा ज्ञानमयस्सुखं ।
तथानन्दमयश्चापि ब्रह्मणान्येन साक्षिणा ।
सर्वांतरेण पूर्णश्च ब्रह्म नान्येन केनचित् ॥

यदिदं ब्रह्मपुच्छाख्यं सत्यज्ञानाद्वयात्मकम् ।
सारमेव रसं लब्ध्वा साक्षाद्देही सनातनम् ।
सुखी भवति सर्वत्र अन्यथा सुखता कुतः ॥

னியம் யாதோ, அது பஞ்சகோசத்திற்கு வேறு கிய ஆத்மாவாம்.

எலும்பு நரம்புமுதலியவடிவமாகிய இச்சரீரம் தேகி களுக்குத் தோற்றுகின்றது. யாதொரு இவ்வன்னமயமா கிய ஆத்மா சர்வசரீரிகளுக்கும் தோற்றுகின்றதோ, அதனினும் பிராணமய ஆத்மா வேறுபட்டதாயும் உள் ளாயு மிருக்கின்றது. அதனினும் மனோமய ஆத்மா வே ருயும் உள்ளாயு மிருக்கின்றது. அதனினும் விஞ்ஞா னமய ஆத்மா வேறுயும் உள்ளாயு மிருக்கின்றது. ஆ னந்தமய ஆத்மாவோ அதனினும் வேறுயும் உள்ளாயு மிருக்கின்றது. யாதொரு இந்த அன்னமயமுண்டோ, அது பிராணமயனுல் பூர்ணமா யிருக்கின்றது. பிராண மயனே அப்படியே மனோமயனுல் சுபாவமாகப் பூர்ண மாயிருக்கின்றது. அப்படியே மனோமய ஆத்மாவும் வி ஞ்ஞானமயனுல் பூர்ணமா யிருக்கின்றது. விஞ்ஞானம யம் ஆனந்தமயனுல் எப்போதும் சுகமே பூர்ணமாயிருக்கி ன்றது. அப்படியே ஆனந்தமயமும் தனக்கு வேறுன பி ரஹ்மமாகிய சாக்ஷியினுல் பூர்ணமாயிருக்கின்றது. எல் லாவற்றினும் உள்ளா யிருத்தலால் பூர்ணமா யிருக்கும் பிரஹ்மம் வேறொன்றினுல் பூரணமாகிறதில்லை. யா தொரு இந்தப் பிரஹ்மபுச்ச மென்னும் பெயருடைய தும், சத்தியஞானாத்வயவடிவினதும் பழமையான து மாகிய சாரமான இரஸத்தினையே சாக்ஷாத்தாக அடை ந்து, தேகி எவனும் சுகி யாகின்றுன்; வேறுவகையால் சுகத்தன்மை எது? இல்லை யென்றபடி." என்னும் ய ஜுர்வேத தின் கடோபநிஷத்தின் வாக்கியத்தினுல்

கூ0ரு. வினு :—ஆத்மா எப்படியிருக்கிறது?

விடை:—சத்து சித்து ஆநந்தமுதலிய சொரூபமாயிருக்கிறது.

ஸ்ரீ விசாரசந்திரோதயம் நான்காங்கலை

நான் பஞ்சகோசாதீதன் என்பது

முடிந்தது.

ஆத்மா பஞ்சகோசத்திற்கு வேறான அநுபவவடிவமா தல் காண்க, அவ்வாறே தைத்தீரியம் கூறுதலும் காண்க.

ஸ்ரீ விசாரசந்திரோதயம்.

ஐந்தாங்கலை.

* க. மூன்றவஸ்தைக்கும் நான் சாக்ஷி.

அவத்தை மூன்றற்கு மான்மா சாக்கி
யங்வய மிதுவா மவற்றின் வியபிசாரம்
வெதிரேக மெனப்படு மீசம் திரிபுடி
வியவகார மெதன்கண் விளக்கமா மதுவே
சாக்கிர மதுபொய் திருகிய மெனவோர். (க)
கண்ட கேட்ட வத்துவா தீனயால்
வெளிப்படை யின்றி விளங்கு மெதனி
லதுசொப் பநமா மதனை புலகினர்
பொய்யெனப் புகல்வர் காண மியாவு

---

* க. "जाग्रत्स्वप्नसुषुप्त्यादिप्रपञ्चं यत्प्रकाशते ।
तद्ब्रह्माहमिति ज्ञात्वा सर्वबन्धैः प्रमुच्यते ॥
त्रिषु धामसु यद्भोज्यं भोक्ता भोगश्च यद्भवेत् ।
तेभ्यो विलक्षणस्साक्षी चिन्मात्रोहं सदाशिवः ॥

மொடுங்கு மவத்தை சுழுத்தி யாகுந்
துரியமே பிரத்தியக் கென்று துணிக. (உ)

"मय्येव सकलं जातं मयि सर्वं प्रतिष्ठितम् ।
मयि सर्वं लयं याति तद्ब्रह्माद्वयमस्म्यहम् ॥

ஜாக்கிரம் சொப்பனம் சுழுத்தி முதலிய பிரபஞ்சத்தினை எது பிரகாசிக்கின்றதோ, அந்தப் பிரஹ்மம் நான் என்று அறிந்து, சர்வபந்தங்களினின்றும் விடுபடுகிறான். மூன்று அவஸ்தைகளிலும் எந்தப் போக்தா போக்கிய போகங்க ளுண்டோ, அவற்றினும் வேறான சாக்ஷியான சின்மாத்திரமாகிய யான் சதாசிவன். என்னிடத்திலேயே யாவும் உண்டாகின்றன; என்னிடத்திலேயே நிலைத்துள்ளன; என்னிடத்திலேயே இலயத்தையடைகின்றன. அத்தன்மைய பிரஹ்மாத்வயமா யிருக்கின்றேன் யான்." என்பது கைவல்யசுருதி.

"एक एवात्मा मन्तव्यो जाग्रत्स्वप्नसुषुप्तिषु ।
स्थानत्रयव्यतीतस्य पुनर्जन्म न विद्यते ॥

ஜாக்கிரசொப்பனசுழுத்திகளில் ஒரே ஆத்மா மதிக்கத்தக்கதாம். மூன்றவஸ்தைகளையும் கடந்தவனுக்கு மறுபடியும் பிறப்பில்லை." என்பது திரிபுராதாபிநீயுபநிஷத்தும், பிரஹ்மபிந்தூபநிஷத்துமாம். இவ்வாறே சர்வசாரோபநிஷத்து முதலியவற்றிலும் கூறியிருத்தல் காண்க. 'சாக்ஷியதர்மங்கள் விலக்ஷணமான சாக்ஷியினைப் பற்றா' வென்பது முதலியவற்றைத் தூண்டிகோபநிஷத்துக் கூறுதல் காண்க.

கoசு. விஞ :—மூன்றவஸ்தைகள் எவை ?

விடை :—க. * உ. ஜாக்கிரம், உ. * ங. சொப்பனம், ங. * ச. சுழுத்தி என்னு மிவை மூன்றவஸ்தைகள்.

க. ஜாக்கிராவஸ்தைக்கு நான் சாகூி.

கoஎ. விஞ :—ஜாக்கிராவஸ்தை என்பது யாது ?

விடை :—

க. பதினன்கு இந்திரியங்கள் * டு. அத்தியாத்மமும்,

---

* உ. சொப்பனசுழுத்திகளுக்கு வேறாய், இந்திரிய ஜ்ஞியஞானத்திற்கும் இந்திரியஜ்ஞியஞானசம்ஸ்காரத்திற்கும் ஆதாரகாலமா யிருப்பது ஜாக்கிராவஸ்தையெனப்படும்.

* ங. இந்திரியத்தினு லுண்டாகாத விஷயகோசர அந்தக்கரணத்தினது அபோகவிருத்தியின் காலம் சொப்பனவஸ்தை யெனப்படும்.

* ச. சுககோசரமும்(சுகத்தை விஷயஞ்செய்வது)ம் அவித்தியாகோசரமுமாகிய அவித்தியாவிருத்தியின் காலம் சுழுத்தியவஸ்தை யெனப்படும்.

* டு. ஆத்மாவை ஆசிரயித்திருக்கும் வர்த்தமான இந்திரியாதிகள் அத்தியாத்ம மெனப்படும்.

உ. அவற்றின் பதினொன்று தேவதைகள் * கூ. அதிதெய்வமும்,

ஊ. அவற்றின் பதினொன்று விஷயங்கள் * எ. அதிபூதமுமாம்.

இந்த நாற்பத்திரண்டு தத்துவங்களால் எதில் வியவகார மூண்டாகிறதோ, அது * அ. ஜாக்கிராவஸ்தை.

---

* கூ. சுவசங்காதத்தி(தனது தேகமுதலியவற்றி)ற்கு வேறுய் நேத்திரேந்திரியத்திற்கு விஷயமாகாதது எதுவோ, அது அதிதெய்வ மெனப்படும்.

* எ. சுவசங்காதத்திற்கு வேறுய் நேத்திரமுதலிய இந்திரியங்களுக்கு விஷயமாவது எதுவோ, அது அதிபூத மெனப்படும்.

* அ. இது ஸ்தூலதிருஷ்டியுடைய புருஷர்கள் அறிதற்குரிய ஜாக்கிரலக்ஷணம்.

"मन आदिचतुर्दशकरणैः पुष्कलैरादित्याद्यनुगृहीतैः शब्दादीन्विषयान् स्थूलान् यदोपलभते तदात्मनो जागरणम् ॥

ஆதித்தியன் முதலிய அதிதெய்வங்களால் அநுக்கிரகிக்கப்பட்ட எராளமான மனமுதலிய பதினொன்று கரணங்களால் ஸ்தூலமான சப்தாதிவிஷயங்களை எப்போ

கo அ. வினா :—பதினென்கு இந்திரியங்களெவை ?

விடை :—

க-ரு. * கூ. ஞானேந்திரியம் ஐந்து :—

க. சுரோத்திரம், உ. தூவக்கு, ங. சக்ஷு, ச. சிங்குவை, ரு. கிராணம் என்பனவாம்.

கூ-கo. கன்மேந்திரியம் ஐந்து :—

து அறிகின்றதோ, அவ்வவஸ்தை ஆத்மாவுக்கு ஜாக்கிரமாம்." என்னும் சர்வசாரோபநிஷத்தும்,

"तत्तद्देवताऽनुग्रहान्वितैः श्रोत्रादिज्ञानेन्द्रियैः शब्दाद्यर्थविषयग्रहणज्ञानं जाग्रदवस्था भवति ॥

அந்த அந்த அதிதேவதையின் அநுக்கிரகத்தோடுகூடிய சுரோத்திராதி ஞானேந்திரியங்களால் சப்தமுதலிய அர்த்தமாகிய விஷயங்களைக் கவரும் உணர்ச்சி ஜாக்கிராவஸ்தை யாகின்றது." என்னும் பைங்கலோபநிஷத்தும் இதிற் பிரமாணமாதல் காண்க.

* கூ. இவ்வாறே ஞானேந்திரியகர்மேந்திரியஅந்தக்காணங்களும், அவற்றின் விஷயங்களும், தேவதைகளும் பைங்கலசுருதியின் உ-வது அத்தியாயத்திலும், வாராகோபநிஷத்தின் மூதல் அதிகாரத்திலும் சொல்லப்பட்டிருக்கின்றன.

சு. வாக்கு, எ. பாணி, அ. பாதம், கூ. உபஸ்தம், கo. குதம் என்பனவாம்.

கக-கச. அந்தக்கரணம் நான்கு :—

கக. மனம், கஉ. புத்தி, கஙூ. சித்தம், கச. அகங்காரம் என்பனவாம்.

இப்பதினொன்று இந்திரியங்களும் அத்தியாத்மிகமாம்.

கoகூ. வினா :—பதினொன்று இந்திரியங்களுக்கும் பதினொன்று தேவதைகள் எவை?

விடை :—

க-ரு. ஞானேந்திரியமைந்தின் தேவதைகள் :—

க. சுரோத்திரேந்திரியத்திற்குத் தேவதை திக்கு (திக்குப்பாலகர்).

உ. துவக்கிந்திரியத்திற்குத் தேவதை வாயு.

ங. சகூ— இந்திரியத்திற்குத் தேவதை சூரியன்.

ச. சிஙுவேந்திரியத்திற்குத் தேவதை வருணன்.

ரு. கிராணேந்திரியத்திற்குத் தேவதை அசுவினிகுமாரர்.

சு-கo. கர்மேந்திரியமைந்தின் தேவதைகள்:—

சு. வாக்கிந்திரியத்திற்குத் தேவதை அக்கினி.

எ. பாணீந்திரியத்திற்குத் தேவதை இந்திரன்.

அ. பாதேந்திரியத்திற்குத் தேவதை வாமனர்.

கூ. உபஸ்தேந்திரியத்திற்குத் தேவதை பிரஜாபதி.

கo. குதேந்திரியத்திற்குத் தேவதை இயமன்.

கக-கச. * கo. அந்தக்காரணம் நான்கின் தேவதைகள் :—

கக. மனவிந்திரியத்திற்குத் தேவதை சந்திரன்.

கஉ. புத்தியிந்திரியத்திற்குத் தேவதை பிரஹ்மன்.

கஙூ. சித்தவிந்திரியத்திற்குத் தேவதை வாசுதேவன்.

கச. அகங்காரவிந்திரியத்திற்குத் தேவதை உருத்திரன்.

---

* கo. உள்ளிந்திரியம் அந்தக்காரணம்.

இப்பதினொன்று தேவதைகளும் அதிதேய்வ மெனப்படும்.

கக0. வினா :—பதினொன்று இந்திரியங்களின் பதினொன்று விஷயங்க ளெவை ?

விடை :—

க-ரு. ஞானேந்திரியபஞ்சகங்களின் விஷயங் கள் :—

க. சத்தம், உ. பரிசம், ங. உருவம், ச. இர சம், ரு. கந்தம் என்பனவாம்.

கூ-க0. கர்மேந்திரிய பஞ்சகங்களின் விஷயங் கள் :—

கூ. வசனம், எ. ஆதானம் (ஏற்றல்), அ. கம னம் (நடத்தல்), கூ. இரதிபோகம், க0 மலநீக் கம் என்பனவாம்.

கக-கச. அந்தக்கரணம் நான்கின் விஷயங் கள் :—

கக. * கக. சங்கற்பவிகற்பம், கஉ. நிச்சயம், கங. சிந்தித்தல், கச. அகந்தை என்பனவாம்.

---

* கக. மனதிற்கு சங்கற்பவிகற்பம் விஷய மன்று. ஆனால் எந்த வஸ்துவின் சங்கற்ப மூண்டாகின்றதோ, அந்த வஸ்து விஷயமாம். இப்படியே புத்தி சித்த அகங் காரகர்மேந்திரியங்களிலும் அறிக.

இப்பதினைந்து விஷயங்களும் அதிபூதங்க ளாம்.

கஙக. வினா :—அத்தியாத்மம், அதிதெய்வம், அதிபூதம் என்னும் மூன்றும் சேர்ந்து என்ன வென்று சொல்லப்படுகின்றன ?

விடை :—அத்தியாத்மமுதலிய மூன்றுபுட் (ஆகார)ங்களும் சேர்ந்து திரிபுடி எனப்படுகின் றன.

கஙஉ. வினா :—பதினைந்து திரிபுடிகளையும் அறிவதெப்படி ?

விடை :—

கஙடு. ஞானேந்திரியங்களின் திரிபுடிகள் :—

	அத்தியாத்மம்.	அதிதெய்வம்.	அதிபூதம்.
	இந்திரியம்.	தேவதை.	விஷயம்.
க.	சுரோத்திரம்.	திக்கு.	சத்தம்.
உ.	துவக்கு.	வாயு.	பரிசம்.
ஙு.	சக்ஷு.	சூரியன்.	உருவம்.
ச.	நாக்கு.	வருணன்.	இரசம்.
டு.	கிராணம்.	அசுவினிகுமாரர்.	கந்தம்.

சு-க0. கர்மேந்திரியங்களின் திரிபுடிகள் :—

சு. வாக்கு.	அக்கினி.	வசனம் (கிரியை).
எ. பாணி.	இந்திரன்.	ஏற்றலிடல்.
அ. பாதம்.	வாமனர்.	கமனம்.
கூ. உபஸ்தம்.	பிரஜாபதி.	இரதி போகம்.
க0. குதம்.	இயமன்.	மலநீக்கம்.

கக்-கச. அந்தக்கரணநான்கின் திரிபுடிகள் :—

கக. மனம்.	சந்திரன்.	சங்கற்ப விகற்பம்.
கஉ. புத்தி.	பிரஹ்மா.	நிச்சயம்.
கங. சித்தம்.	வாசுதேவன்.	சிந்தித்தல்.
கச. அகங்காரம்.	உருத்திரன்.	அகந்தை.

இப்படிப் பதினைந்து திரிபுடிகளையும் அறிக.

கஙஞ. வினா :—இந்தத் திரிபுடிகளின் சுபாவ மென்ன ?

விடை :—மும்மூன்று பதார்த்தங்களுள்ள திரிபுடிகளில் ஒன்றில்லையாயின், அதனதன் வியவகாரம் நடவாது.

க. இந்திரியமும் தேவதையு மிருந்து அதன் விஷயமில்லையாயின் வியவகாரம் நடவாது ;

உ. விஷயமும் இந்திரியமு மிருந்து தேவதை யில்லாவிடினும் வியவகாரம் நடவாது.

இதனைச் சகலதிரிபுடிகளிலும் அறிக.

ககச. விஞ:—என்னுடைய சுபாவம் யா தென் றறிவ தெப்படி ?

விடை :—

க. திரிபுடி பூரணமா யிருக்குமாயின், அதை யும் நானறிகிறேன்.

உ. பூரணமா யிராதாயி னதையும் நானறிகி றேன்.

ங. அப்படியே திரிபுடியின் வியவகாரம் நடக் குமாயின், அதையும் நானறிகிறேன்.

ச. வியவகாரம் நடவாதாயின், அதையும் நா னறிகிறேன்.

இப்படி என் சுபாவம் இருக்கிற தென் றறிக.

ககஙு. விஞ:—இதனால் என்ன சித்திக்கிறது?

விடை :—எதில் திரிபுடியினால் வியவகாரம் நடக்கிறதோ, அப்படிப்பட்டது ஜீவகிராவஸ் தையெனச் சித்திக்கிறது.

ககசு. வினா :—ஜாக்கிராவஸ்தையில் ஜீவனது ஸ்தானமும், வாக்கும், போகமும், சக்தியும், குணமும், ஜாக்கிராபிமானத்தால் அந்த ஜீவனது பெயரும் எவை ?

விடை :—ஜாக்கிராவஸ்தையில் ஜீவனுக்கு

க. *கஎ. நேத்திரம் ஸ்தானம்.

உ. வைகரி வாக்கு.

ங. ஸ்தூலம் போகம்.

ச. கிரிய சக்தி.

ஞ. இராசதம் குணம்.

சு. ஜாக்கிராபிமானத்தால் விசுவ னென்பது பெயர்.

---

* கஎ. ஜாக்கிரத்தி லிந்தச் சிதாபாசனுகிய ஜீவனுக்கு நகமுதல் சிகைபரியந்தம் வியாப்தி (நிறைவு) இருந்த போதிலும், பிரதானமாக நேத்திரத்தி லிருத்தலால், அவனுக்கு நேத்திரம் ஸ்தான மெனப்படுகிறது. இதனை,

"तत्र भ्रूमध्यंगतो जीव आपादमस्तकं व्याप्य कृषि-वाणिज्यश्रवणाद्यखिलक्रियाकर्ता भवति ॥

அந்த ஜாக்கிராவஸ்தையில் புருவநடுவிலிருப்பவனும், ஜீவன் பாதமுதல் சிரசபரியந்தம் வியாபித்து, கிருஷி வாணிஜ்யம் சிரவணமுதலிய சகலக்கிரியைகளையும் செய்பவனுகின்றன்." என்று பைங்கலசுருதி உரைத்தது அத்தியாயம் கூறுதல் காண்க.

கஎ. வினா :— ஜாக்கிராவஸ்தையைச் சொல்லுதலால் என்ன சித்திக்கிறது ?

விடை :—

க. ஜாக்கிராவஸ்தை உண்டாகு மாயின் அதையும் நானறிகிறேன்.

உ. சொப்பனசுழுத்திகளில் அதனின்மையையும் நானறிகிறேன்.

ஆகையால் *கஉ. ஜாக்கிராவஸ்தை நானல்ல ; என்னுடையது மல்ல ; இது ஸ்தூலதேகத்தினுடையதாம். இதை அறியும் சாக்ஷிபாகிய நான் கடசாக்ஷியைப்போல இதனினும் வேறுயிருக்கிறே னென்பது ஜாக்கிரத்தைச் சொல்லுதலாற் சித்திக்கிறது.

இவ்வாறு ஜாக்கிராவஸ்தைக்கு நான் சாக்ஷியாய் இருக்கிறேன்.

---

* கஉ. "बुद्धेः पूर्णविकाशोयं जागरः परिकीर्त्यते विकारादिविहीनत्वाज्जागरो मे न विद्यते ॥

புத்தியின் பூர்ணவிகாசமாகிய இது ஜாக்கிரமெனப்படுகின்றது. விகாராதிகளின்றியதன்மையால் எனக்கு ஜாக்கிரமில்லை."என்பது வராகோபநிஷத்து உ-வது அத்தியாயம்.

உ. சொப்பனவஸ்தைக்கு நான் சாகூி.

ககஅ. வினா:—சொப்பனவஸ்தை என்பது யாது?

விடை:—ஜாக்கிராவஸ்தையில் எந்தப் பதார்த்தங்கள் பார்க்கப்பட்டும் கேட்கப்பட்டும் அநுபவிக்கப்பட்டும் இருக்கின்றனவோ, அவற்றின் சம்ஸ்காரமானது ரோமத்தின் ஆயிரத்திலோர் மடங்கு மெல்லிதாய்க் கண்டத்திலிருக்கும் ஹிதையென்னும் நாடியிலிருக்கின்றது. அந்தச் சம்ஸ்காரத்தால் நித்திரைக்காலத்தில் பஞ்சவிஷயமுதலிய பதார்த்தங்களும் அவற்றின் ஞானமும் உண்டாகின்றன. அவற்றுள் எதில் வியவகாரம் உண்டாகின்றதோ, அது * கச. சொப்பனவஸ்தை.

---

* கச. "करणोपरमे जाग्रत्संस्कारो प्रबोधवद्ग्राह्य-ग्राहकरूपस्फुरणं स्वप्नावस्था भवति ॥

காரணங்கள் ஒடுங்கியபோது ஜாக்கிரசம்ஸ்காரத்தால் அர்த்தஞானமுடையதான கிரகிப்பது கிரகிக்கப்படுவது என்னும் ஸ்புரணம் சொப்பனவஸ்தையாகின்றது," என்னும் பைங்கலோபநிஷத்தும்,

"तद्वासनासहितैश्चतुर्दशकरणैश्शब्दाद्यभावेपि वा

ககசு. வினா :—சொப்பனவஸ்தையில் ஜீவனுக்கு ஸ்தானமும், வாக்கும், போகமும், சத்தியும், குணமும், சொப்பனபிமானத்தால் அந்த ஜீவனது பெயரும் எவை ?

விடை :—சொப்பனவஸ்தையில் ஜீவனுக்கு

க. கண்டம் ஸ்தானம்.

உ. மத்திமை வாக்கு.

ங. சூக்ஷமம் (வாசனுமயம்) போகம்.

ச. ஞானம் சக்தி.

டு. * கடு. சத்துவம் குணம்.

கூ. சொப்பனபிமானத்தால் தைஜஸனென்பது பெயர்.

सनामयांश्शब्दादीस्तात्कालिकानप्रतिभासमानान्यदोपलभते तदा स्वप्नम् ॥

அவ்வாசனையோடுகூடிய பதிநான்கு காரணங்களால் சப்தாதிக ளில்லாதிருக்கினும், தோற்றுகின்ற தற்காலத்தனவாகிய வாசனுமயசப்தாதிவியவற்றை எப்போது அறிகின்றதோ, அப்போது சொப்பனமாம்." என்னும் சர்வசாரோபநிஷத்தும் இவ்விலக்கணமே கூறுதல் காண்க.

* கடு. சிலர் இராசதம் குண மென்றும் கூறுவர்.

கஉ0. வினை :—சொப்பனவஸ்துவையைச் சொல்லுதலால் என்ன சித்திக்கது ?

விடை :—

க. சொப்பனவஸ்துவை உண்டாகுமாயின், அதையும் நானறிகிறேன்.

உ. ஜாக்கிரசுழுத்திகளில் அஃது இல்லாதபோது, அதன் இன்மையையும் நானறிகிறேன்.

ஆகையால் * ககூ. இந்தச் சொப்பனவஸ்துவை நானல்ல ; என்னுடையதுமல்ல ; இது சூக்ஷ்மதேகத்தினுடையதாம். இதை அறியும் சாக்ஷியாகிய நான் கடசாக்ஷியைப்போல இதனினும் வேறாயிருக்கிறேன் என்பது சொப்பனத்தைச் சொல்லுதலாற் சித்திக்கது.

இவ்வாறு சொப்பனவஸ்துவுக்கு நான் சாக்ஷியாயிருக்கிறேன்.

---

* ககூ. "सूक्ष्मनाडिषु सञ्चारो बुद्धेः स्वप्नः प्रजायते । सञ्चारधर्मरहिते मयि स्वप्नो न विद्यते ॥

புத்தியானது சூக்ஷ்மநாடிகளில் சஞ்சரித்தல் சொப்பனமாகின்றது. சஞ்சாரதர்மமில்லாத என்னிடத்தில் சொப்பனமில்லை." என்பது வாக்கோபநிஷத்து இரண்டாவது அத்தியாயம்.

ங. சுழுத்தியவஸ்தைக்கு நான் சாக்ஷி.

கஉக. வினா:—சுழுத்தியவஸ்தை என்பது யாது?

விடை:—புருஷன் நித்திரையினின்றும் விழித்தெழுந்தகாலத்து, சுழுத்தியில் அநுபவித்த சுகத்தையும் அஞ்ஞானத்தையும் நினைத்து "நான் இன்று ஒன்றும் தெரியாமல் சுகமாய்த் தூங்கினேன்." என்று சொல்லுகிறான். இந்தச் சுக அஞ்ஞானங்களின் பிரகாசம்(ஞான)ம், சாக்ஷி சைதனமாகிய அநுபவத்தால் எதில் (எந்த அவஸ்தையில்) உண்டாகிறதோ, அப்படிப்பட்ட புத்தியின் விலயாவஸ்தை * கள. சுழுத்தியவஸ்தையாம். (விலயம்=ஒடுக்கம்.)

கஉஉ. வினா:—சுழுத்தியவஸ்தையில் ஜீவனுக்கு ஸ்தானமும், வாக்கும், போகமும், சக்தியும், குணமும், சுழுத்தியபிமானத்தால் அந்த ஜீவனது பெயரும் எவை?

---

* கள. "चित्तैककरणा सुषुप्त्यवस्था भवति ।

சித்தவொடுக்கம் சுழுத்தியவஸ்தை யாகின்றது." என்னும் பைங்கலோபநிஷத்து இரண்டாம் அத்தியாயமும்,

விடை :—சுழுத்தியவஸ்தையில் ஜீவனுக்கு

க. இருதயம் ஸ்தானம்.

உ. பைசந்தி வாக்கு.

ங. ஆநந்தம் போகம்.

ச. தாவியம் சக்தி.

ரு. தாமதம் குணம்.

சு. சுழுத்தியபிமானத்தால் பிராஞ்ஞனேண்பது பெயர்.

கஉங. வினா :—சுழுத்தியவஸ்தையில் திருஷ்டாந்தம் யாது ?

விடை :—முதல் திருஷ்டாந்தம் :—(க) கிணற்றில் விழுந்திருக்கும் ஓர் ஆபரணத்தையெடுக்க, அக்கிணற்றில் மூழ்கிய புருடன், அவ்வாபரணம் அகப்பட்டதையும் அகப்படாததையு மறிகிறான்.

" चतुर्दशकरणोपरमाद्विशेषविज्ञानाभावाच्चदा शब्दादी(न्विषया)न्नोपलभते तदात्मनः सुषुप्तम् ॥

பதினான்குகரணங்களின் ஒடுக்கத்தால் விசேஷவிஞ்ஞான மின்மையால், எப்போது சப்தாதிவிஷயங்களை அறிகிறதில்லையோ, அப்போது ஆத்மாவிற்குச் சுழுத்தியவஸ்தையாம். " என்னும் சர்வசாரோபநிஷத்தும் இவ்வாறே கூறுகின்றன.

(உ) ஆனல் அதைச் சொல்லுதற்குச் சாதன மாயெ வாக்இந்திரியத்தின் தேவதையாயெ அக் கினிக்கு ஸகத்தோடு விசோதமிருத்தலால், அது நிசோதனமாயி (மறைந்து)ருக்கின்றது. ஆகையால் அவன் அங்கே அதைச் சொல்லுகிறதில்லே.

(ஊ) இலத்திற்கு வெளியே வத்தாவத்தைச் சொல்லுதற்குச் சாதனமாயெ தேவதையோடே வாக்இந்திரியமிருத்தலால், ஸகை இலடத்தை விடக்கில்லே என்று சொல்லுகிறன்.

சித்தாந்தம்:—(க) அதுபோல, சுழுத்தியவஸ்தையில் ஸக அஞ்ஞானங்களின் சாக்ஷிசைதன்யமாயெ சாமான்ய ஞான மிருக்கின்றது.

(உ) ஆனல் விசேஷஞானத்தின் சாதனமாயெ இந்திரியமும் அர்த்தசாதனமும் இல்லாதிருத்தலால் ஸக அஞ்ஞானங்களின் விசேஷஞானம் உண்டாகிறதில்லே.

(ஊ) புருஷன் விழித்தகாலத்து, விசேஷஞானத்திற்குச் சாதனமாயெ இந்திரியமும் அர்த்தசாதனமும் இருத்தலால், சுழுத்தியில் அடைபடிக்கப்பட்ட ஸக அஞ்ஞானங்களின் ஸ்பிருஷ்யா (ஸிஹ்ஷா)யெ விசேஷஞான முண்டாகிறது.

இரண்டாவது திருஷ்டாந்தம் :—

(க) வெய்யிலில் உருவை செய்யானது

(உ) நிழலிலிருக்குமாயின் கட்டியாகின்றது ;

(ங) மறுபடியும் வெய்யிலி லிருக்குமாயின் உருகுகின்றது.

சித்தாந்தம் :—(க) அதுபோலச் சுழுத்தியி லுள்ள காரணசரீரமாகிய அஞ்ஞானம்

(உ) ஜாக்கிரசொப்பனங்களில் புத்திவடி வமாகின்றது.

(ங) மறுபடியும் சுழுத்தியில் அஞ்ஞானவடி வமாகின்றது.

மூன்றாவது திருஷ்டாந்தம் :—

(க) ஒரு குழந்தை சிறுவர்களுடன் சேர்ந்து விளையாடப்போயிருந்தான்.

(உ) அவன் சிரமம (இளைப்ப)டையுங்காலத் தில் தாயின் மடியில் தூங்கி வீட்டின் சுகத்தை அநுபவிக்கிறான்.

(ங) மறுபடியும் சிறுவர்கள் கூப்பிடுங்காலத் தில் வெளியே போய் விளையாடுகிறான்.

சித்தாந்தம்:—(க) அதுபோலக் காரணசரீரமா கிய அஞ்ஞானம் தாய், அதற்குப் புத்திபானது

குழந்தை, அக்குழந்தை கர்மமாகிய சிறுவர்க ளோடு ஜாக்ரதிசொப்பனமாகிய வெளிப்பூமியில் விஷயகாமமாகிய விளையாட்டைச் செய்து,

(உ) மிகுந்தபமாகிய சிரமத்தை அடையும் போது, சமுத்திரவஸ்தையாகிய நித்தத்தில் அ ஞ்ஞானமாகிய தாயினிடத்து லீலையாய் (ஒடி ங்கி)ப் பிரதிமாநந்தத்தை அநுபவிக்கிறான்.

(ஊ) மறுபடியும் கர்மமாகிய சிறுவர்கள் அ ழைக்குங்காலத்து, ஜாக்ரதிசொப்பனமாகியவெ ளிப்பூமியில் விஷயகாமமாகிய விளையாட்டைச் செய்கிறான்.

நான்காவது திருஷ்டாந்தம் :—

(எ) சமுத்திரஜலத்தால் நிரப்பிய ஓர் குடத் தைக்,

(ஏ) கமுத்திற் கயிறுகட்டிச் சமுத்திரத்தில் அமிழ்த்தினால்,

(ஐ) அப்போது குடத்திலுள்ள ஜலம் சமுத் திரஜலத்தோடு ஐக்கியத்தை அடைந்தபோதி லும்,

(ஒ) குடமாகிய உபாதியால் வேறுபோன்றி ருக்கிறது.

(இ) மதுபடியும் கயிற்றை இழுக்குங்காலத்துப் பேதத்தை அடைகிறது.

(ஈ) ஆறில் ஜலத்தோடுகூடிய குடத்திற்கும் சமுத்திரத்திற்கும் ஆதாரமாயிய ஆகாசம் வேறுகாமல்,

(எ) மூன்றுகாலத்தும் ஏகரசமா யிருக்கின்றது.

சித்தாந்தம் :—(அ) அதுபோல அஞ்ஞானமாயெ சமுத்திரஜலத்தால் நிரம்பிய இலிங்கதேகமாயிய கடம்.

(உ) அநிருஷ்ட(புண்ணியபாவ)மாயிய கயிற்றால் கட்டப்பட்டுச் சுழற்றுங்காலத்திலும், அதன் அவாந்தரபேதமாயிய மரணம் மூர்ச்சை நிலை மெய்தும் காலங்களிலும், சமஷ்டியஞ்ஞானமாயிய ஈசுவரோபாதியால் மாயையில் ஓடுங்குகின்றது.

(ஊ) அப்போது அந்த வியஷ்டியஞ்ஞானமாயெ ஜீவோபாதியான அவித்தை சமஷ்டியஞ்ஞானத்தோடு ஐக்கியத்தை அடைந்தபோதிலும்,

(எ) இலிங்கசரீரத்தின் சம்ஸ்காரமாயிய உபாதியில் வேறுபோன் றிருக்கின்றது ;

(ரு) மறுபடியும் அதிருஷ்டமாகிய கயிற்றை அந்தரியாமி பிரேரிக்குங்கால் பேதத்தை யடைகின்றது.

(கூ) ஆஞல் வியஷ்டியஞ்ஞானமாகிய ஜலத்தோடுகூடிய இவ்விங்கதேகமென்னும் குடத்திற்கும், சமஷ்டியஞ்ஞானமாகிய சமுத்திரத்திற்கும் ஆதாரமாகிய நிராகாசம் வேருகாமல்,

(எ) மூன்று காலத்திலும் ஏகரசமாயிருக்கின்றது.

கஉச. வினு:—சுழுத்தியைச் சொல்லுதலால் என்ன சித்திக்கிறது?

விடை:—(க) சுழுத்தியவஸ்தை உண்டாகுமாயின், அதையும் நான் அறிகிறேன்.

(உ) ஜாக்கிரசொப்பனங்களில் அது இல்லாதபோது, அதன் இன்மையையும் நான் அறிகிறேன். ஆகையால் * கஅ. இந்தச் சுழுத்தியவ

---

* கஅ. "सुषुप्तिकाले सकले विलीने तमसावृते स्वरूपं महानन्दं भुङ्क्ते दृश्यविवर्जितः। अविशेषेण सर्वं तु यः पश्यति चिदन्वयात्। स एव साक्षाद्विज्ञानी स शिवः स हरिर्विधिः॥

எல்லாம் ஒடுங்கித் தமசினல் சூழப்பட்டிருக்கும் சுழு

ல்லை நானல்ல ; என்னுடையது மல்ல ; இது காரண தேகத்தினுடையதாம். இதை அறியும் சாக்ஷியாகிய நான் கடைசாக்ஷியைப்போல இதனினும் வேறு பிருக்கிறேன்.

இவ்வாறு எழுந்தியவல்லதற்கு நான் சாக்ஷியாயிருக்கிறேன்.

சந்தேகத்தில் திருதியம் சிவ்விபவனுய்த் தனது வடிவமான மாயத்தன்மையைப் புரிந்தின்றன். தெவ்வயத்தினால் அநாதி தெரிஜுயுண்மையால் என்ன் என்னவற்றையும் பேதமின்றி அறிகின்றனே, அவனே விஞ்ஞானி ; அவனே சிவன் ; அவனே விஷ்ணு ; பிரம்மா." என்பது வாகோபதிஷத்து இரண்டாவது அத்தியாயம்.

ஸ்ரீ விசாரசந்திரோதயம் ஐந்தாங்கிலை

மூன்றவஸ்தைக்கும் நான் சாக்ஷி என்பது

முடிந்தது.



ஸ்ரீ விசாரசந்திரோதயம்.

ஆரூங்கலை.

பிரபஞ்சமித்தியாவர்ணனம்.

திருவிய மியாவுமத் தியாச மென்றுரைத்
தலகா தாசத் தொன்றுவி சித்தம். (க)
சாக்கிர மாதியாச் சத்துமு வவத்தை
யெல்லா வுலகி னிலைவே றலவே. (உ)
இப்படியில் வெள்ளி யாதிய திருப்பபோ
லிருப்ப பிரமத் தவத்தை மூன்றும். (ங)
வெள்ளி யாதியிற் றிருவியம் பெயர்வாங்
கிளிந்தின் *மூதலபோற் பிரம மெய்யாம். (ச)
வெள்ளி யாதிய வொன்றற் கொன்று
விபரி சரித்தலின் வெதிரே கமிலாத்
குளது சுத்தி † சூத்திர மெத்தது
கதமா யொன்று மதுபோற் பிரம
§ மநுவிருத்தி புகட்டிய தாருந் சுத்தியின்

---

*மூதலவென்பதனால் மயிர்முதலியன கொள்ளப்படும்.
† மணிவிளிறுள் நூலைப்போல் நுழைந்திருப்பது.
§ அநுவிருத்தி = தொடர்ந்திருப்பது.

மூக்கூ றெங்ஙன மங்ஙன மூக்கூ
றஜடப் பிரமத் தாமவற் றுள்ளே
மெய்யென் நிரண்டு கூற்றை யுணர்ந்து
மூன்றும் கூற்றை மூற்றத் துறப்பின்
வீடு காதல விளங்கனி யாமே. (ஙு)
பேதப் பிரம முதலா மைவகை
பவமூ மூன்ற தாபத் தெரியு
வுமா மதனே ஐவகை யுத்திப்
பாக கொடுல் விசார மென்னுஞ்
சேதஞ் செய்தே யச்சந் தவிர்ப்பாய். (சு)
ஏதன்கண் யாதினைக் கால மூன்றினு
மதனிடத் திப்பியில் வெள்ளியே போல
விடையிற் ரோற்று மதுவேயத் தியாசம்.(எ)
அது * பொரு † ளுணர்ச்சியென் றிருவகை
[பாகும். (அ)
அவ்விரு வகையுந் தனித்தனி யிரண்டாம்.()
அறுவகை யாகவு மறையப் பிம்பொருள்.()
உலகினிற் காணு மொல்வொரு மயக்கு
மிதனு ளடங்க வினிச்சி தாண்மாவைப்
பிரமமென் றுணர்ந்தெலாப் பிரம மூலங்
கெடுத்துப் பரமா கந்தமே தானென்
றுணர்ந்து நீயு மொப்பில்வீ டடைவாய்.(அக)

* பொருள் = அர்த்தாத்தியாசம்.
† உணர்ச்சி = ஞானத்தியாசம்.

கஉ. வினா:—ஆத்மாவின் மூன்று அவஸ்தைகள் எதைப்போலத் தோற்றுகின்றன?

விடை:—திருஷ்டாந்தம்:-க. இப்பியில்(வெள்ளிச் சிப்பி)ல் வெள்ளி அல்லது அப்பிரகம்(பூவிக்கு சாதம்) அல்லது காசிதம் என்னும் இம்மூன்றும் இப்பியினது அஞ்ஞானத்தால் கற்பிதமாகத் தோற்றுகின்றன.

க. அந்த மூன்று வஸ்துக்களுக்கும் ஒன்றற் கொன்றும் இப்பியினுடனும் வேதிரேகமும்,

உ. இப்பிக்கு மூன்று வஸ்துக்களினிடமும் அந்வயமும் உண்டு.

எப்படியெனின்:—

க. (க) இப்பியில் வெள்ளி தோற்றுங்காலத்து அப்பிரகமும் காசிதமும் தோற்றுகிறதில்லை;

(உ) அப்பிரகம் தோற்றுங்காலத்து வெள்ளியும் காசிதமும் தோற்றுகிறதில்லை;

(க) காசிதம் தோற்றுங்காலத்து வெள்ளியும் அப்பிரகமும் தோற்றுகிறதில்லை. இது மூன்று வஸ்துக்களுக்கும் ஒன்றற்கொன்றுள்ள வேதிரேகம் (இன்மை).

இப்பியில் முதலிலும் நடுவிலும் ஈற்றிலும் இந்த மூன்று வஸ்துக்களுக்கும் வியாவகாரிக

மும் பாரமார்த்திகமுமாகிய அத்தியந்தாபாவ மிருக்கிறது. இஃது அந்த மூன்று வஸ்துக்களுக்கும் இப்பியிலுள்ள வேதிரேகம்.

உ. பிரமாந்திகாலத்தில்,

(க) "இது வெள்ளி"

(உ) "இது அப்பிசகம்"

(ங) "இது காசிதம்"

என்பதாக இப்பியின் இதமென்னும் அமிசம் அந்த மூன்று வஸ்துக்களிலும் அநுகூதமாய் (உள்ளீடாய்) விளங்குகின்றது. இஃது அந்த மூன்றுவஸ்துக்களிலுமுள்ள இப்பியின் அந்வயம்.

இங்கே இப்பியின் மூன்று அமிசங்கள் :—

க. சாமானிய அமிசம், உ. விசேஷ அமிசம், ங. சுத்திதவிசேஷ அமிசம் என்பனவாம்.

க. இதங்தை (இஃது எனுந்தன்மை) சாமானிய அமிசம். எவ்வாறின், எது அதிகாலத்தில் தோற்றுகிறதோ, அது சாமானிய அமிசம். இதன்தையாவது

(க) பிராந்திகாலத்திலும்,

(உ) இது இப்பி என்று பிராந்தியில்லாத காலத்திலும் தோற்றுவதால் சாமானிய அமிசமாம். இது ஆதாரமென்றும் சொல்லப்படுகிறது.

உ. நீலபிருஷ்ட(கருமையான பின்புற)த்தை யும் முக்கோணத்தையுமுடைய இப்பி, விசேஷ அபிசம். எனெனின், எது நியூன (அற்ப)காலத் தில் தோற்றுகிறதோ, அது விசேஷ அபிசம்.

(அ) பிரசந்நிகாலத்தில் இந்த நீலபிருஷ்ட மு தலியனவைகள் தோற்றுகிறதில்லை.

(உ) ஆதலால் இவற்றின் தோற்றத்தால் பிராந் தி நீங்குகின்றது.

ஆகையால் இனை விசேஷ அபிசமாம். இது அதிஷ்டான மென்றும் சொல்லப்படும்.

ஈ. வெள்ளிமுதலியனவைகள் கற்பிதவிசேஷ அபிசம். எனெனின், எது அதிஷ்டானத்தை அறியுங்காலத்துத் தோற்றுகிறதில்லையோ, அது கற்பிதவிசேஷ அபிசம்.

(அ) வெள்ளி முதலியனவைகள் இப்பியின் அ ஞ்ஞானகாலத்தில் தோற்றுகின்றன;

(உ) இப்பியின் ஞானகாலத்தில் இனைகள் தோற்றுகிறதில்லை.

(ஈ) ஆதலால் இப்பியோடு வியபிசாரமு(மா தலு)டையனவா யிருக்கின்றன.

ஆகையால் இது கற்பிதவிசேஷ அபிசமாம். இது பிராந்தி என்றும் சொல்லப்படும்.

சித்தாந்தம் :—அதுபோல

அதிஷ்டானமாகிய ஆத்மாவில் ஜாக்கிரம், அல்லது சொப்பனம், அல்லது சுழுத்தி என்னும் இம்மூன்று பிராந்தியும் ஆத்மாவை அறியாதால் உண்டாகின்றன.

க. அவற்றிற்கு ஒன்றற்கொன்றும், அதிஷ்டானமாகிய ஆத்மாவோடும் * க. வெதிரேகமும்,

உ. ஆத்மாவிற்கு அவற்றில் * உ. அந்வயமுமுண்டு. எப்படியெனின் :—

க. (க) * ங. ஜாக்கிரம் தோற்றுங்காலத்துச் சொப்பனசுழுத்திகள் தோற்றுகிறதில்லை.

---

* க. அபாவம் (இன்மை) அல்லது வியாவிருத்தி (எதிர்மறை) வெதிரேகமாம்.

* உ. பாவம் (உண்மை) அல்லது அநுவிருத்தி (உடன்பாடு) அந்வயமாம்.

* ங. "स्वप्ने जागरितं नास्ति जागरे स्वप्नता न हि। द्वयमेव कये नास्ति त्रयमेव भवेन्मिथ्या गुणत्रयविनिर्मितम्। अस्य द्रष्टा गुणतीतो नित्यो बोध चिदात्मकः

(உ) சொப்பனம் தோற்றுங்காலத்து ஜாக்கிர சமுத்திகள் தோற்றுகிறதில்லை.

(ஊ) சமுத்தி தோற்றுங்காலத்து ஜாக்கிர சொப்பனங்கள் தோற்றுகிறதில்லை. இது மூன்றவஸ்தைகளுக்கும் ஒன்றற்கொண்டுள்ள வேதி ரேகம்.

அதிஷ்டானத்தில் இந்த மூன்றவஸ்தைகளுக்கும் பாரமார்த்திக சத்தியசதபாவம் (நித்தி யசிவிருத்தி) இருக்கிறது. இது மூன்றவஸ்தைக்கும் அதிஷ்டானத்திலுள்ள வேதிரேகம்.

यद्वन्मृदियटजातिश्चक्रौ हि रजतस्थितिः । तद्वद्घटे जीवत्वं वीक्ष्यमाणे विनश्यति ॥

ஜாக்கிரம் சொப்பனத்தி லில்லை; சொப்பனத்தன்மை ஜாக்கிரத்தி லில்லை; இவ்விரண்டு மிலையில சமுத்தியி லில்லை, மூன்றுமே முக்குணங்களாலகப்பட்டனவாய் மித்தையாம். இதன் திருஷ்டாந்தமாகிய இச்சித் தொருபன் "குணதோஷமும் நித்தியனே யானன். எப்படி மண்ணில் கடப்பிரசாத்தியும் சத்தியில் ரஜதத்தின் ஸ்திதியும் தோற்றுகின்றதோ, அதுபோல இவ்வுலகம் நிலைத்திருத்தலின் பிரம்மத்தையறியுங்கால் ஜீவத்தன்மை நிசிக்கின்றது." என்பது யோகசிகோபநிஷத்து.

உ. ஆத்மா இந்த மூன்றவஸ்தைகளிலும் அநுஸ்யூதமாய்ப் பிரகாசிக்கின்றது. இவை மூன்றவஸ்தைகளிலும் ஆத்மாவிற்குள்ள அந்வயம்.

இங்கே ஆத்மாவிற்கு அபிந்நையாயிய உபாதியிலும் ஆரோபிக்கப்பட்ட மூன்றபிசாக்கள்.

க. சாமான்ய அபிசம்,

உ. விசேஷ அபிசம்,

க. தற்பித விசேஷ அபிசம் என்பனவாம்.

க. சத்தரூபம் (இருப்பு) சாமான்ய அபிசம்.

எனெனில்,

(க) "ஜாக்ரை யிருக்கிறது." "சொப்பனமிருக்கிறது." "சுழுத்தி யிருக்கிறது." என்றிப்படி ஆத்மாவின் இருப்பானது பிராந்திகாலத்திலும் தோற்றுகிறது;

(உ) பிராந்தி நிவிருத்திகாலத்திலும் "நான் சத்தாயிருக்கிறேன், நான் சித்தாயிருக்கிறேன், நான் ஆநந்தமாயிருக்கிறேன், நான் பரிபூரணனாயிருக்கிறேன், நான் அசங்கனாயிருக்கிறேன், நான் நித்தியமுக்தனாயிருக்கிறேன், நான் பிரஹ்மமாய

யிருக்கிறேன்." என்கிறபடி ஆத்மாவின் இருப்பானது தோற்றுகின்றது.

ஆகையால் இந்தச் சத்ரூபம் சாமானிய அதிசயமாம். இது ஆதார மென்றும் சொல்லப்படும்.

2. சேதனத்துவம் ஆனந்தத்துவம் அசங்கத்துவம் அத்துவிதீயத்துவமுதலிய ஆத்மாவின் விசேஷணங்கள் விசேஷ அதிசயம்.

(க) எனெனின், பிராந்திகாலத்தில் இவைகள் தோற்றுகிறதில்லை.

(உ) ஆனால் இவற்றின் தோற்றத்தால் பிராந்தி நிவிருத்தி யாகின்றது.

ஆகையால் இவை விசேஷ அதிசயமாம். இவை அதிஷ்டான மென்றும் சொல்லப்படும்.

3. மூன்றவஸ்தையாகிய பிரபஞ்சம் கற்பித விசேஷ அதிசயம். எனெனின்,

(க) பிரஹ்மாபின்னமாகிய ஆத்மாவை அறியாதகாலத்தில் தோற்றுகிறது;

(உ) "தான் பிரஹ்மம்" என்பதாக ஆத்மாவை அறியுங்காலத்து ஆத்மாவிற்கு வேறுகச் சத்தைத் தோற்றுகிறதில்லை.

ஆகையால் இந்த மூன்றவஸ்தையாகிய பிரபஞ்சம் கற்பிதவிசேஷ அதிசமாம். இது பிராந்தி என்றும் சொல்லப்படும். இவ்வாறு இந்த மூன்றவஸ்தைகளும் ஆத்மாவில் மித்தையாகத் தோற்றுகின்றன.

கூக. வினா :—ஆத்மாவினிடத்தில் மித்தையாகிய பிரபஞ்சம் தோற்றுவதில் இப்பியில் வெள்ளி இருஷ்டாந்தத்தினும் வேறான திருஷ்டாந்தம் உண்டோ?

விடை :—

க. கட்டையில் புருடனும்,

உ. சாகியில் சொப்பனமும்,

கூ. மருபூமியில் ஜலமும்,

ச. ஆகாசத்தில் நீலமையும்,

ஞ. பழுதையில் பாம்பும்,

ஈ. ஜலத்தில் தென்னோலை புருஷன் அல்லது சிருஷ்டியும்,

எ. கண்ணாடியில் முகமும் தோற்றுகின்றன.

ஆனை மித்தையாம்.

அதுபோல ஆத்மாவில் தனது அஜ்ஞானத்தால் பிரபஞ்சம் தோற்றுகிறது; * ச. அது

"*ச. யதா மृதி ঘடோ நாம கனகே குண்டலாபிதா।
சுக்தௌ ஹி ரஜதரூயாதிர்ஜீவசப்தஸ்ததா பரே ॥
யதைவ வ்யோம்நி நீலத்வம் யதா நீரம் மருஸ்தலே।
புருஷத்வம் யதா ஸ்தாணௌ தத்வத்விஸ்வம் சிதாத்மனி॥
யதைவ சூந்யே வேதாளோ கந்தர்வாணாம் புரம் யதா।
யதாகாசே த்விசந்த்ரத்வம் தத்வத்ஸத்யே ஜகஸ்திதிஃ ॥
யதா தரங்ககல்லோலைர்ஜலமேவ ஸ்புரத்யலம்।
ঘடனாம்நா யதா ம்ருத்வீ படனாம்நா ஹி தந்தவஃ।
ஜகந்நாம்நா சிதாபாதி ஸர்வம் ப்ரஹ்மைவ கேவலம் ॥
யதா வந்த்யாஸுதோ நாஸ்தி யதா நாஸ்தி மரௌ ஜலம்।
யதா நாஸ்தி நபோவ்ருக்ஷஸ்ததா நாஸ்தி ஜகஸ்திதிஃ।
க்ருஹ்யமாணே ঘடே யத்வன்ம்ருத்திகா பாதி வை பலாத்।
வீக்ஷ்யமாணே ப்ரபஞ்சே து ப்ரஹ்மைவாபாதி பாஸுரம் ॥
ஸதைவாத்மா விசுத்தோஸ்தி ந்யசுத்தோ பாதி வை ஸதா।

यथैव द्विधा रज्जुर्ज्ञानिनोऽज्ञानिनोनिशं ।
यथैव मृण्मयः कुंभस्तद्वद्देहोपि चिन्मयः ।
आत्मानात्मविवेकोयं मुधैव क्रियते बुधैः ।
सर्पत्वेन यथा रज्जूर जतत्वेन शुक्तिता ।
विनिर्णीता विमूढेन देहत्वेन तथात्मता ।
घटत्वेन यथा पृथ्वी जलत्वेन मरीचिका ।
गृहत्वेन हि काष्टानि खड्गत्वेनैव लोहता ।
तद्वदात्मनि देहत्वं पश्यत्यज्ञानयोगतः ॥

மண்ணில் குட மென்னும் பெயரும், கனகத்தில் குண்டல மென்னும் பெயரும், சுத்தியில் இராஜத மென்னும் பெயரும் இருப்பதுபோலப் பரமாகிய ஆத்மாவில் ஜீவனென்னும் பெயரிருக்கின்றது. ஆகாயத்தில் கருமைபோலவும், மருபூமியில் ஜலம்போலவும், கட்டையில் புருஷத்தன்மைபோலவும், சித்தாத்மாவில் உலகம் தோன்றுகின்றது. சூரியதேசத்தில் வேதாளமும், கந்தர்வகரமும், ஆகாசத்தில் இரட்டைமதித்தன்மையும் தோற்றுவது போலச் சத்தியமாகிய ஆத்மாவில் ஜகத்தின் ஸ்ருதி தோற்றுகின்றது. எப்படி அலைதரையாதிகளாக ஜலமே ஸ்புரிக்கின்றதோ, எப்படிக் கடமென்னும் பெயரால் பிருதிவியும், பட மென்னும் பெயரால் தந்துக்களும் தோற்றுகின்றனவோ, அதுபோலச் சித்தே

ஜகத்து என்னும் பெயரால் தோற்றுகின்றது. ஆதலால் யாவும் பிரஹ்மமாத்திரமேயாம். எப்படி மலடிமைக்குத் தன் இல்லையோ, எப்படி மருபூமியில் ஜலமில்லையோ, எப்படி ஆகாசவிருக்ஷமில்லையோ, அவ்வாறு ஜகத்தின் ஸ்திதி இல்லை. கடத்தில் இருக்குமிடத்து எப்படி மண்ணே வலித்து விளங்குகின்றதோ, அதுபோலப் பிரபஞ்சத்தை நோக்குமிடத்து விளக்கமான பிரஹ்மமே விளங்குகின்றது. எப்படி இரஜ்ஜுவானது ஞானிக்கும் அஞ்ஞானிக்கும் இருவகையாய்த் தோன்றுகின்றதோ, அதுபோல எப்போதும் மிகச்சுத்தமாயிருந்தும் அஞ்ஞானிகளுக்கு எப்போதும் அசுத்தமாகத் தோன்றுகின்றது. கடம் மண்மயமாயிருப்பதுபோலத் தேகமும் பிண்மயமாம். ஆத்மாநாத்ம விவேகமாகிய இஃது அறிஞர்களால் அடிக்கடி செய்யப்படுகின்றது. இரஜ்ஜு சர்ப்பத்தன்மையாகவும், சுத்தி இரஜதத்தன்மையாகவும் நிர்ணயிக்கப்படுவதுபோல, அறிவீனரால் ஆத்மதத்தன்மையானது தேகத்தன்மையாக நிர்ணயிக்கப்படுகின்றது. பிருதிவி கடத்தன்மையாகவும், கானல் ஜலத்தன்மையாகவும், மாங்கள் வீட்டுத்தன்மையாகவும், இரும்புத்தன்மை கத்தித்தன்மையாகவும் பார்க்கப்படுவதுபோல, ஆத்மாவிஷயத்துத் தேகத்தன்மையை அஞ்ஞானசம்பந்தத்தால் காண்கின்றனர்." என்பது யோகசிகோபநிஷத்து சாரம் அத்யாயம்.

" सर्पादौ रज्जुसत्तैव ब्रह्मसत्तैव केवलं ।
प्रपञ्चाधाररूपेण वर्तते जगन्नहि ।

यथेक्षुरससंव्याप्ता शर्करावर्तते तथा ।
अद्वयब्रह्मरूपेण व्याप्तोहं वै जगत्त्रयं ।
ब्रह्मादिकीटपर्यंताः प्राणिनो मयि कल्पिताः ।
बुद्बुदादि विकारान्तास्तरंगास्सागरे यथा ॥

பாம்புமுதலியவற்றில் பழுதையின்சத்தையே யிருப்பது போலப் பிரபஞ்சாதாரவடிவமாகக் கேவலம் பிரஹ்மசத்தையே யிருக்கின்றது ; ஜகத்தில்லை. எப்படிச் சர்க்கரை கரும்பின் ரஸத்திலுல் வியாபிக்கப்பட்டதாகின்றதோ, அதுபோல யான் மூன்றுலகத்தையும் அத்வயப் பிரஹ்மவடிவமாக வியாபித்திருக்கின்றேன். குமிழிமுதல் விகாரபரியந்தமான அலைகள் சமுத்திரத்திற் கற்பிக்கப்படுவதுபோலப் பிரஹ்மாதி கீடபரியந்தமான பிராணிகள் என்னிடத்துக் கற்பிக்கப்பட்டனவாம்." என்பது ஆத்மபோதோபநிஷத்து.

"अनित्यं जगद्यज्जनितं स्वप्नजगदभ्रगजादितुल्यम् ।
तथा देहादि संघातं मोहगुणजालकलितं तद्रज्जुसर्पवत्कल्पितम् ॥

அநித்தியமான ஜகத்து யாது தோன்றியிருக்கிறதோ, அது சொப்பனஜகத்துக்கும் மேகத்திற்றோன்றும் யானைமுதலியவற்றிற்கும் சமானமாம். அவ்வாறேதேகாதி

சங்காதமும் மோககுணக்கூட்டங்களால் ஆக்கப்பட்டதாம். அது இரஜ்ஜுசர்ப்பம்போல் கற்பிதமாம்." என்பது நிர்வாணோபநிஷத்து.

" अनेककोटिब्रह्माण्डं सर्वं मिथ्येति निश्चिनु ।

அநேக கோடி பிரஹ்மாண்டங்கள் யாவும் மித்தையென்று நிச்சயஞ் செய்."

" दृश्यते जगति यद्यज्जगति वीक्ष्यते ।
वर्तते जगति यद्यत्सर्वं मिथ्येति निश्चिनु ॥

ஜகத்தில் யாது யாது அறியப்படுகின்றதோ, ஜகத்தில் யாது யாது பார்க்கப்படுகின்றதோ, ஜகத்தில் யாது யாது இருக்கின்றதோ, அது முழுவதும் மித்தையென்று நிச்சயஞ்செய்." என்பன தேஜோபிந்தூபநிஷத்தினது ஐந்தாவது அத்தியாயத்தின் வாக்கியங்கள். அன்றியும் ஜகத்து மித்தை யென்பதன் சுருதிருஷ்டாந்தங்களை அந்தத் தேஜோபிந்து உபநிஷத்தின் ஐந்தாவது அத்தியாயத்திற் காண்க. தமிழில் காண விரும்புவோர் ரிபுகீதை ஈக-வது அத்யாயத்தில் காண்க.

" एकमेवाद्वयं ब्रह्म नेह नानास्ति किञ्चन ।
तस्माद्ब्रह्मव्यतिरिक्तं सर्वं बाधितम् ॥

ஒரே அத்வயப்பிரஹ்மம் உள்ளது. இங்கு நானாவென்பது சிறிது மில்லை. ஆகையால் பிரஹ்மத்திற்கு வேறுகிய யாவும் பாதிக்கப்பட்டனவாம்."

"மித்யாபூதான்ஸ்வப்நதுல்யான்விஷயபோகானனுபூய ।

சொப்பனசமானமாய் மித்தியாவடிவமான விஷயங்களே யநுபவித்து." என்பன மகாநாராயணோபநிஷத் வாக்கியங்கள்.

"யதா கடகசப்தார்தः ப்ருதக்பாவோ ந காஞ்சனாத் ।
ந ஹேமகடகாத்தத்வஜ்ஜகச்சப்தார்ததா பரே ।
தேநேயமிந்த்ரஜாலக்ரீடாகதிः ப்ரவிதந்யதே ॥

எப்படிக் கடகசப்தத்தின் பொருள் பொன்னைவிட வேறன்றே, பொன் கடகத்தின் வேறன்றே, அது போல ஜகத்துசப்தத்தின்பொருள் பரத்தி லிருக்கின்றது. அதனால் இவ்விந்திரஜாலக்ரீடாகதி (வீளையாட்டு) விரிக்கப்படுகின்றது." என்பது மஹோபநிஷத்வாக்கியம்.

"யத்ரைஷ ஜகதாபாஸோ தர்பணாந்தःபுரம் யதா ।
தத்ப்ரஹ்மாஹமிதி ஜ்ஞாத்வா க்ருதக்ருத்யோ பவாநக ॥

பாபமற்றவனே! எதில் இந்த ஜகத்தானது கண்ணாடியிற்புறம்போல ஆபாசமாகத் தோற்றுகின்றதோ, அந்தப் பிரஹ்மம் நான் என்று அறிந்து கிருதகிருத்தியனவாய்." என்பது அத்யாத்மோபநிஷத்து.

மித்தையாம். இவ்வாறு பிரபஞ்சத்தின் மித்தியாத்துவத்தை நிச்சயம் செய்தலே பிரபஞ்சத்தின் *டு. பாதமாம்.

கூஎ. வினா:—பிராந்தியாகிய சமுசாரம் எத்தனை வகையாம்?

விடை :—

க. *சு. பேதப்பிராந்தி,

உ. *எ. கருத்திருத்துவபோக்திருத்துவப் பிராந்தி,

---

*டு. மித்தியாத்துவநிச்சயத்திற்குப் பாத மென்று பெயராம். அது சாஸ்திரீயம் (சாஸ்திரசம்பந்தம்), யௌக்திகம் (யுக்திசம்பந்தம்), அபரோக்ஷ மென்னும் பேதத்தால் மூன்றுவகையாம்.

*சு. ஜீவேசுவர்களின் பேதம், ஜீவர்களின் பரஸ்பரபேதம், ஜடங்களின் பரஸ்பரபேதம், ஜீவஜடபேதம், ஈசஜடபேதம் என்னும் இவை ஐவகைப்பேதப்பிராந்தி.

*எ. அந்தக்காரணத்தின் தர்மமாகிய கருத்திருத்துவபோக்திருத்துவங்கள் ஆத்மாவினிடத்தில் தோற்றுதல் கருத்திருத்துவபோக்திருத்துவப்பிராந்தி.

ங. *அ. சங்கப்பிராந்தி,

ச. *கூ. விகாரப்பிராந்தி,

ஞ. பிரஹ்மத்திற்கு பின்னமாகிய ஜகத்தின் சத்தியத்துவப்பிராந்தி என்று *க०. ஐந்துவித மாம்.

---

*அ. ஆத்மாவிற்குத் தேகாதிகளில் அகந்தையும், தாகாதிகளில் மமதையுமாகிய சம்பந்தமாவது அல்லது சஜாதீயவிஜாதீயசுவகதவஸ்துக்களோடுள்ள சம்பந்தமாவது தோற்றுதல் சங்கப்பிராந்தி.

*கூ. பாலின் விகாரம் தயிராதல்போலப் பிரஹ்மத்தின் விகாரம் ஜீவனும் அப்படியே ஜகத்துமாம் என்னும் தோற்றம் விகாரப்பிராந்தி.

"*க०. भ्रमः पञ्चविधो भाति तदेवेह समुच्यते ।
जीवेश्वरौ भिन्नरूपाविति प्राथमिको भ्रमः ।
आत्मनिष्ठं कर्तृगुणं वास्तवं वा द्वितीयकः ।
शरीरत्रयसंयुक्तजीवस्संगी तृतीयकः ।
जगत्कारणरूपस्य विकारित्वं चतुर्थकः ।
कारणाद्भिन्नजगतस्सत्यत्वं पञ्चमो भ्रमः ।

கஉ-அ. வினை :—ஐவகைப்பிரமாந்தியும் எந்தத் திருஷ்டாந்தங்களால் நிவிருத்தியாகும் ?

விடை :—

पञ्चभ्रमनिवृत्तिश्च तदा स्फुरति चेतसि ।
बिंबप्रतिबिंबदर्शनेन भेदभ्रमो निवृत्तः ॥
स्फटिकलोहितदर्शनेन पारमार्थिककर्तृत्वभ्रमो निवृत्तः । घटमठाकाशदर्शनेन सङ्गीतिभ्रमो निवृत्तः ॥
रज्जुसर्पदर्शनेन विकारित्वभ्रमो निवृत्तः ॥
कनरुचकदर्शनेन कारणाद्भिन्नजगत्सत्यत्वभ्रमोनिवृत्तः ॥
तदा प्रभृति मच्चित्तं ब्रह्माकारमभूत्स्वयम् ॥

பிரமம் ஐந்துவிதமாகத் தோற்றுகின்றது. அதுவே இங்குச் செவ்வையாய்ச் சொல்லப்படுகின்றது :—க. ஜீவேசுவரர்கள் இருவரும் பின்னவடிவுடையோர் என்பது முதலாவது பிரமம். உ. ஆத்மாவினிடத்துள்ள கர்த்திருத்துவம் வாஸ்தவமென்பது இரண்டாவது பிரமம். ங. சரீரமூன்றுடன் கூடிய ஜீவன் சங்க முடையவன் என்பது மூன்றாவது பிரமம். ச. ஜகத்தின் காரணவடிவம் விகாரி யென்பது நான்காவது பிரமம். இ. காரணத்

க. *கக. பிம்பப்பிரதிபிம்பதிருஷ்டாந்தத்தால் பேதப்பிராந்தியும்,

உ. ஸ்படிகத்தில் சிவப்புவஸ்துவர்ணத்தின் செந்நிறம் தோற்றும் திருஷ்டாந்தத்தால் கருத்திருத்துவபோக்திருத்துவப்பிராந்தியும்,

---

நிற்கு வேறான ஜகத்துசத்தியமென்பது ஐந்தாவது பிரமம். பஞ்சப்பிரமவிருத்தியும் அப்போது சித்தத்தில் ஸ்புரிக்கின்றது :—க. பிம்பப்பிரதிபிம்பதரிசனத்தால் பேதப்பிரமம் நீங்கியது, உ. ஸ்படிகத்தின் செம்மையைக் காணுதலால் பாரமார்த்திககர்த்திருத்துவப்பிரமம் நீங்கியது, ங. கடமடாகாசதரிசனத்தால் சங்கி(யான் சங்கமுடையவன்) என்னும் பிரமம் நீங்கியது, ச. இரஜ்ஜுசர்ப்பதரிசனத்தால் விகாரித்தன்மைப்பிரமம் நீங்குகின்றது, ஞ. கனககுண்டல தரிசனத்தால் ஜகத்தின் சத்தியத்தன்மைப்பிரமம் நீங்கியது. அக்காலந்தொட்டு என் சித்தம் சுவயம் பிரஹ்மாகார மாயிற்று." என்பது அந்நபூர்ணேபநிஷத்து.

* கக. சூத்திரபாஷியத்திற்குப் பஞ்சபாதிகை யென்னும் உரை பதுமபாதாசாரியரால் செய்யப்பட்டிருக்கிறது. அந்தப் பஞ்சபாதிகையின் வியாக்கியானமாகிய விவரண மென்னும் கிரந்தத்திற்குக் கர்த்தா, ஸ்ரீ பிரகாசாத்மசரண மென்னும் ஆசாரியர். அவரது முறைமையை அதுசரித்தன்னது மேலெழுதப்பட்டுள்ள இந்தப் பிம்பப்பிரதிபிம்பதிருஷ்டாந்தம்.

ங. கடாகாசதிருஷ்டாந்தத்தால் சங்கப்பிராந்தியும்,

ச. இரஜ்ஜுவிற்கற்பிதமாகிய சர்ப்பதிருஷ்டாந்தத்தால் விகாரப்பிராந்தியும்,

ஞ. கனகத்திற் குண்டலம் தோற்றும் திருஷ்டாந்தத்தால் பிரஹ்மத்திற்குப் பின்னமாகிய ஜகத்தின் சத்தியத்துவப்பிராந்தியும் நிவிருத்தியாகும்.

கஉக. வினை :—க. பிம்பப்பிரதிபிம்பதிருஷ்டாந்தத்தால் பேதப்பிராந்தி எப்படி நிவிருத்தியாகும் ?

விடை :—திருஷ்டாந்தம் :—(க) * கஉ. கண்

---

* கஉ. "सत्येवाभाति चिच्छाया दर्पणे प्रतिबिम्बवत् ।

சித்சாயையானது கண்ணாடியில் பிரதிபிம்பம்போலச் சத்தியமானதுபோல் தோற்றுகின்றது." என்பது சுவேஸ்வதராஹஸ்யோபநிஷத்து.

"एक एव हि भूतात्मा भूते भूते व्यवस्थितः ।
एकधा बहुधा चैव दृश्यते जलचन्द्रवत् ॥

ஒரே பூதாத்மா பூதங்கள்தோறும் இருப்பவராய் ஜலசந்திரனைப் போல ஒருவகையாயும் பலவகையாயும் காணப்படுகின்றார்." என்பது திரிபுராதாபிதீயுபநிஷத்தும், பிரஹ்மபிந்தூபநிஷத்துமாம்.

ணுடியில் தோற்றும் முகத்தின் பிரதிபிம்பம் அக்கண்ணுடியி லில்லை. ஆனால் கண்ணுடியைப்பார்க்கும்பொருட்டு வெளிப்பட்ட நேத்திரவிருத்தி அந்தக் கண்ணுடியைப் பரிசித்து (தீண்டி), மறுபடியும் திரும்பி, முகத்தையே பார்க்கின்றது. ஆகையால் பிம்பமாகிய முகத்தோடு பிரதிபிம்பம் அபின்னமாம். அதனால் பிரதிபிம்பம் மித்தை யன்று ; சத்தியமாம்.

(உ) பிரதிபிம்பத்தின் தர்மமாகிய பிம்பத்தினும்வேறுந்தன்மையும், கண்ணுடியிலிருக்குந்தன்மையும், பிம்பத்தினும் எதிர்முகமாந்தன்மையுமாகிய இந்த மூன்றும், அவற்றினது தோற்றமாகிய ஞானமும் பிராந்தியாம்.

(ஙு) ஆகையால் இந்தத்தர்மங்களின் மித்தியாத்துவநிச்சயமாகிய பாதத்தைச் செய்வதனால் பிம்பப்பிரதிபிம்பங்களுக்கு என்றும் அபேதமாகிய நிச்சயம் உண்டாகின்றது.

சித்தாந்தம்:—(க) அதுபோலச் சுத்தப்பிரமம் பிம்பமாம். ஜீவனுகிய அதனது பிரதிபிம்பம் அஞ்ஞானமாகிய கண்ணுடியில் தோற்றுகின்றது. அவற்றுள் சொப்பனத்தைப்போல் ஒரு ஜீவன் முக்கியமாம். மற்றவை ஸ்தாவர ஜங்கம

மாகிய நாநாஜீவர்களாகத் தோற்றுகின்றன. அவை ஜீவாபாசங்களாம். அந்த ஜீவனுகிய பிரதிபிம்பம் ஈசுவரனுகிய பிம்பத்தோடு எப்போதும் அபின்னமாம்.

(உ) ஆனல் மாயையின் வலியாலாம் அந்த ஜீவனது தர்மமாகிய பிம்பமாம் ஈசுவரனினும் வேறுந்தன்மை, ஜீவத்துவம், அற்பஞ்ஞத்துவம், அற்பசக்தித்துவம், பரிச்சின்னத்துவம், நாநாத்துவமுதலியனவும், அவற்றின் தோற்றமாகிய ஞானமும் பிராந்தியாம்.

(ஊ) ஆகையால் அவற்றின் மித்தியாத்துவ நிச்சயமாகிய பாதத்தைச் செய்வதனல், ஜீவனுகிய பிரதிபிம்பத்திற்கும் ஈசுவரனுகிய பிம்பத்திற்கும் என்றும் அபேதமாகிய நிச்சய முண்டாகின்றது.

இவ்வாறு பிம்பப்பிரதிபிம்பதிருஷ்டாந்தத்தால் * களு. பேதப்பிராந்தி நிவர்த்தியாகின்றது.

---

* களு. முக்கியமாகிய ஜீவேசுவரபேதநிஷேதத்தால் அதனுளடங்கிய நான்கு பேதங்களின் நிஷேதமும் இயல்பாகவே சித்திக்கின்றது. சகலபேதமும் உபாதியினுலாயிருக்கின்றன. உபாதிகள் யாவு மித்தையாகையால், அவற்றுலாகிய பேதங்களும் மித்தையாம். ஆகவே வாஸ்தவமாகிய அத்வைதப்பிரஹ்மமே மிஞ்சுகின்றது.

கஙo. வினா :—உ. படிகத்தில் சிவப்புவஸ்துரத்தின் செந்நிறம்தோற்றும் திருஷ்டாந்தத்தால் கருத்திருத்துவபோக்திருத்துவப்பிராந்தி எப்படி நீங்கும் ?

" यदा ह्येवैष एतस्मिन्नल्पमप्यन्तरं नरः ।
विजानाति तदा तस्य भयं स्यान्नात्र संशयः ॥

எப்போது இந்நரன் இதில் சிறிதேனும் பேதத்தையறிகின்றானே, அப்போது அவனுக்குப் பயமுண்டாகின்றது ; இதிற் சந்தேகமில்லை." என்பது கடோபநிஷத்தும் மகோபநிஷத்து சுவது அத்தியாயமுமாம்.

" अद्वितीये परे तत्त्वे निर्विशेषे भिदा कुतः ।
एकात्मके परे तत्त्वे भेदकं तत् कथं वसेत् ॥

நிர்விசேஷ அதாவது பேதமின்றிய அத்விதீயபரதத்துவத்தில் பேதமேது ? ஒருவடிவமான பரதத்துவத்தில் அப்பேதத்தைச்செய்வது எப்படி வசிக்கும் ?" என்பது அத்யாத்மோபநிஷத்து.

" यदा ह्येवैष एतस्मिन्नुदरमन्तरं कुरुते । अथ तस्य भयं भवति ॥

எப்போது இவன் இதன்கண் சிறிதேனும் பேதத்தினைச் செய்கின்றானே, அதனால் அவனுக்குப் பயமுண்டாகின்றது." என்பது தைத்திரீயம் பிரஹ்மாநந்தவல்லி.

விடை:—(க) சிவப்புவஸ்திரத்தின்மேல் வைக்கப்பட்ட படிகமணியில் வஸ்திரத்தின் செந்நிறம் சையோகசம்பந்தத்தால் தோற்றுகிறது.

(உ) ஆனல் அது வஸ்திரத்தின் தர்மமாம்.

(ரு) வஸ்திரமும் படிகமும் பிரிந்தகாலத்து, அது படிகத்தில் தோற்றுகிறதில்லை.

(ச) ஆனல் அது படிகத்தின் தர்ம மன்று.

(ரு) ஆனல் படிகத்தில் பிராந்தியினல் தோற்றுகிறது.

சித்தாந்தம்:—(க) அதுபோல அந்தக்கரண தர்மமாகிய கருத்திருத்துவபோக்கிருத்துவங்கள் ஆத்மாவில் தாதாத்மியசம்பந்தத்தால் தோற்றுகின்றன.

(உ) ஆனல் அவை அந்தக்கரணத்தின் தர்மமாம்.

(ரு) சுழுத்தியில் அந்தக்கரணமும் ஆத்மாவும் பிரிந்தகாலத்து அவை ஆத்மாவினிடத்திற் தோற்றுகிறதில்லை.

(ச) ஆகையால் ஆத்மாவின் தர்ம மன்று.

(ரு) ஆனல் ஆத்மாவினிடத்தில் பிராந்தியினல் தோற்றுகின்றன.

இவ்வாறு படிகத்திற் செந்நிறம்தோற்றும் திருஷ்டாந்தத்தால் கர்த்திருத்துவபோக்திருத்துவப்பிராந்தி நீங்குகின்றது.

கஙக. வினா:—ங. கடாகாயதிருஷ்டாந்தத்தால் சங்கப்பிராந்தி எப்படி நிவர்த்தியாகும்?

விடை:—(க) கடவுபாதியையுடைய ஆகாயம் கடாகாய மெனப்படும்.

(உ) அந்த ஆகாயம் கடத்தோடு தோற்றிய போதினும்,

(ங) கடத்தின் தர்மமாகிய உற்பத்திநாசம் கருமகமனமுதலியவை ஆகாயத்தைப் பரிசிக்கிறதில்லை.

(ச) ஆகையால் ஆகாயம் அசங்கமாம்.

(ஞ) ஆகாயத்திற்குக் கடத்தோடு சம்பந்தம் தோற்றுதல் பிராந்தியாம்.

சித்தாந்தம்:—(க) அதுபோலத் தேகமுதலிய சங்காதமாகிய உபாதியையுடைய ஆத்மா ஜீவனெனப்படும்.

(உ) அந்த ஆத்மா சங்காதத்தோடு கூடியதாகத் தோற்றியபோதினும்,

(ங) சங்காதத்தின் தர்மமாகிய ஜனன மரண திகள் ஆத்மாவைப் பரிசியா. ஏனெனின், சங்காதம் திருசியம் ; ஆத்மா திருஷ்டா.

(ச) அதனல் ஆத்மா சங்காதத்தினும் வேறுகிய அசங்கனும்.

(ஞ) ஆத்மா சங்காதரூபமல்லாத தாகையால் ஆத்மாவிற்குச் சங்காதத்தோடு அகந்தையாகிய சம்பந்த மில்லை. ஆத்மா சங்காதமாகாமல், அந்தச் சங்காதமும் பஞ்சபூதத்தினதா யிருத்தலால், ஆத்மாவிற்கு மமதையாகிய சம்பந்தமு மில்லை.

ஆத்மா சங்காதத்திற்கு வேறு யிருத்தலால் ஆத்மாவிற்குச் சங்காதத்தின் சம்பந்திகளாகிய ஸ்திரீபுத்திரகிரகாதிகளோடு மமதையாகிய சம்பந்தமு மில்லை. இவ்வாற்றல் ஆத்மா அசங்கன். இவ்வாத்மாவிற்கு சங்காதத்தோடுள்ள அகந்தை மமதையாகிய சம்பந்தம் பிராந்தியாம்.

இவ்வாறு கடாகாசதிருஷ்டாந்தத்தால் சங்கப்பிராந்தி நீங்குகின்றது.

கஙஉ. வினு :—ச. இரஜ்ஜுவில் கற்பிதமாகிய சர்ப்ப திருஷ்டாந்தத்தால் விகாரப்பிராந்தி எப்படி நீங்கும் ?

விடை :-(க) மந்தாந்தகாரத்தில் இரஜ்ஜுவானதிருக்க, அதைப் பார்க்கும்பொருட்டு நேத்திரத்துவாரத்தால் அந்தக்காரணவிருத்தி வெளிப்படுகின்றது. அந்த விருத்தி இருள் முதலிய தோஷத்தால் இரஜ்ஜுவின் ஆகாரத்தை அடைகிறதில்லை. ஆகையால் அந்த விருத்தியால் இரஜ்ஜுவின் ஆவரணம் பங்கமாகிறதில்லை. அப்போது இரஜ்ஜுவை உபாதியாகவுடைய சைதன்னியத்தை ஆசிரயித்திருந்த *கச. மூலாவித்தை சேஷாப(கலக்க)த்தை அடைந்து, சர்ப்பரூப விகாரத்தை அடைகின்றது.

(உ) அந்தச்சர்ப்பம் பாலின் பரிணமமாகிய தயிரைப்போல அவித்தையின் பரிணமமும்,

(ங) இரஜ்ஜுவை உபாதியாகவுடைய சைதன்னியத்தின் விவர்த்தமுமாம்; பரிணம(விகார)மன்று.

சித்தாந்தம் :-(க) அதுபோலப் பிரஹ்மசைதன்னியத்தின் ஆசிரிதமாயிருக்கும் *கரு. மூலா

---

*கச. கடமுதலிய உபாதிகளையுடைய சைதன்னியத்தை ஆவரணஞ்செய்யும் அவித்தை **தூலாவித்தை.**

*கரு. சுத்தப்பிரஹ்மத்தையும் ஆத்மாவையும் ஆவரணஞ் செய்யும் அவித்தை **மூலாவித்தை.**

வித்தை, பிராரப்தமுதலிய நிமித்தத்தால் *ககூ. கோபத்தை அடைந்து, ஜடசேதன(சிதாபாச)ப்பிரபஞ்சமாகிய விகாரத்தை அடைகின்றது.

(உ) அந்தப் பிரபஞ்சம் அவித்தையின் *கள். பரிணமமும்,

(ங) *கஅ. அதிஷ்டானப்பிரஹ்மசைதன்னி

---

*ககூ. காரியமாதற்கு எதிர்ப்படுதலை(காரியாபிமுகாவஸ்தையை)கோபமென்பர்.

*கள. க. முன் உருவத்தை விட்டு வேற்றுருவத்தை அடைதல் பரிணமம்.

உ. அல்லது உபாதானத்தின் சமானசத்தையுடைய வேற்றுருவம்(உபாதானத்தினும் வேறுவிதமாகிய வடிவம்)பரிணமமாம்; பாலின் பரிணமமாகிய தயிர் போல. இதனையே விகார மென்றும் கூறுவர்.

*கஅ. எது தான் நிருவிகாரவடிவமாயிருந்துகொண்டு, அவித்தையினுலாகிய கற்பிதகாரியத்திற்கு ஆதிரய மாகின்றதோ, அது அதிஷ்டானமாம்; கற்பிதசர்ப்பத்திற்கு அதிஷ்டானமாகிய இரச்சுபோல. இதனையே பரிணமியுபாதானத்திற்கு விலக்ஷணமாகிய விவர்த்தஉபாதான மென்றும் கூறுவர்.

பிரஹ்மமே சகலத்திற்கும் அதிஷ்டானம், அந்தப் பிரஹ்மசைதன்னியத்தின் விவர்த்தமே இவ்வுலகு என்பதற்கு.

யத்தின் *ககக. விவர்த்தமுமாம் ; பரிணமமன்று.

இவ்வாறு இரஜ்ஜுவில் கற்பிதமாகிய சர்ப்ப திருஷ்டாந்தத்தால் விகாரப்பிராந்தியின் நிவிருத்தி யுண்டாகின்றது.

கஙஙக. வினை:—நி. கனகத்தில் குண்டலந்தோற்

" सर्वाधिष्ठानमद्वंद्वं परं ब्रह्म सनातनम् ।
सच्चिदानंदरूपं तदवाङ्मानसगोचरम् ॥

சர்வத்திற்குமதிஷ்டானமும், துவந்துவமில்லாததும், பரப்பிரஹ்மமும், சநாதனமும், சச்சிதாநந்தமுமாகிய அது வாக்குமனதிற் கெட்டாததாம்." என்னும் அந்நபூர்ணோபநிஷத்தும்,

" चिद्विवर्तजगतोस्य कारणं तत्सदाहमिति मौनमाश्रय ।

சித்தின் விவர்த்தமான இச்சகத்திற்குக் காரணமான அந்தப் பிரஹ்மம் எப்போதும் நான் என்று மௌனத்தை ஆசிரயஞ்செய்." என்னும் வராகோபநிஷத்தும் பிரமாணமாதல் காண்க.

*ககக. அதிஷ்டானத்தினும் விஷமசத்தை(அற்பமும் பின்னமுமாகிய சத்தை)யுடைய அந்நியதாரூபம் (வேறுவிதமாகிய வடிவம்)விவர்த்தமாம் ; இரஜ்ஜுவின் விவர்த்தமாகிய சர்ப்பம்போல. இதனையே கற்பிதகாரிய மென்றும், கற்பிதவிசேஷ மென்றும் கூறுவர்.

றும் திருஷ்டாந்தத்தால் பிரஹ்மத்திற்கு வேறு கிய ஜகத்தினது சத்தியத்தன்மையின் பிராந்தி எப்படி நிவிருத்தியாகும்?

விடை:-(க) கனகத்திற்கும் குண்டலத்திற்கும் காரியகாரணத்தன்மையால் தோற்றும் பேதம் கற்பிதமாம்;

(உ) கனகத்திற்கு வேறுகக் குண்டலத்தின் சொரூபம் காணப்படாமையால்.

(ங) வாஸ்தவ அபேத மிருக்கிறது.

(ச) அதனல் கனகத்திற்கு வேறுகக் குண்டலத்திற்குச் சத்தை யில்லை.

சித்தாந்தம்:-(க) *உ०. அதுபோலப் பிரஹ்

---

*உ०. காரணத்தைவிடக்காரியம் வேறுகாமையால் காரணமாகிய பிரஹ்மத்திற்கு வேறுய்க் காரியவடிவ ஜகத்து சத்தியமா யில்லை. ஆதலால் ஜகத்து மித்தை என்பதனே பின்வரும் சுருதிகள் காட்டுமாறு காண்க.

" कारणाभिन्नरूपेण कार्यं कारणमेव हि ।
तद्रूपेण सदा सत्यं भेदेनोक्तिर्मृषा खलु ।
तच्च कारणमेकं हि न भिन्नं नोभयात्मकम् ।
भेदस्सर्वत्र मिथ्यैव धर्मादेरनिरूपणात् ।

மத்திற்கும் ஜகத்திற்கும் காரியகாரணத்தன்மை

अतश्च कारणं नित्यमेकमेवाद्वयं खलु ॥
अत्र कारणमद्वैतं शुद्धचैतन्यमेव हि ॥

காரணத்தினும் வேறுபட்ட வடிவமின்மையால் காரியம் காரணமேயா மென்பது பிரசித்தம்; அக்காரண வடிவத்தால் எப்போதும் சத்தியமா யிருக்கின்றது. பேதமாகக் கூறுதலோ நிச்சயமாகப் பொய்யாம். அக்காரணமும் ஒன்றே; பின்னமு மன்று; பின்னபின்ன மென்னும் இருவடிவமு மன்று. பேதம் எங்கும் மித்தையாம்; தர்மாதிகள் நிரூபிக்கப்படாமையால். ஆதலால் காரணமும் நிச்சயமாக நித்தியமான ஒரே அத்வயமாம். இங்குக் காரணமாகிய அத்வைதம் சுத்தசைதன்னியமேயா மென்பது பிரசித்தம்." இது பஞ்சப்பிரஹ்மோபநிஷத்து.

"येनाश्रुतँ श्रुतं भवत्यमतं मतमविज्ञातं विज्ञातमिति कथं नु भगवस्स आदेशो भवतीति ॥ यथा सोम्यैकेन मृत्पिण्डेन सर्वं मृण्मयं विज्ञातँ स्याद्वाचारंभणं विकारो नामधेयं मृत्तिकेत्येव सत्यम् ॥ यथा सोम्यैकेन लोहमणिना सर्वं लोहमयं विज्ञातं स्याद्वाचारंभणं विकारो नामधेयं लोहमित्येव सत्यम् ॥ यथा सोम्यैकेन नखनि-

யினுஞ்விசேஷணத்தினுஞ் தோற்றும்பேதம் கற்பிதமாம்.

कृन्तनेन सर्वं काष्णायसं विज्ञातँ स्याद्वाचारंभणं विकारो नामधेयं कृष्णायसमित्येव सत्यमेवँ सोम्य स आदेशो भवति ॥

எதனால் கேட்கப்படாதது கேட்கப்பட்டதாகின்றதோ, மனனஞ் செய்யப்படாதது மனனஞ் செய்யப்பட்டதாகின்றதோ, அறியப்படாததறியப்பட்டதாகின்றதோ, என்பதாம். பகவானே! அவ்வுபதேசம் எவ்வாறுமெனச் சௌமியனே! எப்படி ஒரு மண்திரளால் எல்லாம் மண்வடிவமாய் அறியப்பட்டதாமோ, கட்டுதலிய நாமதேயம் வாக்கின் செய்கையான விகாரமாமோ, மண்மாத்திரம் சத்தியமாமோ, எப்படிச் சௌமியனே! ஒரே உலோகமணியினால் யாவும் உலோகமயமாக அறியப்பட்டதாமோ, மணிமுதலிய நாமதேயம் வாக்கின்செய்கையான விகாரமாமோ, உலோகமே சத்தியமாமோ, எப்படி ஒரு நகம் வெட்டும் கத்தி(இரும்புமயமாய்) அறியப்பட்டதாயின், யாவும் இரும்புமயமாக அறியப்பட்டதாமோ, கத்திமுதலிய நாமதேயம் வாக்கின்செய்கையான விகாரமாமோ, இரும்பே சத்தியமாமோ, அது போலச் சௌமியனே! அவ்வுபதேசமாகின்றது அதாவது ஒரு நாமரூபவடிவ வஸ்துகாரணமாகிய சத்துவடிவமென் றறிதலினால் சகலஜகத்தும் சத்துவடிவாய் அறியப்பட்டதாம். ஜகத்து

(உ) விசாரித்துப்பார்க்குமிடத்து அஸ்தி பாதிப்பிரிய(சச்சிதானந்த)த்திற்கு வேறுக நாமரூப ஜகத்துச் சத்தியமாகச் சித்திக்கிறதில்லை. ஆனால் மித்தையாகச் சித்திக்கிறது. எந்த வஸ்து எதிற் கற்பிதமாமோ, அந்த வஸ்து அதனினும் வேறுகச் சித்திக்கிறதில்லை.

நாமதேயமான வாக்கின் செய்கையாகிய விகாரமாம். சத்தாகிய பிரஹ்மமே சத்தியமாம்." என்பது **சாந்தோக்கியம்** ஆறுவது பிரபாடகத்தின் முதல் கண்டமாம்.

" ब्रह्मव्यतिरिक्तं सर्वं नश्वरम् ॥

பிரஹ்மத்திற் கந்நியமான யாவும் அசத்தியம்." என்பது **நாரதபரிவிராஜகோபநிஷத்து**.

" यथा पश्यति चात्मानं केवलं परमार्थतः ।
मायामात्रं जगत्कृत्स्नं सदा भवति निर्वृतिः ॥

எப்போது பரமார்த்தமாக ஜகத்து முழுவதையும் மாயாமாத்திரமாகவும் ஆத்மாவைக் கேவலமாகவும் அறிகின்றனை, அப்போது சுக முண்டாகின்றது." என்பது **தர்சனோபநிஷத்து** பத்தாவது கண்டம்.

(ஈ) ஆகையால் பிரஹ்மத்திற்கும் ஜகத்திற்கும் வாஸ்தவ அபேத முண்டு.

(ச) அதனல் ஜகத்திற்குப் பிரஹ்மத்தினும் வேறுகிய சத்தை யில்லை.

இவ்வாறு கனகத்தில் குண்டலந்தோற்றும் திருஷ்டாந்தத்தால் பிரஹ்மத்திற்குப் பின்னமாகிய ஜகத்தின் சத்தியத்துவப்பிராந்தி நிவர்த்தியாகின்றது.

கஙச. வினு :–பிராந்தி யென்பது யாது ?

விடை :–பிராந்தி யென்பது அத்தியாசமாம்.

கஙஞ. வினு :–அத்தியாச மென்பது யாது ?

விடை :–பிராந்தி(மயக்க)ஞானத்திற்கு விஷயமாகிய மித்தியாவஸ்துவிற்கும், பிராந்திஞானத்திற்கும் அத்தியாச மென்று பெயராம்.

கஙசு. வினு:–அந்த அத்தியாசம் எத்தனை விதமாம் ?

விடை :–ஞானுத்தியாசம் அர்த்தாத்தியாசமென்னும் பேதத்தால் அத்தியாசம் இரண்டுவிதமா

ம். அவற்றுள், அர்த்தாத்தியாசமானது *உக. கேவலசம்பந்தாத்தியாசம், *உஉ. சம்பந்தசகித சம்பந்தியத்தியாசம், *உங. கேவல தர்மாத்தியா

---

*உக. வெள்ளியில் சுத்தியினது தாதாத்மியசம்பந்தத்தின் அத்தியாச முண்டாவதுபோல அநாத்மாவில் ஆத்மாவின் அத்தியாசம் உண்டாகின்றது. அநாத்மாவில் ஆத்மாவின் தாதாத்மியசம்பந்தம் அத்தியஸ்தமாகின்றது. ஆத்மாவின் சொரூபம் அத்தியஸ்தமாகிறதில்லை. ஆகையால் அநாத்மாவில் ஆத்மாவின் **கேவலசம்பந்தாத்தியாச** முண்டாகின்றது.

*உஉ. சுத்தியில் வெள்ளியின் சம்பந்தமும் அதன் சொரூபமுமாகிய இரண்டும் அத்தியஸ்தமாவதுபோல ஆத்மாவில் அநாத்மாவின் சம்பந்தமும் சொரூபமுமாகிய இரண்டும் அத்தியஸ்தமாகின்றன. ஆகையால் ஆத்மாவில் அநாத்மாவின் **சம்பந்தசகிதசம்பந்தியித்தியாச** முண்டாகின்றது.

*உங. படிகத்தில் சிவப்பு கருப்பு முதலிய தர்மமாத்திரம் சிவப்புப்படிக முதலியவர்க அத்தியஸ்தமாவதுபோல ஆன் வெள்ளையன், குருடன், செவிடன் முதலியவடிவாக ஸ்தூலதேகத்தின் வெண்மைமுதலியனவும் இந்திரியங்களின் பார்வைமுதலியனவுமாகிய தர்மங்கள்மாத்திரம் ஆத்மாவில் அத்தியஸ்தமாகின்றன ; அவற்றின் சொரூபம் அத்தியஸ்தமாகிறதில்லை. ஆகையால் ஆத்மாவில் தேகேந்திரியங்களது **கேவலதர்மத்தினத்தியாச** முண்டாகின்றது.

சம், *உச. தர்மசகிதத்தர்மியத்தியாசம், *உடு. அந்நியோந்நியாத்தியாசம், *உசு. அந்நியதராத்தியாசம் என்னும் பேதத்தால் ஆறுவிதமாம். அல்லது *உள. சொரூபாத்தியாசம், *உஅ. சம்சர்க்கா

---

*உச. சுத்தியில் வெள்ளித்தன்மைத்தருமமும் அவ்வெள்ளியின் சொரூபமும் இரண்டும் அத்தியஸ்தமாவதுபோல, அந்தக்கரணத்தின் கருத்திருத்துவாதி தர்மங்களும் அவ்வந்தக்கரணத்தின் சொரூபமுமாகிய இரண்டும் ஆத்மாவில் அத்தியஸ்தமாகின்றன். ஆகையால் ஆத்மாவில் அந்தக்கரணத்தின் **தர்மசகிததர்மியின் அத்தியாச** முண்டாகின்றது.

*உரு. இரும்பும் அக்கினியும்போல, ஆத்மாவில் அநாத்மாவின் அத்தியாசமும் அநாத்மாவில் ஆத்மாவின் அத்தியாசமும் இருத்தல் **அந்நியோந்நியாத்தியாசமாம்.**

*உசு. அநாத்மாவில் ஆத்மாவின் சொரூபம் அத்தியஸ்தமாகாது. ஆனால் ஆத்மாவில் அநாத்மாவின் சொரூபம் அத்தியஸ்தமாம். இதுவே **அந்நியதராத்தியாசமாம்.** இரண்டில் ஒன்றன் அத்தியாசம் **அந்நியதராத்தியாச** மெனப்படும்.

*உள. ஞானத்திலில் பாதமாகத்தக்க வஸ்து அதிஷ்டானத்தில் சொரூபமாக அத்தியஸ்தமாகின்றது. தேகாதி அநாத்மாவிற்கு அதிஷ்டானஞானத்தால் பாதமுண்டாகின்றமையால் ஆத்மாவில் அதன் **சொரூபாத்தியாச** முண்டாகின்றது.

*உஅ. பாதிக்கத்தகாத வஸ்துவின் சொரூபம் அத்

த்தியாசம் ஏன்னும் பேதத்தால் **அர்த்தாத்தியாச**ம் இரண்டுவகைப்படும்.

க. முன்சொல்லப்பட்ட ஆறுபேதங்களும் இதில் *உகூ. அடங்கும்.

தியஸ்தமாகாது. ஆனால் அதன் சம்பந்தம் அத்தியஸ்தமாகும். ஆகையால் அநாத்மாவில் ஆத்மாவின் **சம்சர்க்காத்தியாச** முண்டாகின்றது. இதனையே **சம்பந்தாத்தியாச** மென்றும் கூறுவர்.

*உக. கேவலதர்மாத்தியாசம், தர்மசகிததர்மியினத்தியாசம், அந்நியதராத்தியாசம் என்னுமிம்மூன்றும் சொரூபாத்தியாசத்தி லடங்கும். கேவலசம்பந்தாத்தியாசம், சம்சர்க்காத்தியாசமேயாகும். சம்பந்தசகிதசம்பந்தியினத்தியாசம், சம்சர்க்காத்தியாசசகித சொரூபாத்தியாசமாம். அந்நியோந்நியாத்தியாசத்தில் சம்சர்க்காத்தியாசம் சொரூபாத்தியாச மென்னுமிரண்டு மூண்டு. ஏனெனின், ஆத்மாவின் சொரூபம் சத்திய மாகையால் அஃது அத்தியஸ்தமாகாது.. ஆனால் அதன் சம்சர்க்க மெனப்படும் தாதாத்மியசம்பந்தம் அநாத்மாவில் அத்தியஸ்தமாம். ஆகையால் அதன் **சம்சர்க்காத்தியாச** முண்டாகின்றது. அநாத்மாவின் சொரூபமே ஆத்மாவில் அத்தியஸ்தமாகின்றமையால், அதன் **சொரூபாத்தியாச** முண்டாகின்றது.

அதனால் அந்நியோந்நியாத்தியாசம் இவ்விரண்டிலுமடங்கும்.

உ. மேலெழுதப்பட்டுள்ள பேதப்பிராந்திமுத லிய ஐவகைப்பிராந்தியும் இதனுள் *ங0. அடங் கும்.

ங. இனி அடுத்துச்சொல்லப்படும் ஆத்மாகாத் மாக்களினது விசேஷணங்களின் அந்நியோந்நி யாத்தியாசமும் இதிற்றானே அடங்கும். அஃது அதன் டிப்பணத்தில்(விளக்கவுரையில்)காட்டப் படும்.

கங.ள. வினை:—அகங்காராதி அநாத்மாக்களையு ம், ஆத்மாவையும் அறிவதில் விசேஷ உபயோக முள்ள அத்தியாச மெது ?

விடை :—அந்நியோந்நியாத்தியாசமாம்.

கங.அ. வினை :—அந்நியோந்நியாத்தியாசமென் பது யாது ?

விடை—பரஸ்பரத்தில் பரஸ்பரத்தின்(ஒன்றி

---

*ங0. முன்னெழுதப்பட்டுள்ள பேதப்பிராந்தி மு தலிய ஐவகைப்பிராந்திகளில் சங்கப்பிராந்திதீங்கிய மற்ற நால்வகைப்பிராந்தியும் சொரூபாத்தியாசத்தி லடங்கும். ஐந்தாவது சங்கப்பிராந்தி சம்சர்க்காத்தி யாசத்தி லடங்கும்.

ல் ஒன்றன்) அத்தியாசத்திற்கு *ஙக. அந்நியோந்நியாத்தியாச மென்று பெயர்.

கஙக. வினா:—ஆத்மாநாத்மாக்களுக்குப் பரஸ்பரம்(ஒன்றற்கொன்று)எப்படி அத்தியாசமுண்டாகிறது?

---

*ஙக. இங்கே சகல அத்தியாசங்களினது சொரூபத்தையும் உதாரணத்தையும் விரியுமென் றஞ்சி விசேஷமாய் எழுதாமல் சம்க்ஷேப(சுருக்க)மாய் எழுதியிருக்கிறோம். அவற்றை விசேஷமாய் அறிய விரும்புவோர் விருத்திப்பிரபாகரகிரந்தத்திற் காண்க. ஆனால் அந்நியோந்நியாத்தியாசத்தின் சொரூபம், விசேஷ உபயோகமுள்ளதென் றறிந்து ஸ்பஷ்டமா(தெளிவா)யக் காட்டப்பட்டிருக்கின்றது. அதில் (க) அநாத்மாவின் தர்மமாகிய துக்கமும் துவைதசகிதத்துவமும், ஆத்மாவின் ஆநந்தத்திலும் அத்வைதத்தன்மையிலும் சொரூபமாக அத்தியஸ்தமாய், அவற்றை மறைக்கின்றன.

(உ) ஆத்மாவின் தர்மமாகிய சத்தும் சித்தும் அநாத்மாவின் அசத்துவத்திலும் ஜடத்துவத்திலும் சம்சர்க்க(சம்பந்த)வாயிலாக அத்தியஸ்தமாய், அவற்றை மறைக்கின்றன.

காரியசகித அஞ்ஞானத்தால் மறைக்கப்படுவது அதிஷ்டான மெனப்படும்.

இவ்வாறு ஆத்மாநாத்மாக்களின் அந்நியோந்நியாத்தியாசமாகிய இதுவும் சம்சர்க்காத்தியாசசொரூபாத்தியாசங்களி லடங்கும்.

விடை :-க-ச. சத்து சித்து ஆநந்தம் அத்வைதத்துவம் என்னு மிந்நான்கு விசேஷணங்களும் ஆத்மாவினுடையனவாம். க-ச. அசத்து ஜடம் துக்கம் துவைதசகிதத்துவம்(துவைதத்தோடுகூடியதன்மை) என்னு மிந்நான்கு விசேஷணங்களும் அநாத்மாவினுடையனவாம். அவற்றுள்,

க-உ. துக்கம் துவைதசகிதத்துவம் என்னும் இவ்விரண்டு அநாத்மவிசேஷணங்களும் ஆத்மாவின் ஆநந்தத்தையும் அத்வைதத்துவத்தையும் மறைக்கின்றன. அதனால் ஆத்மாவில்,

(க) "நான் ஆநந்தரூபனையும் அத்வைதரூபனையு மிருக்கிறேன்." என்னும் ஞான முண்டாகாமல்,

(உ) "நான் துக்கியாயும் ஈசுவராதிகளினும் வேறாயு மிருக்கிறேன்." என்னும் ஞானம் உண்டாகிறது.

ங-ச. ஆத்மாவின் சத்து சித்து என்னும் இரண்டு விசேஷணங்களும் அநாத்மாவின் அசத்துவத்தையும் ஜடத்துவத்தையும் மறைக்கின்றன. அதனால் *ங-உ. அநாத்மாவாகிய அகங்காராதிகளில்,

---

*ங-உ. "अनात्मा तु सजीवो वियदादिप्रपञ्चः ॥
அநாத்மாவோ ஜீவனோடு ஆகாயமுதலிய பிரபஞ்சமாம்." என்பது சர்வசாரோபநிஷத்து.

(க) "அசத்தாயும் ஜடரூபமாயு மிருக்கிறது." என்னும் ஞான மூண்டாகாமல்,

(உ) "இருக்திறது, விளங்குகிறது." என்னும் ஞான மூண்டாகிறது.

இவ்வாறு ஆத்மாநாத்மாக்களுக்குப் *ஙஙு. பரஸ்பர அத்தியாச மிருக்கின்றது.

ஸ்ரீ விசாரசந்திரோதயம் ஆருங்கலை

பிரபஞ்சமித்தியாவர்ணநம் என்பது

முடிந்தது.

---

*ஙஙு. பிரஹ்மஈசுவரர்களுக்கும் கூடஸ்தஜீவர்களுக்கும் உள்ள பரஸ்பர அத்தியாசம் மேல் பதிஞ்சாவது கலியிற் சொல்லப்படும்.

ஸ்ரீ விசாரசந்திரோதயம்.

ஏழாங்கலை.

ஆத்மாவின் விசேஷணம்.

ஆன்ம விசேடண மாமிரு வகையே
விதேய நிஷேத்திய மென்றவை யாவுங்
குரவ னூல்வழிக் குறைவற வுணரிற்
றனது நிஜவுரு தானே யாகுவன். (க)

சத்துச் சித்தா நந்தம் பிரமஞ்
சுவயம் பிரகாசங் கூடத்தன் சாக்கி
திருஷ்டா வுபதிருஷ்டா வொன்றென லாதிய
விதேய விசேஷண மெனவிவை கொள்ளே.()

அநந்த மகண்ட மசங்க மத்வய
வஜந்ம மவிகாரி யாகார மில்ல
தவ்வியக்த மப்பிர மேய மவ்யய
மக்கர மாதிய நிஷேத்திய மென்றோர். (கூ)

கசo. வினா:—ஆத்மாவின் விசேஷணம் எத்தனை வகையாம்?

விடை:-*க. ஆத்மாவின் விசேஷணம் *உ. விதேயம்(சாக்ஷாத்போதகம்) *ங. நிஷேத்தியம்(பிரபஞ்சத்தின் நிஷேதவாயிலாக அறிவிப்பது) என்னும் பேதத்தால் இரண்டுவகையாம்.

---

*க. "अथ कस्मादुच्यते आत्मेति । यस्मात्सर्वमाप्नोति सर्वमादत्ते सर्वमत्ति च तस्मादुच्यते आत्मेति ॥

இனி எதனால் ஆத்மா என்று சொல்லப்படுகின்றது? எதனால் எல்லாவற்றையும் அடைகின்றதோ, எல்லாவற்றையும் கொள்ளுகின்றதோ, எல்லாவற்றையும் விழுங்குகின்றதோ, அதனால் ஆத்மா வென்று சொல்லப்படுகின்றது." என்னும் சாண்டில்யோபநிஷத்து மூன்றுவது அத்யாயவாக்கியமும்,

"परमात्मेति च । देहादेः परतरत्वाद्ब्रह्मैव परमात्मा ॥

பரமாத்மா வென்றுமாம். ஆத்மா வெனப்படும்தேகாதிகளுக்கு மேலானதா யிருத்தலால் பிரஹ்மமே பரமாத்மா." என்னும் நிராலம்போபநிஷத்தும் பிரஹ்மத்தினையே ஆத்மா வென்று கூறுதல் காண்க.

*உ. சுமங்கிலி என்னும்சொல் அமங்கிலியாகிய ஸ்திரீயை நிஷேதித்து, சுவாசினி(நல்வாசமுள்ள)ஸ்திரீயை நேரே அறிவிப்பதா யிருத்தல்போல, "சத்து" முதலிய விதேயவிசேஷணங்கள் "அசத்து" முத

கசக. வினா:—ஆத்மாவின் விதேயவிசேஷணங்கள் எவை ?

விடை:—க. சத்து, உ. சித்து, ங. ஆநந்தம், ச. பிரஹ்மம், ஞ. சுயம்பிரகாசம், சு. கூடஸ்தர், எ. சாக்ஷி, அ. திருஷ்டா, கூ. உபதிருஷ்டா, கo. ஏகம் என்னும் பிறவைமுதலியன.

கசஉ. வினா :—ஆத்மா எப்படிச் சத்தாம் ?

லிய பிரபஞ்சத்தின் விசேஷணங்களை நிஷேதித்து, சத்துமுதலியவடிவினதாகிய பிரஹ்மத்தை நேரே அறிவிப்பனவா யிருக்கின்றன. ஆகையால் "**விதேய**" மென்னப்படுகின்றன.

*ங. அவிதவை என்னும் சொல் விதவையாகிய ஸ்திரீயை நிஷேதித்து, அர்த்தத்திலல் அவளுக்கு விலக்ஷணமாகிய சுவாசினி ஸ்திரீயை அறிவிப்பதா யிருத்தல்போல, அநந்தமுதலிய நிஷேத்தியவிசேஷணங்கள் அந்தமுதலிய பிரபஞ்சத்தின் தர்மங்களை நிஷேதித்து, அர்த்தத்திலல் அவற்றிற்குவிலக்ஷணமாகிய பிரஹ்மத்தை அறிவிப்பனவா யிருக்கின்றன ஆகையால் "**நிஷேத்தியை**" மெனப்படுகின்றன.

விடை :-க. *ச. ஞானத்தினாலேனும் மற்றொன்றினாலேனும் எதனது நிவிருத்தி யுண்டாகிறதில்லையோ, அது சத்து.

---

*ச. "सदितिश्रौतप्रीतिलक्ष्यं सत्यं । असदित्यवाच्यं सत्यं । त्रिकालाबाध्यं सत्यं । त्रिकालानुस्यूतं सत्यं । यदस्ति तत्सत्यं । एकमेवाद्वितीयं सत्यं । सजातिविजातिभेदरहितं सत्यं । सर्वकल्पनाधिष्ठानं सत्यम् ॥

சத்து அதாவது இருப்பது என்று கேட்கப்படும்உணர்ச்சிக்குலக்ஷியமாயுள்ளது சத்தியமாம். அல்லது அசத்து என்றுசொல்லக்கூடாததுசத்தியமாம். அல்லது மூன்றுகாலத்திலும் பாதிக்கப்படாதது அதாவது பொய் என்று நிச்சயிக்கப்படாதது சத்தியமாம். அல்லது மூன்றுகாலத்தும் கலந்திருப்பது அதாவது வியாபித்திருப்பது சத்தியமாம். அல்லது எது இருக்கிறதோ அது சத்தியமாம். அல்லது ஒரே அத்விதீயமாயுள்ளது சத்தியமாம். அல்லது சஜாதிவிஜாதிபேதமின்றியது சத்தியமாம். அல்லது சகல கற்பனைக்கும் அதிஷ்டானம் சத்தியமாம்." என்பதும்,

"सदेव तत्र ब्रह्म ॥

சத்தே அங்குப் பிரஹ்மமாம்." என்பதும்,

"ब्रह्मैवात्मा ज्ञेयः

ஆத்மா ஞானத்திலும் மற்றெதலும் நிவி ருத்தியாகாமையால் சத்தாம்.

கசஙூ. விஞ :—ஆத்மா எப்படிச் சித்தாம் ?

விடை :—உ. *நி. குன்றுத பிரகாசம் சித்து.

பிரஹ்மமே ஆத்மா வென்று அறியத்தக்கதாம்.'' என்பதுமாகிய சர்வசாரோபநிஷத்தும்,

" कालत्रयाबाधितं ब्रह्म सर्वकालाबाधितं ब्रह्म ॥

மூன்றுகாலத்திலும் பாதிக்கப்படாதது பிரஹ்மம். எக்காலத்திலும் பாதிக்கப்படாதது பிரஹ்மம்.'' என்னும் மகாநாராயணோபநிஷத்தும் சத்தின் இலக்கணத்தினையும் பிரஹ்மமாகிய ஆத்மாவே சத்து என்பதனையும் கூறுகின்றன.

*ஙு. " तच्छुभ्रं ज्योतिषां ज्योतिः ॥

அது சுத்தமும் ஜோதிக்கெல்லாம் ஜோதியாயு மு ள்ளது.'' என்னும் முண்டகசுருதியும்,

" स्वप्रकाशं ज्ञानं । सर्वप्रकाशकं ज्ञानं । निरावरणचिन्मात्रं ज्ञानं । अनाद्यनन्तं निरंतरमवृत्तिवृत्ति साक्षिचैतन्यमेव ज्ञानम् ॥

சுவப்பிரகாசம் ஞானமாம். எல்லாவற்றையும் பிரகாசிப்பது ஞானமாம். ஆவரணமின்றிய சின்மாத்தி

ஆத்மா குன்றுத பிரகாசவடிவமா யிருத்தலால் சித்தாம்.

கசச. வினு:—ஈ. ஆத்மா எப்படி ஆநந்தமாம்?

விடை:—*சு. பரம(எல்லாவற்றினுமதிக)ப் பிரீதிக்கு எது விஷயமோ, அஃது ஆநந்தம். ஆத்மாவினிடத்தில் எல்லோருக்கும் பரமப்பிரீதி யிருத்தலால், அஃது ஆநந்தமாம்.

ரம் ஞானமாம். அநாதி அநந்தமாய் நிரந்தரம் விருத்தி யின்றியவிடத்திருக்கும் சாக்ஷிசைதன்னியமே ஞானமாம்." என்னும் சர்வசாரோபநிஷத்தும் ஆத்மாவின் சித்துவடிவத்திற்கு இலக்கணம் கூறுதல் காண்க.

*சு. "अहमेव सुखं नान्यदन्यच्चैवं तत्सुखं। अमदर्थं न हि प्रेयो मदर्थं न स्वतः प्रियं। परप्रेमास्पदतया मानभूवमहँ सदा। भूयासमिति यो दृष्टस्सोहं विष्णुर्सुनीश्वर॥

யானே ஆநந்தம்; பிறிதல்லன்; பிறிதாயின், அது சுகமே யன்று. பிரியம் என்பொருட்டாகாத தன்று; என்பொருட்டு மன்று; தானே பிரியமாம். முனீசுவரே! மேலான பிரியத்திற்கு விஷயமாந்தன்மையால் 'நான் இல்லாதிருக்கலாகாது, எப்போது மிருக்கவேண்டும்' என்று எதுகாணப்படுகின்றதோ அந்த நான்

கசடு. வினை :—ஆத்மா எப்படிப் பிரஹ்மரூபமாம்?

விடை :—சு. (க) *எ. ஆத்மா சச்சிதாநந்த வடிவமென்பது சுருதியுக்தி அநுபவங்களால் சித்திக்கின்றது.

விஷ்ணு." என்னும் **வாகோபநிஷத்து** ஆநந்தத்தினிலக்கணத்தையும் ஆநந்தமே ஆத்மா வென்பதனையும் காட்டியது.

" अंभसामर्णव इव सुखचेतनानामधिष्ठाननित्यशुद्धाखण्डाद्वैतचिदानन्दैकरसमानन्दम् ॥

நீர்களுக்குச் சமுத்திரம்போலச் சுகசேதனங்களுக்கு அதிஷ்டானமான நித்தியசுத்தஅகண்டாத்வை தசிதாநந்தைகரஸம் ஆநந்தமாம்." என்பது **சர்வசாரோபநிஷத்து**.

*எ. " आत्मसंज्ञश्शिवश्शुद्ध एक एवाद्वयस्सदा ।
ब्रह्मरूपतया ब्रह्म केवलं प्रतिभासते ॥

ஆத்மா வென்னும் பெயருள்ள ஒரே அத்வயமான சுத்தசிவம் எப்போதும் பிரஹ்மவடிவத்தன்மையால் கேவலம் பிரஹ்மமாகத் தோற்றுகின்றது." என்னும் **ஆத்மோபநிஷத்து** ஆத்மாபிரஹ்மவடிவ மென்று கூறுகின்றது.

(உ) பிரஹ்மமும் சாஸ்திரங்(உபநிஷத்துக்)களில் சச்சிதானந்தவடிவமெனச் சொல்லப்பட்டிருக்கின்றது.

" महदहंकारपृथिव्यप्तेजोवायुराकाशात्मकत्वेन बृहद्रूपेणांडकोशेन कर्मज्ञानार्थरूपतया भासमानमद्वितीयमखिलोपाधिविनिर्मुक्तं तत्तत्कलसक्त्युपबृंहितमनाद्यन्तं नित्यंशुद्धं शिवं शान्तं निर्गुणमित्यादिवाच्यमनिर्वाच्यं चैतन्यं ब्रह्म ॥

மகத்து அகங்காரம் பிருதிவி அப்பு தேயு வாயு ஆகாயவடிவத்தன்மையாகிய பெருத்தவடிவமான அண்டகோசமாகக் கர்மஞானார்த்தரூபத்தன்மையால் விளங்கும் அத்விதீயமும், சகலவுபாதிகளினின்று விடுபட்டதும், அவ்வெல்லா சக்திகளோடு கூடியதும், ஆதியந்தமில்லாததும், நித்தியம் சுத்தம் சிவம் சாந்தம் நிர்க்குணம் என்னும் இவைமுதலிய வாசகப்பொருளும் வாசகப்பொருளல்லாததுமான சைதன்னியம் பிரஹ்மமாம்." என்னும் நீலகண்டோபநிஷத்தும்,

" सर्वोपाधिविनिर्मुक्तं निर्विशेषचिन्मात्रं सदद्वैतमानन्दममायं ब्रह्म ॥

அதனால் ஆத்மா பிரஹ்மவடிவமாம்.

சகலோபாதிகளினின்று விடுபட்டதும், நிர்விசேஷமும், சின்மாத்திரமும் சத்தும் அத்வைதமும் ஆநந்தமும் மாயையில்லாததுமாயுள்ளது பிரஹ்மம்.''

"ब्रह्मैवात्मा ज्ञेयः ॥

பிரஹ்மமே ஆத்மா வென்றறியத்தக்கதாம்.'' என்னும் சர்வசாரோபநிஷத்தும்,

"यस्माच्च बृहति बृंहयति च सर्वं तस्माद्उच्यते परं ब्रह्मेति ॥

எதனால் பெரிதாகின்றதோ எல்லாவற்றையும் பெரிதாக்குகின்றதோ அதனால் மேலான பிரஹ்ம மென்று சொல்லப்படுகின்றது.'' என்னும் சாண்டில்யோபநிஷத்தும்,

"सच्चिदानन्दस्वप्रकाशं ब्रह्म । देशतः कालतो वस्तुतः परिच्छेदरहितं ब्रह्म । सर्वपरिपूर्णं ब्रह्म ॥

''சச்சிதாநந்தசொப்பிரகாசம் பிரஹ்மம்.'' ''தேசத்தினாலும் காலத்தினாலும் வஸ்துவினாலும் பரிச்சேதமில்லாதது பிரஹ்மம்.'' ''சர்வபரிபூர்ணம் பிரஹ்மம்.'' என்னும் மகாநாராயணோபநிஷத்தும் பிரஹ்மத்தினிலக்கணம் கூறுகின்றன.

அல்லது பிரஹ்ம மென்பது வியாபகத்திற்கா ம். எதற்குத் தேசத்தினுல் அந்த மில்லையோ, அ து **வியாபக** மெனப்படும்.

(க) ஆத்மா பிரஹ்மத்தினும் வேறு யிருக்கு மாயின், தேசத்தினுல் அந்தமுடையதாகும்.

(உ) எதற்குத் தேசத்தினு லந்தம் உண்டாகி றதோ, அதற்குக் காலத்தினுலும் அந்தமுண்டா கு மென்பது நியமம்.

எதற்குத் தேசகாலங்களினுல் அந்த முண்டா கிறதோ, அஃது அநித்திய மெனப்படும். அதனுல் ஆத்மா அநித்தியமாகும். ஆகையால் ஆத்மா பிர ஹ்மத்தினும் வேறன்று.

(க) அன்றியும் பிரஹ்மம் ஆத்மாவினும் வே று யிருக்குமாயின் அஃது அநாத்மாவாகும்.

(உ) அநாத்மாவாகிய கடமுதலியவைகள் ஜட மாகையால், ஆத்மாவினும் வேருகிய பிரஹ்மம் ஜடமாகும்.

இவ்வார்த்தை சுருதிக்கு விரோதமாம்.

ஆகையால் ஆத்மாவிற்கு வேருகப் பிரஹ்மமி ல்லை. அதனுல் ஆத்மா பிரஹ்மவடிவமாம்.

கசசு. விஞ :—ஆத்மா எப்படிச் சுயம்பிரகாசமாம் ?

விடை:—நி. (க) எது தீபத்தைப்போலத் தனது பிரகாசத்தில் ஒன்றையும் அபேக்ஷியாது,

(உ) தான் எல்லாவற்றையும் பிரகாசிக்கிறதாயிருக்கிறதோ, அது சுயம்பிரகாச மெனப்படும்.

இப்படி யிருப்பது ஆத்மாதான். ஆகையால் *அ. ஆத்மா சுயம்பிரகாசமாம்.

அல்லது,

(க) எது எப்போதும் அபரோக்ஷவடிவமாய்,

(உ) எந்த ஞானத்திற்கும் விஷயமாகாதிருக்கின்றதோ,

---

*அ. ஆத்மா சுவயம்பிரகாச மென்பதனை

"स्वयंप्रकाशमात्मानं नैव मां स्पृष्टुमर्हति ।

சுவயம்பிரகாச ஆத்மாவாகிய என்னை ஸ்பரிசித்தற்குரிய தன்று." என்று **வராகோபநிஷத்தும்,**

"स्वयंप्रभस्सर्वगतोऽहमव्ययः ॥

சுவயம்பிரபையும் எல்லாவற்றின்கண்ணுள்ளதுமான நான் அவ்வியயன்." என்று **முக்திகோபநிஷத்தும்,** மற்றுமுள்ள **சிவசார பிருகதாரணியக கடவல்லி** சுருதிகளும் கூறுகின்றன.

அது சுயம்பிரகாச மெனப்படும். ஆத்மா எப்போதும் அபரோக்ஷவடிவமாயும் பிரகாசவடிவமாயு மிருத்தலால், எந்த ஞானத்திற்கும் விஷயமாகாததா யிருக்கின்றது. ஆகையால் அது சுயம் பிரகாசமாம்.

கசஎ. வினு:—ஆத்மா எப்படிக் கூடஸ்தராம்?

விடை :—சூ. கூட மென்பது கொல்லனது சம்மட்டிக்காம். அதைப்போல நிருவிகாரவடிவமாயிருப்பது கூடஸ்த ரெனப்படும்.

கொல்லன் அநேக அடிகளை அடித்தபோதிலும், சம்மட்டி எப்படியோ அப்படியே(நிருவிகாரமா)யிருத்தல்போல, மனமாகிய கொல்லன் வியவகாரமாகிய அநேக அடிகளை அடித்தபோதிலும், ஆத்மா எப்படியோ அப்படியே(நிருவிகாரமா)யிருக்கிறது. ஆகையால் *கூ. ஆத்மா கூடஸ்தராம்.

---

*கூ. "नित्यस्सर्वगतो ह्यात्मा कूटस्थो दोषवर्जितः நித்தியமும் எல்லாவற்றினிருப்பதுமான ஆத்மா தோஷமின்றிய கூடஸ்தமும்." என்னும் அந்நபூர்ணேபநிஷத்தும்,

"ब्रह्मादिपिपीलिकान्तसर्वप्राणिबुद्धिष्वविशिष्टितयोपलभ्यमानस्सर्वप्राणिबुद्धिसाक्ष्यधिष्ठानात्मास्ति भासते च स कूटस्थः ॥

கூடஸ்தரென்று சொல்லுதலால் அசலம் அக்கிரியம்(செயலற்றது)என்பதும் அர்த்தத்தினல் சித்தித்தது.

கசஅ. வினு :—ஆத்மா எப்படிச் சாக்ஷியாம் ?

விடை :— எ. (க) உலகவியவகாரத்தில் [க] உதாசீனமா(இராகத்துவேஷமில்லாததா)ய்ச் [உ] சமீபத்திலிருக்கும் [ங] சேதனன் சாக்ஷி யெனப்படுவன்.

ஆத்மா, [க] தேகாதிகளோடு உதாசீனமாய்ச் [உ] சமீபத்திலிருக்கும் [ங] சேதன(அஜடப்பிரகாச)மா யிருத்தலால் சாக்ஷியாம்.

(உ) அல்லது அந்தக்காரணமாகிய உபாதியையுடைய சேதனம் சாக்ஷி யெனப்படும்.

(ங) அல்லது அந்தக்காரணத்திலும் அந்தக்காரணவிருத்தியிலு மிருக்கும் சேதனமாத்திரம்(கே

பிரஹ்மாமுதல் எறும்புகடையான சகலப்பிராணிகளது புத்தியிலும் விசிஷ்டமின்றியதன்மையாய் அறியப்படுகின்ற சர்வப்பிராணிகளது புத்திக்கும் சாக்ஷியான அதிஷ்டாஞத்மா இருக்கின்றது ; விளங்குகின்றது. அது கூடஸ்தமும்.” என்னும் சர்வசாரோபநிஷத்தும் ஆத்மா கூடஸ்த னென்று அறிவிக்கின்றன.

வலசேதனம்)சாக்ஷி யெனப்படும். ஆத்மா இப்படி யிருக்கின்றது. ஆகையால் அது *கo. சாக்ஷியாம்.

கசசு. வினo:—ஆத்மா திருஷ்டா வென்பது எப்படி ?

விடை:—அ. பார்க்கிறவன் எவனே அவன் திருஷ்டா வெனப்படுவன். ஆத்மா சகல திருசியங்களையும் பார்க்கிறதா யிருத்தலால் *கக. திருஷ்டாவாம்.

கடிo. வினo :—ஆத்மா எப்படி உபதிருஷ்டாவாம் ?

விடை :—கo. (க) யாகசாலையில் யாககாரியங்களைச் செய்யும் இருத்துவிக்குகள் பதினைந்து பெயர்.

---

*கo. "ज्ञातृज्ञानज्ञेयादावाविर्भावतिरोभावज्ञाता स्वयं तदाविर्भावतिरोभावरहितः स्वयंज्योतिश्चेतनस्साक्षी ॥

அறிபவன் அறிவு அறியப்படுபொருள் முதலியவற்றின் உற்பத்திநாசங்களை அறிவதாய்த் தான் அவ்வுற்பத்திநாசங்களின் றியதாய்ச் சுயஞ்சோதியாயுள்ள சேதனம் எதுவோ அது சாக்ஷியாம்." என்னும் சர்வசாரோபநிஷத்து ஆத்மா சாக்ஷியாதலை அறிவிக்கின்றது.

*கக. திருஷ்டா = அறிபவன்.

(உ) பதினொன்றாவது எஜமானன்.

(ஊ) பதினேழாவது எஜமானனுடைய மனைவி.

(ச) பதினெட்டாவது உபதிருஷ்டா (சமீபத்தில் உட்கார்ந்துகொண்டு பார்க்கிறவன்); அவன் ஒரு காரியமும் செய்கிறதில்லை.

அதுபோல,

(க) *கஉ. ஸ்தூலதேகமாகிய யஜ்ஞசாலையில் ஞானேந்திரியம் ஐந்து, கர்மேந்திரியம் ஐந்து, பிராணன் ஐந்து என்னும் இப்பதினைந்தும் இருத்துவிக்குகள்.

(உ) பதினொன்றாவது மனம் எஜமானன்.

(ஊ) பதினேழாவது புத்தி அவன் மனைவி.

(ச) இவையெல்லாம் தத்தம் விஷயங்களைக் கிரகித்தலாகிய போகாகார யாககாரியங்களைச் செய்கின்றன. இவை எல்லாவற்றையும் சமீபத்திலிருந்து பார்த்துக்கொண்டிருக்கும் ஆத்மா பதினேட்டாவது உபதிருஷ்டாவாம்.

---

*கஉ. சரீரமுதலியவற்றை யாகசாலைமுதலியனவாகக் கர்ப்போபநிஷத்தும் பிராணக்கினிஹோத்திரவுபநிஷத்தும் கூறுகின்றன.

கநிக. வினா :—ஆத்மா எப்படி ஏகமாம் ?

விடை :—க0. ஆத்மாவிற்குச் சஜாதீயமாகிய (இனமுள்ள) வேறு ஆத்மா இல்லாமையால் *கங. ஏகமாம்.

இவை முதலியன ஆத்மாவின் விதேயவிசேஷணங்கள்.

கநிஉ. வினா :—ஆத்மாவின் நிஷேத்தியவிசேஷணங்கள் எவை ?

---

*கக. "एकं ब्रह्माहमस्मीति कृतकृत्यो भवेन्मुनिः ॥

ஒன்றுகிய பிரஹ்மம் நானென்று கிருதகிருத்தியனுகின்றன் முனி."

"एकस्सन्भिद्यते भ्रान्त्या मायया न स्वरूपतः ॥

ஆத்மா ஒன்றுயிருந்தும் பிராந்தியினல் பேதப்படுகின்றது. அது மாயையினலாம்; சொரூபமாகப் பேதப்படுகிறதில்லை." என்னும் அத்நபூர்ணோபநிஷத் சுருதிகளும்,

"एकमेवाद्वितीयं ब्रह्म नेह नानास्ति किञ्चन ।

ஒரே அத்விதீயப்பிரஹ்மம் முளது. இங்கு நாநா வென்பது சிறிது மில்லை." என்னும் பிருகதாரணியகமுதலிய அநேகசுருதிகளும் ஆத்மா ஏக மென்பதில் பிரமாணமாம். அவற்றை விரிவஞ்சி விடுத்தனம்.

விடை:–க. அநந்தம், உ. அகண்டம், ங. அசங்கம், ச. அத்துவிதீயம், ஞ. அஜன்மம், சு. நிருவிகாரம், எ. நிராகாரம், அ. அவ்வியக்தம், கூ. அவ்வியயம், க0. அக்ஷரம் என்னு மிவைமுதலியனவாம்.

கஞங. வினு:–ஆத்மா எப்படி அநந்தமாம்?

விடை:–க. (க)ஆத்மா வியாபகமா யிருத்தலால் அதற்குத் தேசத்தினுலும் அந்த மில்லை.

(உ) நித்தியமா யிருத்தலால் காலத்தினுலும் அந்த மில்லை.

(ங) ஆத்மா அதிஷ்டானமா யிருத்தலால் எல்லாவற்றினது சொரூபமாம். அதனல் அதற்கு வஸ்துவினுலும் அந்த மில்லை.

ஆத்மாவிற்குத் தேசகாலவஸ்துக்களால் அந்த (பரிச்சேத) மில்லாமையால் அஃது *கச. அநந்தமாம்.

---

*கச. "उत्पत्तिनाशरहितमनन्तं। षड्भावविकाररहितमनन्तं। सर्वोपाधिविनिर्मुक्तमनन्तं। मृद्विकारेषु मृदिव स्वर्णविकारेषु स्वर्णमिव तंतुविकारेषु तन्तुरिव अव्यक्ता-

கநிசு. வினா :—ஆத்மா எப்படி அகண்டமாம் ?

விடை :—உ. (க) ஆத்மா ஜீவேசுவரர்களின் பேதம், ஜீவர்களின் பரஸ்பரபேதம், ஜீவஜடங்களின் பேதம், ஜட ஜடபேதம், ஜடஈசுவரர்களின் பேதம் என்னும் ஐந்து பேதங்களு மில்லாததா யிருக்கின்றது.

(உ) அல்லது சஜாதீய விஜாதீய சுவகதமென்னும் பேதங்களில்லாததா யிருக்கின்றது.

ஆகையால் அஃது (ஆத்மா) அகண்டமாம்.

दिसृष्टिप्रपञ्चेषु व्याप्य पूर्णमविनाशि चैतन्यमनन्तम् ॥

உற்பத்திகாசமின்றியது அநந்தமாம். ஷட்பாவவிகாரமின்றியது அநந்தமாம். சர்வோபாதிகளினீங்கியது அநந்தமாம். மண்ணின் விகார (காரிய)ங்களில் மண்ணைப்போலவும், பொன்னின் விகாரங்களில் பொன்னைப்போலவும், நூலின் விகாரங்களில் நூலினைப்போலவும் அவ்வியக்தமுதலான சிருஷ்டிப்பிரபஞ்சங்களில் வியாபித்துப் பூர்ணமாய் அவிநாசியாயுள்ள சைதந்நியம் அநந்தமாம்." என்பது. **சர்வசாரோபநிஷத்து.** இவ்வாறே ஆத்மா அகண்டம் அத்துவிதீயமுதலியனவாமென்பதனைப் **பிருகதாரணியகம், முக்திகம், மகாநாராயணம், முத்கலம்,** வராகமுதலிய சுருதிகளில் காண்க.

கருடி. வினா:—ஆத்மா எப்படி அசங்கமாம்?

விடை:—ஙூ. சங்க மென்பது சம்பந்தத்திற்கா ம். அச்சம்பந்தம் (க) சஜாதீயம், (உ) விஜாதீயம், (ங) சுவகதமென மூன்றுவகையாம்.

(க) தன் ஜாதியுடையதோடுள்ள சம்பந்தம் சஜாதீயம்; பிராஹ்மணனுக்கு அங்கியப்பிராஹ் மணனோடுள்ளதுபோல.

(உ) அந்நியஜாதியுடையதோடுள்ள சம்பந்தம் விஜாதீயம்; பிராஹ்மணனுக்குச் சூத்திரனோடு ள்ளதுபோல.

(ங) தன் அவயவ(அங்க)ங்களோடுள்ள சம்ப ந்தம் சுவகதம்; பிராஹ்மணனுக்குத் தனது அங் கமாகிய கைகால் முதலியவற்றோடுள்ளதுபோல.

(க) [க] ஆத்மா(சேதனம்)ஒன்று யிருத்தலால் அதற்கு ஜாதி யில்லை. [உ] ஜீவன், ஈசுவரன், பிர ஹ்மா, விஷ்ணு, சிவன், நான், நீ யென்னும் இவை முதலிய பேதங்கள் உபாதியினாலானவைகளா யி ருத்தலால் மித்தையாம்.

ஆகையால் ஆத்மாவிற்கு எதனோடும் சஜாதீய சம்பந்தம் பொருந்தாது.

அதுபோல,

(உ) ஆத்மா அத்வைதமாயும் சத்தாயு மிருக்கின்றது. அதனினும் வேறாய்த் தோன்றும் மாயையு(அஞ்ஞானமு)ம் அதன் காரியமாகிய ஸ்தூலசூக்ஷமப்பிரபஞ்சமும் அசத்தாம். அசத்தென்பது ஓர் பதார்த்த மன்று. ஆகையால் ஆத்மாவிற்கு எதனேடும் விஜாதீயசம்பந்தம் பொருந்தாது.

(ஊ) ஆத்மா நிரவயவமாம். சச்சிதானந்த முதலியன ஆத்மாவின் அவயவங்க ளன்று. ஆனல் ஒருவடிவமா யிருத்தலால் ஆத்மாவின் சொரூபமாம். அதனல் ஆத்மாவிற்குச் சுவகதசம்பந்தம் பொருந்தாது.

இவ்வாறு *கநி. ஆத்மா சகல சம்பந்தமு மில்லாததால் அசங்கமாம்.

---

*கநி. "असंगोह्यं पुरुषः।

இப்புருஷன் அசங்கன்." என்பது பிருகதாரணிய கோபநிஷத்து

"असंगो ह्ययमात्मा।

இவ்வாத்மா அசங்கன்." என்பது திருஸிம்ஹ உத்தரதாபினியுபநிஷத்து. இதில் மற்றும் அநேகசுருதிகள் பிரமாணமா யிருக்கின்றன.

கஙிசு. வினா:—ஆத்மா எப்படி அத்வைதமாம்?

விடை:—ச. துவைதமாகிய பிரபஞ்சம் சொப்பனம் போலக் கற்பிதமா யிருத்தலால் வாஸ்தவமன்று. ஆகையால் ஆத்மா துவைதமில்லாததாயிருத்தலால் அத்வைதமாம்.

கஙிஎ. வினா:—ஆத்மா எப்படி அஜன்மமா(பிறப்பில்லாததா)ம்?

விடை:—ஙி. ஸ்தூலதேகத்தின் தர்மம் ஜன்மமாம். ஜன்மம் சூக்ஷ்மதேகத்தின் தர்மமே அல்லவென்றால் அஃது எப்படி ஆத்மாவின் தர்மமாகும்.

அன்றியும் ஆத்மாவிற்கு ஜன்மம் ஒப்புவோமாயின் மரணமும் ஒப்பவேண்டிவரும். அதனால் ஆத்மா அநித்திய மென்பது சித்திக்கும். அது பரலோகவாதிகளாகிய ஆஸ்திகர்களுக்கு அநிஷ்டமா(பிரியமில்லாததா)ம். ஏனெனின்,

(க) ஜனனமரணமுடைய வஸ்துவிற்கு ஆதியிலும் அந்தத்திலும் அபாவ முண்டு. அதனால் பூர்வஜன்மத்தில் ஆத்மா வில்லை; அதனது கர்மமும் இல்லை. அப்போது இந்த ஜன்மத்தில் ஆத்மாவிற்குக் கர்மமின்றிப் போக முண்டாகிறது மன்றி,

(உ) மரணத்திற்குப் பிறகு ஆத்மாவில்லாமையால், இந்த ஜன்மத்திற் செய்யப்பட்ட கர்மத்திற்கு அனுபவமின்றி நாசமு முண்டாகும். அதனால் வேதோக்ததர்மங்கள் வியர்த்தமாகும். ஆகையால் ஜன்மம் ஆத்மாவின் தர்மமன்று. அதனால் ஆத்மா அஜன்மமாம். அஜன்ம மென்றதனால் அஜரம் அமர மென்பதும் அர்த்தத்திலை சித்தித்தது.

கநிஅ. வினு:—ஆத்மா எப்படி நிருவிகாரமாம்?

விடை:—கூ. குடத்திற்குப் (க) பிறப்பு, (உ) இருப்பு, (ங) வளர்ச்சி, (ச) பரிணமம், (ஞ) க்ஷயம், (சு) நாசம் என்னும் ஆறு தர்மங்க ளிருக்கின்றன. அவை குடத்திலிருக்கும் குடத்தின் வேறுகிய ஆகாயத்தின் தர்மமன்று.

அதுபோல,

(க) "தேகம் பிறக்கிறது" என்பது பிறப்பு.

(உ) "தேகம் பிறந்திருக்கிறது" என்பது இருப்பு (முன்னில்லை; இப்போதிருக்கிறது எனல்).

(ங) "தேகம் பாலக னயிற்று" என்பது வளர்ச்சி.

(ச) "தேகம் யௌவன மாயிற்று" என்பது பரிணமம்,

(நு) "தேகம் விருத்தமாயிற்று" என்பது கூடியம்.

(சு) "தேகம் மரண மடைந்தது" என்பது நாசம்.

இந்த ஆறு விகாரங்களும் தேகத்தின் தர்மங்களாம்; தேகத்தை அறிவதாய்த் தேகத்திற்கு வேறுயிருக்கும் ஆத்மாவின் தர்மமன்று. இப்படி ஆறுவிகாரங்களு மில்லாததாகிய ஆத்மா நிருவிகாரமாம்.

கநிகூ. விஞ :—ஆத்மா எப்படி நிராகாரமாம்.

விடை :—எ. (க) ஸ்தூலம், (உ) சூக்ஷமம், (ங) நீளம், (ச) குறுகல் என நான்குவிதமான வடிவங்கள் ஜகத்தி லுண்டு.

(க) ஆத்மா இந்திரியத்திற்கும் மனதிற்கும் விஷயமாகாததா யிருத்தலால் சூக்ஷமமாம்; அதனல் ஸ்தூல மன்று.

(உ) ஆத்மா வியாபகமா யிருத்தலால் சூக்ஷ்மம (அணுவ)ன்று.

(ங—ச) ஆத்மா எங்கும் ஒதப்புரோதமா(குறுக்கு நெடுக்கா)யிருத்தலால், நீளமும் குறுகலு மன்று.

ஆகையால் ஆத்மா நிராகாரமாம்.

ககூ0. வினா:—ஆத்மா எப்படி அவ்வியக்தமாகும் ?

விடை:—அ. ஆத்மா, மன இந்திரியாதிகளுக்கு அகோசரமா யிருத்தலால் அஸ்பஷ்டமா (வெளிப்படையில்லாததா)ம். ஆகையால் அஃது அவ்வியக்தமாம்.

ககூக. வினா:—ஆத்மா எப்படி அவ்வியயமாம்?

விடை :—கூ. களஞ்சியத்தில் தானியத்தை எடுத்தலாலும் போடுதலாலும் தானியத்திற்கு வியயம் (குறைவு நிறைவு) உண்டாகின்றது. ஆத்மாவிற்கு அப்படி வியய முண்டாகாமையால் அவ்வியயமாம்.

ககூஉ. வினா:—ஆத்மா எப்படி அக்ஷரமாம் ?

விடை:—க0. ஆத்மா க்ஷர (நாச)மில்லாததா யிருத்தலால் அக்ஷரமாம். இதையே அக்ஷய மென்றும், அமிருத மென்றும், அவினாசி என்றும் கூறுவர். இவைமுதலியன ஆத்மாவின் நிஷேத்திய விசேஷணங்கள்.

ககூங. வினா :—இவ்வாத்மாவின் விசேஷணங்கள் எப்படிப் பரஸ்பரம் அபின்னமாம் ?

விடை:-சச்சிதாநந்தமுதலியன ஆத்மாவிற்குக் குணமா யிருக்குமாயின் பரஸ்பரம் பின்னமாம்.

இவை ஆத்மாவின் குணமாகாமல் சொரூபமா யிருக்கின்றன. ஆகையால் பரஸ்பரம் பின்னமாகா மல் அபின்னமாம்.

(க) ஒரே ஆத்மா நாசரகிதமா யிருத்தலால் சத் தென்றும்,

(உ) ஜடவிலக்ஷணமாகிய பிரகாசவடிவமா யி ருத்தலால் சித் தென்றும்,

(ங) துக்கத்திற்கு விலக்ஷணமாகிய முக்கியப் பிரியத்திற்கு விஷயமா யிருத்தலால் ஆநந்த மென் றும் சொல்லப்படுகின்றது.

இவ்வாறு சகல விசேஷணங்களிலு மறிக.

திருஷ்டாந்தம் :-ஒரே புருஷன் (க) பிதாவின் திருஷ்டியால் புத்திர னென்றும்,

(உ) பாட்டனது திருஷ்டியால் பேர னென்று ம்,

(ங) பிதாவின் சகோதரனது திருஷ்டியால் ச கோதரனது புத்திர னென்றும்,

(ச) மாமனது திருஷ்டியால் மருமக னென்று ம் சொல்லப்படுகிறான்.

ஓரே சன்னியாசி,

(க) பசு ஸ்திரீ கிருகஸ்தன் தண்டமில்லாதவன் என்னு மிவர்களது திருஷ்டியால் மனிதன் புருஷன் துறவி தண்டி என்னும் விதேயவிசேஷணங்களாலும்,

(உ) கடம் பாஷாணம்(கல்) விருக்ஷமுதலியவற்றின் திருஷ்டியால் அகடம் அபாஷாணம் அவிருக்ஷமுதலிய நிஷேத்தியவிசேஷணங்களாலும் சொல்லப்படுகிறன்.

சித்தாந்தம்:—அதுபோல ஓரே ஆத்மா, பிரபஞ்சத்தின் விசேஷணமாகிய அசத்து ஜடம் துக்கம் அந்தம் கண்டம் சங்கமுதலியவற்றின் திருஷ்டியால் சத்து சித்து ஆநந்தம் அநந்தம் அகண்டம் அசங்கமுதலியனவாகச் சொல்லப்படுகின்றது.

இவ்வாறு ஆத்மாவின் விசேஷணங்கள் ஒன்றற்கொன்று பின்னமாகாமல் அபின்னமாகின்றன.

ஸ்ரீ விசாரசந்திரோதயம் ஏழாங்கலை

ஆத்மாவின் விசேஷணவர்ணநம் என்பது

முடிந்தது.

ஸ்ரீ விசாரசந்திரோதயம்.

எட்டாங்கலை.

சச்சிதாநந்தவிசேஷவர்ணநம்.

சச்சிதா நந்த சொரூபமே யானென்ச்
சற்குரு முகத்தான் சதுரா யுணர்க. (க)

ஜாக்கிரஞ் சொப்பநஞ் சுழுத்தி யாதியா
மும்மைக் காலத்து முள்ளவன் யானே. (உ)

மும்மைக் காலத்து மிருத்தலின் யானே
சத்து வடிவன் சகலமு மென்னு
லறியப் படுதலி னறிவு வடிவன்யான். (ங)

உடல்சுதன் முர மொண்பொரு ளாதியிற்
பிரியன் யானே யென்பொருட் டியாவும்
பிரியமா மென்பொருட் டியானே பிரிய
னிதனுற் பிரிய தமனியா னதனுற்
பரமா நந்தன் யுக்கமாம் பிறவே. (ச)

உடற் றசையாதி யொழிந்தவவ் வான்மா
பூரணப் பிரம மென்றே போற்றுக. (ஞ)

கசுச. வினா :–சத் தென்பது யாது ?

விடை :–க. மூன்று காலத்திலும் பாதிக்கப்படாதது சத்து.

கசுடு. வினா :–சித் தென்பது யாது ?

விடை :–உ. மூன்றுகாலத்திலும் எல்லாவற்றையும் அறிவது சித்து.

கசுசு. வினா :–ஆநந்த மென்பது யாது ?

விடை :–ங. மூன்றுகாலத்தினும் பரமப்பிரேமைக்கு விஷயமாவது ஆநந்தம்.

கசுஎ. வினா :–" நான் சத் " தென்றறிவ தெப்படி ?

விடை :–மூன்றுகாலத்திலு மிருத்தலால் நான் சத்தென் றறிக.

கசுஅ. வினா :–மூன்றுகாலத்திலு மிருத்தலால் நான் சத்தென் றறிவ தெப்படி ?

விடை :–க. (க) ஜாக்கிரத்திலும், (உ) சொப்பனத்திலும், (ங) சுழுத்தியிலும் நானிருக்கிறேன். அதுபோல,

உ. (க) காலையிலும், (உ) மத்தியானத்திலும், (ங) சாயங்காலத்திலும் நானிருக்கிறேன்.

அதுபோல,

ங. (க) பகலிலும், (உ) இரவிலும், (ங) பகூதத்திலும் நானிருக்கிறேன். அதுபோல,

ச. (க) மாசத்திலும், (உ) இருதுவிலும், (ங) வருஷத்திலும் நானிருக்கிறேன். அதுபோல,

ஞ. (க) பாலியாவஸ்தையிலும், (உ) யௌவனவஸ்தையிலும், (ங) விருத்தாவஸ்தையிலும் நானிருக்கிறேன். அதுபோல,

ரு. (க) *க. பூர்வதேகத்திலும், (உ) இந்ததேகத்திலும், (ங) வருந்தேகத்திலும் நானிருக்கிறேன். அதுபோல,

எ. (க) யுகத்திலும், (உ) மநுவிலும், (ங) கற்பத்திலும் நானிருக்கிறேன். அதுபோல,

---

*க. இந்தப் பிரகரணத்தில் "இருந்தேன், இருப்பே" னென்று உச்சரிக்கத்தக்க இறந்தகால எதிர்காலங்களும் "இருக்கிறேன்" என்று நிகழ்காலத்தைப் போல உச்சரிக்கப்பட்டிருக்கின்றன. அது பூதமுதலியகாலங்களின் கற்பனையை(மித்தையாத்துவத்தை)ச் சூசிப்பிக்கும்பொருட்டாம். ஆத்மாவிற்குச் சத்துமுதலிய வடிவம் உண்டென்பதில் சுருதிமுதலிய அநேகப் பிரமாணங்களுண்டு. எந்தக்காலத்திலும் அஃது அசத்துமுதலியனவா மென்பதில் பிரமாணமில்லை. ஆகையால் எந்தக் காலத்திலும் ஆத்மா சச்சிதாநந்தவடிவ மெனச் சித்திக்கிற தென் றறிக.

அ. (க) இறந்தகாலத்திலும்,(உ) நிகழ்காலத்திலும், (ங) வருங்காலத்திலும் நானிருக்கிறேன்.

இவ்வாறு மூன்றுகாலத்திலு மிருத்தலால் நான் சத்தென் றறிக.

கசுஙு. வினு:–எனக்கு வேறுகிய நாமரூபவஸ்துக்களோடுகூடிய மூன்றுகாலத்தையும் என்னவென் றறிதல் ?

விடை :–எனக்கு வேறுகிய நாமரூபவஸ்துக்களோடுகூடியமூன்றுகாலமும்அசத்தென் றறிக.

கஎ0. வினு :–சத்தசத்துக்களின் நிச்சயம்எதனு லுண்டாகும் ?

விடை:–சத்தசத்துக்களின் நிச்சயம் அந்துவயவெதிரேகயுக்திகளால் உண்டாகும்.

கஎக. வினு :–சத்தசத்துக்களின் நிச்சயத்தில் அந்துவயவெதிரேகயுக்திகளை அறிவதெப்படி ?

விடை:–க. (அந்) ஜாக்கிரத்திலிருக்கிற நானே சொப்பனத்திலு மிருத்தலால் நான் சத்து.

(வெதி) ஜாக்கிரம் என்னிடத்திலில்லாமையால் இஃது அசத்தாம்.

(அந்) சொப்பனத்திலிருக்கிற நானே சுழுத்தி யிலு மிருத்தலால் நான் சத்தா யிருக்கிறேன்.

(வெதி) சொப்பனம் என்னிடத்தி லில்லை. ஆகையா லிஃது அசத்தாம்.

(அந்) சுழுத்தியி லிருக்கிற நானே காலையிலு மிருக்கிறேன். ஆகையால் நான் சத்தா யிருக்கிறேன்.

(வெதி) சுழுத்தி என்னிடத்தி லில்லை. ஆகையா லிஃது அசத்தாம்.

உ. (அந்) காலையிலிருக்கிற நானே மத்தியான த்திலு மிருக்கிறேன். ஆகையால் நான் சத்தா யிருக்கிறேன்.

(வெதி) காலை என்னிடத்தி லில்லை. ஆகையா லிஃது அசத்தாம்.

(அந்) மத்தியானத்திலிருக்கிற நானே சாயங் காலத்திலு மிருக்கிறேன். ஆகையால் நான் சத்தா யிருக்கிறேன்.

(வெதி) மத்தியானம் என்னிடத்தி லில்லை. ஆகையா லிஃது அசத்தாம்.

(அந்) சாயங்காலத்திலிருக்கிற நானே பகலிலு மிருக்கிறேன். ஆகையால் நான் சத்தா யிருக்கிறேன்.

(வெதி) சாயங்காலம் என்னிடத்தி லில்லை. ஆகையா லிஃது அசத்தாம்.

ங. (அந்) பகலிலிருக்கிற நானே இரவிலு மிருக்கிறேன். ஆகையால் நான் சத்தா யிருக்கிறேன்.

(வெதி) பகல் என்னிடத்தி லில்லை. ஆகையா லிஃது அசத்தாம்.

(அந்) இரவிலிருக்கிற நானே பக்ஷத்திலு மிருக்கிறேன். ஆகையால் நான் சத்தா யிருக்கிறேன்.

(வெதி) இர்வு என்னிடத்தி லில்லை. ஆகையா லிஃது அசத்தாம்.

(அந்) பக்ஷத்திலிருக்கிற நானே மாசத்திலு மிருக்கிறேன். ஆகையால் நான் சத்தா யிருக்கிறேன்.

(வெதி) பக்ஷம் என்னிடத்தி லில்லை. ஆகையா லிஃது அசத்தாம்.

ச. (அந்) மாசத்திலிருக்கிற நானே இருதுவிலு மிருக்கிறேன். ஆகையால் நான் சத்தா யிருக்கிறேன்.

(வெதி) மாசம் என்னிடத்தி லில்லை. ஆகையா லிஃது அசத்தாம்.

(அந்) இருதுவி லிருக்கிற நானே வருஷத்தி லு மிருக்கிறேன். ஆகையால் நான் சத்தா யிருக் கிறேன்.

(வெதி) இருது என்னிடத்தி லில்லை. ஆகை யா லிஃது அசத்தாம்.

(அந்) வருஷத்திலிருக்கிற நானே பாலியாவ ஸ்தையிலு மிருக்கிறேன். ஆகையால் நான் சத் தா யிருக்கிறேன்.

(வெதி) வருஷம் என்னிடத்தி லில்லை. ஆகை யா லிஃது அசத்தாம்.

நி. (அந்) பாலியாவஸ்தையி லிருக்கிற நானே யௌவனுவஸ்தையிலு மிருக்கிறேன். ஆகையால் நான் சத்தா யிருக்கிறேன்.

(வெதி) பாலியாவஸ்தை என்னிடத்திலில்லை. ஆகையா லிஃது அசத்தாம்.

(அந்) யௌவனுவஸ்தையி லிருக்கிற நானே விருத்தாவஸ்தையிலு மிருக்கிறேன். ஆகையால் நான் சத்தா யிருக்கிறேன்.

(வெதி) யௌவனுவஸ்தை என்னிடத்திலில்லை. ஆகையா லிஃது அசத்தாம்.

(அந்) விருத்தாவஸ்தையி லிருக்கிற நானே பூர்வதேகத்திலு மிருக்கிறேன். ஆகையால் நான் சத்தா யிருக்கிறேன்.

(வெதி) விருத்தாவஸ்தை என்னிடத்திலில்லை. ஆகையா லிஃது அசத்தாம்.

சு. (அந்) பூர்வதேகத்திலிருக்கிற நானே இந்தத் தேகத்திலு மிருக்கிறேன். ஆகையால் நான் சத்தா யிருக்கிறேன்.

(வெதி) பூர்வதேகம் என்னிடத்தி லில்லை. ஆகையா லிஃது அசத்தாம்.

(அந்) இந்தத் தேகத்திலிருக்கிற நானே வருந் தேகத்திலு மிருக்கிறேன். ஆகையால் நான் சத்தா யிருக்கிறேன்.

(வெதி) இந்தத் தேகம் என்னிடத்தி லில்லை. ஆகையா லிஃது அசத்தாம்.

(அந்) இனிவரும் தேகத்திலிருக்கிற நானே யுகத்திலு மிருக்கிறேன். ஆகையால் நான் சத்தா யிருக்கிறேன்.

(வெதி) வருந்தேகம் என்னிடத்தி லில்லை. ஆகையா லிஃது அசத்தாம்.

எ. (அந்) யுகத்திலிருக்கிற நானே மதுவிலு மிருக்கிறேன். ஆகையால் நான் **சத்தா** யிருக்கி றேன்.

(வெதி) யுகம் என்னிடத்தி லில்லை. ஆகையா லிஃது அசத்தாம்.

(அந்) மதுவிலிருக்கிற நானே கற்பத்திலு மி ருக்கிறேன். ஆகையால் நான் **சத்தா** யிருக்கிறே ன்.

(வெதி) மது என்னிடத்தி லில்லை. ஆகையா லிஃது அசத்தாம்.

(அந்) கற்பத்திலிருக்கிற நானே பூதகாலத்தி லு மிருக்கிறேன். ஆகையால் நான் **சத்தா** யிருக் கிறேன்.

(வெதி) கற்பம் என்னிடத்தி லில்லை. ஆகையா லிஃது அசத்தாம்.

அ. (அந்) பூதகாலத்திலிருக்கிற நானே வருங் காலத்திலு மிருக்கிறேன். ஆகையால் நான் **சத்தா** யிருக்கிறேன்.

(வெதி) இறந்தகாலம் என்னிடத்தி லில்லை. ஆ கையா லிஃது அசத்தாம்.

(அந்) வருங்காலத்திலிருக்கிற நானே நிகழ்கா லத்திலு மிருக்கிறேன். ஆகையால் நான் **சத்தா** யிருக்கிறேன்.

(வெதி) வருங்காலம் என்னிடத்தி லில்லை. ஆகையா லீஃது அசத்தாம்.

(அங்) நிகழ்காலத்திலிருக்கிற நானே எல்லாக் காலங்களிலு மிருக்கிறேன். ஆகையால் நான் சத்தா யிருக்கிறேன்.

(வெதி) வர்த்தமானகாலம் என்னிடத்தி லில்லை. ஆகையா லீஃது அசத்தாம்.

இவ்வாறு சத்தசத்துக்களின் நிச்சயத்தில் அந்துவய வெதிரேகயுத்திகளை அறிக.

களஉ. வினா :—நான் எப்படிச் சித்தா யிருக்கிறேன் ?

விடை :—க. மூன்றுகாலத்திலும் நானறிந்து கொண்டிருக்கிறேன். ஆகையால் நான் சித்தா யிருக்கிறேன்.

களங. வினா:—மூன்றுகாலத்திலும் நானறிந்து கொண்டிருத்தலால் சித்தாயிருக்கிறேனென் றறிவ தெப்படி ?

விடை :—க.

(க) ஜாக்கிரத்தையும்,

(உ) சொப்பனத்தையும்,

(ங) சுழுத்தியையும் நானறிகிறேன்.

உ. அதுபோல,

(க) காலையையும்,

(உ) மத்தியானத்தையும்,

(ங) சாயங்காலத்தையும் நானறிகிறேன்.

ங. அதுபோல,

(க) பகலையும்,

(உ) இரவையும்,

(ங) பக்ஷத்தையும் நானறிகிறேன்.

ச. அதுபோல,

(க) மாசத்தையும்,

(உ) இருதுவையும்,

(ங) வருஷத்தையும் நானறிகிறேன்.

ஞ. அதுபோல,

(க) பாலியாவஸ்தையையும்,

(உ) யௌவனாவஸ்தையையும்,

(ங) விருத்தாவஸ்தையையும் நானறிகிறேன்.

ரு. அதுபோல,

(க) பூர்வதேகத்தையும்,

(உ) இத்தேகத்தையும்,
(ஊ) வருந்தேகத்தையும் நானறிகிறேன்.

எ. அதுபோல,
(க) யுகத்தையும்,
(உ) மந்வையும்,
(ஊ) கற்பத்தையும் நானறிகிறேன்.

அ. அதுபோல,
(க) இறந்தகாலத்தையும்,
(உ) வருங்காலத்தையும்,
(ஊ) நிகழ்காலத்தையும் நானறிகிறேன்.

இவ்வாறு எல்லாக்காலத்திலும் நானறிந்து கொண்டிருத்தலால், நான் சித்தா யிருக்கிறேனென் றறிக.

களச. வினு:—எனக்கு வேறுகிய நாமரூபவஸ்துக்களோடுகூடிய மூன்றுகாலத்தையும் என்னவென் றறிதல்?

விடை:—எனக்கு வேறுகிய நாமரூபவஸ்துக்களோடுகூடிய மூன்றுகாலமும் ஜடமென் றறிக.

களஞ. வினு:—சித்துஜடங்களின் நிச்சயம் எதனுண்டாகும்?

விடை :—சித்துஜடங்களின் நிச்சயம் அன்வய வெதிரேகயுக்திகளா லுண்டாகும்.

களசு. வினா :—சித்துஜடங்களின் நிச்சயத்தில் அன்வயவெதிரேகயுக்திகளே அறிவ தெப்படி ?

விடை :—(அந்) ஜாக்கிரத்தை அறிந்துகொண் டிருக்கிற நானே சொப்பனத்தையும் அறிந்து கொண்டிருக்கிறேன். ஆகையால் நான் சித்தா யி ருக்கிறேன்.

(வெதி) ஜாக்கிரம் என்னை அறியாது. ஆகை யா லிது ஜடமாம்.

(அந்) சொப்பனத்தை அறிந்துகொண்டிருக் கும் நானே சுழுத்தியையும் அறிந்துகொண்டிரு க்கிறேன். ஆகையால் நான் சித்தா யிருக்கிறேன்.

(வெதி) சொப்பனம் என்னை அறியாது. ஆ கையா லிது ஜடமாம்.

இவைமுதலிய மற்றெல்லாக் கால்ங்களையும் மு ன்போல அறிக. இவ்வாறு சித்துஜடங்களின் நிர் ணயத்தில் அன்வயவெதிரேகயுக்திகளே அறிக.

களள. வினா :—நான் ஆநந்தசொரூபனு யிருக் கிறே னென்பது எப்படி ?

விடை :—மூன்றுகாலத்திலும் பரமப்பிரியனுயி ருத்தலால் நான் ஆநந்தசொரூபனுயிருக்கிறேன்.

களஅ. வினை:—மூன்றுகாலத்திலும் பிரியனை யிருத்தலால் நான் ஆநந்தசொரூபனை யிருக்கிறேனென் றறிவ தெப்படி?

விடை:—க.

(க) ஜாக்கிரத்திலும்,

(உ) சொப்பனத்திலும்,

(கூ) சுழுத்தியிலும் நான் பிரியனை யிருக்கிறேன.

உ. அதுபோல,

(க) காலையிலும்,

(உ) மத்தியானத்திலும்,

(கூ) சாயங்காலத்திலும் நான் பிரியனை யிருக்கிறேன்.

கூ. அதுபோல,

(க) பகலிலும்,

(உ) இரவிலும்,

(கூ) பகூடத்திலும் நான் பிரியனை யிருக்கிறேன்.

ச. அதுபோல,

(க) மாசத்திலும்,

(உ) இருதுவிலும்,

(ங) வருஷத்திலும் நான் பிரியனுயிருக்கி றேன்.

நி. அதுபோல,

(க) பாலியாவஸ்தையிலும்,

(உ) யௌவனவஸ்தையிலும்,

(ங) விருத்தாவஸ்தையிலும் நான் பிரியனுயிருக்கிறேன்.

கூ. அதுபோல,

(க) பூர்வதேகத்திலும்,

(உ) இந்ததேகத்திலும்,

(ங) வருந்தேகத்திலும் நான் பிரியனுயிருக்கிறேன்.

எ. அதுபோல,

(க) யுகத்திலும்,

(உ) மதுவிலும்,

(ங) கற்பத்திலும் நான் பிரியனுயிருக்கி றேன்.

அ. அதுபோல,

(க) இறந்தகாலத்திலும்,

(உ) வருங்காலத்திலும்,

(ஊ) நிகழ்காலத்திலும் நான் பிரியனு யிருக்கிறேன்.

இவ்வாறு மூன்றுகாலத்திலும் பரமப்பிரியனு யிருத்தலால் நான் ஆநந்தசொரூபனு யிருக்கிறேனென் றறிக.

களக. வினு:—என்னினும் வேறுகிய நாமரூபவஸ்துக்களோடுகூடிய மூன்று காலமும் என்னவென் றறிதல் ?

விடை:—என்னினும்வேறுகிய நாமரூபவஸ்துக்களோடுகூடிய மூன்றுகாலமும் துக்கமென் றறிக.

கஅ0. வினு:—ஆநந்ததுக்கங்களின் நிச்சயம் எதனு லுண்டாகும்?

விடை:—ஆநந்ததுக்கங்களின்நிச்சயம் அந்வயவெதிரேகயுக்திகளால் உண்டாகும்.

கஅக. வினு:—ஆநந்ததுக்கங்களின் நிச்சயத்தில் அந்வயவெதிரேகயுக்திகளே அறிவதெப்படி ?

விடை:—(அந்) ஜாக்கிரத்தில் (பரமப்)பிரியனு யிருக்கின்ற நானே சொப்பனத்திலும்பிரியனுயி

ருக்கிறேன். *உ. ஆகையால் நான் ஆநந்தசொரூபன்.

(வெதி) ஜாக்கிரம் எனக்குப் பிரிய மன்று. ஆகையால் இது துக்கமாம். இவைமுதலிய மற்றெல்லாக்காலங்களையும் முன்போல அறிக.

இவ்வாறு ஆநந்ததுக்கங்களின் நிச்சயத்தில் அந்வயவெதிரேகயுக்திகளை அறிக.

கஅஉ. வினு:—நான் பரமப்பிரியனு யிருக்கிறேனென் றறிவ தெப்படி?

---

*உ. எந்தெந்த ஜாக்கிரமுதலிய காலங்கள் ஆத்மாவினிடத்தில் தோற்றுகின்றனவோ, அந்தந்தக்காலங்கள் துக்கவடிவமாயினும்,

(க) அத்தியாசத்தால் அவை ஆத்மாவிற்குச் சிதாபாசன்வாயிலாகப் பிரியமாகத் தோற்றுகின்றன. அப்போது அந்தியகாலங்கள் பிரியமாகத் தோற்றுகிறதில்லை. ஆகையால் எல்லாக்காலங்களிலும் **வியபிசாரபு** (மாறுதலு)டைய பிரியம் இருக்கின்றது, ஆனல் இவைகள் வாஸ்தவமாகத் துக்கவடிவமேயாம். ஆனல்,

(உ) ஆத்மாவி(தன்)னிடத்து **அவ்வியபிசாரப்** (எப்போதும்) **பிரிய** மிருக்கின்றது. ஆகையால் ஆத்மா **ஆநந்தவடிவமாம்.**

விடை:—க. திருஷ்டாந்தம்:—*ஙூ. புத்திரனது மித்திர (சிநேகித)னிடத்திலிருக்கும் பிரியம் புத்திரன்பொருட்டாம்.

உ. புத்திரனிடத்துள்ள பிரியம் அவனது மித்திரன்பொருட்டன்று.

ஆகையால் புத்திரன் அதிகப்பிரியன். அதுபோல, (க) திரவியம் புத்திரன்முதலியவற்றிலுள்ள பிரியம் ஆத்மாவின் பொருட்டாம்.

(உ) ஆத்மாவினிடத்திலுள்ள பிரியம் திரவிய புத்திராதிகளின் பொருட்டன்று.

ஆகையால் ஆத்மா அதிகப்பிரியன். இவ்வாறு நான் பரமப்பிரியனு யிருக்கிறே னென் றறிக.

கஅஙூ. வினு:-பிரியத்தின் ஏற்றத்தாழ்வுகளை அறிவ தெப்படி?

விடை:-க. ஜாக்கிரத்தில் எல்லாவற்றிலும் பிரியமுள்ளது திரவியம். ஏனெனின், தனத்தின்பொருட்டுப் புருஷன் தன் தேசத்தைவிட்டு அன்னிய

---

*ஙூ. இதனைப் பிருகதாரணியகவுபநிஷத்து ஆருவது அத்யாயம் நு-வது பிராஹ்மணம் விரிவாய் எடுத்துக் கூறுவது காண்க.

தேசத்திற்குப் போய், அநேக நீசகர்மங் (தாழ்ந்த வேலை)களைச் செய்கின்றமையால் திரவியம் பிரிய முள்ளது.

உ. திரவியத்தினும் புத்திரன் பிரியன். ஏனெனின், புத்திரன் துர்ச்செய்கையினால் இராஜக்கிரகத்தில் பந்தனத்தை அடைந்தகாலத்து, அவனைத் தனத்தைக் கொடுத்து விடுவிக்கின்றமையால் தனத்தினும் புத்திரன் பிரியன்.

ஊ. புத்திரனினும் சரீரம் பிரியமுள்ளது. ஏனெனின், பஞ்சமுண்டாகுங்காலத்துப் புத்திரனை விற்றுச் சரீரநிருவாகஞ் செய்கின்றமையால் புத்திரனினும் சரீரம் பிரியமுள்ளது.

எ. சரீரத்தினும் இந்திரியம் பிரியமுள்ளது. ஏனெனின், யாரேனும் அடிக்க வருங்காலத்து இந்திரியங்களை மறைத்துக்கொண்டு, "என் சரீரத்திலடி; கண் காது மூக்கு முகங்களில் அடிக்காதே." யென்று சொல்லுகிறான். ஆகையால் சரீரத்தினும் இந்திரியம் பிரியமுள்ளது.

ஏ. இந்திரியத்தினும் பிராணன் பிரியமுள்ளது. ஏனெனின், ஒருவனுக்கு, துர்ச்செய்கை செய்ததினால் "இவன் பிராணனை வாங்குக." என்று இராஜாவின் உத்தரவு உண்டாகுமாயின், அப்

போது அவன் "என் திரவியம் புத்திரன் மனை வி வீடுமுதலியவற்றைக் கொள்ளையிடுங்கள்; என் பிராணனை வாங்காதீர்கள்." என்றுசொல்லுகிறான். அப்படிச் சொல்லியும் பிராணனைவாங்கும்படியாகவே இராஜன் ஆணையிடுவானையின், அப்போது "என் காதுமூக்குக்கைகால்களை அறுத்துவிடுங்கள்; ஆனல் என் பிராணனை வாங்காதீர்கள்." என்று சொல்லுகிறான். ஆகையால் இந்திரியத்தினும் பிராணன் பிரியமுள்ளது.

கூ. பிராணனினும் ஆத்மா பிரியமுள்ளது. ஏனெனின், ஒருவனுக்கு மிகுந்தவியாதியால் வருத்தம் வந்தகாலத்து "என் பிராணன் நீங்குமாயின், நான் சுகமுடையவனகிறேன்." என்றுசொல்லுகிறான். ஆகையால் பிராணனினும் ஆத்மாபிரியமுள்ளது.

இவ்வாறு பிரியத்தின் ஏற்றத்தாழ்வை அறிக.

ஸ்ரீவிசாரசந்திரோதயம் எட்டாங்கலை சச்சிதானந்தவிசேஷவர்ணனம் என்பது முடிந்தது.

ஸ்ரீ விசாரசந்திரோதயம்.

ஒன்பதாங்கலை.

அவாச்சியசித்தாந்தவர்ணநம்.

வாக்கு மநதிற் ககோசரம் பிரமமென்
றுரைத்திடுஞ் சாத்திரங் கருதுவர் பெரியோ
ரிலக்கணை யாதியா லியம்பும் வேதம்
*விருத்தி வியாத்தியா லுணரும் மநமே
சத்தாதி விதேய விசேஷண மவைதா
மசத்தாதி கடம்மின் னறையும் வேறென்
றுபேக்ஷிக சத்திய மாதிய விரோதி
யமிச மகற்றி யறிவிக்கும் பரமார்த்தம். (க)

அநந்த மகண்ட மசங்க மத்துவய
மாதிய நிஷேத்திய மவைபிர பஞ்சமொழித்
தெஞ்சிய வத்துவை யியம்பு மொழியிலதா
யிவ்வகைப் பரமான்மா வான்ம தேவனே
வேத சாத்திர மியாவு மிசைத்திடு
மாதலி னெழித்திடு வாபா சன்றனை [டாய்.
யாமெனும் விருத்தியா னபரோக்ஷ மெய்தி

*விருத்திவியாப்தியின் இலக்கணத்தை கசு-வது கலையில் வியாப்தி-உ. என்பதில் காண்க.

கஅச. வினு:—*க. பிரஹ்மாத்மா வாக்கிற்குவிஷ்ய மாகாதெனின், அது எப்படிச் சச்சிதாநந்த முதலிய விசேஷணங்களாற் சொல்லப்படும்?

விடை:—பிரஹ்மாத்மாவிற்குச் சில *உ. விதேயவிசேஷணங்களாயும், சில *கூ. நிஷேத்தியவிசேஷணங்களாயு மிருக்கின்றன. அவற்றுள்,

க. விதேயவிசேஷணங்களாகிய சத்துமுதலியன பிரபஞ்சத்தை நிஷேதித்து, எஞ்சி நிற்கும் பிரஹ்மத்தை *ச. இலக்ஷணையினுலே நேரே அறிவிக்கின்றன.

---

*க. இங்கே பிரஹ்மாத்மா என்பது பண்புத்தொகை.

*உ. "சத்திருக்கிறது", "சித்திருக்கிறது", என்றிவ்வாறு விதிமுகமாகப் பிரஹ்மத்தை அறிவிக்கும் பதம் **விதேயவிசேஷணமாம்.**

*கூ. "அநந்தம்(அந்தமுடையதன்று)" "அகண்டம்(கண்டமுடையதன்று)" என்றிவ்வாறு நிஷேதமுகத்தால் பிரஹ்மத்தை அறிவிக்கும்பதம் **நிஷேத்திய விசேஷணமாம்.**

*ச. க. (வா)மாயையிலும் பிரபஞ்சத்திலும் ஆபேக்ஷிகசத்தியத்துவமும், பிரஹ்மத்தில் நிரபேக்ஷிக(ஒன்றை முன்னிடாத)சத்தியத்துவமு முண்டு. இரண்டும் சேர்ந்து **'சத்து'** என்னும் பதத்தினுல் வாச்சியமாம்.

உ. நிஷேத்தியவிசேஷணங்களாகிய அநந்தாதி கள் சாகூாத்(நேரே) பிரபஞ்சத்தையே நிஷேதி

(ல) மாயையின் சத்தியத்துவத்தைவிட்டுப் பிர ஹ்மமாத்திரத்தின் சத்தியத்துவம் இலகூஷியமாம்.

உ. (வா) அந்தக்கரணவிருத்திஞானம் சேதனஞா னம் என்னு மிரண்டும் சேர்ந்து **'சித்'** தென்னும் பத த்தித்து வாச்சியமாம்.

(ல) விருத்திஞானத்தை விட்டுச் சேதனமாத் திரமாகிய ஞானம் இலகூஷியமாம்.

ஈ. (வா) விஷயாநந்தம் வாசனாநந்தம் பிரஹ்மாநந் தம் என்னும் மூன்றும் சேர்ந்து **'ஆநந்தம்'** என்னும் பதத்தித்து வாச்சியமாம்.

(ல) இரண்டையும் விட்டுப் பிரஹ்மாநந்தம் மா த்திரம் இலகூஷியமாம்.

ஊ. (வா) மாயையிலும் அதன் காரியமாகிய ஆகாசா திகளிலும் ஆபேகூஷிக வியாபகத்துவமும், பிரஹ்மத்தி ல்(ஆத்மாவில்) நிரபேகூஷிக வியாபகத்துவமு முண்டு. இரண்டும்சேர்ந்து **'பிரஹ்மம்(விபு)'** என்னும் பதத்தி த்து வாச்சியமாம்.

(ல) பிரஹ்மம் மாத்திரம் இலகூஷியமாம்.

ரு.(வா)ஸாபாஸ (ஆபாசஜ்ஞாகூடிய) புத்தியில்ஆ பேகூஷிகசொப்பிரகாசத்தன்மையும், சேதனத்தில்நிர பேகூஷிகசொப்பிரகாச த்தன்மையு முண்டு. இரண்டும்

க்கின்றன. அதற்கு விலக்ஷணமாகிய பிரஹ்மாத்மா அர்த்தத்திலே சித்திக்கின்றது. அதனில்

சேர்த்து **'சுயம்பிராகாசம்'** என்னும் பதத்திற்கு வாச்சியமாம்.

(ல) சேதனம் மாத்திரம் இலக்ஷியமாம்.

சு. (வா) இரஜ்ஜுமுதலியவற்றில் ஆபேக்ஷிகஅவிகாரித்துவமும், சேதனத்தில் நிரபேக்ஷிகஅவிகாரித்துவமும் முண்டு. அவ்விரண்டும் சேர்த்து **'கூடஸ்த'**ரென்னும் பதத்திற்கு வாச்சியமாம்.

(ல) கேவலசேதனம் இலக்ஷியமாம்.

எ. (வா) இலௌகிகசாக்ஷியும் மாயைஅவித்தைகளின் உபஹிதசேதனமும் (பிரஹ்மமும் ஆத்மாவு) மாகிய இரண்டும் சேர்த்து **'சாக்ஷி'** என்னும் பதத்திற்கு வாச்சியமாம்.

(ல) மாயைஅவித்தைகளின் உபஹிதசேதனமாத்திரம் இலக்ஷியமாம்.

அ. (வா) ஸாபாஸ அந்தக்காணவிருத்தியென்னும் திருஷ்டியோடு கூடிய சேதனம் **'திருஷ்டா'** என்னும் பதத்திற்கு வாச்சியமாம்.

(ல) சேதனபாகம் மாத்திரம் இலக்ஷியமாம்.

கூ. (வா) யாகத்தின் உபதிருஷ்டாவும் பிரத்தியகாத்மாவும் ஆகிய இரண்டும் சேர்த்து **'உபதிருஷ்டா'** என்னும் பதத்திற்கு வாச்சியமாம்.

(ல) பிரத்தியகாத்மாமாத்திரம் இலக்ஷியமாம்.

பிரஹ்மாத்மா அவாச்சியமா யிருத்தலால், எந்த விசேஷணத்தினாலும் சொல்லப்படுகிறதில்லை.

கஅநி. வினா:-சத்துமுதலிய விதேயவிசேஷணங்கள் எப்படிப் பிரபஞ்சத்தை நிஷேதித்து மிஞ்சிய பிரஹ்மத்தை அறிவிக்கின்றன?

விடை:-க. சத் தென்பதனால் அசத்து நிஷேதிக்கப்பட, மிஞ்சியிருக்கும் சத்துரூபம் இலக்ஷணையினாலே சித்திக்கின்றது.

உ. சித் தென்பதனால் ஜடம் நிஷேதிக்கப்பட, மிஞ்சியிருக்கும் சித்துரூபம் இலக்ஷணையால் சித்திக்கின்றது.

க௦. (வா) உலகத்திலுள்ள ஏகாங்கியாகியபுருஷனும் சஜாதீயபேதமில்லாத பிரஹ்மமும் 'ஏகம்' என்னும் பதத்தினால் வாச்சியமாம்.

(ல) பிரஹ்மம் மாத்திரம் இலக்ஷியமாம்.

இப்படியே சொல்லப்படாத மற்ற விதேயவிசேஷணங்களிலும் அறிந்துகொள்ளுக.

இவ்வாறு பிரபஞ்சத்தின் 'அசத்து' முதலியவிசேஷணங்களை நிஷேதிக்கும் சத்துமுதலிய பதங்களின் அர்த்தத்திலும் பாகத்தியாகலக்ஷணையின் பிரவிருத்தியிருக்கின்றது,

கூ. ஆநந்தம் என்பதனுல் துக்கம் நிஷேதிக்கப் பட, மிஞ்சியிருக்கும் ஆநந்த(சுக)வடிவம் இலக்ஷ ணையினுல் சித்திக்கின்றது.

ச. பிரஹ்ம மென்பதனுல் பரிச்சின்னம் நிஷே திக்கப்பட, மிஞ்சியிருக்கும் வியாபகம் இலக்ஷ ணையினுல் சித்திக்கின்றது.

ஞ. சுயம்பிரகாச மென்பதனுல் அந்நியப்பிரகா சம் நிஷேதிக்கப்பட, மிஞ்சியிருக்கும் சுயம்பிர காசம் இலக்ஷணையால் சித்திக்கின்றது.

கூ. கூடஸ்தரே(அவிகாரியெ)ன்பதனுல் விகா ரி நிஷேதிக்கப்பட, மிஞ்சியிருக்கும் நிர்விகாரி இ லக்ஷணையினுலே சித்திக்கின்றது.

எ-கூ. சாக்ஷி, திருஷ்டா, *ஞ.உபதிருஷ்டா எ ன்பவற்றுல் சாக்ஷிய திருசிய உபதிருசியங்(சமீ பத்தில் காணப்படும் வஸ்துக்)கள் நிஷேதிக்கப் பட, மிஞ்சியிருக்கும் சாக்ஷி திருஷ்டா உபதிரு ஷ்டா வென்பவை இலக்ஷணையினுலே சித்திக்கி ன்றன.

---

*ஞ. " उपद्रष्टाहम् ।

உபதிருஷ்டா யான்" என்பது பிரஹ்மவித்யோப நிஷத்து.

கo. ஏகம் என்பதனல் நாநா வென்பது நிஷே திக்கப்பட, மிஞ்சிய ஏக மென்பது இலக்ஷணை யினலே சித்திக்கின்றது.

இவ்வாறு மற்ற விதேயவிசேஷணங்களிலும மறிக.

கஅசு. வினு :—அநந்தாதி நிஷேத்தியவிசேஷ ணங்கள் பிரபஞ்சத்தை எப்படி நிஷேதிக்கின்ற ன ?

விடை :— அநந்தம் என்பதனல் தேசகாலவஸ் துக்களாலாகிய பரிச்சேதம் நிஷேதிக்கப்பட, எ ஞ்சிநின்ற அநந்தம் அர்த்தத்தினல் சித்திக்கின் றது.

இவ்வாறு மற்ற நிஷேத்தியவிசேஷணங்களி லு மறிக.

கஅள. வினு:—இவ்விசேஷணங்களுக்கு இவ் வாறு பொருள் செய்வதனு லென்ன பிரயோஜ னம் ?

விடை :— இவ்விசேஷணங்களுக்கு இப்படிப் பொருள் செய்வதன் பிரயோசனம், *சூ. சேதனம்

---

*சூ. சேதனம் மனதிற்கும் வாக்கிற்கும் விஷயமா காமை **மகோபநிஷத்து தைத்திரீயமுதலியவற்றில்** பிரசித்தம்.

மனதிற்கும் வாக்கிற்கும் விஷயமாகா தென்று சொல்லும் சுருதியின் அர்த்தத்திற்கு விரோதமுண்டாகாமையாம். குணம் தொழில் ஜாதி சம்பந்தமுதலிய மனுவாக்குகளின் பிரவிருத்திக்கு ஏதுவாகிய தர்மங்கள் பிரஹ்மத்தில்லை.

ஆனால் பிரஹ்மம் தர்மமில்லாததா யிருத்தலால் நிர்விசேஷமாம். ஆகையால் சுருதியும் அதை மனுவாக்குகளுக்கு விஷயமாகாதெனக் கூறுகின்றது.

அல்லது எது பேசவேண்டியதோ, அது துவைதத்தினு லுண்டாகிறது அத்வைதத்தினுலுண்டாகிறதில்லை. ஆகையால் இந்த விசேஷணங்களுக்கு இப்படி அர்த்தஞ் செய்வதால் சுருதிவிருத்தமாகிய துவைதம் சித்திக்கிறதில்லை; அன்றியும் அத்வைதமும் சுகமாக அறியக்கூடியதாகின்றது.

ஸ்ரீ விசாரசந்திரோதயம் ஒன்பதாங்கலை

அவாச்சியசித்தாந்தவர்ணநம் என்பது

முடிந்தது.

ஸ்ரீ விசாரசந்திரோதயம்.

பத்தாங்கலை.

சாமானியவிசேஷசைதன்னியவர்ணநம்.

சமாநம் விசேடமென் டிரண்டே சேதந
மவற்றுட் சத்தியஞ் சமாநமென் றறிக
விசேடங் கற்பிதம் பிராந்தி வடிவமாஞ்
சம்சா ராசிரய மதுவே யெனக்காண். (க)

நீரா தியவற்றி லிரவியி னெதிர்வடி
வெவ்வண மதிப்பர மான்மப் பதிபிம்பம்
கற்பித விசேஷ மெனக்கா ணியே
விகபர லோக வரத்தும் போக்குங்
கன்ம போகம் புசித்தலு மியாவுஞ்
சித்தினு பாஸன் செய்வன் சுத்தமாஞ்
சமாநந் தன்னைச் சாராவ வைதாஞ்
சமாந மத்தி பாதிப் பிரியமா
யெங்குமாம் பூரணப் பிரமமென் றோர்க. (உ)

நாமம் ரூப மிரண்டுந் தவிர்த்துச்
சச்சிதா நந்தந் தானென்னக் காணை. (ங)

கஅஅ. வினா:—விசேஷசைதன்னிய மென்பது யாது ?

விடை:—அந்தக்கரணத்திலும் அந்தக்கரணவிருத்தியிலு முள்ள சாமானியசைதன்னியமாகிய பிரஹ்மத்தின் பிரதிபிம்பரூபசிதாபாசன் *க.விசேஷசைதன்னியம்.

கஅக. வினா:—சிதாபாசன் லக்ஷணம் யாது ?

விடை:—க. சைதன்னிய(பிரஹ்ம)த்தின் லக்ஷணமில்லாததாய்ச்,

உ. சைதன்னியத்தைப்போலத் தோற்றுவது சிதாபாச னெனப்படும்.

ககo. வினா:—இந்தச் சிதாபாசன் எதனால் விசேஷசைதன்னிய மெனப்படுகின்றது ?

விடை:—அற்பதேசத்திலும் அற்பகாலத்திலு மிருக்கும் வஸ்து*உ. விசேஷமெனப்படும். சிதாபாசன் அந்தக்கரணதேசத்திலும், ஜாக்கிரசொப்

---

*க. இங்கே சொல்லப்பட்டிருக்கின்ற சிதாபாசனு டைய விசேஷசைதன்னியம், ஆறுவது கலையிற் சொல்லப்பட்ட கற்பிதவிசேஷ அம்சத்தி லடங்கும்.

*உ. அதிஷ்டானம் அத்தியஸ்தம் என்னும் பேதத்தால் **விசேஷ மிரண்டுவகையாம்.** அவற்றுள்,

பனகாலங்களிலும் அல்லது அஞ்ஞானகாலத்திலுமிருத்தலால் விசேஷசைதன்னிய மெனப்படுகின்றது.

ககக. வினா :—விசேஷசைதன்னியத்தில் திருஷ்டாந்தம் யாது?

விடை:—திருஷ்டாந்தம்:—

க. சூரியனது பிரகாசம் எங்கும் சமானமாயினும், பிரதிபிம்பம் எங்கும் உண்டாகிறதில்லை. எங்கே ஜலம் அல்லது கண்ணாடியாகிய உபாதி இருக்கின்றதோ, அங்கே பிரதிபிம்பரூபமாக விசேஷம் தோற்றுகின்றது.

உ. அல்லது சூரியனது பிரகாசம் எங்கும் சமானமாயிருக்கினும், துணி பஞ்சு முதலியவற்றை எரிக்கிறதில்லை. எங்கே சூரியகாந்தக்கல்லாகிய உபாதியிருக்கின்றதோ, அங்கே அக்கினிரூபமாக

(க) எது பிராந்திகாலத்தில் தோற்றுகிறதில்லையோ, எது தோற்றுவதால் பிராந்தி நிவர்த்தியாகின்றதோ, அஃது **அதிஷ்டானமாகிய விசேஷமாம்.**

(உ) எது பிராந்திகாலத்தில் தோற்றி, அதிஷ்டானத்தை அறியுங்காலத்தில் தோற்றுகிறதில்லையோ, அஃது **அத்தியஸ்தவிசேஷமாம்.** இதனையே **கற்பித விசேஷ** மென்றும் கூறுவர்.

விசேஷ முண்டாய்த், துணி பஞ்சு முதலியவற்றை எரிக்கின்றது. அவற்றுள்,

க. சாமானியரூபமானது எங்கும் எப்படியோ அப்படி(உள்ளபடி)யே இருத்தலால் யதார்த்தமா(வெகுகாலநிலையுடையதா)ம்.

உ. உபாதியினல் தோற்றும் விசேஷரூபம் வியபிசாரமுடையதா யிருத்தலால் அயதார்த்தமா(அற்பகாலநிலையுடையதா)ம்.

க. அதுபோல அஸ்தி பாதிப் பிரியரூபமாயிருக்கிற சாமானியசைதன்னியம் எங்கும் சமானமாயிருக்கினும், அதனல் பேசுதல் நடத்தல் முதலிய விசேஷவியவகாரங்கள் உண்டாகா.

உ. எங்கே அந்தக்காரணமாகிய உபாதி யிருக்கின்றதோ, அங்கே சிதாபாசரூபமாகவிசேஷசைதன்னிய முண்டாய்ப், பேசுதல், நடத்தல், கருத்திருத்துவபோக்திருத்துவம், பரலோகஇவ்வுலகங்களுக்குப் போகுதல் வருதல் முதலிய விசேஷவியவகார முண்டாகின்றது.

அவற்றுள்,

க. சாமானியசைதன்னியமாகிய பிரஹ்மம் சத்தியம்,

உ. உபாதியினல் தோற்றும் விசேஷசைதன்னியமாகிய சிதாபாசன் மித்தை.

அதுபோலவே,

க. புண்ணியபாபங்களின் கருத்திருத்துவம்,

உ. சுகதுக்கங்களின் போக்திருத்துவம்,

ங. பரலோக இகலோகங்களுக்குப் போகுதல் வருதல்,

ச. ஜனனமரணம்,

ஞ. எண்பத்துநான்குலகூடம் யோனிகளை அடைதல்,

இவைமுதலிய சமுசாரதர்மங்களும், சிதாபாசனுடையனவா யிருத்தலால் மித்தையாம்.

ககூஉ. வினு:—விசேஷசைதன்னியத்தை அறிவதால் நிச்சயிப்பது யாது?

விடை:—க. *ங. விசேஷசைதன்னியமாகிய சிதாபாசனும்,

---

*ங. "विशेषं संपरित्यज्य सन्मात्रं यदलेपकं ।
एकरूपं महारूपं सत्तायास्पदं विदुः ॥

விசேஷத்தினை விட்டுச் சன்மாத்திரமாய் எதுபற்றின்றியதாயும், ஏகரூபமாயும், மகாரூபமாயும், சத்தைக்கிடமாயுமுள்ளதோ அதனை அறிக," என்பது அந்நபூஜ்ஞேபநிஷத்து.

உ. அவனுடைய தர்மமும் நானல்ல; என்னுடையவுமல்ல; ஆனால் இவை என்னிடத்திற் கற்பிதங்களாம்; இவற்றிற் கதிஷ்டான சாமானிய சைதன்னியமாகிய நான்; இவற்றினும் வேறு யிருக்கிறேன் என்று நிச்சயிக்கவேண்டும்.

ககூங. வினா:—சாமானியசைதன்னிய மென்பது யாது?

விடை:-க. ஆகாயத்தைப்போல எங்கும் பரிபூரணமாய்ச்,

உ. சர்வநாமரூபங்களுக்கும் அதிஷ்டானமாய்,

ங. அஸ்தி பாதிப் பிரியரூபமாய்,

ச. நிர்விகாரமாயிருக்கும் பிரஹ்மம்

*ச. சாமானியசைதன்னியம்.

---

*ச. "कालसत्ता कलासत्ता वस्तुसत्तेयमित्यपि ।
विभागकलनां त्यक्त्वा सन्मात्रैकपरो भव ।
सत्तासामान्यमेवैकं भावयन्केवलं विभुः ॥

परिपूर्णपरानन्दी तिष्ठापूरितदिग्भरः ।
सत्तासामान्यपर्यंते यत्तत्कलनयोज्झितम् ।
पदमाद्यमनाद्यन्तं तस्य बीजं न विद्यते ॥

ககூச. வினு :—பிரஹ்மம் எதனால் சாமானிய சைதன்னிய மெனப்படுகின்றது ?

விடை:—அதிகதேசத்திலும் அதிகாலத்திலும் இருக்கும் வஸ்து சாமானிய மெனப்படும்.

பிரஹ்மம் புத்திகற்பிதமாகியசகலதேசத்திலும் சகலகாலத்திலும் வியாபகமா யிருத்தலால், சாமானியசைதன்னிய மெனப்படுகின்றது.

ககூரு. வினு:—சாமானியசைதன்னியத்தை அறிவதில் திருஷ்டாந்தம் யாது ?

விடை:—திருஷ்டாந்தம்:—ஒரு இராஜ்ஜியில் பல புருஷர்களுக்கு, ஒருவனுக்குத் தண்டமாகவும், ஒருவனுக்குச் சர்ப்பமாகவும், ஒருவனுக்குப் பிருதிவியின் இரேகையாகவும், ஒருவனுக்கு ஜலதாரையாகவும் பிராந்தி உண்டாகின்றது. அந்தப் பிராந்தியில் இரண்டபிசங்களிருக்கின்றன.

காலசத்தை கலாசத்தை வஸ்துசத்தை இது என்னும் விபாககற்பனையை விட்டுச் சன்மாத்திர மொன்றன்பர ஞுக. கேவலவிபுவாகியசத்தாசாமானிய மொன்றனையே பாவித்துத் திக்குகளெல்லாம் நிரம்பியவனுய்ப் பரிபூர்ணபரானந்தியாய் நிற்பாயாக. சுத்தா சாமானியபரியந்த முள்ளது எதுவோ அந்தக் கலக்கமீங்கியபதம் ஆதியாம்; ஆதியந்தமில்லாததாம். அதற்குக் காரண மில்லை.” என்னும் அநுபூர்ணகருதி. சுத்தா சாமானியமே மேலான நிலையெனக் காட்டுகின்றது.

க. ஒன்று சாமானியமாகிய இதுவெனும் அமிசம்.

உ. மற்றது சர்ப்பமுதலிய விசேஷ அமிசம். அவற்றுள்,

க. (க) "இது தண்டம்,

(உ) இது சர்ப்பம்,

(ங) இது பிருதிவியின் ஜோகை,

(ச) இது ஜலதாரை."

என்றிவ்வாறு சர்ப்பமுதலிய விசேஷ அமிசங்களில் சாமானியமாகிய இதுவெனும் அமிசம், எங்கும் வியாபகமாயிருக்கிறது. அஃது இரஜ்ஜுவின் சொரூபமாயு மிருக்கிறது. அச்சாமானிய அம்சம்,

(க) பிராந்திகாலத்திலும் தோற்றுகிறது;

(உ) பிராந்திநீங்கியகாலத்திலும் "இஃது இரஜ்ஜு" என்பதாகத் தோற்றுகின்றது.

ஆகையால் சாமானிய இதுவெனும் அம்சம் அவ்வியபிசாரியா (பிறழ்ச்சியில்லாததா) யிருத்தலால் சத்தியமாம்.

உ. பரஸ்பர வியபிசாரியாகிய சர்ப்பமுதலிய விசேஷ அமிசங்கள் கற்பிதமாம்.

சித்தாந்தம்:—

அதுபோலச் சகல பதார்த்தங்களிலும் க. அஸ்தி, உ. பாதி, ங. பிரியம், ச. நாமம், ஞ. ரூபம் என்னும் *ஞ. ஐந்தமிசங்க ளுண்டு.

(க) "குடமிருக்கிறது" என்பது அஸ்தி (சத்து).

(உ) "குடம் விளங்குகிறது" என்பது பாதி (சித்து).

(ங) "குடம் பிரியமாயிருக்கிறது." ஏனெனின், குடம் நீர் முகத்தற்கு (மொள்ளுதற்கு) உபயோகமுள்ளதா யிருத்தலால் பிரிய (ஆநந்த) மாம். பாம்பு சிங்கமுதலியனவும் பெண்பாம்பு பெண்சிங்க முதலியவற்றிற்குப் பிரியமாம்.

(ச) "குடம்" என்னும் மூன்றெழுத்து நாமம்.

(ஞ) "பருத்த உருண்டை வயிறுடைமை" குடத்தின் ரூபம் (வடிவம்). இப்படியே குடமுதலிய சகலபூதங்களிலும் பூதங்களின் காரியங்களிலும் அறிக.

---

*ஞ. "अस्ति भाति प्रियं रूपं नाम चेत्यंशपञ्चकम् ॥

அஸ்தி, பாதி, பிரியம், ரூபம், நாமம் என்னும் ஐந்தமிசங்க ளுண்டு." இது சால்வதிராஹஸ்யோபநிஷத்து.

இவ்வாறு பாகிய(வெளிப்)படுதார்த்தங்களில்ஐந்து அமிசங்கள் காட்டப்பட்டன. அதுபோல,

க. ஆந்தர(உள்)தேகமுதலியவற்றில்,

(க) "நானிருக்கிறேன்" என்பது அஸ்தி.

(உ) "நான் அறிகிறேன்" என்பது பாதி.

(ங) "எனக்கு நானே பிரியமு மிருக்கிறேன்" என்பது பிரியம்.

(ச) தேகம், இந்திரியம், பிராணன், மனம், புத்தி, சித்தம், அகங்காரம், அஞ்ஞானம், இவற்றின் தர்மம் என்பவை நாமம்.

(ஞ) இவற்றிற்கு "உரிய வடிவம்" ரூபம்.

இஃது ஆந்தரபதார்த்தங்களில் ஐந்து அமிசங்களைக் காட்டியதாம்.

உ. இந்தச் சகல நாமரூபங்களையும் விவேதனல்,

(க) "பிருதிவி இருக்கிறது."

(உ) "பிருதிவி விளங்குகிறது."

(ங) "பிருதிவி பிரியமா யிருக்கிறது." ஏனெனின், பிருதிவி இருத்தற்கு இடங்கொடுத்தலால்.

(ச) "பிருதிவி" என்னும் நாம மிருக்கிறது.

(நு) "கந்தகுணத்தோடுகூடிய" ரூபமிருக்கிறது.

ரு. பிருதிவியின் நாமரூபத்தை விவேதனல்,

(க) "ஜலம் இருக்கிறது."

(உ) "ஜலம் விளங்குகிறது."

(ங) "ஜலம் பிரியமா யிருக்கிறது;" ஏனெனின், ஜலம் தாகத்தை நீக்குதலால்.

(ச) "ஜலம்" என்னும் நாம மிருக்கிறது.

(ஞ) "சீதமாகிய பரிசகுணத்தோடுகூடிய" ரூப மிருக்கிறது.

சு. ஜலத்தின் நாமரூபத்தை விவேதனல்,

(க) "அக்கினி இருக்கிறது."

(உ) "அக்கினி விளங்குகிறது."

(ங) "அக்கினி பிரியமா யிருக்கிறது;" ஏனெனின், குளிரையும் இருளையும் போக்குதலால்.

(ச) "அக்கினி" என்னும்பெயர் இருக்கிறது.

(ஞ) "உஷ்ணமாகிய பரிசகுணத்தோடுகூடிய" ரூப மிருக்கிறது.

டு. அக்கினியின் நாமரூபங்களை விவேதனல்,

(க) "வாயு இருக்கிறது."

(உ) "வாயு விளங்குகிறது."

(ங) "வாயுபிரியமாயிருக்கிறது;" ஏனெனின், வாயு வியர்வையை நீக்குதலால்.

(ச) "வாயு" என்னும் நாம மிருக்கிறது.

(ஞ) "உருவமில்லாதபரிசகுணத்தோடுகூடிய" ரூப மிருக்கிறது.

கூ. வாயுவின் நாமரூபங்களை விவேதனல்,

(க) "ஆகாய மிருக்கிறது."

(உ) "ஆகாயம் விளங்குகிறது."

(ங) "ஆகாயம் பிரியமா யிருக்கிறது;" ஏனெனின், ஆகாயம் இருத்தற்கும் திரும்புதற்கும் இடங்கொடுக்கிறது.

(ச) "ஆகாயம்" என்னும் நாம மிருக்கிறது.

(ஞ) "சப்தகுணத்தோடு கூடிய" ரூப மிருக்கிறது.

எ. ஆகாயத்தின் நாமரூபங்களை விவேதனல்,

(க) "பிறகு இன்னது இருக்கிற தென்று எனக்குத்தெரியவில்லை" என்னும் அஞ்

ஞான மிருக்கிறது.

(உ) அந்த "அஞ்ஞானம் விளங்குகிறது;"

(ஊ) "அஞ்ஞானம் பிரியமா யிருக்கிறது;" ஏனெனின், அஞ்ஞானிகளுக்குப் பிரிய மாயிருக்கின்றது. அன்றியும், பிரபஞ்சத் திற்குக் காரணமா யிருத்தலால், ஜீவர்க ளின் நிருவாகத்தைச் செய்கின்றது.

(ச) "அஞ்ஞானம்" என்னும் நாம மிருக்கி றது.

(ரு) "ஆவரணம் விக்ஷேப மென்னும் சக்தி களையுடைய அநாதி அநிர்வசனீயபாவ ரூப (உண்மைவடிவ)" மென்னும் ரூப மிருக்கின்றது.

அ. அஞ்ஞானத்தின் நாமரூபங்களை விவேதனல்,

(க) "ஒன்று மில்லை" எனத்தோற்றுவதாகிய சகல பதார்த்தங்களின் அபாவ மிருக் கின்றது."

(உ) "அபாவம் தோற்றுகிறது."

(ஊ) "அபாவம் சூன்யத்தியானிகளுக்குப் பிரி யமா யிருக்கின்றது."

(ச) இதற்கு "அபாவம்" என்னும் நாம

மிருக்கிறது.

(ரு) "சகல வஸ்துக்களின் அபாவம் (நிஷேத மூகப் பிரதீதிக்கு விஷயம்)" என்னும் ரூப மிருக்கிறது.

கூ. அபாவத்தின் *சூ. நாமரூபங்களே விவேதனுல்,

---

*சூ. "आद्यत्रयं ब्रह्मरूपं जगद्रूपं ततो द्वयं ।
उपक्ष्य नामरूपे द्वे सच्चिदानंदतत्परः ।
समाधिं सर्वदा कुर्याद्धृदयेथवा बहिः ॥

சச்சிதாநந்தமாகிய முதல்மூன்றும் பிரஹ்மத்தின் வடிவம். மற்ற நாமரூபமாகிய இரண்டும் ஜகத்தின்வடிவம். நாமரூப பிரண்டையும் உபேக்ஷித்து, சச்சிதாநந்ததத்பரனுய் இருதயத்திலாவது வெளியிலாவது எப்போதும் சமாதியினைச் செய்யக்கடவன்." என்னும் சாஸ்வதிரஹஸ்யோபநிஷத்தும்,

"यथा नद्यस्स्यन्दमाना समुद्रेस्तंगच्छन्ति नामरूपे विहाय । तथा विद्वान्नामरूपाद्विमुक्तः परात्परं पुरुषमुपैति दिव्यम् ॥

எப்படி ஆறுகள் ஓடுகின்றவைகளாய் நாமரூபமிரண்டையும்விட்டுச் சமுத்திரத்தில்மறைகின்றனவோ,

(க) அபாவத்தன்மையின் சொரூபமான அதிஷ்டானமாகிய சத்வஸ்துவே மிஞ்சி யிருக்கின்றது.

(உ) அது அபாவத்தின் அபாவத்தன்மையைப் பிரகாசித்தலால் சித்தாம்.

(ங) துக்கத்திற்கு வேரு யிருத்தலால் ஆனந்தமாம்.

இவ்வாறு,

க. சர்வநாமரூபங்களிலும் அநுசூதமாயிருக்கும் அவ்வியபிசாரியாகிய நாமரூபங்களுக்கதிஷ்டானப்பிரஹ்மம் *எ. சாமானியசைதன்னியமாம். அது சத்தியமாம்.

அதுபோல வித்துவான் நாமரூபத்தினின்றும் விடுபட்டவனுய் மேலானவற்றிற்கும் மேலாய் விளங்கும் புருஷனுகியபிரஹ்மத்தை அடைகின்றன்." என்னும் **முண்டகசுருதியும்**, நாமரூபமிரண்டனையும் விட்டபோது மிஞ்சுவது பிரஹ்ம மென்பதனே அறிவிக்கின்றன.

*எ. (க) சுழுத்திமூர்ச்சைசமாதிகளே யறிவது **சாமானியசைதன்னியம்.**

(உ) "கடத்தை நானறிகிறேன்" என்பதாகப்பிரமாதா, பிரமாணம், பிரமேய மென்னும் திரிபுடியை அறியும் சாக்ஷி **சாமானியசைதன்னியம்.**

(ங) ஜாக்கிரமுதலிய அவஸ்தைகளின் சந்திகளை அறிவது சாமானியசைதன்னியம்.

(ச) அதுபோலவே விருத்திகளின் சந்திகளை யறிவது சாமானியசைதன்னியம்.

(ஞ) அங்குஷ்டத்தின் அக்கிர(நுனிப்)பாகத்தை யறிவது சாமானியசைதன்னியம்.

(ட) தேசாந்தரத்தில் விருத்தி சென்றிருக்குங் காலத்து, அதன் மத்தியபாகத்தை யறிவது சாமானியசைதன்னியம்.

(எ) சூரியசந்திரவடிவமாக விருத்தி யுண்டாகுங் காலத்து, அதன் மத்தியபாகத்தை யறிவது சாமானியசைதன்னியம்.

(அ) "மேரு எனக்குத் தெரியவில்லை" என அஞ்ஞானவிசிஷ்ட(அறியப்படாத)மேருவை யறிவது சாமானியசைதன்னியம்.

இச்சாமானியசைதன்னியலக்ஷணத்தினை;

"देशाद्देशान्तरप्राप्तौ संविदः मध्यमेव यत्।
निमेषेण चिदाकाश तद्विद्धि मुनिपुङ्गव॥

ஒரு இடத்தினின்றும் மற்றோரிடத்தில் அறிவு சென்றபோது நிமிஷத்தால்எந்தஇடையிருக்கின்றதோ, அதனை முனிபுங்கவ! சிதாகாசமென்றறி." என்னும்

மகோபநிஷத்தின் நான்காம் அத்யாயவசனமும்,

" அர்தாதர்தாந்தரம் சித்தே யாதி மத்யே து யா ஸ்திதிः ।
ஸா த்வஸ்தமனனாகாரா ஸ்வரூபஸ்திதிருச்யதே ॥

ஸம்சாந்தஸர்வஸங்கல்பா யா சிலாவதவஸ்திதிः ।
ஜாக்ரன்னித்ராவினிர்முக்தா ஸா ஸ்வரூபஸ்திதிः பரா ॥

அஹந்தாம்சே க்ஷதே சாந்தே பேதநிஷ்பந்தசித்ததா ।
அஜடா யா ப்ரகாசதி தத்ஸ்வரூபமிதீரிதம் ॥

ஒரு வஸ்துவினின்றும் மற்றொரு வஸ்துவில் சித்தம் செல்லுங்கால், இடையிலுள்ள நிலை எதுவோ, அது மனனவடிவ மொழிந்த **சோநபஸ்திதி** யெனப்படுகின்றது. சர்வசங்கற்பங்களொழிந்ததும், கல்லைப்போன்ற நிலையினதும், ஜாக்ரசுழுத்திகளினின்று விடுபட்டதுமாகிய நிலை எதுவோ, அது மேலான **சோநபஸ்திதியாம்.** அகந்தையம்சம்நசித்தொழிந்தவிடத்து, அசைவொழிந்த சித்தத்தன்மையினதாய் அஜடமாய் எது பிரகாசிக்கின்றதோ, அது **சோநபஸ்திதி** யென்று சொல்லப்படுகின்றது."

" ஸத்தா ஸர்வபதார்தாநாம் நான்யா ஸம்வேதநாததே ।
ஸம்பந்தே த்ருத்ருச்யாநாம் மத்யே த்ருஷ்டிர்ஹி யத்புவः ।

दृष्टृदर्शनदृस्यादि वर्जितं तदिदं परम् ।
देशादेशं गते चित्ते मध्ये यच्चेतसो वपुः ।
अजाड्यसंविन्मननं तन्मयो भव सर्वदा ।
अजाग्रत्स्वप्ननिद्रस्य यत्ते रूपं सनातनम् ।
अचेतनं चाजडं च तन्मयो भव सर्वदा ॥
जडतां वर्जयित्वैकं शिलायां हृदयं हि तत् ।
अमनस्कस्वरूपं यत्तन्मयो भव सर्वदा ॥
चित्तं दूरे परित्यज्य योसि सोसि स्थिरो भव ॥

சகல பதார்த்தங்களின் சத்தையான து சம்வேத
ன(ஞான)த்தை விட வேறன்று. திருஷ்டா திருசியங்
களின் சம்பந்தத்தில் இடையிலுள்ள திருஷ்டியாகிய
எச்சரீரம் திருஷ்டா திருசியங்க ளின்றியதோ, அத்த
ன்மைய இது(சொநுபல்தி)மேலான தாம். ஒரு தே
சத்தினின்றும் வேறொரு தேசத்திற்குச் சித்தம் செல்
லுமிடத்து, இடையிலுள்ள சித்தத்தின் வடிவம் எது
ஜாட்யம் விருத்திமன ளின்றியதா யிருக்கின்றதோ,
அத்தன்மையனுகுக எப்பொழுதும். ஜாக்கிரசொப்ப
னசுழுத்திக ளின்றிய உன்னுடைய எந்த வடிவமான
து பழைமையானதும் சேதனமின்றியதும் ஜடமின்
றியதுமா யிருக்கின்றதோ, அத்தன்மையனுகுக எப்

பொழுதும். சிலையின்(கல்லின்) இதயம் ஒன்றனையே ஜடத்தன்மையினை விட்டு, அந்த அமனஸ்க அதாவது மனமிறந்தவடிவம் எதுவோ, அத்தன்மையனுகுக எப் பொழுதும். சித்தத்தினைத் தூரவிலக்கி எதுவா யிருக்கின்றீயோ, அதுவா யிருக்கின்றாய்; ஸ்திரமாகுக." என்னும் மகோபநிஷத்தின் நூ-வது அத்யாயத்தின் வசனங்களும்,

" आत्मनो जगतश्चांतर्दृष्टदृश्यदशान्तरे।
दर्शनाख्यं स्वयात्मानं सर्वदा भावयन् भव ।
स्वाद्यस्वादकसंत्यक्तं स्वाद्यस्वादकमध्यगम् ।
स्वादनं केवलं ध्यायन् परमात्ममयो भव ।
अवलंब्य निरालंबं मध्ये मध्ये स्थिरो भव ॥

ஆத்மாவிற்கும்(தனக்கும்) ஜகத்திற்கும் இடையில் திருஷ்டாதிருசியதசையி னிடையில் தரிசன மென்னும் ஆத்மாவாகிய தன்னை எப்போதும் பாவிப்பவனுகுக. உருசிக்கப்படுபொருள் உருசிப்பவன் என்பவற்றை விட்ட உருசிக்கப்படுவது உருசிப்பதென்பவற்றினிடையி லிருப்பதான கேவல நல்ல உருசிப்பினைத் தியானித்துப் பரமாத்மமய னுகுக. நிராலம்பத்தினை அவலம்பித்து இடையிடையில் நிலைத்தவனுகுக." என்னும் மகோபநிஷத்தின் சு-வது அத்யாயவசனமும், மற்றும் கடோபநிஷத்து, அந்நபூர்ணோபநிஷத்து முதலிய உபநிஷத்துக்களும் கூறுதல் காண்க.

உ. குடத்தின் நாமரூபம் படத்தில் இல்லை; படத்தின் நாமரூபம் குடத்தில் இல்லை. அதனால் பரஸ்பர*அ. வியபிசாரமுடைய இந்தநாமரூபங்கள் மித்தையாம்.

இது சாமானியசைதன்னியத்தை அறிவதில் திருஷ்டாந்தமாம்.

ககூசு. வினு:—முற்கூறிய சாமானியசைதன்னியமாகிய பிரஹ்மத்திற்கு எப்படி எல்லாவற்றினும் அதிக சூக்ஷமத்தன்மையும் வியாபகத்தன்மையு மிருக்கின்றது?

விடை:—க. யாது யாது காரியமோ, அது அது ஸ்தூலமும் பரிச்சின்னமுமாம்.

உ. யாது யாது காரணமோ, அது அது சூக்ஷ்மமும் வியாபகமுமா (அதிக தேசத்திலுள்ளதுமா)மென்பது நியமம்.

பிரஹ்மம்எல்லாவற்றிற்கும் காரணமா யிருத்தலால், எல்லாவற்றினும் அதிக சூக்ஷ்மமும்

*அ. எந்தப் பதார்த்தம் ஓரிடத்திலிருந்து ஓரிடத்திலில்லா திருக்கின்றதோ, அது வியபிசாரமு(மாகுதலு)டையதாம்.

வியாபகமுமா மென்பது இனிக் காட்டப்படுகின்றது.

க. (க) சமுத்திரஜலத்தினின்றும்கடினமாகிய நுரையும் உப்பு முண்டாகின்றன. இதனால் பிருதிவி ஜலத்தின் காரிய மென்று அறியப்படுகின்றது. ஆகையால் பிருதிவியினும் ஜலம் சூக்ஷமமும் வியாபகமுமாம்.

(உ) அல்லது பிருதிவியின் அவயவங்களாகிய கல் முதலியவற்றை வஸ்திரத்திற்போட்டால் தங்குகின்றன.

(ங) ஜலம் வஸ்திரத்தில் தங்குகிறதில்லை. அன்றியும்,

(ச) பிருதிவியில் எங்கெங்கே வெட்டிப்பார்த்தாலும், அங்கங்கே ஜலம் வெளிப்படுகின்றது.

(ஞ) புராணங்களில் பிருதிவியினும் ஜலம் பத்து மடங்கு வியாபகமெனக் கூறப்பட்டிருக்கின்றது.

இதனாலும் ஜலம் பிருதிவியினும் சூக்ஷமமும் வியாபகமுமாம்.

உ. (க) அதுபோல, அக்கினிமுதலியவற்றின் வெப்பத்தால் சரீரத்தில் வியர்வையும், மழையு முண்டாகின்றன. இதனால் ஜலம் அக்கினியின் காரியமென் றறியப்படுகின்றது. ஆகையால் ஜலத்தினும் அக்கினி சூக்ஷ்மமும் வியாபகமுமாம்.

(உ) அல்லது, ஜலம் வஸ்திரத்தில் தங்குகிறதில்லை; குடத்தில் தங்குகின்றது.

(ங) சூரியன் முதலியவற்றின் பிரகாசம் குடத்திலும் தங்குகிறதில்லை.

(ச) புராணங்களில் ஜலத்தினும் அக்கினி பத்துமடங்கு வியாபகமெனக் கூறப்பட்டிருக்கின்றது.

இதனாலும் அக்கினி ஜலத்தினும் சூக்ஷ்மமும் வியாபகமுமாம்.

ங. (க) அதுபோல, அக்கினியின் உற்பத்தியும் நாசமும் காற்றின் அதீன(வச)மாம். இதனால் தேயு வாயுவின் காரியமென் றறியப்படுகின்றது. ஆகையால் அக்கினியினும் வாயு சூக்ஷ்மமும் வியாபகமுமாம்.

(உ) அல்லது, சூரியன் முதலியவற்றின் பிரகாசம், குடமுதலிய பாத்திரங்களில் தங்கு

கிறதில்லை; நேத்திரத்தினால் அறியப்படுகின்றது. வாயுவோ நேத்திரத்தினால் அறியப்படுகிறதில்லை.

(ங) புராணங்களில் தேயுவினும் வாயு பத்து மடங் கதிகமெனக் கூறப்பட்டிருக்கின்றது.

இதனாலும் வாயு அக்கினியினும் சூக்ஷமமும் வியாபகமுமாம்.

ச. (க) அதுபோல, வாயுவின் உற்பத்தி திதிலயங்கள் ஆகாயத்தி(வெளியி)லேயே உண்டாகின்றன. இதனால் வாயு ஆகாயத்தின் காரியமென அறியப்படுகின்றது. ஆகையால் வாயுவினும் ஆகாயம் சூக்ஷமமும் வியாபகமுமாம்.

இது சத்தியம். இது சத்தியம்; சத்தியம். இது இங்கு சொல்லப்படுகின்றது:-யான் சத்தியமான பரப்பிரஹ்மம். என்னைவிட வேறு கிறிது மில்லை,"

"अहं ब्रह्मेति नियतं मोक्षहेतुर्महात्मनाम् ॥

யான் பிரஹ்மமென்பது மகாத்மாக்களுக்கு நியதமாய் மோக்ஷஹேதுவாம்."

"घटाकाशमठाकाशौ महाकाशे प्रतिष्ठितौ ।
एवं मयि चिदाकाशे जीवेशौ परिकल्पितौ ॥
या च प्रागात्मनो मेया तथान्ते च तिरस्कृता ।
ब्रह्मवादिभिरुद्गीता सा मायेति विवेकतः ॥
मायातत्कार्यविलये नेश्वरत्वं न जीवता ।
ततश्शुद्धचिदेवाहं व्योमवन्निरुपाधिकः ॥

கடாகாசமடாகாசங்கள் மகாகாசத்தில் நிலைத்திருக்கின்றன. இவ்வாறு சிதாகாசமாகிய என்னிடத்து ஜீவேசர் கற்பிக்கப்பட்டிருக்கின்றனர். எது தனக்குமுன் அளக்கப்படுவதாயும் அவ்வாறே முடிவில் விலக்கப்படுவதாயு மிருக்கின்றதோ, அது மாயையென்று பிரஹ்மவாதிகளால் விவேகத்தினால் சொல்லப்படுகின்றது.மாயையும் அதன் காரியமும் ஒடுங்கியபோது ஈசுவரத்துவமு மில்லை, ஜீவத்துவமுமில்லை.அதனால் ஆகாயம்போல் உபாதியின்றிய சுத்தசித்தேயான்." என்னும் இவைமுதலியனவும் **வாகோபதீஷத்து.**

"मयि जीवत्वमीशत्वं कल्पितं वस्तुतो नहि ।
इति यस्तु विजानाति स मुक्तो नात्र संशयः ॥

'என்னிடத்து ஜீவத்துவமும் ஈசத்துவமும் கற்பிதம் ; உண்மையாக இல்லை' என்று எவன் அறிகின்று

ஞை, அவன் முக்தன்; இதிற் சம்சயமில்லை.'' என்ப
து சாஸ்வதிரஹஸ்யோபநிஷத்து.

இவ்விஷயத்தில் பிரஹ்மவித்தியோபநிஷத்து, தேஜோபிந்தூபநிஷத்து, சூண்டிகோபநிஷத்துமுத லியவுபநிஷத்துக்களில் பெரும்பாகமும், சாந்தோக் கியம்ஆருவதுபிரபாடகம், பிருகதாரணியகம் நாவது அத்யாயம் சாவது பிராஹ்மணம், ஐதரேயம், முண் டகம், நாராயணம், அக்ஷிமுதலியனவும் பிரமாண மாதல் காண்க. அவை விஸ்தாரமாயும் ரிபுகீதை, பஞ்சதசிமுதலியவற்றுல் பிரசித்தமாயு மிருத்தலின் இங்கு எழுதப்படவில்லை.

ஸ்ரீவிசாரசந்திரோதயம்

பதிஞேராங்கலை

தத்துவம்பதார்த்தைக்கியநிரூபண மென்பது

முடிந்தது.

ஸ்ரீவிசாரசந்திரோதயம்.

பன்னிரண்டாங்கலை.

ஞானியின் கர்மநிவிருத்திவர்ணநம்.

ஆன்ம வடிவ மறியிற் செவ்விதின்
மூவகைக் கன்ம மூற்று மொழியும். (க)

* அஞ்ஞாநா வரண மடுத்த சஞ்சித
மியாவு ஞாநத் தீயிற் றீயுஞ்
சடசே தநப்பின்ன னன்கே தொலையுங்
திடரா கத்துவேஷ கஷாயங் கரையும். (உ)

தாமரை யிலையைத் தண்ணீர் போல
வாகாமி கர்ம மணுகா தென்க. (ங)

இவ்வுடற் கேதுவாம் பிராரத்த கன்ம
மின்பத் துன்பமாப் புசித்துத் தொலையும். ()

இவ்வகை யானே யொடுங்கும் பிறப்பு
விமலமாந் தன்னுரு விளங்கப் பெறினே. ()

---

* அஞ்ஞானத்தின் ஆவரணசக்தியை ஆசிரயித்திருக்கும் சஞ்சிதகர்மம்.

உகடு. வினா :–கர்ம மென்பது யாது ?

விடை :– மனோவாக்குக்காயங்களின் கிரியை (செய்கை)கர்மமாம்.

உகசு. வினா:–கர்மம் எத்தனைவகையாம் ?

விடை:–க. சஞ்சிதம், உ. பிராரப்தம், ங. ஆகாமியம் என்னும் பேதத்தால் கர்மம் மூன்றுவகையாம்.

உகள. வினா:–க. சஞ்சிதகர்ம மென்பதுயாது?

விடை :–க. அநேக அதீத(பூத)ஜன்மங்களிற் சஞ்சயஞ்செய்ய(சேர்க்க)ப்பட்ட கர்மம் சஞ்சிதமாம்.

உகஅ. வினா:–உ. பிராரத்தகர்ம மென்பதுயாது ?

விடை:–உ. அநேக சஞ்சிதகர்மங்களின் மத்தியில் பரிபக்குவமாகியதும், ஈசுவரஇச்சையினால் இந்தவர்த்தமான தேகத்தின் ஆரம்பத்திற்கு ஏதுவாகியதுமான ஏதேனும் ஓர் சஞ்சித கர்மம் பிராரப்தமாம்.

உகக. வினா :–ங. ஆகாமியகர்ம மென்பதுயாது ?

விடை:—ஈ. ஞானத்திற்கு முன்னுவது பின்னுவது இந்த வர்த்தமான தேகத்தில் மரணபரியந்தம் செய்யப்பட்ட கர்மம் ஆகாமியமாம்.

உஉ0. வினு:—க. ஞானிகளின் கர்மம் எப்படி நிவர்த்தியாகும் ?

விடை:—க. *க. ஞானத்தினுல் அஞ்ஞானத்தின் ஆவரண அமிசம் நிவர்த்தியாகின்றது. ஆவரணம் நிவர்த்தியாகவே, ஆவரணத்தை ஆசிரயித்துள்ள சஞ்சித (முன் அநேக ஜன்மங்களிற் செய்த)கர்மம் நிவர்த்தியா(நாசமா)கின்றது.

உ. *உ. "நான் அகர்த்தாவும் அபோக்தாவும் அசங்கமுமாகிய பிரஹ்மமா யிருக்கிறேன்."

---

*க. "अहं ब्रह्मेति विज्ञानात्कल्पकोटिशतार्जितम् ।
सञ्चितं विलयं यांति प्रबोधात्स्वप्नकर्मवत् ॥

யான் பிரஹ்மம் என்னும் விஞ்ஞானத்தினுல் நூறு கோடி ஜன்மங்களிற் சம்பாதிக்கப்பட்ட சஞ்சிதம் விழிப்பினுல் சொப்பனகர்மம் நாசமாவதுபோல நாசமாகின்றது." என்பது அத்தியாத்மோபநிஷத்து.

*உ. "स्वमसङ्गमुदासीनं परिज्ञाय नभो यथा ।
न श्लिष्यते यतिः किञ्चित्कदाचिद्धाविकर्मभिः ॥

என்னும் நிச்சயபலத்தால், தனது ஆகிரயமாகிய பிரமஜதாதாத்மியம் நாசமாதலாலும், இராகத்து வேஷ மில்லாமையாலும், ஜகத்திலுள்ள தாமரை யிலையைப்போல ஞானியை இந்த ஜன்மத்தில் முன்னும் பின்னும் செய்யப்பட்ட ஆகாமியகர்ம ங்கள் நெருங்கா. ஆனல் ஞானியின் ஆகாமிய(இ ந்த ஜன்மத்தில் செய்யப்பட்ட) சுபாசுபகர்மங்க

न नभो घटयोगेन सुरागन्धेन लिप्यते ।
तथात्मोपाधियोगेन तद्धर्मैर्नैव लिप्यते ॥

தன்னே ஆகாயம்போல அசங்க மாகவும் உதாசீன மாகவும் அறிந்து, யதியானவன் ஆகாமிகர்மங்களால் எப்போதும் சிறிதும் பற்றப்படுகிறதில்லே. எப்படி ஆகாயம் குடசம்பந்தத்தினல் குடத்திருக்கும் கள்ளி னவாசனேயால் பற்றப்படுகிறதில்லேயோ, அதுபோல ஆத்மா உபாதி சம்பந்தத்தினல் அதன்தர்மங்களால் பற்றப்படுகிறதில்லே.'' என்பது ஆத்மபோதோபநிஷத்து.

'' यस्य नेच्छा तथानिच्छा ज्ञस्य कर्मणि तिष्ठतः ।
न तस्य लिप्यते प्रज्ञा पद्मपत्रमिवांबुभिः ॥

கர்மத்தில் நிற்கின்ற எந்த ஞானிக்கு இச்சை யில் லேயோ, அதுபோலவே அநிச்சையு மில்லேயோ, அவ னுடைய பிரஞ்ஞை தாமரையிலேயில் நீர்போலக் கர் மங்களால் பற்றப்படுகிறதில்லே.'' என்பது மகோப நிஷத்து ரு-வது அத்யாயம்,

லோக் கிரமமாகச் சகாமிகளாகிய பக்தர்களும் துவேஷிகளாகிய நிந்தகர்களும் கிரகிக்கின்றார் கள்.

ஈ. அஞ்ஞானத்தின் விகேஷபசக்தியை ஆசிரயித்திருக்கும் ஞானியின் *ஈ. பிராரப்த(முன் ஏதேனுமோர் ஜன்மத்தில் செய்யப்பட்டு, இந்தஜன்மத்தினாரம்பத்திற்கேதுவாயுள்ள) கர்மம் போகத்தால் நிவர்த்தியாகின்றது.

அதனால்ஞானி, சகலகர்மங்களினின்றும் முக்தனாகின்றான். இதனாலேயே கர்மத்தாலாகிய ஜன்மமுதலிய சமுசாரத்தினின்றும் முக்தனாகின்றான். இவ்வாறு ஞானிக்கு கர்மநிவிருத்தி யுண்டாகின்றது.

---

*ஈ. "ज्ञानोदयात्पुरारब्धं कर्म ज्ञानान्न नश्यति ।
अदत्वा स्वफलं लक्ष्यमुद्दिश्योत्सृष्टबाणवत् ॥
व्याघ्रबुध्या विनिर्मुक्तो बाणः पश्चात्तु गोमतौ ।
न तिष्ठति भिनत्त्येव लक्ष्यं वेगेन निर्भरम् ॥
अजरोस्म्यमरोस्मीति य आत्मानं प्रपद्यते ।
तदात्मना तिष्ठतोऽस्य कुतः प्रारब्धकल्पना ॥

प्रारब्धं सिध्यति तदा यदा देहात्मना स्थितिः ।
देहात्मभावो नैवेष्टः प्रारब्धं त्यज्यतामतः ॥

प्रारब्धकल्पनाप्यस्य देहस्य भ्रान्तिरेव हि ।
अध्यस्तस्य कुतस्सत्त्वमसत्त्वस्य कुतो जनिः ॥

अजातस्य कुतो नाशः प्रारब्धमसतः कुतः ।
ज्ञानेनाज्ञानकार्यस्य समूलस्य लयो यदि ॥

तिष्ठत्ययं कथं देह इति शंकावतो जडान् ।
समाधातुं बाह्यदृष्ट्या प्रारब्धं वदति श्रुतिः ।
न तु देहादिसत्यत्वबोधनाय विपश्चिताम् ॥

ஞானோதயத்திற்கு முன் ஆரம்பிக்கப்பட்ட கர்மம் இலக்கியத்தை யுத்தேசித்து (குறியை நோக்கி)விடப்பட்ட பாணம்போல் தனது பயனைத் தராமல் ஞானத்தினால் நசியாது. புலியென்னும் புத்தியினால் விடப்பட்ட பாணமானது பின் பசுவென்று மதிக்கப்பட்டகாலத்து நிற்பதில்லை. தாங்காத இலக்கியத்தை (பசுவை) வேகமாய்ச்சென்று பேதிக்கவே செய்கின்றது. யான் அஜரன் அமரன் என்று எவன் ஆத்மாவை யறிகின்றானோ, அத்தன்மைய வாத்மாவாக நிலைத்து

ள்ள இவனுக்குப் பிராரப்த கற்பனை யேது? எப்போ
து தேகாத்மாவாக நிலை யிருக்கின்றதோ, அப்போது
பிராரப்தம் சித்திக்கின்றது. தேகாத்மத்தன்மை விரு
ம்பப்பட்டதேயன்று. அதனால் பிராரப்தம்விடத்தக்
கதாம். ஆதலால் பிராரப்தகற்பனையும் இத்தேகத்தி
ன்பிராந்தியே யாம். அத்தியஸ்தத்திற்குச் சத்துவ
மேது? சத்துவமின்றியதற்குப் பிறப்பேது? பிறவா
ததற்கு நாசமேது? அசத்திற்குப் பிராரப்தமேது?
ஞானத்தினால் அஞ்ஞானகாரியம் மூலத்தோடு நாச
மாகுங்கால் இத்தத்தேகம் எப்படி யிருக்கு மென்
னும் சங்கையுடைய ஜடர்களைச் சமாதானஞ்செய்ய
வெளிப்பார்வையில் சுருதி பிராரப்தத்தினைக் கூறுகி
ன்றது. அறிஞருக்குத் தேகாதிசத்தியத்தன்மையை
ப் போதிக்கும் பொருட்டன்று." என்பது **அத்தியா
த்மோபநிஷத்து**. இவ்வாறே **நாதபிந்தூபநிஷத்து**
இதனை விரிவாய்க் கூறுவது காண்க.

ஸ்ரீவிசாரசந்திரோதயம்

பன்னிரண்டாங்கலை

ஞானியின் கர்மநிவிருத்திவர்ணநம் என்பது

முடிந்தது.

ஸ்ரீவிசாரசந்திரோதயம்.

பதின்மூன்றுங்கலை.

ஞானசப்தபூமியின் வர்ணனம்.

ஞாந பூமி யோரே ழென்றே
நவின்றனர் வசிட்ட முநிவா ரவற்றுட்
சுபசா தநசம் பத்தியே முதலா
மிரண்டா வதுவே சிரவண திவிசார
நிதித்தியா சனமென் பதுவே மூன்று
மான்மா பரோக்ஷ நான்கா மகந்தை
மமதை யென்பன் வொழித லைந்தா
மாறு வதாகு மனேத்துந் தோற்றுமை
யெவற்றி னு முயர்ந்த துரியமே லாவதே
யெல்லா விருத்தியு மொடுங்கி யிதனிற்
காட சுழுத்தியிற் காண தொன்றையு
மின்பே வடிவா யிருக்குஞ் சிதான்மா.

உஉக். வினு :—எல்லாஞானிகளுக்கும் நிச்சயமொன்று யிருக்க, ஸ்திதி (நிலை) வேறுயிருப்பதென் ?

விடை :—சகல ஞானிகளது ஸ்திதியின் பேதமும் ஞானபூமியின் பேதத்தாலாகின்றது.

உஉஉ. வினு:—அந்த ஞானபூமி எத்தனை வகையாம் ?

விடை:—க. சுபேச்சை, உ. சுவிசாரணை, ங. தநுமானசி, ச. சத்துவாபத்தி, ஞ. அசம்சக்தி, சு. பதார்த்தாபாவினி, எ. துரியம் என்னும் இவ்வேழும் * க. ஞானபூமியாம்.

---

*க. "ज्ञानभूमिस्सुभेच्छाख्या प्रथमा समुदाहृता।
विचारणा द्वितीया तु तृतीया तनुमानसी ॥
सत्त्वापत्तिश्चतुर्थी स्यात्ततोऽसंसक्तिनामिका।
पदार्थभावना षष्ठी सप्तमी तुर्यगा स्मृता ॥

ஞானபூமி:— சுபேச்சை யென்பது முதலாவது எனப்படும். விசாரணை இரண்டாவது. தநுமானஸீ மூன்றுவது. சத்வாபத்திநான்காவது. அசம்சக்தி யென்பது ஐந்தாவது. பதார்த்தாபாவனை ஆறுவது.

உஉஈ. வினு:—சுபேச்சை என்பது யாது?

விடை:—க. பூர்வஜன்மத்திலாவது இந்த ஜன்மத்திலாவது செய்யப்பட்டநிஷ்காமகர்மவுபாசனைகளால் சுத்தியும் ஏகாக்கிரமு மூள்ள சித்தமுடைய புருஷர்களுக்கு விவேகம் வைராக்கியம் ஷட்சம்பத்தி முமுக்ஷுத்துவம் என்னும் நான்கு சாதனங்களு முண்டாய், ஆத்மாவை' அறியவேண்டுமென் றுண்டாகும் தீவிர இச்சை *உ. சுபேச்சை என்னும் ஞானத்தின் முதற்பூமியாம்.

தரியகா ஏழாவது.''என்று மகோபநிஷத்து நு-வது அத்யாயத்திலும், வராகோபநிஷத்து ச-வது அத்யாயத்திலும் சொல்லப்பட்டிருக்கின்றது. மற்றும் இச்சப்தபூமி அந்நபூர்ணோபநிஷத்து, அக்ஷியுபநிஷத்து முதலியவற்றிலும் சொல்லப்பட்டிருக்கின்றது.

*உ. "किं मूढ एवास्मि प्रेक्षेहं शास्त्रसज्जनैः ।
वैराग्यपूर्वमिच्छेति शुभे(खे)च्छेत्युच्यते बुधैः॥

யான் மூடனுகவே யிருக்கிறேனே! சாஸ்திரஸஜ்ஜனர்களால் காண்பேனுக என்று வைராக்கியபூர்வகமாயுண்டாகும் இச்சை அறிஞர்களால் சுபேச்சை(சுகேச்சை) யென்று சொல்லப்படுகின்றது." என்பது வராகோபநிஷத்து ச-வது அத்யாயமும், மகோபநிஷத்து நு-வது அத்யாயமுமாம்.

உஉச. வினா:—சுவிசாரணை என்பது யாது?

விடை:—உ. ஆத்மாவை அறியவேண்டு மென்னும் தீவிர இச்சையால் பிரஹ்மநிஷ்டராகிய குருவை விதிபூர்வகமாகச் சரணமடைந்து, அவர் மூகமாகஜீவப்பிரஹ்மங்களின் ஐக்கியத்தையு ணிவிக்கும் வேதாந்தவாக்கியத்தைச் சிரவணம் செய்து, அந்த அர்த்தம் தன்மனதிற்பதியும்பொ ருட்டு, அநேகயுக்திகளால் மனன(விசார)ம் செய் தல், * ங. சுவிசாரணை என்னும் ஞானத்தின் இர ண்டாம் பூமியாம்.

உஉநி. வினா:—தநுமானசி யென்பது யாது?

"शास्त्रसज्जनसंपर्कवैराग्यरसरूपिणी ।
प्रथमभूमिकैषोक्ता मुमुक्षुत्वप्रदायिनी ॥

சாஸ்திரஸஜ்ஜனச்சேர்க்கை வைராக்கிய மென்ப வற்றில் இரஸவடிவினது முதல் பூமிகை. இது முமு க்ஷுத்துவத்தைத் தருவ தென்று சொல்லப்படுகின் றது." என்பது அந்நபூர்ணோபநிஷத்து.

* ங. இவ்வாறே இந்நூலிற் கூறியபடியே இவ்வி ரண்டாவது முதலிய மற்றப்பூமிகளின் இலக்ஷணங்க ளும் மேற்கண்ட உபநிஷத்துக்களிற்றானே கூறப்ப ட்டிருத்தல் காண்க.

வினே:—ங. சொரூபசாக்ஷாத்கார (அபரோக்ஷாநுபவ)த்தின் பொருட்டுச், சிரவண மனன வாயிலாக நிச்சயிக்கப்பட்ட பிரஹ்மாத்ம வைக்கியமாகிய அர்த்தத்தை இடைவிடாமல் சிந்தித்தலாகிய நிதித்தியாசனத்தால் ஸ்தூல(பகிர்முகமாகிய)மனதிற்குச் சூக்ஷ்மத்தன்மை (அந்தர்முகத்துவம்)உண்டாதல் தநுமானசி என்னும் ஞானத்தின் மூன்றும் பூமியாம்.

உஉசு. வினே:—சத்துவாபத்தி யென்பது யாது?

விடை :—ச. சிரவணமன்னநிதித்தியாசனங்களால்சமூசயவிபரீதங்களில்லாத சொரூபசாக்ஷாத்காரமாகிய நிருவிகற்பஸ்திதி யுண்டாவதனல் தத்துவஞானத்தோடுகூடிய மனவடிவசத்துவ(சுத்தாந்தக்கரண)த்தின் எந்த ஆபத்தி (அடைவு) உண்டாகின்றதோ, அது சத்துவாபத்தி என்னும் ஞானத்தின் நான்காம் பூமியாம்.

உஉள. வினே:—அசம்சத்தி என்பது யாது?

விடை :—ஞ. நிருவிகற்பசமாதியினது அப்பியாசத்தின் பரிபக்குவத்தால் தேகத்தில் எல்லாவிதத்தானும் அகந்தைமமதைகள் கரைந்து, தேக மூதலியவற்றில் எவ்விதத்தானும் ஆசத்தி (பிரி

யம்) உண்டாகா திருத்தல், அசம்சத்தி என்னும் ஞானத்தின் ஐந்தாம் பூமியாம்.

உஉஅ. வினா:–பதார்த்தாபாவினி என்பது யாது?

விடை:–உசு. நிருவிகற்பசமாதியின் மிகுந்த அப்பியாசத்தால் தேகமுதலிய சகலபதார்த்தங்களுக்கும் அதிஷ்டானப்பிரஹ்மரூபமாகத் தோற்றுவதால் எந்த அபாவம்(அப்பிரதீதி) உண்டாகின்றதோ, அது பதார்த்தாபாவினி என்னும் ஞானத்தின் ஆறுவது பூமியாம்.

உஉசு. வினா:–துரிய மென்பது யாது?

விடை:–எ. ஞாதிருஞானஞேயமாகிய திரிபுடி நான்காம் ஐந்தாம் பூமிகளைப்போலப் பாவரூபமாகவும், ஆறும் பூமியைப்போல அபாவரூபமாகவும் எங்கே தோற்றவில்லையோ, அப்படிப்பட்ட தன்னுலும் பிறராலும் எழுதலில்லாத துரியபதத்திலுள்ள மனதின் நிலை *ச. துரியமென்னும் ஞானத்தின் ஏழாவது பூமியாம்.

---

*ச. "एषा जीवन्मुक्तेषु तुर्यावस्तेति विद्यते ।
विदेहमुक्तिविषयं तुर्यातीतमतः परम् ॥

உங0. வினை:—இந்த ஏழுபூமிகளும் எதற்குச் சாதனம் ?

விடை:—க-வது, உ-வது, ங-வது *ஞி. பூமிகள் தத்துவஞானத்திற்குச் சாதனமாம்.

இது (ஏழாவது பூமி) ஜீவன்முக்தரிடத்தத் துரியாவஸ்தை யென்று இருக்கின்றது. இதன் பின் விதேகமுக்திவிஷயமாம் துரியாதீதம்.'' என்பது மகோபநிஷத்து ஙு-வது அத்யாயம்.

*ஞி. '' सप्तभूमिषु जीवन्मुक्ताश्चत्वारः ॥

ஏழுபூமிகளில் ஜீவன் முக்தர் நால்வர்.''

'' भूमित्रयेषु विहरन्मुमुक्षुर्भवति ।
तुरीयभूम्यां विहरन् ब्रह्मविद्भवति ॥
पञ्चमभूम्यां विहरन् ब्रह्मविद्वरो भवति ।
षष्ठभूम्यां विहरन् ब्रह्मविद्वरीयान्भवति ॥
सप्तमभूम्यां विहरन् ब्रह्मविद्वरिष्ठो भवति ॥

மூன்றுபூமிகளிலும் சஞ்சரிப்பவன் முமுக்ஷுவாவன். நான்காவது பூமியில் சரிப்பவன் பிரஹ்மவித்தாவன். ஐந்தாவது பூமியில் சரிப்பவன் பிரஹ்மவித்வரஞ்வன். ஆறுவது பூமியில் சரிப்பவன் பிரஹ்ம

*சு. நான்காவது பூமி தத்துவஞானவடிவமாயிருத்தலால் ஜீவன்முக்திவிதேக்முக்திகளுக்குச் சாதனமாம்.

நி-வது, சு-வது, எ-வது பூமிகள் ஜீவன்முக்தியின் விலக்ஷணந்தத்திற்குச் சாதனமாம்.

வித்வரியானவன். ஏழாவது பூமியில் சரிப்பவன் பிரஹ்மவித்வரிஷ்டனவன்.'' என்பது **வாசோபநீஷத்து** ச-வது அத்யாயம்.

*சு. (க) **கிருதோபாசனன்** (ஞானத்திற்கு முன் உபாசனையைப் பூர்ணமாகச் செய்தவன்.)

(உ) **அகிருதோபாசனன்** (ஞானத்திற்கு முன் உபாசனைசெய்யாதவன்) என்னும் பேதத்தால்

ஞான்காம்பூமியாகிய ஞானத்திற் கதிகாரிகளிரண்டு வகையாரவர். அவர்களுள்,

(க) கிருதோபாசனன் நல்லவைராக்கியாதி சாதனங்களோடு கூடியிருப்பவன். ஞானத்திற்குப் பிறகு சொற்ப அப்பியாசத்தால் சடுதியாக ஐந்தாவது முதலியபூமிகளி லேறுகின்றான்.

(உ) அகிருதோபாசனனிடத்தில் எல்லாச்சாதனங்களும் வெளிப்படையாகத் தோற்றுகிறதில்லை. ஆனால் ஒன்றிரண்டு வெளிப்படையாகவும், மற்றவை மறை

வாகவுமிருக்கும். ஆகையால் அவன் புத்தியுடையவனாயிருந்தால் நான்காம் பூமியாகிய தத்துவஞானத்தை அடைகின்றான். ஆனால் வெகுகால அப்பியாசத்தால் எப்போதாவது ஐந்தாவதாமுதலிய ஏதேனுமோர் பூமியில் ஆரூடனாகின்றான்; சீக்கிரத்தில் லாகிதில்லை.

ஸ்ரீவிசாரசந்திரோதயம்

பதின்மூன்றாங்கலை

ஞானசப்தபூமியின் வர்ணனம் என்பது

முடிந்தது.

ஸ்ரீ விசாரசந்திரோதயம்.

பதினைங்காவது.

ஜீவன்முக்தி விதேகமுக்தி வர்ணநம்.

உண்மை வடிவ முணர்ந்த காலே
பிரம வடிவ பந்த நிவர்த்தியாஞ்
சீவன் முக்தி சமீபித் ததுவா
மூட னுடன் பொருந்திய வொருவன் தனக்குநல்
னின்ப வடிவ தியையுமே வீட்டில். (க)

விடினிவ் வுடலே வித்துவா னன்றே
விதேக முத்தியை மேவுவ னவித்தியா
லேச மழியு மாபாஸ வுலகையும்
விடுவன் சாகர மடைந்த * சரித்தினிற்
சின்மாத் திரமது சேர்ந்து விசேஷ
மொழிந்த சித்தின் சொரூப மடைவ
னில்லை பிறப்ப தெஞ்ஞ தலவற்கே. (உ)

---

*சரித்து = ஆசை.

உகக. வினா:—ஜீவன்முக்தி என்பது யாது?

விடை:—தேகாதிப் பிரபஞ்சம் தோற்றிக் கொண்டிருக்கப் பிரஹ்மசொரூபமாக நிலைத்தல் * க. ஜீவன்முக்தியாம்.

---

*க. ஜீவன்முக்திவிதேகமுக்திலக்ஷணம், ஜீவன்முக்தன்சொரூபம், அவனது ஆசாரம், ஜீவன்முக்தனிடத்துள்ள சித்தம் அகங்காரமுதலியவற்றைக் கூறும் சுருதிகள் வருமாறு:—

" पुरुषस्य कर्तृत्वभोक्तृत्वसुखदुःखादिलक्षणश्चित्तधर्मः क्लेशरूपत्वाद्बन्धो भवति । तन्निरोधनं जीवन्मुक्तिः । उपाधिविनिर्मुक्तघटाकाशवत्प्रारब्धक्षयाद्विदेहमुक्तिः । जीवन्मुक्तिविदेहमुक्तिचोरष्टोत्तरशतोपनिषदः प्रमाणम् ॥

புருஷனுக்குக் கர்த்திருத்வ போக்திருத்வ சுகதுக்காதிலக்ஷண சித்ததர்மம் க்லேசவடிவமாயிருத்தலின் பந்தமாம். அதனை நிரோதித்தல் ஜீவன்முக்தியாம். உபாதி நீங்கிய கடாகாயம்போல் ப்ராரப்தக்ஷயத்தால் விதேகமுக்தியுண்டாகின்றது. ஜீவன்முக்திவிதேக முக்திகளுக்கு நூற்றெட்டு உபநிஷத்துக்கள் பிரமாணமாம்," என்பதும்,

"प्रारब्धक्षयपर्यंतं जीवन्मुक्ता भवन्ति ते ।
ततः कालवशादेव प्रारब्धे तु क्षयंगते ।
त्वैदेहीं मामकीं मुक्तिं यान्ति नास्त्यत्र संशयः ॥

பிராரப்தநாசபரியந்தம் அவர்கள் ஜீவன் முக்தர்களாய் இருக்கின்றனர். அதன்பின் காலவசத்தினாலேயே பிராரப்தம் நசித்தபோது எனது விதேகமுக்தியை அடைவர். இதிற் சம்சயமில்லை." என்பதும் முக்தி கோபநிஷத்து.

"अहं ब्रह्मेति चेद्वेद साक्षात्कारस्स उच्यते ।
यस्मिन्काले स्वमात्मानं योगी जानाति केवलम् ॥
तस्मात्कालात्समारभ्य जीवन्मुक्तो भवत्यसौ ॥

யான் பிரஹ்ம மென்று அறியின், அது சாக்ஷாத்காரமெனப்படும். எந்தக்காலத்தில் கேவலம் தனது ஆத்மாவினை யோகி அறிகின்றானோ, அந்தக்காலமுதற்கொண்டு இவன் ஜீவன்முக்த னாகின்றான்." என்பது வராகோபநிஷத்து.

"न बद्धोस्मि न मुक्तोस्मि ब्रह्मैवास्मि निरामयम् ।
द्वैतभावविमुक्तोस्मि सच्चिदानन्दलक्षणः ।
एवं भावय यत्नेन जीवन्मुक्तो भविष्यसि ॥

'யான் பெத்தனல்லன், முக்தனல்லன், நிராமயமான பிரஹ்மமாயிருக்கின்றேன், துவைதபாவத்தினின்றும்விடுபட்டவனாய்ச் சச்சிதானந்தலக்ஷணனாயிருக்கின்றேன்' என்று இப்படி முயற்சியினால் பாவிக்கிறவன் முக்தனாவான்." என்பது அந்நபூர்ணோபநிஷத்து.

"देहत्रयातिरिक्तोहँ शुद्धचैतन्यमस्म्यहम् ।
ब्रह्माहमिति यस्यांतस्स जीवन्मुक्त उच्यते ॥

தேகமூன்றற்கும் விலக்ஷணன் யான், சுத்த சைதன்னியம் யான், பிரஹ்மம் யான் என்று எவன் உள்ளமிருக்கின்றதோ, அவன் ஜீவன்முக்தனெனப்படுகின்றான்." என்பதும்,

"इदं चैतन्यमेवेति अहं चैतन्यमित्यपि ।
इति निश्चयशून्यो यो वैदेहीमुक्त एव सः ॥

இது சைதன்னியமே என்பதும் நான் சைதன்னியம் என்பதுமான இத்தன்மைய நிச்சயமின்றியவனெவனோ, அவன் விதேகமுக்தனே."

"यस्य प्रपञ्चभानं न ब्रह्माकारमपीह न ।
स्वस्वरूपे स्वयंज्योतिः स्वस्वरूपे स्वयं रतिः ॥
वाचामगोचरानन्दो वाङ्मनोगोचरस्स्वयं ।
अतीतातीतभावो यो वैदेहीमुक्त एव सः ॥

எவனுக்குப் பிரபஞ்சத்தோற்றமில்லையோ, பிரஹ்மாகாரமும் இங்கு இல்லையோ, சுவசொரூபமான சுயஞ்சோதிசுவசொரூபத்தில் சுவயம்ரதியுள்ளவனும், வாக்கிற்கெட்டாத ஆநந்தமுடையவனும், சுவயம் வாக்கு மனதுக்கெட்டிபவனும், அதீதாதீதத்தன்மையுடையவனும் எவனே, அவன் விதேகமுக்தனே.'' என்பது முதலிய சுவது அத்யாயம் முழுவதும் ஜீவாபிந்தூபநிஷத்து.

" जीवन्मुक्ततया स्वस्थो लोके विहर विज्वरः ।
अंतस्संत्यक्तसर्वाशो वीतरागो विवासनः ॥
बहिस्सर्वसमाचारो लोके विहर विज्वरः ।
बहिः कृत्रिमसंरंभो हृदि संरंभवर्जितः ॥
कर्ता बहिरकर्तान्तर्लोके विहर शुद्धधीः ।
त्यक्ताहंकृतिराश्वस्तमतिराकाशशोभनः ॥
अगृहीतकळंकांको लोके विहर शुद्धधीः ।
उदारः पेशलाचारस्सर्वाचारानुवृत्तिमान् ॥
अन्तस्संगपरित्यागी बहिस्संसारवानिव ।
अन्तर्वैराग्यमादाय बहिराशोन्मुखेहितः ॥

உகூ. வினா :—ஜீவன்முக்தியில் பிரபஞ்சம் தோற்றுதற்குக் காரணம் யாது ?

अयं बंधुरयं नेति गणना लघुचेतसाम् ।
उदारचरितानां तु वसुधैव कुटुंबकम् ॥

ஜீவன்முக்தத்தன்மையினால் சுவஸ்தனும், உலகத்தில் ஜ்வரம் நீங்கியவனுய்த் திரி. உள்ளே சகலபற்றும் விட்டவனும், ராகமின் றியவனும், வாசனை யொழிந்தவனும், வெளியில் சகல நல்லொழுக்கமு முள்ளவனுய், ஜ்வரம் நீங்கியவனுய்த் திரி. வெளியில் இருத்திருமமான செய்கையுள்ளவனும், உள்ளத்தில் ஒரு செய்கையுமில்லாதவனும், வெளியிற் கர்த்தாவாய், உள்ளே அகர்த்தாவாய், சுத்தபுத்தியுள்ளவனும் உலகத்தில் திரி. அகங்காரத்தை விட்டவனும், சுவஸ்தமதியுடையவனும், ஆகாசத்தைப்போல் சோபிக்கின்றவனும், களங்கமான குறிகளைக்கொள்ளாதவனும், சுத்தபுத்தியுடையவனும் உலகத்தில் திரி. உதாரனும் பேசலாசாரமுள்ள (மெத்தென்ற நடையுடைய)வனும் சகல ஆசாரங்களையும் தழுவியவனுமாய் உள்ளிற் சங்கத்தை விட்டு, வெளியில் சம்சாரிபோலும், உள்ளே வைராக்கியத்தைக்கொண்டு, வெளியில் ஆசைப்படுபவன்போலும் இருப்பாய். இவன் பந்து இவன் பந்துவல்லன் என்று கணித்தல் அற்பசித்தமுள்ளவருக்காம். உதாரசித்தமுடையவருக்கு உலகமே குடும்பமாம்." என்பது ஜீவன்முக்தாசாரத்தைக் கூறும் மகோபநிஷத்து.

வினை :—ஆவரணம் விக்ஷேப மென்னுமிரண்டும் அவித்தையின் சக்திகளாம். அவற்றுள்,

க. ஆவரணசக்தி ஞானத்தால் நாசமாகின்றது. அதனால் ஞானிக்கு வேறு பிறப்பில்லை. ஆதலால்,

உ. விக்ஷேபசக்தி (அவித்தியாலேசம்) பிராரப்த பலத்தால் வறுத்த விதையைப்போல இருக்கின்றது.

"भ्रष्टबीजोपमा येषां पुनर्जननवर्जिता ।
वासनारसनाहीना जीवन्मुक्ता हि ते स्मृताः ॥
सत्त्वरूपपरिप्राप्तचित्तास्ते ज्ञानपारगाः ।
अचित्ता इति कथ्यन्ते देहान्ते व्योमरूपिणः ॥

எவர்களுக்கு வறுத்தவிதையினைப்போல் மறுபடியும் ஜனித்தலின்றியதான வாசனை யிருக்கின்றதோ, அவர்கள் வாசனைக் கயிறின்றிய ஜீவன்முக்தர்களென்றே கருதப்படுவர். ஞானத்தின் கரைகண்ட அவர்கள் சத்துவவடிவம் பெற்றசித்தமுடையவர்களாவர். தேகாந்தத்தில் ஆகாசவடிவினராகிய அவர்கள் சித்தமில்லாதவர்களென்று சொல்லப்படுகின்றனர்." என்பது அந்தப்பாடலின் பொருள்.

அதனால் ஜீவன்முக்தியில் பிரபஞ்சத்தோற்ற முண்டாகின்றது?

உகூ. வினு:–ஜீவன்முக்தியில் பிரபஞ்சத் தோற்றம் எப்படியுண்டாகின்றது?

விடை :–க. இரஜ்ஜுஞானத்தால் சர்ப்பப்பி ராந்தி நீங்கிய பின்னும்நடுக்கமுதலியவை தோற் றுவதுபோலும்,

உ. கண்ணாடியை அறிந்தவனுக்குப்பிரதி பிம்பம் தோற்றுவதுபோலும்,

ங. மருஸ்தலத்தை யறிந்தவனுக்குக் கானல் ஜலம் தோற்றுவதுபோலும்,

தத்துவஞானிக்கு ஜீவன்முக்திதசையில் பாதி க்கப்பட்ட பிரபஞ்சத்தின் தோற்ற முண்டாகி ன்றது.

உஙச. வினு:–பாதிக்கப்பட்ட பிரபஞ்சத்தின் தோற்றத்தில் வேறு திருஷ்டாந்தம் யாது ?

விடை :–திருஷ்டாந்தம் :–மகாபாரத யுத்தத் தில் துரோணாசாரியரது மரணத்திற்குப்பின் அசுவத்தாமாவோடு யுத்த முண்டாயிற்று. அன் றினம் சத்தியசங்கற்பராகிய ஸ்ரீ கிருஷ்ணபர

மாத்மா, "இன்று யுத்தம் முடிந்து வீட்டுக்குத் திரும்பும் வரையிலும் இந்த இரதமும் குதிரைகளும் அப்படியே இருக்கக்கடவன." வென்று சங்கற்பித்துக்கொண்டு, யுத்தபூமியில் வந்தார். அங்கே அசுவத்தாமா பிரஹ்மாஸ்திரம்(அக்கினியஸ்திரம்)போட்டார். அதனல் அக்கணத்திலேயே அர்ஜுனனது இரதமும் குதிரைகளும் பஸ்மமாகியும், கிருஷ்ணபரமாத்மாவாகிய சாரதியின் சங்கற்பபலத்தால் அப்படியே யிருந்து, வீட்டிற்கு வந்தவுடனே சாம்பர்க்குஷிய லாய்விட்டன.

சித்தாந்தம் :—

அதுபோல,

க. ஸ்தூலதேகம் இரதம்.

உ. அதற்குப் புண்ணியபாவங்க ளிரண்டு சக்கரங்கள்.

ங. முக்குணம் கோடி.

சு. பஞ்சப்பிராணன் கயிறு.

ஞ. தசேந்திரியங்கள் குதிரைகள்.

ரு. சுபாசுபமாகிய சப்தமுதலிய பஞ்ச விஷயங்கள் மார்க்கம்.

எ. மனம் கடிவாளம்.

அ. புத்தி சாரதி(கிருஷ்ணன்).

கூ. பிராரப்தகர்மம் அவரது சங்கற்பம்.

கo. அகங்காரம் உட்காரு மிடம்.

கக. ஆத்மா இரதிக(அர்ஜுனன்)ன்.

கஉ. அவனது வைராக்கியாதி சாதனங்கள் பாணங்கள்.

அவன் இரதத்தில் ஆரூடனாய்ச் சற்சங்கமாகிய இரணபூமியிற் சென்றான். அவனைக் குருவாகிய அசுவத்தாமா, மகாவாக்கிய உபதேசமாகிய பிரஹ்மாஸ்திரத்தை ஏவித்தார். அதனால் ஞானமாகிய அக்கினி யுதயமாக, அந்தக்ஷணத்திலேயே தேகாதிப்பிரபஞ்சமாகிய இரதமுதலிய யாவும் பாதமாயின. என்றாலும் ஸ்ரீ கிருஷ்ணனெனிய சாரதி ஸ்தானத்திலுள்ள புத்தியின் பிராரப்தகர்மமாகிய சங்கற்பபலத்தால் தேகமுதலியவை *உ. நாச

---

*உ. எதனது நாச மூண்டாகின்றதோ, அது நாசத்தின் பிரதியோகியாம்.

(க) நாசத்தால் அந்தப்பிரதியோகியின் தோற்ற முண்டாகிறது.

(உ) பாதத்தில் பிரதியோகியின் தோற்ற முண்டாகிறதில்லை; ஆனால் மூன்றுகால அபாவம் (மூன்றுகாலத்திலு மில்லாமை) தோற்றுகிறது.

இது நாசத்திற்கும் பாதத்திற்கு முள்ள பேதம்.

மாகாமல் பிறகும் தோற்றிக்கொண்டிருக்கின்றன. இதனையே * ஈ. பாதாநுவிருத்தி என்பர்.

இவ்வாறு இது பாதிதமாகிய பிரபஞ்சத்தோற்றத்தில் திருஷ்டாந்தமாம்.

உஈடு. வினா:—விதேகமுக்தி யென்பது யாது?

விடை:—க. பிரபஞ்சப்பிரதீதி யில்லாமல் பிரஹ்மரூபமாக நிலைத்திருத்தல்,

உ. அல்லது பிராரப்தகர்மம் போகத்தினால் நசித்தபிறகு ஸ்தூலசூக்ஷ்மசரீராகாரமாகப் பரிணமத்தை யடைந்த அஞ்ஞானம் சேதனத்தில் ஒடுங்குதல் *ச. விதேகமுக்தியாம்.

உஈசு. வினா:—பிராரப்தம் முடிந்தகாலத்தில் காரியத்தோடு அஞ்ஞானலேசம எந்தச் சாதனத்தால் விலயமாகின்றது?

விடை:—பிராரப்தகர்மத்தின் முடிவில் அதிக அல்லது குறைந்த மூர்ச்சைக் காலத்தில் பிரஹ்

---

*ஈ. சூலாலசக்கிரம், தண்டத்தைச் சுற்றுதலாகிய முயற்சியை விட்டபிறகும் வேகத்தின் வலியாற் சுற்றுதல்போல, பாதமுண்டாகிய பிறகும் பிராரப்தகர்மத்தால் தேகாதிப்பிரபஞ்சம் தோற்றுதல் பாதிதாநுவிருத்தியாம்.

*ச. யோகசூண்டலியுபநிஷத்து.

மாகாரவிருத்தி சம்பவியாது ; வித்துவானுக்கு விதியு மில்லை. என்றாலும் சுழுத்தியைப்போல அந்த மூர்ச்சைக்காலத்திலும் பிரஹ்ம வித்தையின் சம்ஸ்காரமிருத்தலால், அதில் ஆரூடமாகிய சேதனத்தால் காரியத்தோடு அஞ்ஞானலேசம் விலய(நாச)மாகின்றது. காஷ்டத்தி(கட்டையி)லுள்ள அக்கினியினால் தரும்பு முதலியவைகள் எரியத் தானும் எரிதல்போல, அந்தச் சம்ஸ்காரத்தில் ஆரூட(உள்ள)சேதனத்தால் பிரபஞ்சம் நாசமாகத் தானும்(ஞானத்தின் சம்ஸ்காரமும்)நாசமாகின்றது.

பிறகு அசங்க சுத்த சச்சிதானந்த சொப்பிரகாச தானேதானாகிய பிரஹ்மம் மிஞ்சுகின்றது.

ஸ்ரீவிசாரசந்திரோதயம்

பதினன்காங்கலை

ஜீவன்முக்திவிதேகமுக்திவர்ணநம் என்பது

முடிந்தது.

ஸ்ரீவிசாரசந்திரோதயம்.

பதினைந்தாங்கலை.

*க. வேதாந்தப்பிரமேய(பதார்த்த)வர்ணநம்.

** ஞேயப் பொருளை நீ நன்குணர்ந்து
சகல சமூசய வநர்த்த மொழிப்பாய்
முத்தி யாததன் சாதந மியாதா
மதனைப் பெறுமிடைச் சாதந மியாது
விடயம் ஞாநத்திற் கியாதென வுணர்க. (க)

---

*க. வேதாந்தசாஸ்திரமாகிய பிரமாணத்தா லுண்டாகிய எதார்த்தஞானம் **பிரமாவாம்.**

உ. அந்தப்பிரமாவால் அறியத்தக்க பதார்த்தம் **பிரமேயமாம்.**

அவைகள் இங்கே கூறப்படுகின்றன. ஆகையால் இந்தப் பதினைந்தாங்கலையை விசாரித்தலால் பிரமேயத்திலுள்ள சமூசயம் நிவிருத்தியாகின்றது.

பிரமேயத்திலுள்ள சமூசயத்தை **ஸ்ரீபாலபோதம்** என்னும் நூலின் ஒன்பதாவது உபதேசத்திற் காண்க.

** ஞேயம் = அறியத்தக்கது.

ஈசன் றத்துவம் வேறெனக் கொண்டு
துவம்பதப் பொருளைச் செவ்வே யறிக
தற்பதப் பொருளைத் தனியே நாடுக
பிரம மான்மா வொன்றெனக் கொள்ளே. (உ)

அங்குச் சத்தாதி பைசுவ ரியங்கொடு
சச்சிதா நந்தமா மதென்று மூளதெனு
மிவ்வகை ஞானந் தன்னை யுணர்க. (ங)

உங்ஙு. வினு:—மோகூத்தின் சொரூபம் யாது?

விடை:—க. காரியசகித அஞ்ஞானமாகிய அநர்த்த(பந்த)த்தின் நிவிருத்தியும்,

உ. பரமாநந்தமாகிய பிரஹ்மத்தின் பிராப்தியும் மோகூத்தின் சொரூபமாம்.

உங்அ. வினு :—மோகூத்திற்குச் சாகூாத் சாதனம் யாது ?

விடை :— *உ. பிரஹ்மாத்மவைக்கியத்தின்

---

*உ. " ज्ञानादेव हि संसारविनाशो कर्मणा ॥

ஞானத்தினுலேயே சம்சாரவிநாச முண்டாம்; கர்மத்தினு லன்று." என்னும் நித்தியாநித்தியவஸ்துவிவேகத்தில்.

அபரோக்ஷஞானம், மோக்ஷத்திற்குச்சாக்ஷாத் சாதனமாம்.

உஈக. வினா :—மோக்ஷத்திற்கு அவாந்திர (ஞானவாயிலாகச்)சாதனம் யாது ?

விடை :—நிஷ்காமகர்மம், உபாசனைமுதலிய அநேகம் மோக்ஷத்திற்கு அவாந்திரசாதனமாயிருக்கின்றன.

உசஂ. வினா :—அந்த ஞானத்திற்கு விஷயம் யாது ?

விடை :—ஆத்மப்பிரஹ்மைக்கியம் ஞானத்திற்கு விஷயமாம்.

உசக. வினா :—ஆத்மாவின் சொரூபம் யாது ?

விடை :—க. தேதேகந்திரியப்பிராணமனோபுத்தியஞ்ஞானசூனியங்களுக்கு வேறாய், உ. அகர்த்

"अतस्सर्वेषां कैवल्यमुक्तिर्ज्ञानमात्रेणोक्ता न कर्म-सांख्ययोगोपासनादिभिः ॥

ஆதலால் எல்லோருக்கும் கைவல்யமுக்தி ஞானமாத்திரத்தினுற் சொல்லப்பட்டதாம். கர்மம், சாங்கியம், யோகம், உபாசனைமுதலியவற்றுலன்று." என்னும் **முக்திகோபநிஷத்து** முதலிய சுருதிகளும் இதிற் பிரமாணமாதல் காண்க.

தாவும், கூ. அபோக்தாவும், ச. அசங்கமும், நி. வியாபகமுமாகிய சு. சேதனம் ஆத்மாவின் சொரூபமாம்.

உசஉ. வினா:—பிரஹ்மத்தின் சொரூபம்யாது?

விடை:—க். நிஷ்பிரபஞ்சமும், உ. அசங்கமும், கூ. பரிபூரணமுமாகிய ச. சேதனம் பிரஹ்மத்தின் சொரூபமாம்.

உசஙூ. வினா:—பிரஹ்மாத்மவைக்கியம் எப்படிப்பட்டது?

விடை:—க. சச்சிதானந்தமாயும், உ. ஐசுவரிய சொரூபமாயும், கூ. என்றுமுள்ளது பிரஹ்மாத்மவைக்கியமாம்.

உசச. வினா:—ஞானத்தின் சொரூபம்யாது?

விடை:—ஜீவப்பிரஹ்மங்களின் அபேதநிச்சயம் ஞானத்தின் சொரூபமாம்.

உசடு. வினா:—ஞானத்தின் சாக்ஷாத் அந்தரங்க(சமீபித்த)சாதனம் யாது?

விடை:—பிரஹ்மநிஷ்டராகிய குருமுகமாக மகாவாக்கியார்த்தசிரவணம் செய்தல் ஞானத்தின் சாக்ஷாத் அந்தரங்கசாதனமாம்.

உசசு. வினா :–ஞானத்திற்குப் பரம்பரையாக அந்தரங்கசாதனம் யாது ?

விடை :–க. விவேகம், உ. வைராக்கியம், ங. ஷட்சம்பத்தி(சமம் தமம் உபரதி திதிக்ஷை சிரத்தை சமாதானம்), ச. முமுக்ஷுத்துவம், டு. "தத்" பத "துவம்" பதார்த்தங்களின் சோதனை, சு. சிரவணம், எ. மனனம், அ. நிதித்தியாசனம் என்னும் இவ்வெட்டும் ஞானத்திற்குப் பரம்பரையாக அந்தரங்கசாதனமாம்.

உசஎ. வினா :–ஞானத்தின் பகிரங்க(தூரத்துள்ள)சாதனம் யாது ?

விடை :–நிஷ்காமகர்மம் நிஷ்காமவுபாசனை முதலியன ஞானத்தின் பகிரங்கசாதனமாம்.

உசஅ. வினா :–ஞானத்திற்கு எல்லாம்சேர்த்து எத்தனை சாதனங்களாம் ?

விடை :–ஞானத்திற்கு எல்லாம் சேர்த்து பதினெரு சாதனங்களாம்.

ஸ்ரீ விசாரசந்திரோதயம்

பதினேந்தாங்கலை

வேதாந்தப்பிரமேயவர்ணனம் என்பது

முடிந்தது.



ஸ்ரீவிசாரசந்திரோதயம்.

பதினாறுகலை.

வேதாந்தபதார்த்தசம்ஞாவர்ணநம் அல்லது
இலகு(சிறிய)வேதாந்தகோசம்.

நிஷ்கள நிஜமெனப் புகலுமே வேதம்
பிரமத் தொருபதோ டாறுங் கலையிலை
நிரவய வத்தொடு நிஷ்களங் கமாமெஃ
தென்று மேக ரசமா மதனுக்
கங்கத் தன்மை யணுவு மில்லை. (க)
இரணிய கருப்பஞ் சிரத்தை விண்ணே
யநில மநல நீர்பூ விந்திய
*மந மநமாற்றன் மந்திரந் தவமே
கரும மூலகம் பெயரெனு மிவைதாங்
கலைபதி னெறெனக் கண்டுணர் வாயே. (உ)
சட்வுபா தியின்றன் றர்மமா மிவற்றுண்
மலர்தூல் போலுட் கலந்தா சிரயமா
நிஜசி தான்மா சத்தென வுணரே. (ங)

* மநம்=மநது. அநம்=அந்நம்.

இருவகைப்பதார்த்தங்கள்.

அத்தியாத்மதாபம் உ :–ஆத்மாவை ஆசிரயித்திருக்கும் ஸ்தூலசூக்ஷ்மசரீரங்கள் அத்தியாத்மமாம். அதிலுள்ளதாபம்(துக்கம்)அத்தியாத்மதாபமாம்.

க. ஆதி:–சித்தவியாகூலத்திற் கேதுவான அசூயை, மதம், மற்சரம், காமம், குரோதமுதலிய மானஸதாபங்கள்.

உ. வியாதி:–தேவதாசரீரங்களின்றிய சர்வப்பிராணிகளின் பிராரப்தத்திற் கீடாகவெவ்வேறுவீதமாக உண்டாகும் ஜ்வரம் குன்மம் இரத்தசூலமுதலான தோஷங்களோடு கூடிய சரீரதாபாதிகள்.

அத்தியாசம் உ :–பிராந்திஞானத்தின்(திரிபுக்காட்சியின்)விஷயமும் பிராந்திஞானமும்.

க. அர்த்தாத்தியாசம்:–பிராந்திஞானத்தின் விஷயமாகிய சர்ப்பமுதலியன அல்லது தேகாதிப்பிரபஞ்சம்.

உ. ஞாநத்தியாசம் :–பிராந்திஞானம்(சர்ப்ப முதலியவற்றின் அல்லது தேகாதிப்பிரபஞ்சத்தின் ஞானம்).

க. சம்பந்தாத்தியாசம் :– கற்பிததாதாத்மியசம்பந்தத்தின் அத்தியாசம்.

உ. சொரூபாத்தியாசம் :–சம்பந்தியின் அத்தியாசம்.

அசம்பாவநை உ :– அசம்பவத்தின் ஞானம். இது சம்பவியாது(பொருந்தாது)என்னும் உணர்ச்சி.

க. பிரமாணகதம் :–பிரமாண(வேத)த்திலுள்ள அசம்பவத்தின் ஞானம்.

உ. பிரமேயகதம் :–பிரமேயத்தி (பிரமாணத்தின் விஷயமாகிய மோக்ஷமுதலியவற்றி)லுள்ள அசம்பவத்தின் ஞானம்.

அகங்காரம் உ :–

க. சுத்தம் :–சுவசொரூபத்தின் அகங்காரம்.

உ. அசுத்தம்:–தேகமுதலிய அநாத்மாக்களின் அகங்காரம்.

க. சாமானியம்:—தேகாதிதர்மங்களி னுத்தேச மில்லாமல் கேவலம் "நான்" என்று எழும்புதல்.

உ. விசேஷம்:—தேகாதிதர்மங்களி(பெயர் ஜாதி முதலியவற்றி)ன் உத்தேசத்தால் "நான்" என்று எழும்புதல்.

க. *க. முக்கியம்:—தேகமுதலியவற்றோடுகூடிய சிதாபாசனையும் கூடஸ்தனை(சாகூஷியை)யும் ஒன்றுபடுத்தி, அறியாமையால் சகல சங்காதத்திலும் அகம்("நான்" என்னும்)சத்தத்தைச் சேர்த்துக்கொண்டு "நான்" என்று எழும்புதல், முக்கிய(சக்திவிருத்தியால் அறியத்தக்க அகம்சப்தத்தின் அர்த்தத்தை விஷயஞ்செய்யும்)அகங்காரம்.

உ. அமுக்கியம்:—விவேகியிலுல்

(சு) வியவகாரகாலத்தில் தேகாதிகளோடு கூடிய சிதாபாசன்மாத்திரத்திலும்,

(உ) பரமார்த்ததசையில் கூடஸ்தன்மாத்திரத்திலும்("நான்" என்னும்)சத்தத்தைச் சேர்த்து

---

*க. இம்மூவகையகங்காரமும் இவ்வாறே மகோபநிஷத்து நு-வது அத்யாயத்திற் கூறப்பட்டுளது. விரிவஞ்சி இக்கலியில் மூலசுருதிகள் எழுதப்படாமல் இடம் மாத்திரம் குறிப்பிக்கப்பட்டுளது.

க்கொண்டு "நான்" என்று எழும்புதல், இரண்டு விதமாகிய அமுக்கிய (இலக்ஷணவிருத்தியால் அறியத்தக்க அகம்சப்தத்தின் அர்த்தத்தை விஷயஞ்செய்யும்) அகங்காரம்.

அஞ்ஞானம் உ :-

க. சமஷ்டி :-வனத்தைப்போல அல்லது ஜாதியைப்போல அல்லது ஜலாசய(தடாக)த்தைப் போல ஒரு புத்திக்கு விஷயமாவது. இது சுவரூபாதி யென்றும், ரஜோகுண தமோகுணக்கலப்பின்றிய சுத்தசத்துவகுணப் பிரதான உத்கிருஷ்ட உபாதியாயிருத்தலால் மாயை யென்றும், சகலத்திற்கும் காரணமாதலால் காரணசரீர மென்றும், ஆநந்தமிகுதியால் கத்தியின் உரைபோல ஆத்மாவை மறைத்தலால் ஆநந்தமயகோச மென்றும் சொல்லப்படுகின்றது.

உ. வியஷ்டி :-விருக்ஷங்களைப்போல அல்லது வியக்திகளைப்போல அல்லது நீர்த்துளிகளைப் போல அநேக புத்திகளுக்கு விஷயமாவது. இது பிராஞ்ஞனாகிய ஜீவனது உபாதி யென்றும், ரஜோதமோகுணங்கள் கலந்த மலினசத்துவகுணப்பிரதான நிகிருஷ்ட உபாதியாயிருத்தலால் அவித்தை யென்றும், அகங்காராதிகளுக்குக்கார

ணமானதால் காரணசரீரமென்றும், ஆநந்தமிகு தியால் கோசம்போல ஆத்மாவை மறைத்தலால் ஆநந்தமயகோசமென்றும்சொல்லப்படுகின்றது.

க. மூலாஞ்ஞானம்:—சுத்தசேதனத்தை மறைக்கு மஞ்ஞானம்.

உ. தூலாஞ்ஞானம் :—குடமுதலியவற்றில் வளைபட்ட சேதனத்தை மறைக்கு மஞ்ஞானம். இதுவே அவஸ்தாஞ்ஞானமாம்.

க. காரியாஞ்ஞானம் :—பிராந்திஞானமும் அதன் விஷயமும்.

உ. காரணஞ்ஞானம் :—பிராந்திக்கு ஏதுவான அஞ்ஞானம்.

*உ. அஞ்ஞானத்தின் சக்தி உ :—அஞ்ஞானத்தின் சாமர்த்தியம்.

க. ஆவரணசக்தி:— ஆவரணத்திற்கேதுவான சக்தி (அதிஷ்டானத்தை மறைக்கும் அஞ்ஞானத்திலுள்ள சாமர்த்தியம்).

---

* உ. சரஸ்வதிரஹஸ்யோபநிஷத்து.

உ. விக்ஷேபசக்தி:—விக்ஷேபத்திற்கேதுவான சக்தி (பிரபஞ்சமும் அதனது ஞானமுமாகிய விக்ஷேபத்தை உண்டாக்கும் அஞ்ஞானத்திலுள்ள சாமர்த்தியம்).

ஆத்மா உ:—

க. ஜீவாத்மா:— மூன்று தேகங்களோடுள்ள சேதனத்தின் தாதாத்மியத்தினால் சேதனவடிவ ஆத்மா ஜீவனெனப் போக்திருத்தன்மையினை யடைவது.

உ. பரமாத்மா:— சச்சிதானந்தவடிவம்.

ஆவரணம் உ:—

க. அசத்துவாபாதகம்:— நாஸ்தி (இல்லை) என்னும் வியவகாரத்திற்கு ஏதுவான அசத்துத்தன்மையைச் சம்பாதிக்கும் ஆவரணம்.

உ. அபாஞபாதகம்:— நபாதி (தோற்றவில்லை) என்னும் வியவகாரத்திற்கு ஏதுவானத் தோற்றமின்மையைச் சம்பாதிக்கும் ஆவரணம்.

உ. இலக்ஷணம் உ:—

க. சொரூபலக்ஷணம்:— எப்போது மிருப்பதாகிய வியாவர்த்தக (வேறு பிரித்தறிவிக்கும்) லக்ஷணம்.

உ. தடஸ்தலக்ஷணம்:– ஏதேனும் ஓர்காலத் திருப்பதாகிய வியாவர்த்தகலக்ஷணம். உபலக்ஷணம் என்பதும் இது.

உபாசனை உ:—

க. சகுணம்:– காரணப்பிரஹ்ம (ஈசுவர)காரியப்பிரஹ்மங்(இரணியகருப்ப விராட்டு முதலியவை)களின் உபாசனை.

உ. நிர்க்குணம்:– சுத்தப்பிரஹ்மத்தி னுபாசனை.

கந்தம் உ:—

க. சுகந்தம்(நறுநாற்றம்):–பச்சைக்கர்ப்பூரம் கஸ்தூரி பன்னீர் சந்தன முதலிய பிருதிவிரூபத் திரவியங்களில் பற்பலவிதமாகக் காணப்படுவன.

உ. துர்க்கந்தம்(தீநாற்றம்):– மலமுதலிய திரவியங்களில் பலவாகக் காணப்படுவன.

சத்தம் உ:—

க. வருண (அகாராதி அக்ஷர) வடிவம்.

உ. ஒலி (ஓசை) வடிவம்.

சத்தசம்பந்தம் உ:—

க. சக்திவிருத்தி:– சப்தத்திலுள்ள தன் அர்த்தத்தை நேரே யறிவிக்கும் சாமர்த்தியம்.

உ. இலக்ஷணவிருத்தி:— சக்கியார்த்தசம்பந்தியாயும், சொல்வோனுடைய தாற்பரியத்துக்கு விஷயமாயு மிருக்கிற வேறு அர்த்தத்தில் சப்தத்திற்குள்ள பரம்பராசம்பந்தம்.

*ஈ. சமாதி உ:—

க. சவிகற்பம்:—ஞாதாஞானஞ்ஞபதிரிபுடி விளக்கத்தோடுகூடிய அத்விதியப்பிரஹ்மத்திலுள்ள அந்தக்கரணவிருத்தியின் நிலைமை.

உ. நிருவிகற்பம்:— திரிபுடித் தோற்றமில்லாத அகண்டபிரஹ்மாகாரமான அந்தக்கரணவிருத்தியின் நிலைமை.

*ச. க. சம்பிரஞ்ஞாதசமாதி.

உ. அசம்பிரஞ்ஞாதசமாதி.

சமுசயம் உ:—

க. பிரமாணகதம். உ. பிரமேயகதம்.

சவிகற்பசமாதி உ:—

---

*ஈ. சாஸ்வதிரஹஸ்யோபநிஷத்து.

*ச, முக்திகோபநிஷத்து.

க. சப்தாநுவித்தம் :– அஹம்பிரஹ்மாஸ்மி என்னும் சப்தத்தோடுகூடியது.

உ. சப்தாநுவித்தம்:–சப்தத்தோடு கூடாதது.

சம்பத்து உ:—

க. தெய்வசம்பத்து:—

(க) விவேகம்:– நித்தியாநித்தியவஸ்துவிசாரம்.

(உ) சமம்:– மனதின் நிக்கிரகம்.

(ங) தமம்:– இந்திரியநிக்கிரகம்.

(ச) உபரதி:–விட்டவிஷயத்தில் விருப்பமின்மை.

(ஞ) திதிக்ஷை :–சீதோஷ்ணங்களைச் சகிக்குமியல்பு.

(சு) சிரத்தை :–குருசாஸ்திரவசனங்களிலுள்ள திடவிசுவாசம்.

(எ) சமாதானம் :–சத்சுருபப்பிரஹ்மமாகிய இலக்ஷியத்திலுள்ள சித்தத்தின் ஏகாக்கிரத்தன்மை.

(அ) முமுக்ஷுத்துவம் :–மோக்ஷவிருப்பமுடைமை.

(கூ) தவம் :–தனது தருமத்தி லிருத்தல்.

(கo) ஸத்தியம் :–சமதரிசனம்.

(கக) தயை:–அந்நியர் துக்கத்தை நீக்க விரும்புதல்.

(கஉ) ஸ்மிருதி :–முன் பின் விசாரித்தல்.

(கங) துஷ்டி. :–கிடைத்ததைக் கொண்டு சந்தோஷித்தல்.

(கச) தியாகம்:–பணத்தைச்செலவிடு மியல்பு, தகுதியில்லாத செய்கையில் நாணுதல், கொடுக்கு மியல்பு.

(கடி) சுவநிர்விருத்தி :–ஆத்மாவினிடத்துப் பிரியம்.

(கசு) மானமின்மை:–தனது குணத்தைப் புகழாதிருத்தல்.

(கஎ) இடம்பமின்மை :–தனது தர்மத்தை வெளியிடாமை.

(கஅ) அஹிம்சை :–பிறருக்குத் தன்பஞ்செய்யாதிருத்தல்.

(கசு) க்ஷமை:–பொறை(பொறுத்தல்.)

(உo) ஆர்ஜவம்:–வக்கிர(கபட)மின்மை, நேர்மைமுதலியன.

உ. அசுரசம்பத்து :–

(க) யாகமுதலிய வியாபாரம்.

(உ) மதம்:–தர்ப்பம்(அகங்காரம்).

(ங) பேராசை:–கிடைத்ததில் சந்தோஷமில்லாமை.

(ச) ஸ்தம்பம் :–கர்வம்(செருக்கு).

(ஞ) வாழ்த்து:–பொருள்முதலியவற்றின் இச்சையால் கடவுள்முதலியோரைப் பிரார்த்தித்தல்.

(கூ) பேதம் :–நான் வேறு இது வேறு என்னும் பேதபுத்தி.

(எ) சுகம்:–விஷயானுபவம்.

(அ) மதோற்சாகம் :–மதத்தால் யுத்த முதலியவற்றில் ஆக்கிரகித்தல்.

(கூ) புகழை விரும்புதல்.

(க0) ஆசியம் :–பரிகாசம்.

(கக) வீரியம்:–பிரபாவத்தைத் பிரகடம் செய்தல்.

(கஉ) பலமாக முயற்சித்தல்.

(கங) சுகத்தை விரும்புதல் முதலியன.

சம்பத்தும் உ :–

க. சையோகம்:–இரண்டு திரவியங்களின் சம்பர்தம்.

உ. தாதாத்மியம் :–கற்பிதபேதத்தோடு கூடிய வாஸ்தவ அபேதம்.

சௌசம் உ :–

க. பாகியம் :–மண் நீர்முதலியவற்றுல் கழுவுவது.

உ. ஆந்தரம் :–மனச்சுத்தி.

ஜாதி உ :–அநேகதர்மி(ஆசிரயங்)களிற் கலந்துள்ள ஒரு தர்மம்.

க. பரம் :–"குட மிருக்கிறது" "படமிருக்கிறது" என்றிவ்வாறு எங்கும் கலந்துள்ள சத்தை எதுவோ, அதனை நியாயமதத்தில் பர(சுப்ரேஷ்ட)ஜாதி என்பர்.

உ. அபரம் :–சத்தைக்கு வேறுகிய கடத்துவ முதலிய ஜாதியை நியாயமதத்தில் அபர(சுப்ரேஷ்டமில்லாத)ஜாதி என்பர்.

க. வியாப்பியம் :–வியாபகஜாதிக்குள்ளடங்கிய(அற்பதேசத்திலுள்ள)ஜாதி வியாப்பியஜாதியாம். அது, மனிதத்தன்மை ஜாதிக்குள் ளடங்

கிய(ஏகதேசத்திலுள்ள) பிராஹ்மணத்துவக்ஷத்திரியத்துவமுதலிய ஜாதிகள் வியாப்பியஜாதிகளாதல்போல.

உ. வியாபகம்:—வியாப்பியஜாதியினும் அதிகதேசத்திலுள்ள ஜாதி வியாபகஜாதியாம். அது, பிராஹ்மணத்துவ முதலிய வியாப்பிய ஜாதியினும் அதிகதேசத்திலுள்ள மனுஷத்துவஜாதி வியாபகஜாதியாதல்போல. இந்த வியாப்பியம் வியாபக மென்னும் இரண்டுபேதமும் அபரத்துவஜாதிக்காம்.

சூக்ஷமசரீரம் உ :—சூக்ஷமபூதங்களின் காரியமாயும், பாஹ்ய இந்திரியாதிகளால் கோசரிக்கக் கூடாததாயுமிருத்தலால் சூக்ஷ்மமென்றும், நாசமுடையதாயிருத்தலால் சரீர மென்றும் சொல்லப்படும்.

க. சமஷ்டி. உ. வியஷ்டி.

தூலசரீரம் உ :—

க. சமஷ்டி :—ஜராயுஜ அண்டஜ சுவேதஜ உத்பிஜ்ஜ மென்னும் நால்வகைச் சகலசரீரங்களும், வனத்தைப்போல அல்லது தடாகத்தைப்போல ஒரு புத்திக்கு விஷயமாவதாலும், சமஷ்டி சூக்ஷ்மசரீரங்களே யபேக்ஷித்து ஸ்தூலமாதலாலும்,

ஸ்தூலபூதங்களின் காரியமாதலாலும் சமஷ்டிஸ்தூலசரீர மெனப்படுகின்றன. இதுவே விராட்புருட உபாதி யென்றும், அந்நாதிகளின் விகாரமாய் ஜீவனது அபேக்ஷயால் கோசத்தைப்போல ஆத்மாவை மறைத்தலால் அந்நமயகோச மென்றும், ஸ்தூலபோகங்களுக்கிடமானதால் ஜாக்கிராவஸ்தை யென்றும் சொல்லப்படுகின்றது.

உ. வியஷ்டி :—நால்வகையினவாகிய சகல சரீரங்களும், ஒரு விருக்ஷத்தைப்போல அல்லது நீர்த்துளியைப்போல அநேக புத்திக்கு விஷயமாவதாலும், சூக்ஷ்மசரீரத்தை யபேக்ஷித்து ஸ்தூலமாவதாலும் வியஷ்டிஸ்தூலசரீர மெனப்படுகின்றன. இதுவே விசுவனுகிய ஜீவனது உபாதி என்றும், அந்நாதிகளின் விகாரமாய்க் கோசம் போல ஆத்மாவை மறைத்தலால் அந்நமயகோச மென்றும் ஜாக்கிராவஸ்தை யென்றும் சொல்லப்படுகின்றது.

நிக்கிரகம் உ :—

க. கிரமம் :—இயமநியமாதி எட்டுயோகாங்கங்களால் கிரமமாயுண்டாகும் சித்தநிரோதம்.

உ. ஹடம் :—பிராணநிரோதமாகிய ஹடத்தா

ல் அல்லது சாம்பவிமுதலிய முத்திரைகளுள் ஏ தேனும் ஓர் முத்திரையி னப்பியாசத்தால் உண் டாகும் சித்தநிரோதம் ஹடநிக்கிரகமாம்.

நிர்விகற்பசமாதி உ :–

க. அத்துவைதபாவனாரூபம் :– அத்வைதப் பிரஹ்மாகாரமான அந்தக்கரணத்தின் அஞ்ஞாத விருத்தியோடுகூடியது.

உ. அத்வைதாவஸ்தான ரூபம் :–இந்த மேற் கூறிய சமாதியில் அப்பியாசம் அதிகமாவதனால் பிரஹ்மாகாரவிருத்தியும்சாந்தமாய்விடுகின்றது. ஆதலால் விருத்தியில்லாததான நிருவிகற்பசமா தியுடையதாம்.

பரமஹம்ஸசந்நியாசம் உ :–

க. விவிதிஷை :–ஞானவிருப்பத்தால் ஞான த்தை அடையும்பொருட்டுச் செய்துகொள்ளும் சந்நியாசம் விவிதிஷாசந்நியாசமாம்.

உ. வித்துவத் :–ஞானத்திற்குப் பிறகு வாசனா கூடியமனோநாசத்துவஞானங்களின் அப்பியாச வாயிலாக ஜீவன்முக்திவிலகூடிய ஆநந்தத்தின் பொருட்டுச் செய்துகொள்ளும் சந்நியாசம் வித் துவத்சந்நியாசமாம்.

* நி. பாதம் உ:-

க. விஷயவடிவம் :-மித்தியாத்தன்மை அல்லது முக்காலத்தின்மை. இதனையே நித்தியநிவிருத்தி யென்றுங்கூறுவர்.

உ. விஷயிவடிவம் :-மித்தியாத்தன்மை நிச்சயம் அல்லது முக்காலத்தின்மையின் நிச்சயம். இதனையே நித்தியநிவிருத்தத்தின் நிவிருத்தியென்றும் கூறுவர்.

பிரபஞ்சம் உ:-

க. பாகியம் :-பஞ்சீகிருதபஞ்சபூதங்களினின்றும் ஒன்றற்கொன்று கலத்தல்வாயிலாக பிரஹ்மாண்டமும்,

அந்தப் பிரஹ்மாண்டத்தினுள் ஜீவர்களது வாசத்தின் பொருட்டுப் பிருதிவிக்குக் கீழுள்ள அதலம், விதலம், சுதலம், தராதலம், ரசாதலம், மகாதலம், பாதாலமென்னும்ஏழும், பிருதிவிக்கு மேலுள்ள பூலோகம், புவர்லோகம், சுவர்லோகம், மகர்லோகம், ஜனலோகம், தபோலோகம், சத்திய(பிரஹ்ம)லோக மென்னும் ஏழும்,

நி. இதனைப் பாலபோதம் அ-வது உபதேசத்திற் காண்க.

அவற்றில் உள்ள தேவர்மனிதர்முதலிய ஜராயுஜசரீரங்களும், பக்ஷிமுதலிய அண்டஜசரீரங்களும், விருக்ஷமுதலிய உத்பிஜ்ஜசரீரங்களும், பேன்முதலிய சுவேதஜசரீரங்களுமான நால்வகை யோனியான ஸ்தூல சரீரமாகிய போகாயதன (போகத்திற்கிட) மும், அந்தந்த லோகங்களில் அந்தந்தச் சரீரங்களுக்கு உபயோகமுள்ள பெயர் வடிவ குண தரும சக்திகளும், போகசாதனமாகிய அன்னமுதலிய போக்கிய பதார்த்தங்களும் பாகியபிரபஞ்ச மெனப்படும்; ஸ்தூலபூதகார்யமாயும் இந்திரியங்களால் கோசரிக்கப்படுவதாயுமிருத்தலால் இது த்ருத்பத உபாதி யெனப்படுகின்றது.

உ. ஆந்தரம் :—அந்நமயாதி ஐந்து கோசங்களும், ஸ்தூலாதி மூன்று சரீரங்களும், அவற்றின் சம்பந்தமுள்ள பிறத்தல் முதலிய ஆறுவிகாரங்களும், துவக்கு மாம்சமுதலிய ஆறுகோசங்களும், பசி தாகமுதலிய ஷடூர்மிகளும், சுரோத்ராதிஞானேந்திரியங்களும், வாக்காதி கருமேந்திரியங்களும், பிராணாதி வாயுபஞ்சகங்களும், மனுதி அந்தக்கரணசதுஷ்டயங்களும், அவற்றின் வியாபாரமான சங்கல்பாதிசதுஷ்டயங்களும், மூன்றவஸ்தைகளும், அவற்றின் வியாபாரங்களும், அவற்றினபிமானி விசுவதைஜஸபிராஞ்ஞஜீவனும், சு

மாதிமூர்ச்சைமரண மென்னும் அவஸ்தைகளும், காமக்குரோதாதி அரிஷட்வர்க்கங்களும், விவேகாதி நான்கு சாதனங்களும், சாத்துவிகாதி முக்குணங்களும், அவித்தை அஸ்மிதை ராகம் துவேஷம் அபிநிவேசமென்னும் பஞ்சக்கிலேசங்களும், மைத்திரியாதி நான்கும், விபர்யயம் பிரமாணம்முதலிய ஐத்துவிருத்திகளும், இயமநிய மாதி அஷ்டாங்கயோகங்களும், பிரத்தியகூஹாதி ஆறு அல்லது நான்கு பிரமாணங்களும், நாநாவிதப்பெயர்வடிவகுணதர்மசக்தியின் ஆசிரயமாகிய ரோகம் ரோகமின்மைகளும் ஆந்தரப்பிரபஞ்சமாம்; பாகியப்பிரபஞ்சத்துள்ள நால்வகை யோனிசரீரங்களின் சம்பந்தமிருத்தலாலும், ஆகாயாதிபாகிய பதார்த்தங்களின் அபேகூஹயால் ஆந்தரமாயிருத்தலாலும் இது **துவம்பத** உபாதி யெனப்படுகின்றது.

பிரஞ்ஞை உ :—

க. **ஸ்திதப்பிரஞ்ஞை** :—சமாதி சிரவணாதி சாதனங்களேர்டு செய்யும் மகாவாக்கியவிசாரத்தினால் உண்டாகும் சம்சயவிபரீதபாவனை யின்றிய பிரஹ்மாகாரபுத்தி.

உ. **அஸ்திதப்பிரஞ்ஞை** :—மூற்கூறிய சாதனை

நுஷ்டானங்களின்றிச் சாமானியமாக வேதாந்த ங்களைக் கேட்பதாலும் படிப்பதாலும் கூடினிக முண்டாகும் பிரஹ்மாகாரபுத்தி.

* கூ. பிரஹ்மம் உ :–

க. சப்தப்பிரஹ்மம்(பிரணவாதி)

உ. பரப்பிரஹ்மம்.

பிராந்தி உ :–

க. சோபாதிகப்பிராந்தி :–உபாதியோடுகூடிய அஞ்ஞானத்தினுற்றோன்றும் பிராந்தி. இத்தன்மையது கண்ணாடியிற் பிரதிபிம்பம் ஜகத்துமுதலியவற்றினதாம்.

உ. நிருபாதிகப்பிராந்தி :–கேவல அஞ்ஞானத்தினுற்றோன்றுவது. இத்தன்மையது இரஜ்ஜுவிற் றோன்றும் சர்ப்பமுதலியவற்றினதாம்.

சிருஷ்டி உ :–

க. கிரமசிருஷ்டி :–(முறையே)யுண்டாவது.

உ. யுகபத்சிருஷ்டி :– ஒரேகாலத்தில் உண்டாவது.

---

* கூ. திரிபுராதாபிரியுபநிஷத்தி.

க. ஜீவசிருஷ்டி :—அவித்தையின் விருத்தியினால் அல்லது கேவலமனதின் விருத்தியினால் எதனைச் சாகூஷி விளக்குகின்றதோ, அது சாகூஷி பாணியம் அல்லது பிராதிபாஸிகமாம்.

உ. ஈசுவரசிருஷ்டி :— இந்திரியவாயிலாக அந்தக்கரணவிருத்தியினால் எதனைச்சாகூஷி பிரகாசிக்(அறி)கின்றதோ, அது பிரமாதாபாஸ்யமாம். இதனை வியாவகாரிகம் என்பர்.

* எ. மனதின் நாசம் உ :—

க. சொரூபநாசம்.

உ. அரூபநாசம்.

* அ. மனம் உ :—

க. சுத்தம் :—கர்மமின்றியது.

உ. அசுத்தம் :—காமசங்கற்பம்.

முக்தி உ :—

---

* எ. முக்திகோபநிஷத்து.

* அ. திரிபுராதாபிநீயுபநிஷத்து, பிரஹ்மபிந்துபநிஷத்து, அமிர்தபிந்துபநிஷத்து, மைத்திராயணியுபநிஷத்து.

க. பதப்பிராப்திவிடிவம்.

உ. ஸ்வரூபப்பிராப்திவிடிவம்.

மோக்ஷாம்சம் உ :–

க. அகர்த்தகிவிருத்தி.

உ. பரமாகந்தப்பிராப்தி.

* கூ. யோகம் உ :–

க. சாலம்பம்:–கைகால்முதலிய வடிவத்தோடு கூடிய மண்டலமுதலிய பற்றுக்கோடாகிய ஆலம்பனமுடையது.

உ. நிராலம்பம்:–சகலகாமரூப கர்மங்களினின்று மிக விலகியதாகவும், சகலகாமமுதலிய அந்தக்காணவிருத்திகளின் சாக்ஷித்தன்மையாகவும், அவற்றின் ஆலம்பனமின்றியதாகவும் பாவித்தல்.

வாக்கியம் உ :–

க. அவாந்தரவாக்கியம் :–பரமாத்மாவினது அல்லது ஜீவனது சொரூபத்தை யறிவிக்கும் வாக்கியம்.

---

* கூ. மகாகாராயணோபநிஷத்து.

உ. மகாவாக்கியம் :–ஜீவப்பிரஹ்மங்களின் ஏகத்துவத்தை அறிவிக்கும் வாக்கியம்.

* கo. வாசனை உ :–

க. சுபம்.

உ. அசுபம்.

* கக. க. சுத்தம்.

உ. மலினம்.

வாதம் உ :–

க. பிரதிபிம்பவாதம்.

உ. அவச்சேதவாதம்.

* கஉ. வித்தை உ :–

க. பரம் :–பிரஹ்மஞானம்.

உ. அபரம் :–வேதவேதாங்கசாஸ்திராதிகளாம்.

---

* கo. முக்திகோபநிஷத்து.

* கக. முக்திகோபநிஷத்து.

* கஉ. முண்டகோபநிஷத்து, ருத்திரஹிருதயோபநிஷத்து.

விபரீதபாவனை உ :-

க. பிரமாணகதம்.

உ. பிரமேயகதம்.

வியாப்தி உ :-க. விருத்திவியாப்தி, உ. பலவியாப்தி.

க. விஷயத்திலுள்ள ஆவரணத்தினைப்பங்கம் செய்வது விருத்திவியாப்தி.

உ. அவ்விஷயத்தினை இஃது என்று சுட்டியறிவது பலவியாப்தி.

மூவகைப்பதார்த்தங்கள்.

அக்கினி ங :-

க. ஆஹவனீயம், உ. கார்ஹபத்யம், ங. தக்ஷிணாக்கினி.

அத்தியாத்மமுதலியன ங :-

க. அத்தியாத்மம் :- சுரோத்திரம், துவக்கு, சக்ஷு, ஜிஹ்வை(ரசனை), ஆக்கிராணம் என்னும் ஐந்து ஞானேந்திரியங்களும்,

வாக்கு, பாணி, பாதம், பாயுரு, உபஸ்தம் என்னும் ஐந்து கருமேந்திரியங்களும்,

மனம், யுத்தி, சித்தம், அகங்கார மென்னும் நான்கு அந்தக்கரணங்களும் ஆகிய பதினான்கும் இந்திரியாதிகள்.

உ. அதிதெய்வம்:—திசை, வாயு, சூரியன், வருணன், அசுவினிகுமார ரென்னும் ஐந்து ஞானேந்திரியதேவதைகளும்,

அக்கினி, இந்திரன், உபேந்திரன், பிரஜாபதி, மிருத்யு வென்னும் ஐந்து கருமேந்திரியதேவதைகளும்,

சந்திரன், பிரஹ்மா, வாசுதேவன் (க்ஷேத்திரஞ்ஞன்), ருத்திரன் என்னும் நான்கு அந்தக்கரணதேவதைகளுமாகிய பதினான்கும் தேவதைகள்.

ஊ. அதிபூதம்:—சப்தம், ஸ்பரிசம், ரூபம், ரசம், கந்தம் என்னும் ஐந்து ஞானேந்திரியவிஷயங்களும்,

வசனம், ஆதானம், கமனம், ரதி, மலரீக்கம் என்னும் ஐந்து கருமேந்திரியவிஷயங்களும்,

சங்கற்பம், விகற்பம், நிச்சயம், சிந்தனம் என்னும் நான்கு அந்தக்கரணவிஷயங்களுமாகிய பதினான்கும் விஷயங்கள்.

இவற்றுள் ஒவ்வொரு இந்திரியமும் அத்யாத்மமாம். ஒவ்வொரு தேவதையும் அதிதெய்வமாம். ஒவ்வொரு விஷயமும் அதிபூதமாம்.

அந்தக்கரணதோஷம் ஈ :—

†க. மலம் :—ஜன்மஜன்மாந்தரங்களின் பாபம். அதாவது, புருடன் அநாதியாயுள்ள சம்சாரத்தில் அஞ்ஞானஜீவர்களிடத்து அநேகஜன்மமடைந்து பிராந்தியினல் ரஜோதமோகுணப்பிரதான ஜீவர்களிடத்துத் துவேஷாதிபுத்தியோடு சிறிதும் பெரிதுமாகிய பற்பல பிரஹ்மஹத்தி முதலிய பாதகங்களைச் செய்கின்றன். அதனுண்டான அநேகவாசனைகள் அந்தக்கரணத்தில் பதிந்திருக்கின்றன. அதுவே மலதோஷமாம். அதன் பிரபாவத்தால் பகிர்முகமுடைய ஜீவன் இந்தச்சரீரத்தினும் பாபாசாரமுடைய

---

† யாவ தாகு மலமுள்ளம்
பற்றுச் சலித்தல் விக்ஷேப
மோவ லில்லா வுண்மைகினே
யுணர்த வின்மை யாவரண்
மாகு மூன்று முள்ளத்தை
யணைந்த குற்ற மிவைகடாமும்
போகுங் கன்ம வுபாசனைகன்
ஞான மென்னு மவற்றுலே.

வனுய் சத்சாஸ்திரவிசாரத்தையும் சாதுசங்கத்தையும் ஒருபோதும் கைப்பற்றுகிறதில்லை.

உ. விக்ஷேபம்:—சித்தத்தின் சஞ்சலத்துவம். ரஜோகுணத்தால் விழுங்கப்பட்ட சித்தத்தில் ஒவ்வொரு கணமும் இஷ்டவஸ்துவினுண்டாகும் சலனம் சஞ்சலமாம். எதனுல் அந்த விஷயாதிகளில் உழலும் சித்தம் சாஸ்திராதிப் பிரயத்தினங்களின்றி, முன் சம்ஸ்காரபலத்தால் சதா வெளிமுகமாகிச் சலிக்கின்றதோ, அதனுல் நாள்தோறும், சாஸ்திரவசனங்களைக் கேட்கினும் படிக்கினும் அவ்வசனங்களைச் சித்தத்தில் கிரகித்தலும் தரித்தலும் செய்கிறதில்லை.

ஈ. ஆவரணம்:—சொரூபத்தின் அஞ்ஞானம். அதாவது 'யான் அஞ்ஞானி, ஆத்மாவை அறியேன்' என்னும் அநுபவசித்த சொரூபாஞ்ஞானம் முன்னுள்ள அஞ்ஞானத்தின் ஏதுவாம். அதன் பிரபாவத்தால் சகல ஜீவர்களும் கடியந்திரம்(கலசங்கட்டிய ஏற்றம்)போலச் சம்சாரத்தில் மேல்கீழான கதியையடைகின்றர்கள்.

அபரோக்ஷஞானப்பிரதிபந்தம் ஈ:—

க. பூதப்பிரதிபந்தம்:— சிரவணமனனுதி அதுஷ்டானகாலங்களில் முன் அநுபவிக்கப்பட்ட த

னக்கிஷ்டமான எருமை முதலான வஸ்துக்களை மீண்டும் அநுசந்தித்தல்.

உ. வர்த்தமானப்பிரதிபந்தம்:– (க) விஷயாசக்தி (விஷயங்களில் பற்றுதல்வடிவினது).

(உ) பிரஜ்ஞாமாந்த்யம்:–அதாவது பிரஜ்ஞை (புத்தி)யின் மந்தத்தன்மை (கிரகித்தல் தரித்தல் என்பவற்றின் சாமர்த்தியவடிவ கூர்மை யில்லாமை).

(ங) குதர்க்கம்:–சுஷ்கதார்க்கமுடையவனுயிருத்தலால் சுருதிகளின் அர்த்தத்தின வேறு வகையாகக் கற்பித்தல்.

(ச) விபரீதஜ்ஞாக்கிரகம் :–ஆத்மா கருத்துருத்வ முதலிய தருமங்களோடுகூடிய தென்னும் ஞானவடிவ விபரீதபாவனையில் யுக்தியில்லாத ஹடம் (பிடிவாதம்).

கூ. பாவீ (ஆகாமி)பிரதிபந்தம்:– ஞானவிருப்புடையோன் சாதிக்கும் அதஷ்டானகாலங்களில் பாபகருமங்களின் காரியமாகிய ஏதேனும் ஒருவஸ்துவில் தயை அல்லது விசுவாசங்களையுண்டாக்கும் ஜன்மாந்தரத்திற்குக் காரணமாகிய பிராரப்தகர்மமும்(எஞ்சிய பிராரப்தமும்), பிரஹ்மலோகாதிகளின் இச்சைகளும்.

அர்த்தவாதம் ஈ:—நிந்தையையாவது துதியை யாவது அறிவிக்கும் வாக்கியம்.

க. அநுவாதம்:— அந்நியப்பிரமாணத்தாற்சித் தித்த அர்த்தத்தை அறிவிக்கும் வாக்கியம். "அக்னினி பனிக்கு மருந்து" என்னும் வாக்கியம் போல.

உ. குணவாதம்:— அந்நியப்பிரமாணவிரோத மாகிய விதேய அர்த்தத்தைக் குணவாயிலாகத் துதிக்கும் வாக்கியம். பிரகாசமாகிய குணத்தின் சமத்தன்மையால் துதிக்கும் "யூபம்(எக்கிய கம்பம்) ஆதித்தன்" என்னும் வாக்கியம்போல.

ஊ. பூதார்த்தவாதம்:— சுவார்த்தத்தில் பிரமாணமுள்ளதாய், இலக்ஷணையினாலே விதேய(விதிக்கப்படும்) அர்த்தத்தின் சிலாக்கியத்தை அறிவிக்கும் வாக்கியம்; "வஜ்ஜிரஹஸ்தன் புரந்தரன்" என்னும் வாக்கியம்போல.

அவதி ஈ:— வரம்பு (எல்லை).

க. ஞானத்தின் அவதி:— அஞ்ஞானிக்கு தேஹாதிகளில் சம்சயவிபரீதபாவனையின்றித்திட ஆத்மதத்தன்மைப்புத்தி யிருப்பதுபோலச் சுபாவமாகச் சித்தித்துள்ள பிரஹ்மாத்மாவில் உண்டாகும் திடபுத்தி.

உ. வைராக்கியத்தின் அவதி:— சுவர்க்காதி லோகங்களிலும் சத்தியலோகங்களிலுமுள்ள விஷயங்களே துரும்புபோலெண்ணும் புத்திவிருத்தி.

ங. உபராமத்தின் அவதி:–ஜாக்கிராவஸ்தையில் சுழுத்திபோலச் சகலவஸ்துக்களின் ஸ்மிருதியில்லாதது சித்தநிரோதமாகிய உபரதி (உபசாந்தி)யினது அவதி.

*ஙஙூ. அவஸ்தை ங:–மூன்று தேகவிவகாரங்களின் காலம்.

க. ஜாக்கிராவஸ்தை:– தேவதைகளின் அதுக்கிரஹத்தோடுகூடிய இந்திரியங்களுக்கு விஷயங்களின் ஞானம் எதனு லுண்டாகின்றதோ, அது ஜாக்கிர மெனப்படும்.

அல்லது எந்தப் பதிஞான்கு தேவதைகளின் அநுக்கிரஹத்தோடுகூடிய பதிஞான்கு இந்திரியங்களால், ஸ்தூலவிஷயபோகங்களும் அததற்குரிய கர்மங்களும் பிராரப்தகர்மங்களுக்கிடாக உண்டாகின்றனவோ, அந்தச் சத்துவகுணபரிணமபுத்திவிருத்தி ஜாக்கிராவஸ்தை எனப்படும். அதற்கு அபிமானி விசுவன்.

*ஙஙூ. வஜ்ரசோபநிஷதம் முதல் அத்யாயம்.

உ. சோப்பனஜவஸ்தை:– எந்த ஜாக்கிரபோகங்களைத் தரும் கருமங்கள் லயமடைந்து, சொப்பன போகங்களைத்தரும் கருமங்கள் உதயமான பின், வாசனமய இந்திரியங்களால் வாசனமய சூக்ஷ்மபோகங்களும் கிரியைகளும் உண்டாகின்றனவோ, அந்த ரஜோகுணபரிணாமபுத்திவிருத்தி சோப்பனஜவஸ்தை யெனப்படும். அதற்கு அபிமானி தைஜஸன்.

ஈ. சுழுத்தியவஸ்தை :–எது ஜாக்கிரசொப்பன மென்னும் இரண்டின் உற்பத்திலயங்களுக்கு இடமா யிருக்கின்றதோ, எதில் சகலவிசேஷவிருத்திகளும் ஒடுங்கி அபாவவடிவா யிருக்கின்றனவோ, அந்தத் தமோகுணபரிணாமஸம்ஸ்காரவடிவ புத்திவிருத்தி சுழுத்தியவஸ்தை யெனப்படும். அதற்கு அபிமானி பிராஜ்ஞன்.

ஆத்மா ஈ :–

க. ஞாஜாத்மா :–வர்ணச்சிரமாதி அபிமானத்தோடுகூடிய பரிச்சின்னவியஷ்டி அகங்காராவச்சின்னசேதனம்.

உ. மகாஜாத்மா :–ஸர்வவியஷ்டி அகங்காராதிகளிலும் பிரவேசித்துள்ள அபரிச்சின்ன சமஷ்டி சாமானிய அகங்காராவச்சின்னசேதனம்.

கூ. சாந்தாத்மா :– இவ்விருவகை அகங்கார அநவச்சின்னசுத்தசேதனம்.

ஆத்மாவின் பேதம் கூ :–

க. மித்தியாத்மா :–பூதங்களின் விகாரமான அநிருத ஜ— தூக்கவடிவமும், மலமூத்திராதிகளால் நிறைந்ததும், அந்நமயமுதலிய பஞ்சகோசங்களோடு கூடியதும், இந்திரியாதிசங்காதங்களுமாகிய இந்தச் சரீரம் மித்தையாம். அநாத்மாவும் சொரூபமாக மித்தியாவடிவமுமாம்; ஆயினும் சேதனவடிவப்பிரத்யகாத்மதாதாத்மியஅத்தியாசத்தினால் இது ஆத்மசப்தத்தினாற் சொல்லப்படுகின்றது. இந்தச் சேதன ஆத்மா அவிவேககாலத்தில் தன்னை முற்கூறிய சங்காதங்களுக்கபின்னமாக மதித்து, கர்த்திருத்வ போக்திருத்வசுகித்வ துக்கித்வ ஜன்ம மரணமுதலானஅநாத்மதர்மங்கள் தன்னுடையவென்று தாழ்ந்த நிலையடைகின்றது. விவேககாலத்தில் தாதாத்மியசம்பந்த அபிமானத்தை விடுவதால் இச்சங்காதம் பொய்யென்று நிச்சயிக்கப்படுகின்றது. ஆனதால் இது மித்யாத்மா வெனப்படுகின்றது.

உ. கௌணத்மா :–ஸ்த்ரீபுத்ரதனுதிகள் கௌணத்மா வெனப்படுகின்றன. ஜீவனது அவிவேகதசையில் தன்னினும் அவைகள் வேறு என்

னும் பேதம் பிரத்யக்ஷமாகச் சித்தித்திருந்தாலும், ஆத்மாவின் தாதாத்மிய அத்தியாசத்தினால் அவைகளைத் தன்வடிவாகப் பாவித்து, அவைகளுக் குண்டாகும் லாபநஷ்டங்களைத் தான் அநுபவிக்கின்றான். எப்படித் தனதாத்மாவில் தனக்குப் பிரேமை யிருக்கின்றதோ, அதுபோலவே அவைகளிலு மிருக்கின்றது. எப்படி இந்தத்துக்காதிகுணங்களைத் தனக்குப் பிரதிகூலமாக நினைக்கின்றானோ, அப்படியே அவைகளின் துக்காதிகுணங்களையும் நினைப்பதால் சாஸ்திரத்தில் இவைகளணுத்மா வெனப்படுகின்றன.

இதனின்(கௌணத்மாவின்)வேறுகிய மித்யாத்மா அல்லது முக்கியாத்மாவின் ஞானகாலத்தில் இதன் சம்பந்தமான ஆத்மபுத்தி நஷ்டமாவதால் குணவாயிலாகவே இவை ஆத்மசப்தத்தாற் சொல்லப்படுகின்றன.

ஈ. முக்கீயாத்மா :—எந்தச் சுயம்பிரகாசவடிவ சாக்ஷியாகிய ஆத்மா பஞ்சகோசங்களையும் பிரகாசிக்கின்றதோ, எதற்குச் சகலசங்காதங்களும் திருஷியமோ, அது திருஷ்டாவாம். அதுவே தனது நிஜவடிவாம். எதற்கு மகாவாக்கியங்களால் சொல்லப்படும் பூர்ணநந்தபிரஹ்மத்தோடு அபின்னத்தன்மை யிருக்கின்றதோ அது முக்கியாத்மா வெனப்படும்.

அந்தச் சேஷியாகிய ஆத்மாவே நிரதிசயப் பிரேமைக்கு விஷயமாம். அந்தப் பிரேமையினால் அதற்கு அநுகூலமான மித்தியாத்மாவிலும்கௌணாத்மாவிலும் ஜீவர்களுக்குப் பிரேமையுண்டாகின்றது.

ஆநந்தம் கூ :—

க. பிரஹ்மாநந்தம் :—சமாதியில் உண்டாகும் அல்லது சுழுத்தியிலுள்ள பிம்பபூதமாகிய ஆநந்தம் பிரஹ்மாநந்தமாம்.

உ. விஷயாநந்தம் :—ஜாக்கிரசொப்பனங்களில் விஷயப்பிராப்தியாகிய நிமித்தத்தால் ஏகாக்கிரமாகிய சித்தத்தி லுண்டாகும் ஆத்மசொரூபமாகிய ஆநந்தத்தின் கூஷணிகப்பிரதிபிம்பம் விஷயாநந்தமாம். இதனையே ஜீலேசாநந்த மென்றும், மாத்திராநந்த மென்றும் கூறுவர்.

ங. வாசனாநந்தம் :—சுழுத்தியினின் றெழுதல் முதலிய * கசை. உதாசீனதசையில் அநுபவிக்கப் படும் ஆநந்தம் வாசனாநந்தமாம்.

---

* கசை. சுழுத்தியினின்றும் எழுந்தகாலத்துச் சுகானுக்கங்களின் அபாவ மிருக்கின்றது. ஆதலால் அது உதாசீனதசையாம். இவ்வாறே ஜாக்கிரத்தில்எங்கெங்குச் சுகதுக்கங்களிரண்டின் இன்மை யிருக்கின்றதோ அத்தத்தக் காலம் உதாசீனதசை யெனப்படும்.

இலக்ஷணதோஷம் கூ :—

†க. அவ்வியாப்தி:—இலக்ஷியத்தின் ஏகதேசத்

எங்குச் சுகமிருக்கின்றதோ, அங்கு ராகமிருக்கின்றது. எங்குத் துக்கமிருக்கின்றதோ, அங்குத் துவேஷமுண்டாகின்றது. ஆதலால் சுகதுக்கவடிவநிமித்தத்தினுற் றோன்றிய இராகத்துவேஷங்களின் இன்மைக்காலத்தினே உதாசீனத்தன்மையென்றும் தாஷ்ணீம் ஸ்திதி யென்றும், சும்மாவிருத்தும்நிலை யென்றும் கூறுவர்.

† இலக்ஷிய மலலா வற்றி
விலக்கணஞ் செல்ல லாலே
அலக்ஷிய மருவு மத்தை
யதிவியாத் திதோட மென்ப
இலக்ஷியத் தொருபா கத்தி
லிலக்கணஞ் செலாமை தன்னைத்
தலக்கலி லவ்வி யாத்தி
தோடமென் றுரைப்பர் கற்றோர். (க)

இலக்ஷிய முற்று மஃத
விலக்கண மிலாமை தன்னை
இலக்கணஞ் சம்ப வமென்
றியம்புவ நிலைகண் மூன்றும்
இலக்ஷிய மறிய வொட்டா
விலக்கண தோட மாகும்
இலக்கணம் தனக்கிம் மூன்று
மின்மையே யிலக்க ணங்காண். (உ)

தில் இலக்ஷண மிருத்தல். அது பசு கபில நிற முடைய தெனல்.

உ. அதிவியாப்தி:–இலக்ஷியத்தில் வியாபித்து, இலக்ஷியமல்லாததிலும் அந்த இலக்ஷணமிருத் தல். அது பசு கொம்புள்ள தெனல்.

ங. அசம்பவம் :–இலக்ஷியத்தில் இலக்ஷண மில்லாதிருத்தல். அது பசு பிளவுபடாதகுளம்பு களுடைய தெனல்.

உத்தேசமுதலியன ங:–

‡ க. **உத்தேசம்** :–பெயரைக் கீர்த்தித்(சொல் லு)தல்.

ஆவினைக் கோடு டைத்தாக்கூற
லதிவியாத் திதோட மாகும்
ஆவினைக் கபில மென்ன
வவ்வியாத் திதோட மாகும்
ஆவொற்றைக் குரத்த தென்ன
லசம்பவ மிவைக ளின்றி
* ஆவலி தாடித் தென்ன
லமையிலக் கணமா மன்றே. (ங)

* ஆ = அலிதாடியுடையது.

‡ஒருபொருட் குள்ள நாம
முரைப்பதுத் தேச மத்திற்
குரியதாந் தன்மை கூற

உ. இலக்ஷணம் :–அசாதாரணதர்மம்(ஒன்றி விருப்பதாகிய தர்மம்).

ஈ. பரீக்ஷை:–பதக்கிருதி (அதிவியாப்திமுத லிய தோஷங்களை விசாரித்தல்).

உலகம் ஈ :–

க. சொர்க்கம் :– புண்ணியமுடையோரது விஷயசுகாநுபவங்களுக் கிடமாயும், காமதேநு கற்பகத்தருமுதலான பல ஐசுவரியங்களுடைய தாயும், புண்ணிய உத்கிருஷ்டத்தால் அடைதற் குரிய பலவகைப் பிரகாசங்களோடுகூடிய இந்திரலோகமுதல் சத்தியலோகம் வரையிலுமுள்ள உலகங்கள் சொர்க்கலோக மெனப்படும்.

உ. மத்தியம் :–மிசிரகருமமுடைய ஜீவர்களின் போகங்களுக்கிடமாயும், பற்பல சுகதுக்கங்களுக் கேதுவான சாமக்கிரிக ளுடையதாயும், சூரியாதிப்பிரகாசங்களோடு கூடியதாயு முள்ளது மத்திய(மிருத்யு)லோக மெனப்படும்.

ஐறுமிலக் கணமா மத்தி
ஐரையிலக் கணமுண் டாவென்
றுசாவுதல் பரீட்சை யாகுந்
தருமிலக் கணமுக் குற்றஞ்
சார்ந்திடா திருத்தல் வேண்டும்.

ங. பாதாளம் :–ஜீவர்களின் போகத்திற்கிட மாயும், உண்பதற்கும் பருகுவதற்கும் யோக்கி யமான பல சாமக்கிரிகளோடு கூடியதாயும், மணி (இரத்தினம்) முதலான பிரகாசங்களோடு கூடிய தாயு முள்ள அதலமுதல் பாதாளம் வரையிலு ள்ள உலகங்கள் பாதாளலோக மெனப்படும்.

ஏஷணை ங:–இச்சை அல்லது வாசனை.

க. புத்திரேஷணை (புத்திரனது இச்சை).

உ. வித்தேஷணை (தனம் பூமிமுதலியவற்றின் இச்சை).

ங. உலகஏஷணை:– எல்லோரு மென்னைத் துதிக்கவேண்டும்; ஒருவரு மென்னை நிந்திக்கலா காதென்னு மிச்சை, அல்லது பரலோகங்களின் இச்சை.

* கஙி. ஏதுமுதலியன:–ங வைராக்கியம் தத் துவஞானம் உபரதி என்னும் மூன்றற்கும்.

க. வைராக்கியத்தினது:–

---

* கஙி. ஸ்ரீபஞ்சதசி சித்ரதீபம் ஙஎஉ, ஙிஎங. ஙிஎச-வது சுலோகத்திலும் அதன் டிப்பணத்திலும் இவைகளின் விரிவைக் காண்க.

(க) ஏது:--இந்தலோகத்தின் விஷயங்களிலும் பரலோகத்தின் விஷயங்களிலும் அநித்தியத்தன்மையின் புத்திவடிவதோஷதிருஷ்டி (விவேகம்).

(உ) சொரூபம் :— ஜிஹாசை (விடுதலின் இச்சை).

(ரூ) பலம் :—விட்டபின் அந்தப் போக்கிய (விஷய)ங்களில் உண்டாகும் உபரதி.

உ. தத்துவஞானத்தினது:—

(க) ஏது:—குருமுகமாக மகாவாக்கிய உபதேசமும் சாஸ்திரவிசாரமுமாகிய இருவகைச்சிரவணதி (சிரவணம் மனனம் நிதித்தியாசனமென்னும்) மூன்றும்.

(உ) சொரூபம்:—மித்தையினையும் (சகல அநாத்மவஸ்துக்களையும்) தத்துவத்தையும் (பிரத்யகபின்னபிரஹ்மத்தையும்) விவேகித்தல் அதாவது நிஷ்பிரபஞ்ச ஆத்மாவின் (தன்னின்) வேறுகாத பிரஹ்மத்தினை நிச்சயித்தல்.

(ரூ) பலம் :—மீண்டும் கிரந்தி (முடிச்சு) உதயமாகாமை அதாவது காரண (அவித்தை) காரியங்ங (ஜன்மாதி)களோடுகூடிய அந்நியோந்நியாத்தியா

சவடிவ சித்ஜடக்கிரந்தியின் அத்தியந்த நிவிருத்தி(பரமாநந்தத்தின் பிராப்திவடிவ மோக்ஷம்).

ங. உபாதியினது:—

(க) ஏது:—இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சவிகற்பசமாதி என்னும் எட்டும்.

(உ) சொரூபம்:—சித்தநிரோதவடிவ யோகம் (நிருவிகற்பசமாதி).

(ங) பலம்:—வியவகாரத்தின் விஸ்மிருதி (மறதி).

காரணம். ங:—ஜீவிதஅவஸ்தையில் ஜீவனுகிய கர்த்தாவினுல் செய்யப்படுகின்ற விகித அவிகித கர்மங்களுக்கு இம்மூன்றும் சாதனமாயிருத்தலால் காரண மெனப்படுகின்றன.

க. மனம். உ. வாக்கு ங. காயம்.

கர்த்தவ்யமுதலியன ஈ:—

க. கர்த்தவ்யம்:-செய்யத்தக்க ஞானசாதனம்.

உ. ஞாதவ்யம்:— அறியத்தக்க ஞானத்தின் விஷயம் (பிரஹ்மாத்ம ஐக்கியம்).

கூ. பிராப்தவ்யம்:—அடையத்தக்க ஞானத்தின் பயனுகிய மோக்ஷம்.

கர்மம் கூ:—

க. புண்ணியம்—:சுருதிஸ்மிருதியாதிகளிற் கூறிய யஞ்ஞாதிவிதிகர்மங்கள் தமீது அநுஷ்டானவாயிலாகப் புண்ணியவடிவ அதிர்ஷ்டத்தை புண்டுபண்ணிச் சுவர்க்காதி பயனைத் தருதலால் புண்ணியகரும மெனப்படுகின்றன.

உ. பாபம்:—நிராந்தியி(மயக்கத்தி)றற் தனதிச்சையின்படி செய்த சுருதியாதிகளில் நிஷேதிக்கப்பட்டுள்ள பரஸ்த்ரீகமனமுதலான கருமங்கள் தமது அநுஷ்டானவாயிலாகப் பாபவடிவ அதிருஷ்டத்தை புண்டுபண்ணி நரக முதலான பயனைக் கொடுப்பதால் பாபகரும மெனப்படுகின்றன.

ங. மிசரம் (கலப்பு) :— முற்கூறிய கிரமமாக அநுஷ்டிக்கப்படும் விதிநிஷேத மென்னும் இருவகைக்கருமங்களும் தமதநுஷ்டானவாயிலாகப் புண்ணியபாபவடிவ அதிர்ஷ்டத்தினை யுண்டாக்கித் தாழ்வும் உயர்வுமாகிய மனிதப்பிறப்பைத் தருதலால் மிசரகரும மெனப்படுகின்றன.

*ககூ. கர்மம் ஈ:—

க. சஞ்சிதம்:—ஜன்மாந்தரங்களில் சேர்க்கப் பட்ட கர்மம்.

உ. ஆகாமியம்:—வர்த்தமான (இந்த) ஜன்மத் தில் செய்யப்படும் கர்மம்.

ஈ. பிராரப்தம்:—வர்த்தமான ஜன்மத்தின் ஆ ரம்பத்திற் கேதுவான கர்மம்.

கர்மமுதலியன ஈ:—

க. கர்மம்:—வேதவிகிதகர்மம்.

உ. விகர்மம்:— வேதத்திற்கு விருத்தமாகிய கர்மம்.

ஈ. அகர்மம்:—இருவிதகர்மத்தையும் செய்யா திருத்தல்.

கரணவாதம் ஈ:—

†க. ஆரம்பம்:— பாட்டன் முதலியவர்களால் செய்யப்பட்ட பழைய வீடு இடிந்துபோக, அதி

---

*ககூ. வாகோபரிஷத்து க-வது அத்யாயம்.

†இடிந்தபோர் வீட்டிற் போகா
தெஞ்சிய தளவா டங்கொண்

ளுள்ள செங்கல்முதலிய சாமக்கிரிகளால் மறுப டியும் புதுவீட்டைக் கட்டட ஆரம்பித்தல் போல, காரியமாகிய பிருதிவிமுதலியவற்றின் நாசத்தன்

டடர்ந்தவீ டாரம் பிப்பா
ரங்ஙனம் பிரள யத்தே
பொடிந்திடா தெஞ்சி நின்ற
பூவணு வாதி தம்மாற்
படர்ந்தபூ வாதி யாக்கல்
பகருமா ரம்ப வாதம். (அ)

சிரிஜை யாயி கர்கொள்
சிறப்பிலர் வாதக் தன்னிற்
காரியந் தன்னிற் பேதங்
காரணந் தனக்குண் டென்ப
கூரிய புத்தி யில்லார்
கொண்டுமே லேக்கற் காகச்
சீரிய கோத மர்தாங்
கூறிய தோரா ரன்னர். (உ)

பாலதே தயிரா தல்போற்
பகர்பிர இருதி தானே
ஏலுமான் முதலாக் கூறு
மியாவுமாய்ப் பரிண மித்தன்
மாலுறு சாங்கி யர்கண்
மதியரி ணம வாதஞ்
சாலுகா ரணத்திற் காருஞ்
சாருகா ரியத்த பேதம். (ஊ)

மைக்குக் காரணமாகிய பரமாணுக்கள் கெடா திருக்கின்றன, அவற்றுல் மறுபடியும் வேறு பிருதிவிமுதலியவற்றின் ஆரம்பம் உண்டாகிற து. இப்படி நியாயமதத்தில் ஆரம்பவாதம் ஒப்ப ப்பட்டிருக்கின்றது. இதில் காரிய காரணங்களு க்குப் பேத முண்டு.

ஈதெனக் காணி ரச்சு
விருந்தவா றிருக்க வங்கு
மேவுவேற் றுருவப் பாம்பு
விடமசத் தையதாத் தோற்று
மீதுபோற் பிரம மென்று
மிருந்தவா றிருக்க வஃதின்
மேவுவேற் றுருவ லோகம்
விடமசத் தையதாத் தோற்றும். (ச)

வித்தக வதிட்டா னத்தில்
விடமசத் தையதா வேறு
பொத்தருத் தோற்று மஃதே
புகல்விவர்த் தவாத மிங்கு
மித்தையாங் கார்யா பேத
மேவிடுங் கார ணந்தான்
இத்தகை விவர்த்த வாத
மியம்பிடும் வேதாந் தங்கள். (ஞ)

உ. பரிணமம்:—பாலின் பரிணமம் (வேற்று ருவம்) தயிராதல்போலச் சாங்கியமதத்தில் பிரகிருதியின் பரிணமம் ஜகத்தாம். உபாசகர்களது மதத்தில் பிரஹ்மத்தின் பரிணமம் ஜகத்தும் ஜீவனுமாம். இப்படி அவர்கள் பரிணமவாதம் ஒப்பியிருக்கின்றார்கள். இதில் காரியகாரணங்களுக்கு அபேத மூண்டு.

ஊ. விவர்த்தம்:-நிர்விகாரமாகிய இரஜ்ஜுவில் இரஜ்ஜுவாகிய அதிஷ்டானத்தினும் விஷமசத்தையுடைய வேற்றுருவமாகிய சர்ப்பமுண்டாகின்றது. அது இரஜ்ஜுவின் விவர்த்த (கற்பித காரிய)மாம். அதுபோல நிர்விகாரப் பிரஹ்மத்தில் அதிஷ்டானப்பிரஹ்மத்தினும் விஷமசத்தையுடைய வேற்றுருவமாகிய ஜகத்துண்டாகின்றது. அது பிரஹ்மத்தின் விவர்த்த (கற்பித காரிய)மாம். இப்படி வேதாந்த சித்தாந்தத்தில் விவர்த்தவாதம் ஒப்பப்பட்டிருக்கின்றது. இதிலும் காரியகாரணங்களுக்குப் பாதத்தினாலாகிய அபேத மூண்டு.

காலம் ஊ:—

க. இறப்பு:—நிகழ்காலத்தின் முற்கணத்துள்ள சூரியாதி உதயங்களாலாண்டாகும் கணமுகூர்

த்காதிவடிவ அநந்தக் கிரியைகளால்உபலக்ஷிக்கப்படும் காலம் இறந்தகாலம்.

உ. எதிர்வு:—நிகழ்காலத்தின் பிற்கணமுதல் யுகாதிவரையிலுமுள்ள காலம் எதிர்காலம்.

ஊ. நிகழ்வு:— பிராரப்தம் (ஆரம்பிக்கப்பட்டது) நாசமாவதன் முன் பல கிரியைகளால் உபலக்ஷிக்கப்படும் காலம் நிகழ்காலம்.

*கள. குணம் ங:—

க. சத்துவம். உ. இராஜசு. ங. தமசு.

குருமுதலியன ங:—

குருமுதலியன நேத்திரத்தின் தர்மமாம். இங்கே குருடாகிய நேத்திரத்தின் தர்மமானது செவிடு ஊமைமுதலிய மற்ற இந்திரியங்களின் தர்மங்களையும் குறிப்பிப்பதாகின்றது.

---

*கள. "सत्त्वरजस्तमांसि च गुणत्रयम् ॥

சத்துவம், இராஜசு, தமசு என்பன குணத்திரயம்." என்பது வராகோபநிஷத்து.

மந்தத்தன்மையும் தெளிவும் சகல இந்திரியங்க ளுக்கும் சமமென் றறிக.

க. குருடு:—நேத்திரம் எவ்விதத்தாலும் தனது விஷயத்தைக் கிரகியாதிருத்தல்.

"सात्त्विकराजसतामसलक्षणानि त्रयो गुणाः ।
अहिंसासत्यमस्तेयब्रह्मचर्यापरिग्रहाः ॥
अक्रोधो गुरुशुश्रूषा शौचस्संतोष आर्जवम् ।
अमानित्वमदंभित्वमास्तिकत्वमहिंसता ॥
एते सर्वे गुणा ज्ञेयास्सात्त्विकस्य विशेषतः ।
अहं कर्तास्म्यहं भोक्तास्म्यहं वक्ताऽभिमानवान् ॥
एते गुणा राजसस्य प्रोच्यन्ते ब्रह्मवित्तमैः ।
निद्रालस्यो मोहरागौ मैथुनं चौर्यमेव च ॥
एते गुणास्तामसस्य प्रोच्यन्ते ब्रह्मवादिभिः ।
ऊर्ध्वं सात्त्विको मध्ये राजसोधस्तात्तामस इति ॥
सम्यग्ज्ञानं सात्त्विकम् । धर्मज्ञानं राजसम् ।
तिमिरान्धं तामसमिति ॥

உ. மந்தம்:—இந்திரியங்கள் தமது விஷயத்தைச் சொற்பமாகக் கிரகித்தல்.

சாத்விகராஜஸதாமஸலக்ஷணங்க ளுடையமூன்று குணங்க ளுண்டு.

க. அஹிம்ஸை, சத்தியம், திருடாமை, பிரஹ்மசரியம், பிறர்பொருள்கொள்ளாமை, கோப மின்மை, குருபணிவிடை, சௌசம், சந்தோஷம், நேர்மை, மானமுடைமை யின்மை, இடம்ப மின்மை, ஆஸ்திகத்தன்மை, அஹிம்சிரத்தன்மை(துன்பஞ்செய்யாத வியல்புடைமை)யென்னும் இவையாவும் விசேஷமாகச் சாத்துவிகனது குணங்க ளென்று அறியப்படுகின்றன.

உ. யான் செய்பவன், யான் புசிப்பவன், யான் சொல்லுகிறவன், அபிமானமுடையவன் என்னும் இவை இராஜஸனது குணங்க ளென்று பிரஹ்மவித்துக்களாற் சொல்லப்படுகின்றன.

ங. நித்திரை, சோம்பல், மோகம், இராகம், மைதுனம், திருட்டு என்னும் இவை தாமஸனது குணங்க ளென்று பிரஹ்மவாதிகளால் சொல்லப்படும். மேலே சாத்துவிகமும், நடுவில் இராஜஸமும், கீழே தாமஸமும் என்க. நல்ல ஞானம் சாத்துவிகமும், தர்ம ஞானம் இராஜஸமும், அறியாமை தாமஸமுமா மென்க.” சாரீரகோபநிஷத்து.

ங. தெளிவு:–இந்திரியங்கள் தமது விஷயத்தைச் தெளிவாகக் கிரகித்தல்.

சத்தை ங:—

*க. வியாவகாரிகம்:–எவற்றிற்குப் பிரஹ்மஞானமின்றிப் பாதம் (மித்தியாத்துவ நிச்சியம்) உண்டாகிறதில்லையோ, பிரஹ்மஞானத்திற்குப் பின் எவற்றிற்கு அதிஷ்டானத்தினும் வேறுகிய சத்தாஸ்பூர்த்தி தோற்றுகிறதில்லையோ, அத்தன்மைய மாயையும் அதன் காரியமும் வியாவகாரிகமாம். அவற்றின் சத்தையினை வியாவகாரிக சத்தை யென்பர்.

உ. பிராதிபாஸிகம்:—எவற்றிற்குப் பிரஹ்மஞானமின்றி ரஜ்ஜுமுதலியவற்றின் ஞானத்தினாலேயே பாதமுண்டாகிறதோ, அத்தன்மைய தூலாஞ்ஞானமும், அதன் காரியமானரஜ்ஜுசர்

---

* என்றுமொரு படித்தாக விலகிநின்று பொன்று
இருப்பதுவே யெழில்பார மார்த்திகமாஞ் சத்தை
பொன்றுருப் பிரமஞானம் பொருந்தளவு மிருந்து
போவதுவே புகல்வியாவ காரிகமாஞ் சத்தை
அன்றுவியா வகாரிகத்தான் மேற்றுமளை விருந்து
தொலைவதுவே சொல்பிராதி பாஸிகமாஞ் சத்தை
என்றுமுள பிரமத்தோ டிலகுநனு வுலகு
மியல்கனுவிற் றோற்றலகு மிலக்கியங்க ளாமே.

ப்பமுதலியனவும் பிராதிபாஸிகமாம். அவற்றின் சத்தையினைப் பிராதிபாஸிகசத்தை யென்பர்.

கூ. பாரமார்த்திகம்:-எதற்கு மூன்று காலத்தி லும் பாதமுண்டாகிறதில்லையோ, அத்தன்மைய உற்பத்தி நாசமின்றியதா யிருத்தலின் நித்திய (சத்திய)மான சேதனம் எதுவோ, அது பாரமார்த்திகமாம். அதன் சத்தையினை(இருப்பை)ப் பாரமார்த்திகசத்தை யென்பர்.

பாலபோதம் நிஉ-வது டிப்பணியில் இதன் திருஷ்டாந்தம் பார்க்க.

* கஅ. சம்பந்தம் கூ:-

க. சையோகம். உ. சமவாயம். கூ. தாதாத்மியம்.

சரீரம் கூ:-அபிமானியாகிய ஜீவசேதனமின் றி வியாபாராதிகளில் சுதந்தரமில்லாததும், ஞானத்தினுல் பாதமாவதும், பிராரப்தகூயத்தினுல் நாசமடைவதுமா யிருத்தலால் சரீர மெனப்படுகிறது.

---

*கஅ. இதன் விவரத்தை விருத்திப்பிரபாகரத்திற் காண்லாம்.

க. ஸ்தூலம் :–பஞ்சீகிருதபஞ்சமகாபூதங்களின் பரிணமமு(காரியவடிவ இருபத்தைந்து தத்துவங்களு)ம், சுக்கிலசோணிதக்கலப்பிஞுண்டானதும், பால்மூதலான அந்நாதிகளால் ரக்ஷிக்கப்படுவதும், ரூபாதி அபிமானத்தால் இந்திரியாதிகளால் கோசரிக்கப்படுவதும் ஸ்தூலசரீரமாம்.

உ. சூக்ஷமம் :–அபஞ்சீகிருத பஞ்சபூதங்களின் காரியமும், பதினேமூதத்துவங்களோடு கூடியதும், மூன்று கோசங்களை யுடையதும், பாகிய இந்திரியாதிகளால் கோசரிக்கப்படாததும் சூக்ஷ்மசரீரமாம்.

ங. காரணம் :–ஸ்தூலசூக்ஷ்மசரீரங்களுக்கு உபாதானகாரணமான அஞ்ஞானம் காரணசரீரமாம்.

சிரவணமூதலியவற்றின் பலம் ங:–

க. பிரமாணசமுசயநாசம். உ. பிரமேயசமுசயநாசம். ங. விபரீயயநாசம்.

சுழுத்தி ங:–

க. சுழுத்திஜாக்கிரம்:–சாத்விகவிருத்தி பூர்வகமாகிய சுக்சுழுத்தி.

உ. சுழுத்திசோப்பனம் :—இராஜஸவிருத்தி பூர்வகமாகிய துக்கசுழுத்தி.

ஊ. சுழுத்திசுழுத்தி:—தாமஸவிருத்திபூர்வகமாகிய காட(ஆழ்ந்த)சுழுத்தி.

சுழுத்திமுதலியன ஊ:—

க. சுழுத்தி :—ஜாக்கிரசொப்பனபோகங்களைத் தரும் பிராரப்தகருமம் க்ஷயமாகச் சுழுத்தி சம்பந்தமான சுகபோகங்களைத் தரும் கருமங்கள் உதயமானபின், பிரசன்னமான முகமுதலான அடையாளங்களோடுகூடிய சகல தெளிவான விருத்திகளின் அபாவவடிவ நித்திரையுண்டாகி, மீண்டும் ஜாக்கிரபோகங்களைத்தரும் கருமங்கள் உதயமாக எது நாசமாகின்றதோ, அது சுழுத்தியெனப்படும்.

உ. மூர்ச்சை:—ஜாக்கிராவஸ்தையிலேயே சோகாதிகளால், அல்லதுமுத்கர(இருப்புத்தடி)முதலான ஆயுதங்களின் அடியினல், அல்லது அசுவாதிகளிலிருந்து விழுவதால் உண்டாகும் மனினமும் குரூரமுமான முகமுதலான அடையாளங்களோடு சகல தெளிவான விருத்திகளின் அபாவவடிவாய் எதில், பிராரப்த சேஷத்தினல் மீண்டும்

எழுதல் அல்லது மரித்த லுண்டாகின்றதோ, அது மூர்ச்சை யெனப்படும்.

ரு. சம்ாதி:–ஜாக்கிரத்திலேயே தன் பிரயத்தினத்தோடு சாதிக்கப்படும்நிதித்தியாசனத்திலுல் அல்லது பதஞ்சலிபகவான் கூறிய சூரணத்தியானநிகளின் அநுஷ்டானநிகளாலுண்டாகும் சித்தநிரோதம் சமாதி யெனப்படும். அல்லது சாக்ஷாத்காரத்தின் பின்னுண்டாகும் பிரஹ்மாகாரசித்தவிருத்திகளின் பிரவாகம், அல்லது சகலவிருத்திகளும் நிரோதமாகப்பிரஹ்மவடிவாக உண்டாகும் சித்தத்தின் அசைவற்ற நிலை சமாதி யெனப்படும்.

சோப்பனம் ரு:–

க. சோப்பனஜாக்கிரம் :—எதார்த்தமாகிய இபாருளைச் சொப்பனத்திற் காணுதல்.

உ. சோப்பனசோப்பனம் :–சொப்பனத்தில் இரஜ்ஜுசர்ப்பமுதலியபிராந்திகளைக்காணுதல்.

ரு. சோப்பனசுழுத்தி:–கண்ட சொப்பனத்தின் மறதி(நினைவின்மை).

ஞாதாமுதலியன கூ:—

க. ஞாதா(காண்பான்). உ. ஞானம்(காட்சி). கூ. ஜ்ஞேயம்(காணப்படுபொருள்).

* ககூ. ஞானப்பிரதிபந்தகம் கூ:—

க. சமுசயம். உ. அசம்பாவனை. கூ. விபரீதபாவனை.

ஞானமுதலியன கூ:—

க. ஞானம்:—தத்துவம்பதார்த்த சோதன பூர்வகமாகக் குருவினுபதேசிக்கப்பட்ட மகாவாக்கியவிசாரஞ் செய்வதாலுண்டாகும் பிரஹ்மாத்மசாக்ஷாத்காரம்.

உ. லயராக்கீயம்:—மூன்னுள்ளதும் இனிவருவதுமான விஷயங்கள் அநர்த்தத்திற் கேதுவென்னும்தோஷதிருஷ்டியினுலும், மித்தியாத்வ(பாதயோக்கியசொரூபமுடைய தென்னும்) புத்தியினுலும் உண்டாகும் அவற்றின் இச்சை யில்லாமை.

கூ. உபரதி:—சித்தத்திருக்கும் இலௌகிகவைதிகமான சர்வவியவகாரங்களினும் இச்சையில்லாமை அல்லது மறுதி.

---

*ககூ. இதன்விரிவை விசாரசாகரம், ககூ-ம் பிரகரத்திற் காண்க.

தாதாத்மியம் :–கூ

க. பிரமஜதாதாத்மியம் :–அகங்காரத்திற்குச் சாக்ஷியிலுள்ள தாதாத்மியம்.

உ. சகஜதாதாத்மியம்:–அகங்காரத்திற்குச் சிதாபாஸனிலுள்ள தாதாத்மியம்.

கூ. கர்மஜத்தாதாத்மியம்:–அகங்காரத்திற்கு ஸ்தூலதேகத்திலுள்ள தாதாத்மியம்.

* உ0. தாபம் கூ:–துக்கம்.

க. அத்தியாத்மம் :–ஸ்தூலசூக்ஷ்மசரீரங்களில் அந்தக்கரண பிராண இந்திரியதேகாதி சங்காதங்களை ஆசரயித்து, காமக்குரோதாதி இரக்தசூலையாதி, வியஸனங்களால் உண்டாகும், வியாதி ஆதியாகிய துக்கங்கள் அத்தியாத்மதாபமாம்.

உ. அதிதைய்வம்:–தெய்வத்தினு லுண்டாகும் சீதம் உஷ்ணம் பெருமழை மழையின்மை மின்னல் இடி பூகம்பமுதலிய துக்கங்கள் அதிதைய்வதாபமாம்.

கூ. அதிபூதம்:–தனது சரீரத்திற்கு வேறுகிய நேத்திராத்திற்கு விஷயமாகும் பிராணி(திருடர்

*உ0. முத்கலோபநிஷதம்.

புலி சத்துரு முதலான பூதாதி)களால் உண்டா
கும் துக்கம் அதிபூததாபமாம்.

நாதமுதலியன கூ :-

க. நாதம் :-ஓங்காரம் அல்லது சத்தகுணம்
அல்லது பரைமுதலிய(சு)வாக்குகள்.

உ. விந்து:-ஓங்காரத்தின் அலகூழியார்த்தமா
கிய துரியபதம்.

கூ. கலை:-ஓங்காரத்தின் அகாராதி மாத்திரை;
பரைவாக்காகிய அமிசம்(சத்தத்தின் அவயவம்).

நிவிருத்தி கூ:-(தாதாத்மியத்தின்)

க. பிரமஜத்தின் நிவிருத்தி :- ஞானத்தினல்
பிராந்தி(அவிவேகம்)நாசமாக, பிரமஜதாதாத்மி
யத்தின் நிவிருத்தி யுண்டாகின்றது.

உ. சகஜத்தின் நிவிருத்தி:-சகஜதாதாத்மியத்
திற்கு ஞானத்தால் பாதமும், ஞானியின் தேகம்
விழுந்தபின் நாசமு முண்டாகின்றது.

கூ. கர்மஜத்தின் நிவிருத்தி:-ஞானியின் கர்மஜ
தாதாத்மியம் பிராரத்தபோகம் முடிவாகவே நிவ
ர்த்தியாகின்றது.

பாபகருமபயன். ங:-

க. உத்கிருஷ்டம்:-பிரஹ்மஹத்தி, ப்ரூணஹத்தி(சிசுக்கொலை)குருபத்நியைக் கூடுதல் முதலியன உத்கிருஷ்டபாதகங்கள். இவைகளைச் செய்வோன் எவரும் பரிதாபப்படும் சிம்ஹரம், சர்ப்பம், தேள், தம்சகம்(குழவி கொசுமுதலியன), மலப்புழு, நாய், சுவபசன்(நாய்மாமிசமுண்ணும் சண்டாளன்), முள்விருக்ஷங்கள் முதலான தாமஸசரீரங்களைப் பயனுக அடைகின்றான்.

உ. மத்யமம்:-திருட்டு, பொய், பிறரைவஞ்சித்தல், பாஸ்த்ரீசங்கமுதலியன மத்யமபாபங்கள். இவைகளைச் செய்வோன் எருமை, குதிரை, கழுதை, சீலைப்பேன், கொசு, மா, பலா, தெங்கு முதலான தாமஸராஜஸசரீராதிகளைப் பயனுக அடைகின்றான்.

ங. சாமாந்யம்:-ஈ எறும்பு ஆடு முதலான வைகளை இம்சித்தல் சாமாந்யபாபங்கள். இவைகளைச் செய்வோன் பசு, யானை, அரசு, துளசி, பூங்கொத்து, கொடிகள் முதலான ராஜஸசரீரங்களைப் பயனுக அடைகின்றான்.

பிரபஞ்சம் ங:-சமஷ்டிவ்யஷ்டியாகியமூன்று

சரீரம், பஞ்சகோசம், மூன்றவஸ்தை முதலிய நாமரூபங்கள்.

க. ஸ்தூலம். உ. சூக்ஷ்மம். ங. காரணம்.

* உக. பிரஹ்மத்தின் ரூபம் ங:-

க. சகளம். உ. சகளநிஷ்களம். ங. நிஷ்களம்.

பிரஹ்மம் ங:-

க. விராட்டு. உ. இரணியகர்ப்பன். ங. ஈசுவரன்.

* உஉ. பிராணயாமம் ங:-

க. பூரகம். உ. கும்பகம். ங. இரேசகம்.

பிரார்த்தம் ங:-

க. இச்சை:-தனது இச்சையாற்செய்யப்பட்ட பிரஷ்ட (தீர்த்த) யாத்திரைகளால் உண்டாகும் சுகதுக்காதிகள் இச்சாபிரார்ப்த மெனப்படும்.

உ. பரவிச்சை:-சமாதி அல்லது உத்தான அவஸ்தைகளில் சிஷ்யன் அல்லது புண்ணியவா

---

*உக. சாண்டில்யோபநிஷத்து ங-வது அத்யாயம்.

*உஉ. அமிர்தநாதோபநிஷத்து முதலியன.

ன்களான பக்தர்களால் தனது இச்சையில்லாம லேகொடுக்கப்படும் அந்நாதிகளும், அதனாலுண் டாகும் சுகாதிகளும், நிந்தகன் பொருமையுள்ள வன்கொடியன்பன்றி துஷ்டசித்தமுடையோன் துவேஷிமுதலானவர்களால் செய்யப்படும் நிந் தை பீடையாதிகளாலுண்டாகுந் துக்காதிகளு ம்பரேச்சாபிராரப்த மெனப்படும்.

கூ. அநிச்சை:—தன்னிச்சையும் பிறரிச்சையுமி ன்றி, ஆகாயத்திருந்து விழும் பழம்போல, அக ஸ்மாத்தாக(நிமித்தமில்லாது)தனக்கிஷ்டமில்லா தபாறை யிடிந்து விழுதல் முள்தைத்தல் முதலா னவைகளாலுண்டாகும் துக்காநுபவமும், தனக் கிஷ்டமான தாலம்(பனை), மா, பலாமுதலான பழங்கள் விழுவதாலுண்டாகும் சுகாநுபவமும் அநிச்சாபிராரப்த மெனப்படும்.

பிராரப்தகருமம் கூ:—

*உகூ. க. மந்தம். உ. தீவிரம். கூ. தீவிரதரம்.

புண்ணியகருமபயன் கூ:—

க. உத்கிருஷ்டம்:—உபாசனையால் ஸ்திரண்ய

*உகூ. விசாரசாகாம் எ-வது தரங்கம் எழுபத்து ரீரசங்கத்தில் இதன் விரிவைப் பார்க்க.

கர்ப்பசரீரப்பிராப்தியைக் கொடுப்பது உத்கிருஷ்ட புண்ணியகருமபயன்.

உ. மத்யமம்:—சகாமகர்மங்களால் இந்திராதி சரீரப்பிராப்தியைக் கொடுப்பது மத்யம புண்ணியகருமபயன்.

ஊ. சாமாந்யம் :— யக்ஷராக்ஷஸ்ராதிசரீரப் பிராப்தியைத் தருவது சாமாந்யபுண்ணியகருமபயன்.

*உச. மஜ்ஞாசாதி ஈ:—

க. மஜ்ஞாசம். உ. வர்சஞக்ஷயம். ஊ. தத்துவஞானம்.

மிசிரகருமபயன் ஈ:—

க. உத்கிருஷ்டம் :—நிஷ்காமகர்மாநுஷ்டான முதல் நிர்விகற்பசமாதிபரியந்த முள்ள சகல சாதனங்களையுமடைதற்குரிய சரீரப்பிராப்தி உத்கிருஷ்டமிசிரகருமபயனும். புண்ணியமிகுந்த அந்தச் சரீரத் துண்டாகும் ஆதிவியாதி(சாரீரமான ச)துக்காநுபவங்கள் அற்பபாபத்தின் பயனும்.

---

*உச. அக்நிபூர்ணைபநிஷத்து, முக்திகோபநிஷத்து.

உ. மத்யமம்:—புண்ணியபாபம் சமமாயிருத்தலால் தனது வருணச்சிரமங்களுக்குரிய காமிய நிஷித்த நித்திய நைமித்திகாதி கர்மானுஷ்டானுதிகள் அடைதற்குரிய சரீரப்பிராப்தி மத்யமமி சிரகரும பயனும்.

ங. சாமாந்யம்:—பாபமிகுதியால் சண்டாளன் வேடன் அல்லது குதிரைமுதலான பசுவாதிகளின் சரீரப்பிராப்தி சாமாந்யமிசிர கருமபயனும்.

மூர்த்தி ங:—

க. பிரஹ்மா. உ. விஷ்ணு. ங. சிவன்.

* உரு..வாசனை ங:—

க. லோகவாசனை :—என்னை உலகம் நிந்திக்காகாது, எல்லோரும் என்னைத் துதிக்கவேண்டும் என்னும் ஆக்கிரகத்தின் திடஸம்ஸ்காரம்.

உ. தேகவாசனை :—ஸ்தூலசூக்ஷ்மதேகங்களின் ரோகாதிரூப அல்லது பாபரூப மலங்களை ஔஷதாதிகளாலாவது அல்லது தீர்த்தயாத்திரையினுலாவது அடியோடு நீக்குவேன். அன்றி

*உரு. முக்திகோபநிஷத்திலும், ஸ்ரீபஞ்சதசீ தியானதீபம் கசை-வது சுலோகத்திலும், அதன் டிப்பணத்திலும் இதன் விளைவைக் காண்க.

யும், அவற்றின்கண் புஷ்டியழகுமுதலியவடிவ அல்லது புண்ணியவடிவ குணத்தைச் சம்பாதிப் பேன் என்னும் ஆக்கிரகத்தின் திடஸம்ஸ்காரம்.

ங. சாஸ்திரவாசனை :—சகலசாஸ்திரங்களின் பாடத்தையாவது அர்த்தத்தையாவது அல்லது அந்தந்தச் சாஸ்திரத்திற் கூறிய ஆசரணத்தை (நடையை)யாவது யான்தரிப்பேன் என்னும் ஆக்கிரகத்தின் திடஸம்ஸ்காரம்.

வாதமுதலியன ங:—

க. வாதம்:—குருசிஷ்யசம்வாதம்.

உ. ஜல்பம் :—யுக்திப்பிரமாணங்களில் வல்ல பண்டிதர்கள் பரமதத்தினைக் கண்டித்துத் தம் மதத்தைப் போஷிக்கும் வாதம்.

ங. விதண்டை:—மூர்க்கர்களது பிரமாணயுக்தியில்லாத வாதம்; அல்லது தன் பக்ஷத்தை ஸ்தாபித்துப் பரபக்ஷத்தைக் கண்டித்தல். இது ஸ்ரீ ஹர்ஷமிசிராசாரியர் கண்டன கிரந்தத்தில் செய்திருப்பது போன்றதாம்.

விதிவாக்கியம் ங:—

க. அபூர்வவிதி :—அபூர்வக்கிரியையை விதிக்கும் வாக்கியம்.

உ. நியமவிதி:—அடையப்பட்ட இரண்டு பக்ஷங்களில் ஒன்றை விதிக்கும் வாக்கியம்.

ங. பரிசங்கியாவிதி:—இரண்டு பக்ஷத்தில் ஒன்றன் நிஷேதத்தை விதிக்கும் வாக்கியம்.

வேதத்தின் காண்டம் ங:—

க. கர்மம்:—தர்மாதிநான்கு புருஷார்த்தங்களையடைவிக்கும் சாதனங்களைக் கூறும் சர்வார்த்தப்பிரகாசகசர்வஞ்ஞகற்பிதமான சங்கீர்ண(கலப்பு)வாக்கியங்களோடு கூடிய வேதவடிவான ஒரு விருக்ஷம் பிருக்கின்றது.

அதற்கு ஸ்ரீவியாசர்முதலான ஆசாரியர்களால் கலியில் ஜீவர்களுடைய மந்தபுத்தியை யுத்தேசித்து, இருக்குமுதலிய நான்கு பிரிவுகள் விருக்ஷங்களின் கிளைகள்போல மும்மூன்று காண்டங்களாக வெவ்வேறு அமைக்கப்பட்டிருக்கின்றன.

அவற்றுள், காமியம், நிஷ்காமியம், நித்தியம், நைமித்திகமெனப் பற்பல கருமங்கள் பிரயோகங்கள் அநுஷ்டானங்கள் முதலானவைகளாகப் பலகர்த்தாக்களால் ஜீவர்கள் கருமமார்க்கத்தில் பிரவர்த்திக்கும்பொருட்டுக் கூறப்பட்டுள்ளன. அவை கருமகாண்டங்களாம். அதிகாரிகள் சாஸ்

திராதுசாரமாக எதை யநுஷ்டித்துச் சுவர்க்காதி களையும் அந்தக்காணசுத்திமுதலானவைகளையும் பயனுக வடைகின்றார்களோ, அந்தக் கருமகாண்டங்களின் பொருளை நிச்சயிக்க, ரிஷிகள் முனிவர்களால் அமைக்கப்பட்ட நூல்கள் தருமசாஸ்திரங்களாம்.

உ. உபாசனை :—எதில் சகுணநிர்க்குண பேதங்களும், பிரதீக அகங்கிரஹ பேதங்களும், சாதனவடிவ பலவடிவ பேதங்களும், ஒன்பதுவித பக்திபேதங்களும், பலவித பகவத் உபாஸனைகள், அநுஷ்டானங்கள், அதிகாரிகள், பயன் முதலியனவும், அதிகாரிகளுக்கு உபாஸனையின்பொருட்டுச் சொல்லப்படுகின்றனவோ, அது உபாசனாகாண்டமாம். எதை யநுஷ்டித்து, உபாசகன் சித்த ஏகாக்கிரவாயிலாகப் பரம்பரையாகச் சகுணநிர்குணபிரஹ்மப்பிராப்தியாகிய பயனை யடைகின்றானோ, அந்த உபாசனாகாண்டப்பொருளை நிச்சயிக்க, ரிஷிகள் முனிவர்கள்முதலானவர்களால் செய்யப்பட்ட நூல்கள் உபாசனாசாஸ்திரங்களாம்.

ஊ. ஞானம்:—எது ஆத்மஸ்வரூபமாக நிற்றலை யல்லது அவித்தியாநிவிருத்திவடிவ மோக்ஷத்தின் சாதனங்களைக் கூறுகின்றதோ, மோக்ஷ

அபரோக்ஷஞானத்திற்குச் சாதனமாக யஞ்ஞா தி சமாதி சிரவணதிவடிவ பகிரங்கஅந்தரங்கசா தனங்கள், அதனதிகாரிகள் முதலானவற்றை விர க்தர்களினது பிரவிருத்தியின் பொருட்டுக் கூறு கின்றதோ, அது பிரஹ்மகாண்டமாம். எதைப்ப டிப்பதால் புருடன் ஞானவாயிலாக ஜீவன்முக் திவிதேகமுக்திவடிவப் பயனை யடைகின்றனனை, அந்த ஞானகாண்ட அர்த்தத்தை நிர்ணயிக்க, ஸ்ரீமத் வியாசர், சங்கரர், விசுவேசர், வஸிஸ்டர் மு தலான பல ஆசிரியர்களா லமைக்கப்பட்ட நூல் கள் கௌணவேதாந்த சாஸ்திரங்களாம். வேதா ந்தவடிவானஉபநிடதங்கள் முக்கியவேதாந்த சா ஸ்திரங்களாம்.

ஜாக்கிரம் ஈ :–

க. ஜாக்கிரஜாக்கிரம்:–வர்த்தமான ஜாக்கிரத் தில் உண்டாகும் சொரூபசாகூாத்காரம்.

உ. ஜாக்கிரசோப்பனம் :–ஜாக்கிரத்தில் உண் டாகும் சென்ற அல்லது இனி வரும் விஷயங்க ளைச் சிந்தித்தலாகிய மனோராஜ்யம்.

ஈ. ஜாக்கிரசுழுத்தி :–ஜாக்கிரத்தில் பிராத்தி யிஞல் உண்டாகும் ஜடசொரூபமாகிய விருத்தி.

ஜீவன் கூ :-

க. பாரமார்த்திகன் :- சாக்ஷி(கூடஸ்த)சேதனம்.

உ. வியாவகாரிகன் :-சாபாஸ அந்தக்கரண ரூபஜீவன்.

கூ. பிராதிபாஸிகன் :-சாபாஸ அந்தக்கரண ரூப வியாவகாரிகஜீவனிடத்திற் சொப்பனத்தில் அத்தியஸ்தமாகும் ஜீவன்.

*உசூ. க. விசுவன் :-ஜாக்கிரத்தில் மூன்று தேகத்திற்கும் அபிமானியாகிய ஜீவன்.

உ. தைஜஸன்:-சொப்பனத்தில் ஸ்தூலதேகத்தினபிமானத்தை விட்டுச், சூக்ஷ்மம் காரணமென்னும் இரண்டு தேகங்களின் அபிமானியாயுள்ள அதே ஜீவன்.

கூ. பிராஜ்ஞன் :-சுழுத்தியில் ஸ்தூலசூக்ஷ்ம தேகங்களின் அபிமானத்தை விட்டுக், காரண தேக மொன்றையே அபிமானித்துள்ள அதே ஜீவன்.

---

*உசூ. பைங்கலம், வராகம்.

நால்வகைப்பதார்த்தங்கள்.

அநுபந்தம் ச :–தன்னை அறிந்த பிறகு புருஷனைக் கிரந்தத்தில் பொருத்துவது.

க. அதிகாரி:–மலவிக்ஷேபதோஷங்களில்லாது, அஞ்ஞானதோஷமுள்ளவனும், விவேகமுதலிய நான்கு சாதனங்களோடுகூடிய புருஷன் வேதாந்தத்திற்கு அதிகாரி.

உ. விஷயம் :–பிரஹ்மாத்மைக்கியம் வேதாந்தசாஸ்திரத்தின் விஷய(பிரதிபாத்திய)மாம்.

ங. பிரயோஜனம் :–சகல துக்கநிவிருத்தியும் பரமானந்தப்பிராப்தியுமாகிய மோக்ஷம் வேதாந்தத்தின் பிரயோஜனம்.

ச. சம்பந்தம் :–கிரந்தத்திற்கும் விஷயத்திற்கும் பிரதிபாதகப்பிரதிபாத்தியத்தன்மையாகிய சம்பந்தமாம்.

*உஎ. அந்தக்கரணம் ச :–

க. மனம் :–சங்கற்பவிகற்பமாகிய விருத்தி; ஸ்தானம் கண்டம்.

---

*உஎ. பைங்கலோபநிஷத்து, யோகசிகோபநிஷத்து.

உ. புத்தி :–நிச்சயமாகிய விருத்தி ; ஸ்தானம் முகம்.

கூ. சித்தம் :–சிந்தி(ஸ்மரி)த்தலாகிய விருத்தி; ஸ்தானம் நாபி.

ச. அகங்காரம் :–அகந்தையாகிய விருத்தி ; ஸ்தானம் ஹிருதயம்.

அவச்சேதகம் ச :–வேறுபிரித்தறிவிப்பதான வியாவர்த்தகத்தினை அவச்சேதக மென்பர்.

க. விசேஷணம் :–தனது ஆசிரயத்தின் சொரூபத்தில் பிரவேசித்து, அவ்வாசிரயத்தினைப்பிற பதார்த்தங்களினின்றும்வேறுபிரித்தறிவிப்பது.

(உ-ம்) நீலக்குடத்திலுள்ள நீலநிறம் தனது ஆசிரயமாகிய குடத்தின் சொரூபத்தில் பிரவேசித்து, அக்குடத்தை மற்றவெண்குடமுதலியவற்றினின்றும் வேறுபிரித்தறிவிப்பதாயிருப்பது போல.

உ. உபாதி :–தனது ஆசிரயத்தின் சொரூபத்தில் பிரவேசியாது, அவ்வாசிரயத்தினைப் பிறபதார்த்தங்களினின்றும்வேறுபிரிவித்தறிவிப்பது.

(உ-ம்)கடம் தனது ஆசிரயமாகிய கடாகாயத்தின் சொரூபத்திற் பிரவேசியாது, அக்கடாகாயத்தினை மற்ற மடாகாய முதலியவற்றினின்றும் வேறுபிரித்தறிவிப்பதா யிருப்பதுபோல.

ங. உபலக்ஷணம் :–யாதானும் ஓர்காலத்தில் ஓர்தேசத்தி லிருப்பதாய்த் தனது ஆசிரயத்தைப் பிறவற்றினின்றும் வேறுபிரித்தறிவிப்பது.

(உ-ம்)காகம் யாதேனும் ஓர்காலத்து ஓர்தேசத் திருப்பதாய்த் தனது ஆசிரயமான தேவதத்த னது வீட்டை மற்றைய வீடுகளினின்றும் வே றுபிரித்தறிவிப்பதா யிருப்பதுபோல.

ச. உபாஞ்சகம்:-இயல்பாய்ப் பெறப்பட்டதர் மமாய்த் தனது ஆசிரயத்தை வேறுபிரிவித்தறி விப்பது.

(உ-ம்) நிரவயவத்தன்மை, விபுத்தன்மை, சே திக்கப்படாமைமுதலியன இயல்பாய்ப்பெறப்ப ட்ட தர்மமாய்த் தம் ஆசிரயமாகிய ஆகாயத்தை வேறுபிரித்தறிவிப்பதுபோல.

அவச்சேத்தியம் ச :–வேறுபிரித்தறிவித்தலா கிய அவச்சேத முடையதனை †அவச்சேத்தியம், ‡அவச்சின்னம், வியாவிருத்தம், வியாவர்த்தியம், வியாதர்த்தநீயம் என்பர்.

---

†அவச்சேத்தியம் = வியாவர்த்தியம் = வியாவர்த்தனீயம் = } வேறுபிரித்தறிவிக்கத் தக்கது.

‡அவச்சின்னம் = வியாவிருத்தம் = வேறுபிரித்தறி விக்கப்பட்டது.

க. விசிஷ்டம் :–விசேஷணமுடையது.

உ. உபகிதம் :–உபாதியுடையது.

ங. உபலக்ஷிதம் :–உபலக்ஷணமுடையது.

ச. உபரஞ்சிதம் :–உபரஞ்சகமுடையது.

*உஅ. அவஸ்தை ச :–

க. ஜாக்கிரம். உ. சொப்பனம். ங. சுழுத்தி. ச. துரியம்.

*உக. அவஸ்தாஸ்தானம் ச :–

க. ஜாக்கிரஸ்தானம் நேத்திரம். உ. சொப்பனஸ்தானம் கண்டம் ங. சுழுத்திஸ்தானம் இருதயம். ச. துரியஸ்தானம் உச்சி.

ஆசிரமம் ச :–

க. பிரஹ்மசரியம் :–கர்ப்பாதானம் ஜாதகர்ம முதலிய ஸம்ஸ்காரங்களேநெடுகூடிய எட்டு அல்லது பத்துவருஷ ஆயுளான காலத்தில் மூன்று

---

*உஅ. *உக. பிரஹ்மோபநிஷத்து, சாரீரகோபநிஷத்து, பரப்பிரஹ்மோபநிஷத்து.

வருண்த்தாராலும் சாவித்திரியோடு கூடிய யஞ் ஞோபவீதசம்ஸ்கார மானபின் வித்தைகற்கும் பொருட்டுக்குருகுலவாசம் செய்தல் **பிரஹ்மச** ரிய ஆசிரமமாம்.

ஸ்த்ரீசம்பாஷணை முதலிய எட்டு அங்கங்களி ன் அபாவவடிவமும், குருசுசுரூஷை முதலியன வும் பிரஹ்மசாரியின் அசாதாரணதருமங்களாம்.

அந்தப் பிரஹ்மசர்யம் (க) நைஷ்டிகம், (உ) உபகுர்வாண மென்று இரண்டு வகைப்படும்.

(க) குருவிடம் வித்தைகற்றபின் மரணபரியந் தம் விஷயப்பற்றின்றி வைராக்கியமுடையவனு யிருத்தல் **நைஷ்டிகபிரஹ்மசரியமாம்.**

(உ) வைராக்கிய மில்லாவிடின் வித்தைகற்ற தற்குக் குருதக்ஷணை கொடுத்துத் தன்து தர்மங் களில் நிலைத்தல் உபகுர்வாணபிரஹ்மசரியமாம்.

உ. **கிருகஸ்தம்** :–குருகுலவாசம் செய்வதில் வைராக்கியாதிகள் உண்டாகாமலும், ராகாதி(ப ஞ்சக்கிலேசாதி)களால் தடுக்கப்படாமலு மிருந் தால், குருதக்ஷணை கொடுத்தபிறகு, புத்தோத்ப த்தியின் பொருட்டுத் தன்குலத்துள்ள ஸ்த்ரீயை வரித்தல் கிருஹஸ்தாச்சிரமமாம்.

அவ்வாச்சிரமத்தில் தனக்குப் பரம்பரையாக க் கிடைத்த விருத்தியை(தொழிலை)க்கொண்டுத் தருமமாகத் தகாதிகளைச் சம்பாதித்து, அதில் நான்கு பங்கைக்கொண்டு பகவத்காரியங்களையும் மற்றவைகளால் தன்குடும்பாதிகளையும் இரக்ஷித்தல் கிருகஸ்தனது அசாதாரணதருமங்களாம்.

பகவத்பக்தி, சாதுசேவை, வேதாந்தசிரவணாதிகள் கிருஹஸ்தனது சாதாரணதருமங்களாம்.

ங. வானப்பிரஸ்தம்:–தான் வரித்தஸ்த்ரீயினிடத்துப் புத்திரோத்பத்தியான பின்னும் விஷயாதிகளில் வைராக்கிய முண்டாகாவிடின், சரீர இந்திரியாதிகளை வாட்டுதற்கு அரண்யம்(காடு) அல்லது மலையின்குகை முதலானவற்றில் வசித்தல் வானப்பிரஸ்தாச்சிரமமாம்.

கிருஷ்ட(உழுதுபயிரிட்ட)அல்லது சமைத்த அந்நங்களாலும், கந்தமூலபலங்களாலும், பரமேசுவரனைப் பூசித்துச் சரீரயாத்திரையின்(தேகஸ்திதி)பொருட்டு அதனைப்புசித்துக் கிரீஷ்ம முதலான ஆறு ருதுக்களின் குணங்களைத் தன் சிரசாலேற்றுச் சகித்தல் வானப்பிரஸ்தனது அசாதாரணதருமங்களாம்.

சு. சந்நியாசி:—அதன்பின் விஷயாதிகளில் வைராக்கியத்தோடு சாஸ்திரவிசாரத்தினால் சகலவிதகருமங்களையும் விட்டு, ஞானமடையும்பொருட்டுத் தண்டதாரணாதி பிரேஷமந்த்ர உச்சாரணத்தோடுகூடிய சன்னியாசத்தையடைதல் சன்னியாச ஆசிரமமாம்.

அதனையே யதியாச்சிரம மென்றும், கிரமசன்னியாச மென்றும் சொல்லுவர்.

என்று வைராக்கியமுண்டானதோ, அன்றே அங்கீகரிக்கப்படும் சமதமாதி தர்ம அநுஷ்டானங்களும், ஓங்கார உபாசனையும், குருமுகமாகச் செய்யும் வேதாந்தசிரவணாதிகளும், சர்வபூதங்களிடத் திரக்கமும், ஸ்த்ரீதனாதிகளின் ஈக்ஷமுமாகிய இவ்வெல்லாம் பரமஹம்சசந்நியாசியின் அசாதாரணதருமங்களாம்.

நான்குவருணத்தாருக்கும் நான்கு ஆச்சிரமங்களின் சாதாரண அசாதாரண பேதமுடைய அநேகதருமங்கள் சுருதிஸ்மிருதிகளிற் கூறியுள்ளன. அவற்றுட் சில உபயோகமாகும் தருமங்கள் திசைமாத்திரத்தைக் காட்டுவதுபோல இங்குக் கூறப்பட்டிருக்கின்றன.

ஆர்த்தன்முதலிய பக்தர் சு :-

க. ஆர்த்தன் :-அத்தியாத்மமுதலிய துக்கங்களால் வியாகூலமுள்ளவன்.

உ. ஜிஜ்ஞாசு :-பகவானது உண்மையை அறியுமிச்சை யுடையவன்.

ங. அர்த்தார்த்தி :-இகலோகபரலோக போகங்களில் இச்சையுடையவன்.

சு. ஞானி :-ஜீவன்முக்தனாகிய வித்துவான்.

உற்பத்திமுதலிய கிரியைகள் சு :-இங்கேகிரியை என்னும் சப்தத்தால் கிரியையாகிய கர்மத்தின் பலம் சொல்லப்படுகின்றது.

க. உற்பத்தி :-முத்தற்கணம்(ஜன்மம்). குலாலனது கிரியைக்குப் பயனாகிய குடத்தின் உற்பத்திபோல.

உ. பிராப்தி :-நடத்தலென்னும் கிரியையின் (இச்சித்த இடத்தை அடைதலாகிய) பலம்.

ங. விகார்ம் :-அங்கியவுருவத்தை யடைதல். சமையற்கிரியை(தொழிலு)க்குப் பயனாகிய அந்நத்தின் விகாரம்(திரிபு)போல.

ச. சம்ஸ்காரம் :–(க)மலத்தின் நிவிருத்தி,

(உ) குணத்தின் பிராப்தி என்னும் பேதத்தால் சம்ஸ்காரம் இரண்டுவகையாம்.

(க) வஸ்திரத்தைக் கழுவுதலாகிய கிரியைக்குப் பயனுகிய மலநிவிருத்திபோலும்.

(உ) குசும்பாவில் வஸ்திரத்தை நனைத்தலாகிய கிரியைக்குப் பயனுகிய இரத்தகுணத்தின் உற்பத்திபோலும்.

சத்தப்பிரவிருத்தியின் நிமித்தம் ச :–

க. ஜாதி :–பிராஹ்மணன், அசுவம், பசு என்பன ஜாதிசப்தங்கள். அவை பிராஹ்மணர் முதலான வியக்திகளிலுள்ள பிராஹ்மணத்துவாதி ஜாதிகளைக் கொண்டு, சுரோதாவினிடத்துச் சக்தியை அங்கீகரித்தல்வாயிலாகத் தமது அர்த்தத்தைப் போதிப்பனவாய், ஜாதிவிசிஷ்ட வியக்தியின் ஸ்மரணையை உண்டாக்குகின்றன.

உ. குணம் :–வெண்மை, செம்மைமுதலிய குணசப்தங்கள். அவையும் தமது ஆசிரயமான திரவியத்துள்ள வெண்மை செம்மைமுதலான

குணங்களைக் கொண்டுச் சுரோதாவிற்கு விசிஷ்டமாகிய தமது அர்த்தத்தை யறிவிப்பனவாகின்றன.

ங. கிரியை :—சமைப்போன், பாடகன் என்பன கிரியாசப்தங்கள். அவையும் சமைத்தல்படித்தல் வடிவக்கிரியைகளை, நிமித்தமாகக்கொண்டு கிரியையுடையவனைச் சுரோதாவிற் கறிவிப்பனவாகின்றன.

ச. சம்பந்தம் :—தனிகன், கோபாலன், புத்திமான் என்பன சம்பந்தசப்தங்கள். அவையும் தனதிவிசேஷணங்களின் பிரவிருத்திநிமித்தங்களால் சுரோதாவினிடத்துத் தமது அர்த்தத்தை யறிவிப்பன வாகின்றன.

சந்நியாசம் ச :—

*ஙo. குடீசகம். உ. பகூதகம். ங. ஹம்ஸம். ச. பரமஹம்ஸம்.

சமாதிவிக்கினம் ச:—

க. இலயம். உ. விக்ஷேபம். ங. கஷாயம். ச. இரஸாஸ்வாதம்.

---

*ஙo. பிக்ஷுகோபநிஷத்து, சாட்யாயனோபநிஷத்துமுதலியன.

இதன் விரிவை, விசாரசாகரம் ஏழாவது தரங்கம் சசுகூ. சஎஉ. வரையிலுள்ள பிரசங்கங்களிற்காண்க.

சித்தநிரோத(சித்தத்தைஜயிக்கும்)யுக்தி ச:—

க. அத்தியாத்மவித்தை :—ஸ்ரீகுருப்பிரசாதத்தாற் கிட்டிய தத்துவம்பதார்த்தவிசாரத்தினுலுண்டாகும் பிரஹ்மாத்மஐக்கியவிஷயமாகிய ஞானத்தின் பிராப்தி அத்தியாத்மவித்தையாம்.

அல்லது சுரோத்திரியரும் பிரஹ்மநிஷ்டருமாகிய குருமுகமாக வேதாந்தசாஸ்திரங்களை விதியோடு கிரகித்தல், அத்தியாத்மவித்தையாம்.

உ. சாதுசங்கம்:—ஜிஞ்ஞாசுவினிதத்தைக் கோருகிறவரும் ஹிதோபதேசத்தினல் சம்சயங்களைச் சேதிப்பவரும், இகலோகபரலோகப் பிரயோஜனங்களை விரும்பாதவருமாகிய சாதுவிற்குச் சிரத்தையோடு செய்யும் சுசுரூஷைமுதலியன சாதுசங்கமாம்.

ங. வாசனத்தியாகம் :—அசாரசம்பத்துவடிவ நாநாவித மலினவாசனைகளை, அவைகளின் விரோதமான தைவசம்பத்துவடிவ சுத்தவாசனைகளைக் கொண்டு விடுதல் வாசனத்தியாகமாம்.

ச. பிராணயாமம்:–ரேசகபூரகமுதலான அப்பியாசக்கிரமங்களா லுண்டாகும் சுபாவமான பிராணகதியின் நிரோதவடிவம் பிராணயாமமாம்.

சித்தஜயத்திற்குக் காரணமாகிய இந்நான்கில் முதல் மூன்றும் மிருதுல(இலேசான)மார்க்கங்களாம். இவைகளால் சித்தநிரோதமாகாதகாலத்து(க்லிஷ்டமுள்ள)கடினமார்க்கமான பிராணநிரோதவடிவ யுக்தியைக்கொண்டு சித்தஜயம் செய்வது அவசியமாம்.

*ஈக. சிரவணாதி ச:—

*ஈஉ. க. சிரவணம். உ. மனனம். ஈ. நிதித்தியாசனம். ச. சமாதி.

தர்மமுதலியன ச:–நான்கு புருஷார்த்தம்.

க. தர்மம்:–சகாம அல்லது நிஷ்காம புண்ணியம்.

---

*ஈக. அத்தியாத்மோபநிஷத்து.

*ஈஉ. விசாரசாகரம் கூறுவது பிரசங்கத்திற் காண்க.

உ. அர்த்தம் :—இந்தவுலகத்திலும் பாலோகத் திலுமுள்ள போகத்திற்குச் சாதனங்களாகிய திரவியமுதலியன.

ங. காமம்:—இகலோகபரலோகங்களின் போ கம்.

ச. மோக்ஷம் :—அநர்த்தநிவிருத்தி ஆநந்தப் பிராப்தி.

பரிசம் ச :—

க. சீதம் :—துவக்கிந்திரியத்தோடு குளிர்ந்த ஜலாதித்திரவியங்களின் சையோகமானபோது, "இது சீதளமாயிருக்கின்றது" என்னும் துவ க்கிந்திரிய ஜ்ஞியஞானத்திற்கு விஷயமாவது சீதபரிசமாம்.

உ. உஷ்ணம் :—அக்கினிமுதலான உஷ்ணத் திரவியங்களின் சையோகமானபோது, "இது சுடுகின்றது" என்னும் ஞானத்திற்கு விஷயமா வது உஷ்ணபரிசமாம்.

ங. மிருது:—மயிலிறகு, புஷ்பம், மிருதுவான வஸ்திரம் பஞ்சுமுதலிய திரவியங்களின் சை யோகமானபோது, "இது மிருதுவாக விருக்கி ன்றது" என்னும் ஞானத்திற்கு விஷயமாவது மிருதுபரிசமாம்.

ச. கடினம்:—கட்டை ஆயுதம் கல்முதலான திரவியாதிகளின் சையோகமானபோது, "இது கடினமாக விருக்கின்றது" என்னும் ஞானத்திற்கு விஷயமாவது கடினபரிசமாம்.

*ஙஙு. பிரஹ்மவித்துமுதலியோர் சு:—

க. பிரஹ்மவித்து:—நான்காவது பூமியிலுள்ள ஞானி. மஹாவாக்கியவிசாரத்தாலுண்டாகிய ஞானத்தினால் ஆவரண அத்தியாசங்களின் நிவிருத்தியாகப் பூரணநந்தப் பிரஹ்மத்தை பிரத்தியக் ஞானவடிவதத்தால் ஸாக்ஷாத்தாக அறிகிறவன பிரஹ்மவித்தெனப்படுவன். அவனே சத்துவாபத்தி யென்னும் பெயருடைய நான்காம் பூமியிலுள்ளவன். அவனே சுரோத்திரியபிரஹ்மநிஷ்டகுரு. அவனே உபதேசவாயிலாக வேதாந்த சம்பிரதாயங்களில் பிரவர்த்திக்கச் செய்கிறவன். அவனுக்கு இந்த ஜாக்கிரப்பிரபஞ்சம் சொப்பனம் போலத்தோற்றுகிறது. எப்படிச் சொப்பனங்கண் டெழுந்தவன் சொப்பனப் பிரபஞ்சத்தை ஸ்மரிக்தாலுயினும், அதை மித்தையாக மதிக்கின்றானே, அப்படியே இவனும்

*ஙஙு. வராகோபநிஷத்து சு-வது அத்யாயம், பாலபோதம் ருஉ-வது பிரசங்கம்.

பிராரப்தபயனைப் புசிக்கும் காலத்தில் ஜாக்கிர ஜகத்தைக் கண்டபோதிலும் அதை மித்தையாக வே மதிக்கின்றான்.

உ. பிரஹ்மவித்துவரன் :–ஏழ்தாம் பூமியிலுள்ள ஞானி. எவனுக்குப் பிரஹ்மஞானத்தின் பின் புத்திரன் மித்தமுதலான வாசனைகளும், தேக லோக சாஸ்திரவாசனைகளும் நீங்கும்பொருட்டுச் சின்மாத்திரவாசனை மைத்திரிமுதலான விசோதிவாசனை என்பவற்றின் திடதர அப்பியாசமுமுண்டாகி, ஜீவன்முக்தியின்பொருட்டு வாசனை நசித்திருக்கின்றதோ, அவனுக்கே முற்கூறிய பிரஹ்மவித்தினும் வரஞ்தன்மை யுண்டாகின்றது. அவனே அசம்சக்தி யென்னும் பெயரிய ஏழ்தாவது யோகபூமியி லிருப்பவன். அவனே பிரஹ்மவித்வரனெனப்படுகின்றான். அவனுக்கிந்த ஜாக்கிரப்பிரபஞ்சம் சூழ்த்திபோன் றிருக்கின்றது. சூழ்த்தியி லிருப்பவனுக்கு ஸ்வப்னிருத்திகளும் நித்திரையில் ஒடுங்கியிருப்பதுபோல, இவனுக்கும் ஜாக்கிராவஸ்தையில் இந்திரியாதிக ளிருப்பனவாகக் காணப்படினும், அவைகளால் விஷயங்கள் கிரகிக்கப்படாமைபால், சூழ்த்தனுவன். அவனுக்குப் பெரும்பாலும் அடங்கியிருத்திகள்நிர்விகற்பமாகவேயிருக்கின்றன.

ஜடபரதாதிகளைப்போல ஒருகால் உபதேசசத்தி
ன் பொருட்டும் அல்லது சரீர யாத்திரையின்
பொருட்டும் விருத்திகள் எழவும் செய்யும்.

சு. பிரஹ்மவித்வரியான் :—ஆறும் பூமியிலுள்
ள ஞானி. எவன் பிரஹ்மஞானத்தின் பின் வா
சனைகூடியமனோநாசாதிகளால் பூர்ணஞுபிருக்கின்
றனை, அவன் பதார்த்தாபாவினிவடிவ ஆறுவ
து பூமியி லிருப்பவன். அவனே முற்கூறிய வர
னினும் வர(மேலானவ)னாக இருத்தலால பிரஹ்
மவித்வரியா னெனப்படுகின்றன். காடசுழுத்தி
யுடையவன் நித்திரை யினின்றும் தானே விழி
யாது பிறர் எழுப்ப விழிப்பதுபோல, இவனும்
சதாநிர்விகற்பப்பிரஹ்மத்தில் லயமா யிருத்த
லால், அவனுதாதிகளைப்போல தானே உத்தான
தசையை அடைகிறதில்லை; ஒருகால் பிறரால்
விழிக்கவும் கூடும்.

ச. பிரஹ்மவித்வரிஷ்டன்:—ஏழாம் பூமியிலு
ள்ள ஞானி. எந்தப் பிரஹ்மவேத்தாவினுடைய
மனமும் வாசனையும் அத்தியந்தம் நாசமா யிருக்
கின்றதோ, அவன் அந்த அகண்டபிரஹ்மத்தோ
டு தன்மயனு யிருத்தலால், ஒருபோதும் பிறரா
லும் விழிப்படைகிறதில்லை. ஜலநிரப்பிய கடத்
தைத்தடாகத்தில் வைத்தகாலத்தில் அந்தக் கட

த்தின் உள்ளிலும் வெளியிலும் ஜலம் நிறைந்திருப்பது போல, இவன் சஸ்நிராகாத (ஆயுஸ்வெட்டு) முதலான பெருந்துன்பங்களைச் செய்யினும், ஏழாவதாகிய துரியமென்னும் பெயருடைய மோகபூமியி லிருத்தலால் ரிஷபர்முதலியோரைப்போல சொரூபத்தினின்றும் சலிக்கிறதில்லை. இவனே பிரஹ்மவித்வரிஷ்டன்.

பிரமாண்ணம் ச:—பிரமாஞானத்திற்குக் காரணம் பிரமாணம். இக்கே ான்கு பிரமாணங்களைக் கூறுதல் நியாயசாஸ்திரத்தின்படியாம்.

க. பிரத்தியக்ஷம். உ. அநுமாணம். ங. உவமானம். ச. சத்தம்.

புருஷார்த்தம் ச :—

க. தர்மம் :— சுருதிஸ்மிருதிகளா லநுசரித்த காமியகர்மாநுஷ்டானங்களா லுண்டாகும் அபூர்வ(அதிருஷ்ட)ங்களின் பரியாயம்.

உ. அர்த்தம் :—அவை(தர்மங்)களா லுண்டாகின்ற தனுதிபதார்த்தங்களும், சுவர்க்காதி உலகங்களும்.

ங. காமம்:—சகாமபுண்ணியாதிபயனல் தானிச்சித்தபடி இந்திரியாதிகளால் இச்சித்த விஷயங்களைப் புசித்தல்.

ச. மோக்ஷம் :– கர்த்திருத்வாதி சகலபந்த நிவிருத்திபூர்வகமான சித்தத்தின் பிரஹ்மாகார நிலை.

பூதக்கிராமம்(யோனி) ச:-

க. ஜராயுஜம்:-கருப்பையினின்று தோன்றும் மனிதர் மிருகமுதலியன.

உ. அண்டஜம்:– முட்டையினின்று தோன்றும் பறவை பாம்புமுதலியன.

ங. உற்பிஜ்ஜம்:–வித்து வேர் கிழங்கு கொம்பு கொடி முதலியவற்றினின் றுண்டாகும்விருக்ஷமுதலியன.

ச. சுவேதஜம்:– வேர்வைமுதலியவற்றினின்றுதோன்றும் பேன் மூட்டுப்பூச்சிமுதலியன.

பூஜாபாத்திரம் ச:–

க. பிரஹ்மநிஷ்டர்:–அசம்பாவனா விபரீதபாவனையின்றிய பிரஹ்மசாக்ஷாத்காரமுடையவரும், சர்வகாமநிவிருத்தரும், இந்த ஜகத்தைமித்தையாகக் காண்பவரும் எவரோ, அவர் பிரஹ்மநிஷ்டர்.

உ. முமுக்ஷு:– எவன் விஷயபோகங்களினிச்சையை விட்டு,விவேகவைராக்கியாதி சாதனங்

களோடு மோக்ஷ மொன்றையே விரும்புபவனு யிருக்கின்றானே, சுரோத்திரியரும் பிரஹ்மநிஷ் டருமாகிய குருவை ஈசுவரபுத்தியாகச்சேவை செய்கின்றானே, வேதாந்தசிரவணர்த்தங்களெல் லாம் எவனைத் தஞ்சமாக வடைகின்றனவோ, அவன் முமுக்ஷு.

ங. பக்தன்:— ஆத்மநிவேதனமுள்ள ஹரிதா ஸன்.

ச. சுவதர்மநிஷ்டன் (தன்வர்ணாசிரமதர்மத்தி ல் நிற்பவன்).

*ஞ. மைத்திரிமுதலியன சு:—

†க. மைத்திரி:—பணமுள்ளவனிடத்திலாவது, குணத்திலுற சமானமானவனிடத்திலாவது, ஈசு வராபத்தனிடத்திலாவது, விஷயி கர்மி உபாசகர்க

*ஈச வர சோபதிஷத்து

† கன்குறுவார் தமபா னட்டை
காடன்மைத் திரிபா மிக்கத்
துன்புறுவார் தமபா னன்னர்
தயக்கிரங்ல் கருணை யாகு
மின்புறுவார் தம்மை நோக்கி
யின்புறுதன் முதிதை பாவ
வன்கணார்பால் வேட்கை கோப
மருவிடாமை யுபேகை யாகும். (க)

ளிடத்திலாவது "இவர்கள் என்னுடையவர்கள்" என்றுண்டாகும் புத்தி.

உ. கருணை:- துக்கமுடையவன், குணத்தினால் தாழ்ந்தோன், அஞ்ஞானி, ஜிஞ்ஞாசு என்னுமிவர்களிடத்திலுள்ள இரக்கம்.

ங. முதிதை:- புண்ணியவான், குணத்தினால் மேற்பட்டவன், ஈசுவரன், முக்தன் என்னுமிவர்களிடத்திலுள்ள பிரியம்.

ச. உபேகூஷ:- பாவி, அவகுணன், துவேஷி, பாமரன் என்னுமிவர்களிடத்திலுள்ள இராகத்துவேஷமில்லாமையாகிய உதாசீனத்தன்மை.

*ஈடு. மோகூஷத்துவாரபாலகர் ச:-

மைத்திரியே முதலா நான்கு
மருவிடுதல் வுள்ளத் தென்றும்
தொத்துமற் சரமே யிஞ்சை
துயர்தருதிப் பொருமை யாதி
பித்துறுதர்க் குணங்க ணீங்கிப்
பெரியபொரு ளிலகா நிற்கு
முத்தரிட மியற்கை யாக
முன்றுமே யிந்த நான்கும். (உ)

---

*கடு. மகோபநிஷத்து ச-வது அத்யாயம்.

க. சமம். உ. சந்தோஷம். கூ. விசாரம்(விவேகம்). ச. சாதுசங்கம்.

யோகபூமி ச:—

க. வாக்குலயம். உ. மனோலயம். கூ. புத்திலயம். ச. அகங்காரலயம்.

வருணம் ச:—

க. பிராஹ்மணன். உ. க்ஷத்திரியன். கூ. வைசியன். ச. சூத்திரன்.

வர்த்தமான ஞானப்பிரதிபந்தம் ச:—

க. விஷயாசக்தி:—அநேக அநர்த்தங்களுக்குக் காரணமான ஸ்த்ரீபுத்திராதிவிஷயங்களில் பிராந்தியிலை இது என்னுடைய தென்னும் மமதை புத்தியோடு அங்கீகரித்தவைகளில் மூன் ஸம்ஸ்காரத்தினு லுண்டாகும் திடப்பிரீதி அதாவது அவைகளின் வியோகத்தையும் தியாகத்தையும் சகியாமை அல்லது விசாரகாலத்தில் அவைகளை யடிக்கடி சிந்தித்தல் விஷயாசக்தியாம்.

உ. புத்திமந்தத்தன்மை:—சுரோத்திரியரும் பிரஹ்மநிஷ்டருமாகிய குருவினல் யுக்திப்பிரமாணத்ருஷ்டாந்தங்களோடு அறிவிக்கப்படும் பிரஹ்மாத்மஜக்ஞியவடிவ அர்த்தங்களை நிச்சயபுத்

தியாகக் கிரகியாதிருத்தல், அல்லது விஷயாசக்தியினால் தூலத்தன்மையடைந்த சித்தத்திற்குச் சூக்ஷ்மப்பிரஹ்மவஸ்துவைக் கிரஹிக்கும் சாமர்த்தியமின்மை பிரஞ்ஞாமாந்தியமாம்.

ங. குதர்க்கம் :—ஷட்விதலிங்கங்களாலறிவிக்கப்பட்ட அத்விதீயவேதாந்தார்த்தங்களையாதபசாத்திரத்துள்ள மூலமின்றிய விரோததர்க்கங்களால் விபரீதமாகக் கொள்ளுதல் குதர்க்கமாம்.

ச. விபரீததுராக்கிரகம் :—நான் சுருதியுணர்ந்தவன், பண்டிதன், பூபாலன், விரக்தனென்று தேகேந்திரியாதி அநாத்மாக்களில் ஆத்மபுத்தியைச் செய்தல். அல்லது, பிராந்தியினால் ஆத்மாவிலாரோபித்தவருண ஆச்ரமகர்த்ருத்வபோக்திருத்வ அபிமானதிகளை அசங்க அத்விதீய ஆத்மநிரவணதிகளாகச் செய்துபிதற்றும் விடாதிருத்தல் துராக்கிரகமாம்.

(இங்ஙனங்கில் ஒவ்வாதிருப்பினும் யதார்த்தஞானமுண்டாகாதெனின், யாவு மூடையோனுக்குண்டாகாதென்பதில் என்ன சொல்லவேண்டியிருக்கிறது).

வர்த்தமானஞானப்பிரதிபந்தநிவிருத்தியின் ஏது ச:—

க. சமமுதலியன:—இது விஷயாசக்தியை நிவர்த்திப்பது.

உ. சிரவணம்:—இது புத்தியின் மந்தத்தன்மையை நிவர்த்திப்பது.

ங. மனனம்:—இது குதர்க்கத்தை நிவர்த்திப்பது.

ச. நிதித்தியாசனம்:—இது விபரியயத்தி(விபரீதபாவனையி)லுண்டாகும் துராக்கிரக அகந்தையை நிவர்த்திப்பது.

விவேகமுதலியன ச:—

* ஙசு. க. விவேகம். உ. வைராக்கியம். ங. ஷட்சம்பத்தி. ச. முமுக்ஷுத்துவம்.

வேதம் ச:—

க. இருக்கு. உ. யஜுசு. ங. சாமம். ச. அதர்வணம்.

---

* ஙசு. விசாரசாகரம் பிரசங்கம் எ-முதல் கச-வரையில் பார்க்க.

ஐவகைப்பதார்த்தங்கள்.

*ங. அக்னி நி:—க.சுவர்க்கம், உ. இந்திரன், ங. பிருதிவி, ச. புருஷன், தி. ஸ்த்ரீ.

அஞ்ஞானத்தின் பேதம் நி:—அஞ்ஞானத்தில் வேதாந்தாசாரியர்களின் மதபேதம்.

க. மாயைஅவித்தைவடிவம்:—சிலர்(வித்தியாரண்ணியசுவாமிகள்)அஞ்ஞானத்தை மாயை(சமஷ்டி அஞ்ஞானமய ஈசுவரவுபாதி) அவித்தை(வியஷ்டி அஞ்ஞானமய ஜீவவுபாதி)வடிவமாக ஒப்பியிருக்கின்றனர்.

உ. ஞானக்கிரியாசக்திவடிவம் :— சிலர் அஞ்ஞானத்தை ஞானசக்திக் கிரியாசக்தியாகக் கொள்ளுகின்றார்கள்.

ங. விக்ஷேப ஆவரணவடிவம்:—சிலர் அஞ்ஞானத்தை ஆவரணவடிவ மென்றும், விக்ஷேப(த்திற்கு ஏதுவாகியசக்தி)வடிவ மென்றும் கொள்ளுகின்றனர்.

---

*ங. சாமவேதசாந்தோக்கிய உபநிஷத்தின் நான்காவது அத்யாயத்துள்ள பஞ்சாக்கினிவித்தையிலும் ஸ்ரீபஞ்சதசி தியானதீபம், கக-வது சுலோகவுரையிலும் அதன் டிப்பணத்திலும் காண்க.

ச. சமஷ்டி வியஷ்டிவடிவம்:–சிலர் அஞ்ஞானத்தைச் சமஷ்டி (ஈசுவரவுபாதி) வியஷ்டி (ஜீவவுபாதி) வடிவ மென்று கொள்ளுகின்றனர்.

நி. காரணவடிவம்:–சிலர் அஞ்ஞானத்தை ஜகத்திற்கு உபாதானகாரணமாகிய மூலப்பிரகிருதிமய ஈசுவரவுபாதிவடிவமாகக் கொள்ளுகின்றனர். அந்தப்பக்ஷத்தில் ஜீவன் காரிய (அந்தக்கரண) வுபாதி வுடையவனாகக் கொள்ளப்பட்டிருக்கின்றனன்.

அபாவம் நி:–இல்லை யென்னும் தோற்றத்திற்கு விஷயம்.

க. பிராகபாவம் :–காரியத்தின் உற்பத்திக்கு முன்னுள்ள காரியத்தின் அபாவம் (முன்னின்மை).

உ. பிரத்துவம்சாபாவம் :–நாசத்திற்குப்பின் உண்டாகும் அபாவம் (அழிவுபாட்டின்மை).

ங. அந்நியோந்நியாபாவம் :–ஒன்றிலொன்றின்மை. அது உருவபேதம்போலும், கடபடங்களின் பேதம்போலுமாம்.

ச. அத்தியந்தாபாவம் :–மூன்று காலத்திலுமில்லாமை (முழுதுமின்மை). அது வாயுவில் உருவமில்லாமைபோலும்.

ஙி. சாமயிகாபாவம்: –ஓர் (எடுத்துக்கொள்ளும்)சமயத்தில் பூமிமுதலியவற்றில் உண்டாகும் குடத்தின் அபாவம்.

*ஈஅ. அவஸ்தை ஙி:–

க. ஜாக்கிரம். உ. சொப்பனம். ஈ. சுழுத்தி ச. துரியம். ஙி. துரியாதீதம்.

இயமம் ஙி:–

க. அஹிம்சை (கொல்லாமை). உ. சத்தியம் (வாய்மை). ஈ. பிரஹ்மசரியம் (எண்வகை மைதுனமின்மை). ச. அபரிக்கிரகம்—நிருவாகத்திற்கு அதிகமாகத் தனத்தைக் கொள்ளாதிருத்தல். ஙி. அஸ்தேயம்—கள்ளாமை (திருடாதிருத்தல்).

*ஈகூ. உபவாயு ஙி:—

க. நாகன்:–வாந்திக்கேதுவாகிய வாயு. இருதயம் ஸ்தானம்.

உ. கூர்மன் :–கண்ணிமைத்தற் கேதுவாகிய வாயு. ஆசனம் ஸ்தானம்.

---

*ஈஅ. மண்டலப்பிராஹ்மணோபநிஷத்து.

*ஈக. பிரஹ்மவித்தியோபநிஷத்து, பைங்கலோபநிஷத்து, தியானபிந்துபநிஷத்து.

ஈ. கிரிகரன்:—தும்மலுக் கேதுவாகிய வாயு. நாபி ஸ்தானம்.

ச. தேவதத்தன்:—கொட்டாவி விடுவதற்கேதுவாகிய வாயு. கண்டம் ஸ்தானம்.

டு. தனஞ்சயன்:—வீங்குதற் கேதுவாகிய வாயு. சர்வாங்கம் ஸ்தானம்.

ஏதுப்போலி நு:—(ஹேத்வாபாசம்) ஏதுவின் இலக்கண(சாத்தியத்தின் சாதகத்துவ)மில்லாத தாய், ஏதுவைப்போலத் தோற்றும் துஷ்ட ஏது, அல்லது ஏதுவின் ஆபாசம் (தோஷம) ஏதுப் போலியாம்.

க. சவ்வியபிசாரம்:—துணிபொருளாகிய சாத்தியத்தின்(அக்கினியின்) ஆசிரய(பர்வத)த்திலும், அதன் அபாவதத்தின் ஆசிரயத்தி(மடிவி)லும் இருக்கும் ஏது, சவ்வியபிசாரமாம். அது 'பர்வதம் அக்கினியுடையது; பிரமேயமா(அளவையால் அளக்கத்தக்கதா)கலின்' என்பதாம், இதனையே அநைகாந்திக(பிரமாணச்சியுடைய)ஏது வென்றும் கூறுவர்.

உ. விருத்தம்:—சாத்தியமல்லாவிடத்து வியாபித்திருக்கும் ஏது, விருத்தமா(மாறுகொள்வதா)ம். அது 'சத்தம் நித்தியம்; கிரியாஜந்யமா யிரு

த்தலால்' என்னும் ஏது, சாத்திய(நித்திய)மல்லா அநித்தியத்தில் வியாபித்திருக்கின்றது; ஏனெனின், எது கிரியாஜந்யமோ, அது அநித்தியமாம், கடம்போல என்னும் நியம மிருத்தலால் என வரும்.

ஈ. சற்பிரதிபக்கம்:-சாத்தியத்தின் அபாவத்தைச் சாதிக்கும் அன்னிய ஏது எதற் கிருக்கின்றதோ, அது சற்பிரதிபக்கமா(மறுதலையுடையதா)ம். அது 'சத்தம் நித்தியமாம்; செவிக்கு விஷயமாதலால்' என்னும் ஏதுவினது சாத்திய(நித்தியத்து)த்தின் அபாவத்தைச் சாதிக்கும், 'சத்தம் அநித்தியமாம்; காரியமாகையால், கடத்தைப்போல' என்னும் ஏதுபோல. யாது காரியமோ, அது அநித்தியமேயாம்.

சு. அசித்தம்:-ஏதுவின் சொரூபம் பக்ஷத்திற் பெறப்படாமை அசித்தம்(பேறில்லது). அது, 'சத்தம் குணமாம்; நேத்திராஜந்யஞானத்திற்கு விஷயமாதலால்; ரூபத்தைப்போல' என்பது. இங்கே கண்ணிற்கு விஷயமாதலாகிய ஏதுவின் சொரூபம் சத்தமாகிய பக்ஷத்தில்லை;ஏனெனின், சத்தம் சிரவணஜந்யஞானத்திற்கு விஷயமாதலால்.

நி. பாதிதம்:—எதனது சாத்தியத்தின் அபாவம் வேறொரு பிரமாணத்தால் நிச்சயிக்கப்படுகின்றதோ, அது பாதிதம்(மறுப்புடையது). அது 'அக்கினி சூடில்லாதது ; திரவியமாயிருத்தலால்' என்னும் ஏதுவினது சாத்தியத்தி(உஷ்ணமின்மையி)ன் அபாவம் (சூடு) தொக்கித்திரியத்தால் நிரகிக்கப்படுகின்றது என்பதுபோல.

*சா. கதி நி:—

க. யஞ்ஞங்களால் தேவர்களோ யடைகின்றன்.

உ. தபசினல் விராட்பத மடைகின்றன்.

ங. கர்மசந்நியாசத்தால் பிரஹ்மாவின் பத மடைகின்றன்.

ச. வைராக்கியத்தினல் ப்ரகிருதியில் லய மடைகின்றன்.

ஞ. ஞானத்தினல் கைவல்ய மடைகின்றன்.

கர்மம் நி:—

க. நித்தியம்:—எப்போதும் செய்யவேண்டிய கர்மம்(ஸ்நானசந்திமுதலியன).

---

*சா. அக்நிபுராணம். பக்கம் கஎகச.

உ. நைமித்திகம்:–ஏதேனுமோர் நிமித்தத்தை முன்னிட்டுச் செய்யவேண்டிய கர்மம்(கிரகணசிராத்தமுதலியன).

ஈ. காமியம்:–காமத்தின்பொருட்டு விதிக்கப்பட்ட கர்மம்(யாகாதிகள்).

ச. பிராயச்சித்தம்:– பாவநிவிருத்தியின்பொருட்டு விதிக்கப்பட்ட கர்மம்.

ஞ. நிஷித்தம் :–செய்யாம லிருக்கும்பொருட்டுச் சொல்லப்பட்ட கர்மம்(பிரஹ்மஹத்திமுதலியன).

*சக. கர்மேந்திரியம் ஞ:–

க. வாக்கு. உ. பாணி. ஈ. பாதம். ச. உபஸ்தம். ஞ. குதம்.

கியாதி ஞ :–தோற்றுதலும் சொல்லுதலுமாகிய வியவகாரம்.

க. அசத்கியாதி:–சூன்யவாதிகள் அசத்தாகிய (சொரூபமில்லாத) சர்ப்பத்தின்தோற்றமும்சொல்லுதலும் இரஜ்ஜுவிடத்தில்ஒப்புகின்றார்கள்.

---

*சக. பைங்கலம், வராகமுதலியஉபநிஷத்துக்கள்.

உ. ஆத்மக்கியாதி :-க்ஷணிகவிஞ்ஞான வாதிகள் ஒப்பியிருக்கும் க்ஷணிகபுத்தியாகிய ஆத்மாவின் சர்ப்பரூபத்தோற்றமும் சொல்லுதலுமாம்.

ஊ. அந்நியதாக்கியாதி:-நையாயிகர் புற்று முதலிய தூரதேசத்திலுள்ள சர்ப்பத்தின் பிரதீதியும் (தோற்றமும்) சொல்லுதலும் தோஷபலத்தினாலே இரஜ்ஜுதேசத்தில் ஒப்புகிறார்கள். அது அந்நியதாக்கியாதியாம். அல்லது இரஜ்ஜுவாகிய ஞேயத்திற்குச் சர்ப்பரூபமாகிய ஞானம் ஒப்பியிருக்கின்றார்கள்; அது அந்நியதாக்கியாதியாம்.

எ. அக்கியாதி:- சாங்கியப்பிரபாகரமதானுசாரிகள், "இது சர்ப்பம்" என்னுமிடத்து, "இது" என்னும் அமிசம் இரச்சுவின் இது வென்னுந் தன்மையின் பிரத்தியக்ஷஞானமாம்; "சர்ப்பம்" என்பது முன்கண்ட சர்ப்பத்தின் ஸ்மிருதிஞானமாம்; தோஷபலத்தால் இவ்விரண்டுஞானங்களது அக்கியாதி அதாவது அவிவேகம்(பேதத்தோற்றவின்மை)உண்டாகின்ற தென்று ஒப்புகிறார்கள். அது அக்கியாதியாம்.

ஏ. அநிர்வசனீயக்கியாதி:-வேதாந்தசித்தாந்தத்தில் இரஜ்ஜுவில் அதனது அவித்தையால் அநிர்வசநீய(சத்தசத்விலக்ஷண)சர்ப்பமும் அதன் ஞானமும் உண்டாகின்றன. அதனது கியாதி

என் னும் தோற்றமும் சொல்லுதலுமாகிய வியவகாரம் அநிர்வசனீயக்கியாதியாம்.

கிலேசம் நி:–

†க. அவித்தை:–(க). துக்கத்தில் சுகபுத்தி. (உ). அநாத்மாவில் ஆத்மபுத்தி.(ங). அநித்தியத்தில் நித்தியபுத்தி.(ச). அசுத்தத்தில் சுத்தபுத்தி என்பனவாம். இது நான்குவிதமாகிய காரிய அவித்தையாம்.

---

†க. துயரினையே யின்ப மென்றுக்
தோற்றநான்மா வான்மா வென்றும்
பெயருமநித் தியத்தை யென்றும்
பெயராநித் தியமா மென்று
மூயர்விலாதா மசுத்தந் தன்னை
யுயர்சுத்த மென்றுங் காண
லயருறுநால் வகைய தான
வவித்தையாமென் றுரைப்பர் மேலோர்.(க)

புத்தியோ டான்மா தன்னைப்
பொருத்தியொன் றென்று காணல்
பித்துறல் மிதையா மிக்கப்
பெட்பினை மேவு மஃதே
நத்திரா கந்து வேட
ரன்மையில் குரோத மாகுஞ்
செத்திடி வாமென் றஞ்சல்
செப்பபி நிவேச மாகும். (உ)

உ. அஸ்மிதை:–சாக்ஷிபுத்திகளின் ஐக்கிய(ஆத்மாவும் புத்தியும் ஒன்று என்னும்)ஞானம்(சாமானிய அகங்காரம்).

ங. இராகம்:–திடஆசை(பேராசை).

ச. துவேஷம்:–குரோதம்.

ஞ. அபிநிவேசம்:–மரணபயம்.

*சஉ. கோசம் ஞ:–

க. அந்நமயம். உ. பிராணமயம். ங. மனோமயம். ச. விஞ்ஞானமயம். ஞ. ஆநந்தமயம்.

சப்தமுதலியன ஞ:–

க. சத்தம். உ. பரிசம். ங. உருவம். ச. இரசம். ஞ. கந்தம்.

ஜீவன்முக்திப்பிரயோஜனம் ஞ:–ஜீவன்முக்தஞானிக்குச் சித்தித்திருந்தபோதிலும், இங்கே

இனந்திடு மிவற்றைப் பஞ்சக்
கிலேசமென் றுரைப்ப ரென்று
மூளந்தனி லிவைகண் மேவா
தொழிந்திட விரும்பு வாரேற்
றளங்கிடா தளத்தைச் செவ்வே
சுத்தமாஞ் சிவத்தில் வைத்து
வளம்பெற நிறுத்து வாரேன்
மருவிடா வோடி மன்றே. (ங)

---

*சஉ. முத்கலம், தைத்திரீயமுதலிய உபநிஷத்துக்கள்.

ஜீவன்முக்தியென்னும் சத்தத்தால் ஜீவன்முக்தியின் விலக்ஷணநந்தத்தின் அவஸ்தை(ஐந்தாவது முதலிய பூமி)கள் கொள்ளப்படுகின்றன. அதன் பிரயோஜனம் ஐந்துவகையாம்.

†க. ஞானரக்ஷை:—ஒருமுறை உண்டாகிய திடஞானம் நாசமாகாமையால், ஞானரக்ஷைதானே சித்திக்கின்றது. என்றுமும் இங்கே நிரந்தரப்பிரஹ்மாகார விருத்தியின் ஸ்திதி, ஞானரக்ஷை என்னும் சத்தத்திற்கு அர்த்தமாம்.

---

†க. வந்தவப் பிரமா கார
மாகிலா விருத்தி யென்றும்
நந்துரு திலதி நிற்றல்
ஞானரட் சையென்ன லாகுஞ்
சந்ததம் பிரமா காரஞ்
சார்மநச் சம்ய மாதி
வந்தனை யாதி செய்வார்
மருவற்காந் தவம தாகும். (க)

வாதியின் மதத்தைத் தாழ்த்த
வல்லவப் புலவன் சொல்லிற்
கேதமில் பொருள்வே றுக்கி
யெதிர்த்துரை யாடி செற்பம்
வாதுசெய் வலியின் மூர்க்கன்
வாதமாம் விதண்டை யென்னும்
வாதக ளிலாமை யாகும்
வல்விசம் வாத மின்மை. (உ)

உ. தவம்:—மன இந்திரியங்களின் ஏகாக்கிரத்தன்மை அல்லது மனோவாக்குக்காயங்களின் சம்யமம் (அடக்கம்).

ஊ. விசம்வாதமில்லாமை:—ஜல்பம் விதண்டை யென்னும் வாதங்களில்லாமை.

ரு. துக்கநிவிருத்தி:—திருஷ்ட (பிரத்தியக்ஷ) துக்கத்தின் நிவிருத்தி.

துக்கமீ தெனத்தி ருட்டத்
துயருண ராமை தானே
துக்கநி விருத்தி யென்று
சொலப்படு மென்று மின்ப
மிக்கிடு பிரமா காரர்
விருத்தியே யிருத்த லானே
தக்கவா நந்த வாப்தி
தானிது வாகு மன்றே. (ஈ)

இதனையே சீவன் முத்தி
யின்பமென் றுரைத்தார் முன்னோர்
மிகுசொரு பாநந் தத்தின்
விலக்ஷண வின்ப மாகுந்
தகுநல சீவன் முத்தி
தனக்கிவை பயனு மென்று
மூதுமறை யுணர்ந்த மேலா
மூநிவரார் மொழிகு வாரால். (ஊ)

ரு. சுகப்பிராப்தி :–நிராவரணமும் பரிபூரணமும் விருத்தியோடுகூடியதுமாகிய ஜீவன் முக்தி விலக்ஷணானந்தத்தின் பிராப்தி.

*சஙூ. ஞானேந்திரியம் நு:–

க. சுரோத்திரம், உ. துவக்கு, ஙூ. சக்ஷுஸ், ச. சிங்ஙுவை, ஞ. ஆக்கிராணம்.

திருஷ்டாந்தம் நு:–ஜகத்தின் மித்தியாத்துவத்தில் திருஷ்டாந்தம் ஐந்துவிதமாம்.

க. சுத்தியிலிரஜதம்.

உ. இரஜ்ஜுவில் சர்ப்பம்.

ஙூ. தாணுவிற்புருடன்.

ச. ஆகாயத்திற்கருமை.

ஞ. *சச. மரீசிகையில் ஜலம்:–மத்தியானகாலத்தில் மருஸ்தலத்தில்(ஊஷரபூமியில்)பிரதிபிம்பித்த சூரியனது கிரணம், மரீசி, மரீசிகா என்று சொல்லப்படும். அதில் தோற்றும்ஜலத்தை மிருக

---

*சஙூ. வராகம், திரிசிகிபிராஹ்மணம், பைங்கல முதலிய உபநிஷத்துக்கள்.

*சச. அந்நபூர்ணோபநிஷத்தம்.

ஜல மென்றும், கானல்ஜல மென்றும், பேய்த்தே ரென்றும் கூறுவர்.

தூலபூதம் நி:—

க. ஆகாசம், உ. வாயுவு, ங. அக்கினி, ச. அப்பு, ஞ. பிருதிவி.

தேகத்தின்தோஷம் நி:—

க. காமம், உ. குரோதம், ங. நிசுவாசம், ச. பயம், ஞ. நித்திரை.

தேகதோஷநிவிருத்தி உபாயம் நி:—

க. சங்கற்பமின்மை, உ. கூமை, ங. இலகுவான ஆகாரம், ச. அப்பிரகாதத்துவம்(அடிபடாமை), ஞ. தத்துவசேவனம். (மண்டலப்பிராஹ்மணோபநிடத்து.)

நியமம் நி:—

க. சௌசம்(தூய்மை). (க)பாகியம், (உ) ஆந்தாமென நிரண்டு வகையாம்:—

(க) அசுசியும் மலினமுமான திரவியாதிகளின் சேர்க்கையா லுண்டாகும் அசுத்தி யெவையோ, அவற்றை ஜலம் மண்முதலியவைகளாலும் ஆசமனஸ்நானாதிகளாலும் நீக்குதல் பாகிய சௌசமாம்.

(உ) சகாம மலின அந்நத்தையும், விஷயஇச்சையையும், ராகத்துவேஷாதிகளையும் விடுதலாலுண்டாகும் அந்தக்கரணசுத்தி ஆந்தரசௌசமாம்.

ஊ. சந்தோஷம்:—தனதுபிராரப்தத்தாற்கிடைத்த போகங்களிலேயே போது மென்னும் புத்தியும், ஒருபோதும் இந்திரியங்களின் பிரியத்தின் பொருட்டு வாயில்களோடாமும் செல்லாதிருத்தலும் சந்தோஷமாம்.

ஈ. தவம்:—மன இந்திரியங்களை பஜனவிரோதிவியாபாரங்களினின்று தடுத்தல் தவமாம்; கேவலம் காயத்தினது கிலேசமாத்திரம் தவமன்று; அதற்கும் தாபசத்தன்மை யிருத்தலால்.

ஸ. சுவாத்தியாயம் :—தனது சாகையின் வேதபாகத்தைக் குருமுகமாக விதியோடு அர்த்தக்கிரகணம் வரையில் அத்யயனஞ்செய்தல் அல்லது கீதைமுதலியவற்றை நித்தியம் ஓதுதல்.

ஙி. ஈசுவரப்பிரணிதானம்:—சர்வகர்மங்களையும் ஈசுவரனிடம் ஆர்ப்பணம் செய்தல், அல்லது ஓங்காரமுதலிய ஈசுவர உபாசனை.

* சஙி. பஞ்சவர்க்கம் ஙி:—

---

*சஙி. ஸர்வசாரோபாதிஷத்து.

க. மனுதி:—மனம், புத்தி, சித்தம், அகங்காரம்.

உ. பிராணுதி:-பிராணன், அபானன், வியானன், உதானன், சமானன்.

ங. ஸத்துவாதி:—சத்துவம், ரஜசு, தமசு.

ச. இச்சாதி:—காமம், சங்கற்பம், சந்தேகம், சிரத்தை, அசிரத்தை, தைரியம், அதைரியம், நாணம், புத்தி, பயம்.

ஞ. புண்ணியாதி:—புண்ணியம், பாபம், ஞானம், சம்ஸ்காரம்.

பிரளயம் ஞ:—

க. நித்தியப்பிரளயம்:—க்ஷணத்திற்கு க்ஷணம் சகலகாரியங்களும் தீபச்சுடரைப் போல நாசமாதல் அல்லது சுழுத்தி.

உ. நைமித்திகப்பிரளயம்:—பிரஹ்மாவின் இராத்திரியாகிய நிமித்தத்தால் உண்டாகும் பூலோகமுதலிய கீழ்மூன்று லகங்களின் நாசம்.

ங. தினப்பிரளயம்:—பிரஹ்மாவின் தினத்தில் பதினைஞ்சு மனுவந்திரங்க ளுண்டாகின்றன. அவை ஒவ்வொன்றன் நாசம் தினப்பிரளயமாம். இதனையே அவாந்தரப்பிரளய மென்றும், மனு

வந்தரப்பிரளய மென்றும் கூறுவர். சிலர் இதனை யே நைமித்திகப்பிரளய மென்றும் கூறுவர்.

ச. மகாப்பிரளயம்:–பிரஹ்மாவின் நூறு வருஷத்திற்குப் பிறகு பிரஹ்மதேவருடன் ஆகாயமுதல் சர்வபூதங்களும் நாசமாகுதல்.

நி. ஆத்தியந்திகப்பிரளயம்:– காரணத்தோடு ஜகத்திற்கு ஞானத்தினால் உண்டாகும் பாதம் (அத்தியந்தநிவிருத்தி).

*சகு. பிராணன்முதலியன நி:—

க. பிராணன். உ. அபானன். ங. வியானன். ச. உதானன். நி. சமானன்.

*சள. பிராணதியைந்தின் ஸ்தானம் நி :— க. ஹிருதயம், உ. குதம், ங. சர்வாங்கம், ச. கண்டம், நி. நாபி.

பிராந்தி நி:—(சு-வது கலையைப்பார்க்க).

க. பேதப்பிராந்தி. உ. கர்த்திருத்துவப்பிராந்தி. ங. சங்கப்பிராந்தி. ச. விகாரப்பிராந்தி. நி. சத்தியத்துவப்பிராந்தி.

---

*சகு. பிருகதாரணீயகம், பிரஹ்மோபநிஷத்து முதலியன.

*சள. அமிர்தாநாதோபநிஷத்துமுதலியன.

பிராந்திநிவிருத்திதிருஷ்டாந்தம் நி:—(சு-வது கலையைப் பார்க்க).

க. பிம்பப்பிரதிபிம்பம். உ. சிவப்புஸ்படிகம். ங. கடாகாசம். ச. இரஜ்ஜுசர்ப்பம். ஞ. கனக குண்டலம்.

பேதம் நு:—

† க. ஜீவேசுவரபேதம். உ. ஜீவஜீவபேதம். ங. ஜீவஜடபேதம். ச. ஈசஜடபேதம். ஞ. ஜட ஜடபேதம்.

மகாயஞ்ஞம் நு:—

க. தேவயஞ்ஞம்:—தேவதைகளையுத்தேசித்து வேதத்திற்கூறிய நித்திய அக்கினிஹோத்திரத்

---

†க. சீவனீசன் வேறு
சீவனிற் சீவன் வேறுஞ்
சீவனிற் சடந்தான் வேறு
தேய்சடத் தின்வே றீசன்
றுவறு சடத்தின் வேறுஞ்
சடமெனு மிவைக டாமு
மேவிடு பஞ்ச பேத
விதமென மொழிய லாகும்.

தில் விகிதமான ஹவ்யவடிவ அன்னத்தைப்போடுதல்.

உ. ரிஷியஞ்ஞம்:—வேதாதிகளைக் குரு உச்சரித்தபின் தான் உச்சரித்தல்வடிவ அத்தியயனாதி கருமங்கள்.

ஊ. பிதிருயஞ்ஞம்:— பிதிருக்களை யுத்தேசித்துச் சிரார்த்தாதிகளில் அவர்களின் திருப்திக்காக க்வ்யவடிவ அன்னங்களைத் தருதலும், தருப்பணாதிகருமங்களும்.

ச. மானுஷயஞ்ஞம்:—அதிதி அப்பியாகதர்களாகிய சத்பாத்திரங்களைப் பகவத்சந்தோஷத்தின்பொருட்டுச் சக்திக்கியன்றவாறு தனது கிரகத்தில் சிரத்தையோடு நாடோறும் புசிப்பித்தல்வடிவ கருமங்கள்.

ரு. பூதயஞ்ஞம்:—பசு பக்ஷி முதலியவைகளுக்குச் சக்திக்குத்தக்கபடி தன் கிரகத்துள்ள அன்னாதிகளைத் தருதல்.

யோகபூமி ரு:—

†க. க்ஷேமம்:—இராகத்துவேஷாதிகளால் சித்தம் சலித்தல்.

---

†க. சித்தமிரா காதி தம்மாற்
றிரமுறாது சலித்தல் க்ஷேமம்

உ. விக்ஷேபம்:–பகிர்முகமாகிய சித்தம் ஒவ்வொருகால் தியானத்தோடு கூடியிருத்தல். அது க்ஷேபத்தினும் விசேஷமாகிய விக்ஷேபமாம்.

ஊ. மூடம்:–நித்திரை தந்திரை (தூக்கத்தின் ஆதியில் உண்டாகும் சோம்பல்) முதலியவற்றோடு கூடியதன்மை.

ரு. ஏகாக்கிரம் :– யோகாப்பியாசபலத்தால் சித்தம் ஒருவஸ்துவில் பிரவாகம்போல் தொடர்ந்து நிற்றல்.

வைத்தவிடத் தசையா தோர்கான்
மன்னுதல்வி க்ஷேப மாகு
நித்திரையே சோம்ப லாதி
நேர்வதுவே மூட மொன்றிற்
றத்தமியல் பின்றி நிற்றல்
சாரேகாக் கிரமா மென்பர். (க)

சித்தவி ருத்தி யெங்குஞ்
சென்றிடா தடங்கி நிற்றன்
மெத்தவு மொடுக்கம் தன்னை
மேவிடு நிரோத மாகு
மித்தகை யான வைந்து
மியோகத்தின் பூமி யாகு
மித்தினில் க்ஷேப மூட
மியோகஞ்சு குரிய வாகா. (உ)

ஙி. நிரோதம்:–சித்தம் சோர்வின்றி எவ்விருத்திவடிவமுமாகா தடங்கியிருத்தல்.

வசனமுதலியன ஙி:–

க. வசனம். உ. ஆதானம் (ஏற்றல்). ஊ. கமனம்(போகுதல்). ச. இரதிபோகம். ஙி. மலநீக்கம்.

அறுவகைப்பதார்த்தங்கள்:

†அசிங்ஙுவத்தன்மைமுதலியன சு :–சங்கியாசியின் தர்மவிசேஷம்.

க. அசிங்ஙுவத்தன்மை :– சுவைவிஷயத்தில் விருப்பமில்லாமை.

---

† சுவையறி நரவி ருக்கச்
சுவையினை யறியா தண்ண
லெவையுமாம் பிரம மல்லா
தெதனையும் பேச லின்மை
யவைநல சன்னி யாசிக்
கசிங்ஙுவத் தன்மை யாகுங்
கவையுறு மநிமா தெங்கக்
காரண மாகு மென்ப. (க)

உ. நபும்ஸகத்துவம் :– குமரி, தருணி(ஐதினை வயதுள்ளவள்), விருத்தை என்னும் ஸ்திரீகளிடத்தில் சமத்துவம் (விகாரமில்லாமை).

ங. பங்குத்துவம் (மூடம்):– அவசியமானால் ஒரு தினத்தில் ஒரு யோசனை தூரத்திற்கு அதிகமாய் நடவாதிருத்தல்.

ச. அந்தத்துவம் (குருடு):–ஒரு தனுசு (வில்) அளவிற்கு அதிகமாகப் பார்வையை விடாதிருத்தல்.

இஞ்சுக மொழியார் மாதர்
இளர்ச்சியாய்த் தன்னைக் கிட்டிக்
கெஞ்சியே விருப்பங் காட்டக்
கிழவியே குழந்தை யென்னக்
கொஞ்சமுங் இளர்ச்சி யின்றிக்
குவிந்திடி மனத்த னுதல்
புஞ்சகத் தன்மை யில்லாப்
புகழ்பெறு தர்ம மாகும். (உ)

காதமும் பலந டக்குங்
கால்களைப் பெற்றி ருந்துங்
காதம தொன்றன் மேலே
கருதிடா னடக்க வெண்ணின்
ஆதலா லென்று முள்ள
யழுந்திய மனத்தி னுலே
பாதம தசையாத் தன்மை
பங்குத்வ மாகு மன்றே. (ங)

ரு. பதிரத்துவம்(செவிடு):— வீண் வார்த்தைக ளைக் கேளாதிருத்தல்.

பார்த்திடு கண்ணி ரண்டும்
படித்துவ முள்ள வாகப்
பார்த்திடு பொருள்க ளெல்லாம்
பரமதா யிலக லாலே
பார்த்திட வெண்ணு ணென்றைப்
பார்க்கினு முழநான் கின்மேற்
பார்த்திடா னதனு லீதே
பகரந்தத் தன்மை யாகும். (சு)

ஏதமில் பிரம வார்த்தை
யின்றிய வெதுவு மேதன்
காதினில் வாங்காத் தன்மை
கநபதி ரத்து வம்மா
மோதுறு விவகா ரங்கண்
முற்றுமே நன்கு ணர்ந்தும்
பேதையைப் போலி ருத்தல்
பேசுமுக்கத் தன்மை யாகும். (ரு)

ஓதிய விவைக ளாறு
முயர்வுள சந்நி யாசி
காதலோ டதுட்டித் தற்காங்
கநமுள தருமை மாகுஞ்
சாதகன் கைக்கொள் வானேற்
றனிநிலை யதனைச் சார்வா
னேதமில் சாத்தி யற்கீ
தினியசீ வன்முத் திக்காம். (சு)

கூ. முக்தத்துவம்(அறியாமை):—சமர்த்தனுயிருந்தும் வியவகார மில்லாதிருத்தல்.

அநாதிபதார்த்தம் கூ :—உற்பத்தியில்லாதபதார்த்தம்.

க. ஜீவன். உ. ஈசன். ங. சுத்தசேதனம். ச. அவித்தை. ஞ. சேதனுவித்தைகளின் சம்பந்தம். கூ. அவற்றின் பேதம்.

*சஅ. அரிவர்க்கம் கூ:—பரலோகத்திற்கு விரோதமுடைய ஆந்தர(உள்ளிருக்கும்)சத்துருக்களின் சமூகம்(கூட்டம்).

க. காமம்:—கிடைத்த வஸ்துவை அநுபவிக்கும் இச்சை(விருப்பு).

உ. குரோதம்:—துவேஷம்(வெறுப்பு).

ங. உலோபம்:—கிடையாத வஸ்துவை அடையவேண்டுமென்னும் இச்சை.

ச. மோகம்:—ஆத்மாநாத்மாக்களின் அல்லது காரியாகாரியங்(நன்மைதீமை)களின் அவிவேகம்.

ஞ. மதம்:—கருவம்(அகங்காரம்).

---

*சஅ. முத்கலம், வராகம்.

சு. மற்சரம்:—அந்நியரது மேன்மையைச் சகி யாமை.

அவஸ்தை சு:—ஸ்தூலதேகத்தின் காலம்.

க. சிசு:—தேகத்தின் ஒருவருஷகாலம்.

உ. தெளமாரம் :—தேகத்தினைந்து வருஷகால ம்.

ங. பௌகண்டம்:—தேகத்தின் ஆறுமுதல் ப த்துவருஷகாலம்.

ச. கிசோரம்:—தேகத்தின் பதினொன்றுமுதல் பதினைந்துவருஷகாலம்.

ஞ. யௌவனம்:—தேகத்தின் பதினாறு முதல் நாற்பது வருஷகாலம்.

சு. ஜரை(மூப்பு):—தேகத்தின் நாற்பதிற்கு மேற்பட்ட காலம்.

இரசம் சு:—

க. தித்திப்பு. உ. புளிப்பு. ங. உவர்ப்பு. ச. கை ப்பு. ஞ. துவர்ப்பு. சு. உறைப்பு.

இலிங்கம் சு:—வேதவாக்கியத்தின் தாற்பரிய த்தை நிச்சயிக்கும் இலிங்கம்.

க. உபக்கிரமம் உபசம்ஹாரம்:—ஆதியந்தங்க ளின் ஏகரூபத்துவம்(தொடக்கம் முடிவு).

உ. அப்பியாசம்:—அடிக்கடி படித்தல்.

ங. அபூர்வதை:—அலௌகிகத்தன்மை.

ச. பலம்:—மோக்ஷம்.

ஞ. அர்த்தவாதம்:—துதி.

கூ. உபபத்தி:—அநுகூலதிருஷ்டாந்தம்.

ஈசுவரனது பகம்(ஐசுவரியம்)சூ:—

க. சமக்கிரஐசுவரியம். உ. சமக்கிரதர்மம். ங. சமக்கிரகீர்த்தி. ச. சமக்கிரலக்ஷ்மி. ஞ. சமக்கிர ஞானம். கூ. சமக்கிரவைராக்கியம். (சமக்கிரம் =எல்லாம்.)

ஈசுவரனது ஞானம் சூ:—

க. உற்பத்தி. உ. பிரளயம். ங. கதி(போக்கு). ச. ஆகதி:—இந்தவுலகத்தில் ஜீவனது வரவாகிய ஆகதி யாதோ அதன் ஞானம். ஞ. வித்தை. கூ. அவித்தை.

* சகூ. ஊர்மி சூ:—சம்சாரசாகரத்தின் அலைகள்.

க. ஜனனம். உ. மரணம். ங. பசி. ச. தாகம். ஞ. சந்தோஷம். கூ. சோகம்.

---

*சகூ. முத்கலம், வராகம்.

கர்மம் சூ:—நித்தியகர்மம்.

க. ஸ்நாநம். உ. ஜபம். ங. ஹோமம். ச. அர்ச்சனம்:—தேவபூஜை. ஞ. ஆதித்தியம்:—போஜனசமயத்தில்வந்த அதிதி(அப்பியாகதர்)களின் பொருட்டுச் செய்யும் அந்நதானம். சூ. வைசுவதேவம்:—அக்கினியில் போடப்பட்ட திரவியத்தின் ஹோமம்.

*ஞ. கௌசிகம் சூ:—அந்நமயகோச(தேக)த்திலுண்டாகும் பதார்த்தங்கள்.

க. தோல். உ. மாமிசம். ங. இரத்தம். ச. மேதை(கொழுப்பு). ஞ. மஜ்ஜை(மூளை). சூ. எலும்பு.

*ஞக. சந்நியாசம் சூ:—

க. குடீசகன். உ. பஹூதகன். ங. ஹம்ஸன். ச. பரமஹம்ஸன். ஞ. துரியாதீதன். சூ. அவதூதன்.

சமமுதலியன சூ:—

க. சமம். உ. தமம். ங. உபரதி. ச. திதிக்ஷை. ஞ. சிரத்தை. சூ. சமாதானம்.

---

*ஞ. முத்கலம், வராகம்.

*ஞக. சந்நியாஸோபநிஷத்து, நாரதபரிவிராஜகோபநிஷத்துமுதலியன.

*நுஉ. சமாதி கூ:—

க. பாகியதிருஷியாதுவித்தம். உ. ஆந்தரதிருஷியாதுவித்தம். ஙூ. பாகியசத்தாதுவித்தம். ச. ஆந்தரசத்தாதுவித்தம். நு. பாகியநிருவிகற்பம். கூ. ஆந்தரநிருவிகற்பம்.

சாஸ்திரம் கூ:—

க. சாங்கியம். உ. யோகம். ஙூ. நியாயம். ச. வைசேஷிகம். நு. பூர்வமீமாஞ்சை. கூ. உத்தரமீமாஞ்சை.

சூத்திரம் கூ:—

க. ஜைமினீயம். உ. ஆசுவலாயனம். ஙூ. ஆபஸ்தம்பம். ச. போதாயனம். நு. காத்தியாயனம். கூ. வைகானசீயம்.

பிரமாணம் கூ:—

க.பிரத்தியகூஷம் :—பிரத்தியகூஷப்பிரமாவின் கரணம் பிரத்தியகூஷப்பிரமாணமாம். அப்படிப்பட்டவை சுரோத்திராமுதலிய ஞானேந்திரியம் ஐந்தாம். (பிரமா = பிரமாணத்தாலுண்டாகும் ஞானம்).

---

*நுஉ. சதஸ்வதிரகஸ்யோபநிஷதம்.

உ. அநுமானம்:—அநுமிதிப்பிரமாவின் கரண மாகிய இலிங்கத்தின் ஞானம் அநுமானப்பிரமா ணமாம். அது பருவதத்தில் அக்கினியை அறித ற்கேதுவாகிய புகைவடிவாகிய இலிங்கத்தின் ஞானம்போன்றது.

ஊ. உவமானம் :—உவமிதிப்பிரமாவின் கரண மாகிய சாதிருசியஞானம் உவமானப்பிரமாண மாம். ஆமா(காட்டுப்பசு)விலுள்ள ஆவின்சாதி ருசியஞானம்போல. (சாதிருசியம்=ஒப்புமை).

எ. சத்தம்:—சாப்திப்பிரமாவின் கரணமாகிய இலௌகிகவைதிகசப்தங்கள் சத்தப்பிரமாணமா ம்.

ஏ. அருத்தாபத்தி :—அருத்தாபத்திப்பிரமாவி ன் கரணமாகிய உபபாத்தியத்தின் ஞானம் அரு த்தாபத்திப்பிரமாணமாம். பகலிலுண்ணுத பரு த்த புருஷனது இராத்திரிபோஜனத்தை அறிவி க்கும் அருத்தாபத்திப்பிரமாவிற் கேதுவாகிய பருமணி(உபபாத்தியத்தி)ன் ஞானம்போல.(உப பாத்தியம்=சம்பாதிக்கப்படுவது). [இராத்திரி போஜனம் உபபாதகம் அதாவது பருமனைச் சம் பாதிப்பது. பருமன் உபபாத்தியம் அதாவது போஜனத்தால் சம்பாதிக்கப்படுவது.]

கூ. அநுபலப்தி:—அபாவப்பிரமாவின் காரணமா கிய ப்தார்த்தத்தின் அப்பிரதீதி(தோற்றரவின் மை)அநுபலப்திப்பிரமாணமாம். வீட்டில் குட த்தின் அபாவஞானத்திற்கேதுவாகிய குடத்தி ன் அப்பிரதீதிபோல.(அபாவப்பிரமா இல்லையெ ன்னும் ஞானம்).

*நுங. பிராந்தி(பிரமம்)கூ:—

க. குலம். உ. கோத்திரம். ங. ஜாதி. ச. வருண ம். ஞ. ஆசிரமம். கூ. ரூபம். அல்லது பெயர்.

*நுச. விகாரம் கூ:—

க. பிறப்பு. உ. இருப்பு:—முன்னில்லாததின் இ ருக்கை. ங. விருத்தி(வளர்ச்சி). ச. பரிணமம் (திரிபு). ஞ. க்ஷயம்(குறைவு). கூ. நாசம்.

வேதாங்கம் கூ:—

க. சிக்ஷை. உ. கல்பம். ங. வியாகரணம். ச. நிருக்தம். ஞ. சந்தசு .கூ. ஜோதிஷம்.

---

*நுங. முத்கலம்.

*நுச. முத்கலம், வராகம், கர்ப்போபநிஷத்தம்.

எழுவகைப்பதார்த்தங்கள்.

அதலமுதலியன எ:—

க. அதலம். உ. விதலம். ங. சுதலம். ச. தலாதலம். ஞ. இரஸாதலம். சூ. மகாதலம். எ. பாதாளம்.

*ஞஞ. அஞ்ஞானத்தின் அவஸ்தை எ:—

க. பீஜஜாக்கிரம். உ. ஜாக்கிரம். ங. மகாஜாக்கிரம். ச. ஜாக்கிரசொப்பனம். ஞ. சொப்பனம். சூ. சொப்பனஜாக்கிரம். எ. சுழுத்தி.

அவஸ்தை எ:—சிதாபாசனுக்குக் கிரமமாகப் (ங)பந்தத்திற்கும்(ச)மோக்ஷத்திற்கும் ஏதுவாகும் தசை.

க. அஞ்ஞானம்:—"எனக்குத் தெரியவில்லை" என்னும் வியவகாரத்திற்கு ஏதுவாகும்ஆவரண விக்ஷேபசக்திகளையுடைய அநாதிஅநிர்வசநீய பாவரூபமாகிய பதார்த்தம்.

---

*ஞஞ. மகோபநிஷதம்.

கலை.] வேதாந்தபதார்த்தசம்ஞாவர்ணநம்.சஅள

உ. ஆவரணம்:–"இல்லை, தோற்றவில்லை" என்னும் வியவகாரத்திற்கு ஏதுவாகிய அஞ்ஞானத்தின் காரியம்.

ஊ. விக்ஷேபம்:–தர்மத்தோடுகூடிய பிரபஞ்சமும், அதனது ஞானமும்.

ச. பரோக்ஷஞானம்.

டு. அபரோக்ஷஞானம்.

சூ. சோகநிவிருத்தி:–விக்ஷேபநாசம்(பிராந்திநிவிருத்தி).

எ. திருப்தி:–ஞானத்தாலுண்டாகும் சந்தோஷம்.

*டுசூ. சைதன்னியம் எ:–

க. ஈசுவரன்:–மாயாவிசிஷ்டசேதனம்.

உ. ஜீவன்:–அவித்தியாவிசிஷ்டசேதனம்.

ஊ. சுத்தம்:–நிருபாதிகசேதனம்.

ச. பிரமாதா:–பிரமாதாவாகிய அந்தக்கரணத்தால் அவச்சின்னசேதனம்.

---

*டுசூ. கடோபநிஷத்தி.

நி. பிரமாணம்:-இந்திரியவாயிலாகச் சரீரத்தினின்றும் வெளியே புறப்பட்டுக் கடமுதலிய விஷயம்வரையிலும்பொருந்தும் விருத்தி பிரமாணமாம். அதனுல் அவச்சின்ன (வளைபட்ட)சேதனம் பிரமாணசேதனமாம்.

கூ. பிரமேயம்:-பிரமேயமாகிய கடமுதலிய விஷயத்தால் அவச்சின்ன (மற்றவற்றினின்றும் வேறுபிரிக்கப்பட்ட)சேதனம்.

எ. பிரமா:-கடமுதலிய விஷயாகாரமாகியவிருத்தி பிரமாவாம். பிரமை யென்பதும் அது. அதனுல் அவச்சின்னசேதனம், அல்லது அதில் பிரதிபிம்பித்தசேதனம் பிரமாசேதனமாம். இதனையே பிரமிதிசேதன மென்றும், பலசேதன மென்றும் கூறுவர்.

ஞானபூமி எ:-(இதன் பதின்மூன்றுவது கலையிற் காண்க).

க. சுபேச்சை. உ. விசாரணை. ங. தநுமானஸி. சு. சத்துவாபத்தி. நி. அசம்சத்தி. கூ. பதார்த்தாபாவினி. எ. துரியம்.

தர்து எ:-

க இரசம்:-புசிக்கப்பட்ட அந்நம் சூக்ஷ்மம் (புண்ணியபாவம்), மத்திமம்(அந்நத்தின்சாரம்),

தூலம்(மலம்)என்று மூன்றுவிதமாகவிபாகமா, கின்றது. அவற்றிலுள்ள மத்திமவிபாகம்(பிரிவு) இரசமாம்.

உ. இரத்தம்.

ஊ. மாமிசம்.

ச. மேதை:–கொழுப்பு.

ஞ. மஜ்ஜை:–எலும்பிலுள்ள மூளை.

சு. எலும்பு.

எ. வீரியம்.

திரவியமுதலியபதார்த்தங்கள் எ:–நியாயமதத்தில் திரவியமுதலிய ஏழுபதார்த்தங்கள் ஒப்பப்பட்டிருக்கின்றன.

க. திரவியம்:–நியாயமதத்தில் ஒப்பியிருக்கும் (க)பிருதிவி. (உ) ஜலம். (ஊ)அக்கினி. (ச)வாயு. (ஞ)ஆகாசம். (சு)காலம். (எ)திக்கு. (அ)ஆத்மா. (கூ)மனம் என்னும் ஒன்பது திரவிய(குணத்திற்கு ஆசிரயமாகியபதார்த்த)ங்கள்.

உ. குணம் :–நியாயமதத்தில் ஒப்பியிருக்கும் (க) உருவம்(நிறம்), (உ) இரசம்(சுவை), (ஊ)கந்தம்(மணம்), (ச) பரிசம்(ஊறு), (ஞ) சங்கை(எண்), (சு) பரிமாணம்(அளவு), (எ) பேதம்(வே

ற்றுமை), (அ) சையோகம் (சேர்க்கை), (கo) விபாகம் பிரிவு, (கo) பரத்துவம் (முன்மை), (ககூ) அபரத்துவம் (பின்மை), (கஉ) குருத்துவம் (கனதி), (கங) திரவத்துவம் (நெகிழ்ச்சி), (கச) சினேகம், (கஞ) சத்தம் (ஒலி), (கசு) புத்தி (அறிவு), (கள) சுகம், (கஅ) துக்கம், (கக) இச்சை, (உo) வெறுப்பு, (உக) பிரயத்தினம் (முயற்சி), (உஉ) தர்மம் (புண்ணியம்), (உங) அதர்மம் (பாபம்), (உச) வாசனை (சம்ஸ்காரம்) என்னும் இருபத்து நான்கு குணங்கள்.

கூ. கர்மம்:—நியாயமதத்தில் ஒப்பப்பட்டிருக்கும் (க) உத்கூபணம் (எழும்பல்), (உ) அபகூபணம் (வீழ்தல்), (ங) ஆகுஞ்சனம் (வளைதல்), (ச) பிரஸாரணம் (நிமிர்தல்), (ஞ) கமனம் (நடத்தல்) என்னு மைந்துவிதகர்மங்கள்.

சா. சாமானியம் :—நியாயமதத்தில் ஒப்பப்பட்டிருக்கும் பரம் (சத்தை) அபரம் (கடத்துவமுதலியன) என்னும் இருவகைஜாதி.

ஞ. விசேஷம் :—வைசேஷிகமதத்தில் பரமாணுக்களின் மத்தியில் அநேக அவகாசரூப பதார்த்தங்கள் ஒப்பியிருக்கின்றார்கள். அவை விசேஷமாம்.

கூ. சமவாயம்:-வேதாந்தமதத்தில் எங்கெங்கே தாதாத்மியசம்பந்தம் ஒப்பியிருக்கின்றார்களோ, அங்கங்கே நியாயமதத்தில் ஒப்பியிருக்கும் சம்பந்தவிசேஷம்(நித்தியசம்பந்தம்)சமவாயமாம்.

எ. அபாவம்:-(க)பிராகபாவம்(முன்இன்மை). (உ) பிரத்துவம்சாபாவம் (அழிந்தபின் இல்லாமை). (ங) அந்நியோந்நியாபாவம் (ஒன்றில் ஒன்றின்மை). (ச) அத்தியந்தாபாவம் (முற்றுமின்மை). (ஞ) சாமயிகாபாவம்(ஓர்சமயத்தில்லாமை) என்னும் ஐந்து விதமாகிய இல்லே என்னும் ஞானத்திற்கு விஷயமாகும் பதார்த்தங்கள்.

பூலோகமுதலியன எ:-

க. பூலோகம். உ. புவர்லோகம். ங. சுவர்லோகம். ச. மகாலோகம். ஞ. ஜனலோகம். கூ. தபோலோகம். எ. சத்தியலோகம்.

மௌனமுதலியன எ:-

க. மௌனம். உ. யோகாசனம். ங. யோகம். ச. திதிக்ஷை. ஞ. ஏகாந்த சீலத்துவம். கூ. ஆசையின்மை. எ. சமத்துவம்.

*ஞ எ. ரூபம் எ:-

---

*ஞ எ. கர்ப்போபநிஷத்தி.

க. வெண்மை. உ. கருமை. ங. பொன்மை. ச. செம்மை. ஞ. பசுமை. சு. புகைமை. எ. சித்திரம்.

வியசனம் எ:—

க. சரீரம். உ. மனம். ங. குரோதம். ச. விஷயம். ஞ. தனம். சு. இராச்சியம். எ. சேவகவியசனம்.

எண்வகைப்பதார்த்தங்ள்.

†அப்பிரமாதத்தின் குணங்கள் அ:—

க. சத்தியம், உ. தியானம், ங. சமாதானம், ச. விதிப்படி நடத்தல், ஞ. வைராக்கியம், சு. திருடாமை, எ. பிரஹ்மசரியம், அ. நாளைக்கு வேண்டுமென்று சேர்த்துவையாமை.

ஆநந்தம் அ:—

க. எப்போது மாலைமுதலிய விஷயங்களின் இலாபத்தால் அந்தந்த விஷயத்தின் இச்சை

† "सत्यं ध्यानं समाधानं चोचं वैराग्यमेव च । अस्तेयं ब्रह्मचर्यं च तथाऽसंग्रहमेव च ॥" என்பது சதத்ஸுஜாதீயம் ங-ம் அத்தியாயம்.

நீங்குகின்றதோ, அப்போது மனது அந்தர்முக மாகின்றது. ஆகவே அம்மனதில் எந்த ஆத்ம சொரூபத்தின் ஆநந்தம் பிரதிபிம்பத்தினை யடை கின்றதோ, அது விஷயாநந்த மெனப்படும்.

அல்லது, எப்போது விரும்பிய விஷயத்தின் அடை வுண்டாகின்றதோ, அப்போது இச்சை வடிவ சுஞ்சலமான இராஜசவிருத்தியினது நிவி ருத்தி யுண்டாகின்றது. கிடைத்த விஷயத்தின் ஞானவடிவ சாத்துவீகவிருத்தியினல் விஷய உ பகிதசேதனத்தின் சொரூபவடிவ ஆநந்தத்தின் விளக்க மூண்டாகின்றது. இந்த விருத்தி விஷ யவடிவ நிமித்தத்தா லுண்டாகின்றது. ஆதலால் இத்தவிருத்தி விஷயாநந்த மெனப்படுகின்றது.

அல்லது விரும்பியவிஷயத்தின் ஞானத்தால் இச்சையாகிய விருத்தி நீங்குகின்றது. அந்த இச் சையின் நிவிருத்திவடிவ நிமித்தத்தினலேயே வேறு அந்தர்முகவிருத்தி யுண்டாகின்றது. அ தனல் அந்தக்காண உபகித ஆநந்தத்தின் பான முண்டாகின்றது. இவ்வந்தர்முகவிருத்தி அல்ல து அந்தவிருத்தியி லுண்டாகும் சொரூபாநந்த த்தின் பிரதிபிம்பம் விஷயாநந்த மெனப்படுகின் றது.

இஷ்டவிஷயமான சந்தனம் மாலைமுதலான பதார்த்தங்கள் கிடைத்து, அவைகளையநுபவிக்கும்போது, இச்சைமறைதலாகிய நிமித்தத்தா லுண்டாகும் அந்தர்முகமனோவிருத்தியில் பிரதிபிம்பிக்கு மானந்தம் விஷயானந்தமாம்.

இதனையே பிரதிபிம்பானந்த மென்றும் இலேசானந்த மென்றும் கூறுவர். இதனால் பிரஹ்மாமுதல் எறும்புபரியந்தமான சர்வஜீவர்களும் நிர்வாகஞ்செய்கின்றனர்.

உ. சுழுத்தியில் அநுபவிக்கும் சொப்பிரகாச ஆனந்தம் பிரஹ்மானந்தம்.

ஈ. நித்திரையினின்றும் விழித்தபோது மயக்கமுடைய சுழுத்தியில் அநுபவித்த பிரஹ்மானந்தத்தின் வாசனையாகச் சொற்பகாலம் அநுபவிக்கும் ஆனந்தம் வாசனானந்தம்.

ஊ. பிரியமுள்ள வஸ்துக்கள் எல்லாவற்றினும் யானே அதிகப்பிரிய னென்று விவேகத்தாலறிந்தகாலத் துண்டாகும் ஆனந்தம் ஆத்மானந்தம்.

எ. யோகசமாதிகள் பழகுங்கால் அதில் நிராவரணமாகத் தோன்றும் ஆனந்தம் முக்கியானந்தம்.

சு. உதாசீனமடைந்த போதுண்டாகும் ஆநந்தம் நிஜாநந்தம்.

எ. துவைதமாகிய பிரபஞ்சாதிகளே உபேக்ஷித்து, அத்வைதமான தன்னை விவேகத்தால் நாடுங்காலத்திலுண்டாகும் ஆநந்தம் அத்துவிதாநந்தம்.

அ. மகாவாக்கியவிசாரஞானத்தினாலந்தக்கரணவிருத்தியில் பிரதீதியாகும் ஆநந்தம் வித்தியாநந்தம்.

சப்தசக்திக்கிரகண ஏது அ:—

க. வியாகரணம். உ. உபமானம். ங. கோசம் (நிகண்டு). ச. ஆப்தவாக்கியம். ஞ. விருத்த(முதியோர்) வியவகாரம். சு. வாக்கியசேஷம். எ. விவரணம். அ. நிச்சயிக்கப்பட்ட பதத்தின் சந்நிதி (அண்மை).

*ஞி அ. சமாதியினங்கம் அ:—

க. இயமம். உ. நியமம். ங. ஆசனம். ச. பிராணயாமம். ஞ. பிரத்தியாகாரம். சு. தாரணை. எ. தியானம். அ. சவிகற்பசமாதி.

---

*ஞி அ. சாண்டில்யதர்சனஞ்சியபநிஷத்துக்கள்.

ஏ பாசம் அ:—

க. தயை. உ. சங்கை. ங. பயம். ச. வெட்கம். ஞ. நிந்தை. கூ. குலம். எ. சீலம். அ. தனம்.

*ஞக. பிரகிருதி அ:—

க. பிருதிவி. உ. ஜலம். ங. அக்கினி. ச. வாயு. ஞ. ஆகாசம்.

கூ. மனம்:—இங்கே மன மென்றதனல் சமஷ்டிமனமாகிய அகங்காரம் கொள்ளப்படும்.

எ. புத்தி:—இங்கே புத்தி என்றதனல் சமஷ்டி புத்தியாகிய மகத்தத்துவம் கொள்ளப்படும்.

அ. அகங்காரம்:—இங்கே அகங்கார மென்றதனல் மகத்தத்துவத்திற்கு முன் சுத்த அகங்காரத்திற்குக் காரணமாயுள்ள அஞ்ஞானமாகிய மூலப்பிரகிருதி கொள்ளப்படும்.

*கூ0. பிரஹ்மசரியத்தினங்கம் அ:—

---

*ஞக. சாரீரகோபநிஷத்து.

*கூ0. கடோபநிஷத்து. நாரதபரிவிராஜகம்.

†க. ஸ்திரீயின் தரிசனம். உ. பரிசனம். ங. கேளி:—விளையாட்டு. ச. கீர்த்தனம். ஙு. குஹ்ய பாஷணம்(இரகசியமாகப் பேசுதல்). சு. சங்கற்பம் :—சிந்தனம்(ஸ்மரணம்). எ. நிச்சயம். அ. கிரியாஜந்நியசுகம் என்னும் அஷ்டமைதுனத்தினும் விபரீதம் அதாவது இவற்றின் இன்மை.

*சுக. பூரி அ:—

க. ஞானேந்திரியபஞ்சகம். உ. கர்மேந்திரிய

†க. காதலாய்த் தைய லாரைக்
காணுத லவர்மெய் தீண்டல்
கோதற வவரோ டாடல்
கூடா தவர்க்கீர்த் திக்க
நீதிறத் தனித்துப் பேசல்
சிந்தித்த றணிதல் சேர
மாதொடு கூட லெட்டு
மைதுந மென்னும் வேதம். (க)

எண்வகை மைது நத்தை
யெண்ணிடா தொழித்த யோகி
கண்படில் வினைகள் கோடி
கணத்தினிற் பறக்கு மென்னி
ணண்புட னவனை நாடி
நமிக வுபச ரித்தே
பண்பொடு போற்று வார்க்காம்
பயன்றனைச் சொல்ல லாமே. (உ)

*சுக. பைங்கலம்.

பஞ்சகம். ங. அந்தக்கரணசதுஷ்டயம். ச. பிராணதிபஞ்சகம். ஞ. பூதபஞ்சகம். சு. அவித்தை. எ. காமம். அ. மூவிதகர்மம் அல்லது வாசனை.

மதம் அ:–

க. குலம். உ. சீலம். ங. தனம். ச. அழகு. ஞ. யௌவனம். சு. வித்தை. எ. தவம். அ. இராஜ்யம்.

மூர்த்திமதம் அ:–

க. பிருதிவிமதம்:–அஸ்திமாமிசமுதலிய பிருதிவியினது தத்துவங்களி னபிமானம்.

உ. ஜலமதம்:–சுக்கிலசுரோணிதமுதலிய ஜலத்தினது தத்துவங்களி ன பிமானம்.

ங. தேயுமதம்:–பசிமுதலிய தேயுவினது தத்துவங்களின் மிகுதி.

ச. வாயுமதம்:–நடத்தல் ஓடுதல்முதலிய வாயுவின் தத்துவங்களோடு கூடியதன்மை.

ஞ. ஆகாயமதம்:–காமக்குரோதமுதலிய ஆகாயத்தின் தத்துவங்களோடு கூடியதன்மை.

சு. சந்திரமதம்:–குளிர்ச்சியாகிய சந்திரனது குணத்தோடு கூடியிருத்தல்.

எ. சூரியமதம்:—சந்தாப (குரோதாதிரூப) மாகிய சூரியனது குணத்தோடு கூடியிருத்தல்.

அ. ஆத்மமதம்:—வித்தை தனம் குலமுதலிய ஆத்மாவினது சம்பந்திகளினபிமானம்.

ஒன்பதுவகைப்பதார்த்தங்கள்.

*கூஉ. சம்சாரம் கூ:—

க. ஞாதா. உ. ஞானம். ங. ஞேயம். ச. போத்தா. ஞ. போக்கியம். சு. போகம். எ. கர்த்தா. அ. காரணம். கூ. கிரியை.

தத்துவம் கூ:—ஓர்மகாத்மாவினது மதத்தில் ஒப்பியிருக்கும் இலிங்கதேகத்தின் ஒன்பது தத்துவங்கள்.

க. சுரோத்திரம். உ. துவக்கு. ங. சக்ஷு—ம். ச. ஜிங்குவை. ஞ. கிராணம். சு. மனம். எ. புத்தி. அ. சித்தம். கூ. அகங்காரம்.

---

*கூஉ. முத்கலம்.

பத்துவகைப்பதார்த்தங்கள்.

*சுகூ. நாதம் கஂ:—

க. சிணீயெனல், உ. சிஞ்சினியெனல், கூ. கண்டாநாதம், ஃ. சங்கநாதம், நி. தந்திரிநாதம், சு. தாலநாதம், எ. வேணுநாதம், அ. மிருதங்கநாதம், கூ. பேரீநாதம், கஂ. மேகநாதம்.

சிங்காரமுதலிய ரசம் கஂ:—

க. சிங்காரம். உ. வீரம், கூ. கருணை. ச. அற்புதம். ஞ. ஆசியம் (சிரிப்பு). சு. பயங்கரம். எ. வியற்சம்(அருவருப்பு). அ. இரௌத்திரம். கூ சாந்தம். கஂ. பிரியபக்தி அல்லது ஞானம்.

*சுச. தோஷங்கள் கஂ:—

க. திருட்டு, உ. வியபிசாரம், கூ. ஜீவஹிம்சை, இம்மூன்றும் சரீரதோஷங்கள்.

---

*சுகூ. ஹம்ஸோபநிஷத்து.

*சுச. நிருஸிம்ஹதாபீவீயஉபநிஷத்து. (விசாரசாகரம்-ககூ பக்கம்-கஙி.)

க. பொய்மொழிதல், உ. பிறர்நிந்தை, ங. கடிஞ்சொல், ச. வீண்பேச்சு, இந்நான்கும் வாக்கின் தோஷங்கள்.

க. இச்சை, உ. சிந்தை, ங. புத்திமந்தத்தன்மை யென்னும் இம்மூன்றும் மனதின் தோஷங்கள்.

*சுரி. நாடியும் தேவதையும் கo:–

க. இடை(சந்திரன்) இடது மூக்கிலுள்ள சந்திரநாடி; விஷ்ணு தேவதை.

உ. பிங்கலை (சூரியன்) வலதுமூக்கிலுள்ள சூரியநாடி; பிரமா தேவதை.

ங. சுழுமுனை (மத்திமை) நாசியின் மத்தியிலுள்ள நாடி; உருத்திரன் தேவதை.

ச. காந்தாரி (வலது நேத்திரம்) இந்திரன்.

ஞ. அத்திசிங்ஙுவை (இடது நேத்திரம்) வருணன்.

---

*சுரி. பத்து என்பதனை தியானபிந்து, யோகசூடாமணி முதலியவற்றிற் காண்க. நாடிகள் கச என்றும் கூறுவர். அவற்றைச் சாண்டில்யதர்சனபாவனதியுபநிஷத்துக்களிற் காண்க.

கூ. பூஷ்ஷ (வலது காது) ஈசுவரன்.
எ. யசஸ்வினி (இடதுகாது) பிரஹ்மா.
அ. குகு(குதம்) பிருதிவி.
கூ. அலம்புடை (கந்தஸ்தானம்) சூரியன்.
கo. சங்கினி(நாபி) சந்திரன்.

பதிலைருவகைப்பதார்த்தங்கள்.

*சுசு. ஆநந்தம் கக:—

க. மநுஷ்யாநந்தம். உ. மநுஷ்யாகந்தர்வாநந்தம். ங. தேவகந்தர்வாநந்தம். ச. பிதிர்லோகாநந்தம். ஞ. ஆஜாநஜதேவாநந்தம். சு. கர்மதேவாநந்தம். எ. தேவாநந்தம். அ. இந்திராநந்தம். கூ. பிரகஸ்பதியாநந்தம். கo. பிரஜாபதியாநந்தம். கக. பிரஹ்மாநந்தம்.

ஞானசாதனம் கக:—

†க. விவேகம். உ. வைராக்கியம். ங. சமாதி

*சுசு. தைத்திரீயம்.

†க. பகுத்தறி விவேகத் தோடி
பகர்விரா கஞ்ச மாதி
தொகுத்திகி மாற வுப்தி
தயரொழி மூத்தி வேட்கை

ஷட்சம்பத்தி. ச. முமுக்ஷுத்துவம். ஞ. ஆசிரி
யர்வழிபாடு(விதிபூர்வகமாகக் குருவைச் சரண
மடைதல்). கூ. சிரவணம். எ. தத்துவஞாநப்பி
யாசம். அ. மனனம். கூ. நிதித்தியாசனம். கo.
மஞ்ஞாசம்:—இங்கே இரஜோதமோகுணங்களா
ல் சத்துவகுணம் திரஸ்கரிக்கப்படுதலாகிய மன
தின் ஸ்தூலத்தன்மை, மன மெனப்பட்டது. பி
ரஹ்மாப்பியாசத்தின் மிகுதிப்பாட்டால் இர
ஜோதமோகுணங்கள் திரஸ்கரிக்கப்பட்டுச்சத்வ
குணம் ஆவிர்ப்பவித்தல் மஞ்ஞாசமாம். கக. வா
சனாக்ஷயம்.

பகுப்புள வாசாற் சார்தல்
பகர்வது கேட்டல் ஞாந
மிகுத்திடப் பழக லத்தை
விசதமாச் சிந்தை செய்தல். (க)

நிதித்தியா சநம நத்தி
னிகழுசத் துவவி ருத்தி
கதித்திடா தடங்க லென்னுங்
கனமநோ நாச மூள்ளிற்
பதித்துள சம்ஸ்கா ரங்கள்
பற்றிடா தொழித்த லென்று
விதித்திடு மிவைகள் ஞான
மேவுசா தநங்க ளாகும். (உ)

பன்னிரண்டுவகைப்பதார்த்தங்கள்.

அநாத்மாவின் தர்மம் கஉ:—

க. அநித்தியம். உ. விநாசி. ங. அசுத்தம். ச. நாஸ்.ரு. க்ஷேத்திரம். சு. ஆசிரிதம். எ. விகாரி. அ. பரப்பிரகாசியம் :— (மற்றொன்றால் பிரகாசிக்கப்படுவது). கூ. ஏதுவுடையது. கஂ. வியாப்பியம்:—பரிச்சின்னம் (தேசகாலவஸ்துவிஞலாகிய பரிச்சேத முடையது). ககூ. சங்ஞ(சம்பந்த)முடையது. கஉ. ஆவிருதம்(மறைப்புள்ளது).

ஆத்மாவின் தர்மம் கஉ:—

க. நித்தியம்:—உற்பத்திநாச மில்லாதது.

உ. அவ்வியயம்:—ரூறைதலும் நிறைதலு மில்லாதது.

ங. சுத்தம்:—மாயை அவித்தையாகிய மல மில்லாதது.

ச. ஏகம்:—சஜாதீயபேத மில்லாதது.

ரு. க்ஷேத்திரஞ்ஞன்:—சரீரமாகிய க்ஷேத்திரத்தினை அறிபவன்.

கூ. ஆசிரயம்:—அதிஷ்டானம்.

எ. அவிகாரி.

அ. சோப்பிரகாசம்:—தனது பிரகாசத்தில் அ
ந்நியப்பிரகாசங்களின் அபேகையு யில்லாததாய்
எல்லாவற்றையும் பிரகாசிப்பது.

கூ. ஏது:—வலைக்குக் காரணமாகிய சிலந்தியை
ப்போலவும், °ஜகத்திற்குக் காரணமாகிய புருஷ
னப்போலவும் ஜகத்திற்கு அபின்ன நிமித்த [வி
வர்த்த] உபாதானகாரணமாம்.

கஂ. வியாபகம்:—அபரிச்சின்ன(பரிபூரண)ம்.

ஙக. சங்கமில்லாதது:— சஜாதீயவிஜாதீயசுகத
சம்பந்த மில்லாதது.

கஉ. அநாவிருதம்:—எவ்விதத்தாலும் மறைப்
பில்லாதது.

*பிராஹ்மணனது விரதம் கஉ:—

க. ஞானம். உ. சத்தியம். ஙூ. சமம். ச. தமம்.
நி. சுருதம்:—சாஸ்திராப்பியாசம். கூ. மாச்சரிய

---

* ज्ञानं च सत्यं च दमः श्रुतं च अमात्सर्यं ह्रीस्तितिक्षाऽनसूया। यज्ञश्च दानं च धृतिः शमश्च महाव्रता द्वादश ब्राह्मणस्य ॥ ஸதத்ஸ-ஜாதீயம் அத்யாயம்-ஙூ-ச-ஙஙூ.

மின்மை:—அந்நியாதுமேன்மையைச் சகியாமை யாகிய மச்சரமில்லா திருத்தல். எ. நாணம். அ. திதிக்ஷை. கூ. அசூயையில்லாமை :—குணத்தில் தோஷத்தை ஆரோபித்தலாகிய அசூயை யில்லா திருத்தல். கஂ. யஜ்ஞம். ககூ. தானம். கஉ. தைரியம்:—காமக்குரோதங்களின் வேகத்தைத் தடுத்தல்.

மகத்துவ(பெருமை)ஏதுவாகிய தர்மம் கஉ:—

க. செல்வம். உ. அபிஜனம்:—குடும்பம். ங. அழகு. ச. தவம். ஞ. சுருதம்:— சாஸ்திராப்பியாசம். சு. ஓஜசு:—இந்திரியங்களின்தேஜசு. எ. தேஜசு. அ. பிரபாவம். கூ. பலம். கஂ. பௌருஷம். ககூ. புத்தி. கஉ. யோகம்.

பதின்மூன்றுவகைப்பதார்த்தங்கள்.

பாகவததர்மம் கங:—பகவத்பக்தர்களது தர்மம்.

க. சகாமகர்மபலத்தின் விபரீததரிசனம்.

உ. திரவியம் கிரகம் புத்திரன்முதலியவற்றைத் துக்க மென்றும், சல மென்றும் அறிதல்.

கூ. பரலோகம் நிலையில்லாதது என்று அறிதல்.

சா. சத்தப்பிரஹ்மத்திலும் பரப்பிரஹ்மத்திலும் குசல (சாமர்த்திய) முள்ள குருவைநோக்கிச் செல்லல்.

நி. குருவினிடத்தில் ஈசுவரபுத்தியும் நிஷ்கபடசேவையும்.

சு. பரமேசுவரனிடத்தில் சகல கர்மங்களையும் சமர்ப்பித்தல்.

எ. பக்திவைராக்கியத்தோடுகூடிய சொரூபானுபவம்.

அ. சாதுசங்கம்.

கூ. சௌசம், தவம், திதிக்ஷை, மௌனம், சுவாத்தியாயம், ஆர்ஜவம்(நேர்மை), பிரஹ்மசரியம், அஹிம்ஸை, துவந்துவசமத்துவம் (சீதோஷ்ண முதலிய இருமைத்தர்மங்களைச் சகிக்கும் சுபாவம்).

கo. எங்கும் ஆத்மஸ்வரூபமாக ஈசுவரனைத்தரிசித்தல்.

(கக. கைவல்லியம்(தனிமையா யிருத்தல்), அநி கேதத்துவம்(வீடுகட்டாதிருத்தல்), ஏகாந்தம்(த னியிடம்), கந்தைவஸ்திரம், சந்தோஷம்.

கஉ. சருவபூதங்களிலும் ஆத்மாவின் ஐசுவரி ய முடைமையைத் தரிசித்தல், பகவத்வடிவமா கி ய ஆத்மாவில் சகல பூதங்களையும் தரிசித்தல்.

கங. ஜன்மம் கர்மம் வருணம் ஆசிரமமுதலிய வற்றுல் தேகத்தில் நிரபிமானமும், தான்பிற ரென் னும் புத்தி யில்லாமையும்.

பதினன்குவகைப்பதார்த்தங்கள்.

திரிபுடி கச:—

ஞானேந்திரியங்களின் திரிபுடி.

இந்திரியம்.	தேவதை.	விஷயம்.
அத்தியாத்மம்.	அதிதெய்வம்.	அதிபூதம்.
க. சுரோத்திரம்.	திக்கு.	சத்தம்.
உ. துவக்கு.	வாயு.	பரிசம்.
ங. சக்ஷு.	சூரியன்.	உருவம்.
ச. சிங்ஙுவை.	வருணன்.	இரசம்.
ஞ. கிராணம்.	அசுவினிகுமாரர்.	கந்தம்.

கர்மேந்திரியங்களின் திரிபுடி.

சு. வாக்கு.	அக்கினி.	வசனம்(கிரியை).
எ. பாணி.	இந்திரன்.	ஏற்றலிடுதல்.
அ. பாதம்.	வாமனர்.	நடக்தல்.
கூ. உபஸ்தம்.	பிரஜாபதி.	இரதிபோகம்.
கo. குதம்.	இயமன்.	மலத்தியாகம்.

அந்தக்கரணம் நான்கன் திரிபுடி.

கக. மனம்.	சந்திரன்.	சங்கற்பவிகற்பம்.
கஉ. புத்தி.	பிரஹ்மா.	நிச்சயம்.
கங. சித்தம்.	வாசுதேவன்.	சிந்தித்தல்.
கச. அகங்காரம்.	உருத்திரன்.	அகந்தை.

பதினைந்துவகைப்பதார்த்தங்கள்.

மாயையின் பெயர் கநி:—

க. மாயை. உ. அவித்தை. ங. பிரகிருதி. ச. சக்தி. நி. சத்தியை. சு. மூலை. எ. தூலை. அ. யோனி. கூ. அவ்வியக்தம். கo. அவ்வியாகிருதம். கக. அஜை. கஉ. அஞ்ஞானம். கங. தமசு. கச. துச்சை. கநி. அநிர்வசனீயை.

பதினறுவகைப்பதார்த்தங்கள்.

*சூஎ. அவஸ்தையும் அவஸ்தாபிமானியும்ககூ:-

க. ஜாக்கிரஜாக்கிரம். விசுவவிசுவன். உ. ஜாக்கிரசொப்பனம். விசுவதைஜஸன். ங. ஜாக்கிரசுழுத்தி. விசுவப்பிராஞ்ஞன். ச. ஜாக்கிரதுரியம். விசுவதுரியன். ஞ. சொப்பனஜாக்கிரம். தைஜஸவிசுவன். சு. சொப்பன சொப்பனம். தைஜஸதைஜஸன். எ. சொப்பனசுழுத்தி. தைஜஸப்பிராஞ்ஞன். அ. சொப்பனதுரியம். தைஜஸதுரியன். கூ. சுழுத்திஜாக்கிரம். பிராஞ்ஞவிசுவன். கo. சுழுத்தி சொப்பனம். பிராஞ்ஞதைஜஸன். ஙக. சுழுத்தி சுழுத்தி. பிராஞ்ஞபிராஞ்ஞன். கஉ. சுழுத்தி துரியம். பிராஞ்ஞதுரியன். கஙூ. துரியஜாக்கிரம். துரியவிசுவன். கச. துரியசொப்பனம். துரியதைஜஸன். கஞ. துரியசுழுத்தி. துரியப்பிராஞ்ஞன். ககூ. துரியதுரியம். துரியதுரியன்.

*சூஅ. கலை ககூ:-

---

*சூஎ. பரமஹம்ஸபரிவிராஜகோபநிஷதம்.

*சூஅ. பிரசிஞ்ஞோபநிஷத்து.

†க. இரணியகருப்பம். உ. சிரத்தை. ங. ஆகாசம். ச. வாயு. ஞ. தேயு. சு. ஜலம். எ. பிருதிவி. அ. தசேந்திரியம். கூ. மனம். கஅ. அந்நம். ககபலம். கஉ. தவம். கங. மந்திரம். கச. கர்மம். கஞ. உலகம். கசு. பெயர்.

†க. இரணிய கருப்பத் தோடிங்
கியல்சிரத் தைவிண்கா றீநீர்
தரணியிந் தியம நோந்நந்
தகுவலி மந்தி ரங்கண்
முரணிலாத் தவசு கன்ம
மொழிந்திடு முலகம் பேரே
திரமிலிவ் வீரெட் டான்மா
செறிந்திடாக் கலைக ளாகும். (க)

ஸ்ரீவிசாரசந்திரோதயம் பதினாறுங்கலை வேதாந்தபதார்த்தசம்ஞாவர்ணநம் என்பது முடிந்தது.

சுந்தர குரவன் றன்பாற் றுகளிலா விவ்வி சார
சந்திரோ தயமா நூலுட் டெரித்தவர் ஞானப் பேற்றுற்
பந்தம தொழிந்து மெய்ம்மைப் பரஞ்சோதி வடிவ மாய
வந்தமி லின்ப மெய்தி யழிவிலா திருப்ப ரென்றும்.

ஸ்ரீ விசாரசந்திரோதயம்.
முடிந்தது.

॥ ஓம் ॥

தஞ்சை பிரஹ்மஸ்ரீ ஷ்டபண்டித ஸ்ரீ வெ. சுப்புஸ்வாமி ராஜா
என்னும் பூர்வாசிரமநாமம் பூண்டிருந்த

ஸ்ரீ வி. பிரஹ்மானந்தஸ்வாமிகளால் மொழிபெயர்க்கப்பட்டு,

ஸ்ரீ சங்காவிலாசசாரதாமந்திரத்தில்

விற்பனைக்கு தயாராகவிருக்கும் புத்தகங்கள்.

ஸ்ரீபஞ்சதசி (பஞ்சதசப்பிரகரணம்) வாலியும் 1 & 2.	10— 0—0	ஹடயோகப்பிரதீபிகை (யோகநூல்)	... 2— 0—0
ஸ்ரீவிருத்திப்பிரபாகரம்	4— 0—0	ஸ்ரீவிசாரசந்திரோதயம் (வேதாந்தநூல்)	... 1— 8—0
ஸ்ரீவிருத்திரத்காவலி (வேதாந்தநூல்)	... 0—12—0	ஸ்ரீசிவஞானபோதம், தத்துவப்பிரகாசிகை உரையுடன்	1— 8—0
ஸ்ரீவிசாரசாகரம்	... 3— 4—0		

ஸ்ரீபாலபோதம் ...	1— 8—0
ஸ்ரீசாரதபக்திரூத்திரம்	1— 8—0
ஸ்ரீகந்திகேசவரகாசிகை	0— 4—0
ஸ்ரீஞானவாசிஷ்டவசனம் (வைராக்கியப் பிரகரணம்).	1— 4—0
ஸ்ரீசிவயோகப்பிரதீபிகை	0—10—0
ஸ்ரீசருத்திஷட்லிங்கசங்கிரகம் ...	0— 8—0
கைவல்யோபநிடதம், அமிர்தபிந்தூபநிடதம், சுகரகசியோபநிடதம், ஸ்கந்தோபநிடதம், செய்யுள்.	0— 5—0
ஸ்ரீபகவத்கீதை, கர்மகீதை, ஸப்தசுலோகிகீதை-இத்தான்பைண்டு	1— 4—0
ஸ்ரீசிவபஞ்சாக்ஷரவிளக்கம், ஸ்ரீராமமந்திரார்த்தம், ஸ்ரீகணேசஷோடசநாமஸ்தவம்	0— 4—0
ஸ்ரீஜகத்குருஆதிசங்கராசாரியர் சரித்திரம் செய்யுள்.	0— 3—0
ஷெ. ஷெ. வசனம். ...	0— 2—0
ஸ்ரீபிரஹ்மவிதாசீர்வாதபத்ததி ...	0— 2—0
தீருக்கெளுமுஹி-நியாயபதார்த்தம் பதிலுடன்	0—10—0
தத்துவமஸிமகாவாக்கியவுபதேசம் (உபநிஷத்)	0— 3—0

நாராயீவவாதக்கட்டளை
2-ம் பதிப்பு ... 0— 4—0
ஷை செய்யுள் ... 0— 3—0
விவேகசிந்தாமணி (வேதா
ந்தபரிச்சேதம்) ... 0— 6—0
அபரோக்ஷானுபூதி (வேதா
ந்தம்) ... 0— 8—0
ஆத்மபோதமும், தத்து
வபோதமும் ... 0— 8—0
ஸ்ரீபஞ்சீகரணமுதலியன
27-புத்தகங்கள் சேர்ந்தது 1— 0—0
உத்தரகீதை ... 0— 6—0
ஸ்ரீராமகீதை ... 0— 6—0
ஸ்ரீகுருகீதை, காலிகோ
பைண்டு ... 1— 4—0
ஸ்ரீகுருகீதை-ராப்பர் ... 1— 0—0

ஸ்ரீதேவிகீதை ... 0—12—0
ஸ்ரீஜகத்குருசங்கராசாரி
யர்படம் (பெரிது) ... 0— 2—0
ஷை (சிறிது) ... 0— 1—0
ஸ்ரீபிரஹ்மானந்தஸ்வாமி
கள் படம் ... 0— 4—0
ஸ்ரீஅறுமார்சீதாதேவிக்கு
கணேயாளி கொடித்தபடம் 0— 1—0
ஸ்ரீசங்கரவித்யாரண்யா
ஷ்டோத்தரசதநாமம்
கிரந்தம், நாகரம்,
தமிழ், தனித்தனி. } 0— 2—0
ஸ்ரீகுர்வஷ்டோத்தர
சதநாமாவளீ, நாகரம்,
கிரந்தம், தமிழ், சேர்ந்
தது. } 0— 3—0

ஸ்ரீசங்கரநீலகண்டாசாரியசம்வாதம்	0— 6—0
ஸ்ரீபிரஹ்மநாமாவலி, செய்யுள்	0— 2—0
ஸ்ரீபிரஹ்மநாமாவலி, நாகரம், கார்டு	... 0— 0—6
கீதாசாரத்தாலாட்டு	... 0— 6—0
ஸ்ரீநாராயணஸ்தோத்திரம் கார்டு, நாகரம்	... 0— 0—6
ஸ்ரீநாமசாமாயணமும், நாராயணஸ்தோத்திரமும், தமிழ்.	0— 1—0
ஸ்ரீஇராமாயண சூர்ணிகை நாகரி, தமிழ், தனித்தனி.	0— 1—0
ஸ்ரீகாயத்ரீராமாயணம், நாகரம்	0— 1—0

பிறர் பதிப்பு.

ஸ்ரீகணேசர்முதலிய அஷ்டோத்தரம் 21-அடங்கியது, தமிழ்.	0— 4—0
இராஜவிநாயகர் கும்மி	... 0— 1—0
அத்வைதவுண்மை	... 0— 4—0
அத்வைதவிளக்கம்	... 0—12—0
வேதாந்தசூளாமணி உரையுடன்	... 1— 8—0
வேதாந்தமனோசிந்தாமணி	... 0—12—0
ஞானயிபோதம்	... 0— 2—0

மெஞ்ஞானபோதம்	... 0—12—0
பிரஹ்மமும் அதன்வியக்தாவஸ்தையும்	... 0— 1—0
சர்வஞாஞேத்திரம்	... 0— 3—0
வேதசாரசமூத்தரணம்	0— 4—0
சங்கரதூவேஷி வாய்ப்பூட்டு	... 0— 4—0
ஞான்குமகாவாக்கியார்த்தம்	... 0— 2—0
மகாவாக்கியரகசியம்	0— 8—0
ஸ்ரீதக்ஷிணமூர்த்தியஷ்டகம்(கிரந்தம்-தமிழ்)	0— 2—0
தலயாத்திரை பொதுவிதி	0— 8—0
கங்காயாத்ராதீபிகை	... 1— 8—0
ஸ்ரீஜகந்நாத-ஹரித்வார	0— 2—0
விபூதிமாஹாத்மியம்	... 0— 1—0
விபூதி ருத்ராக்ஷிரமகாத்மியம்	... 0— 4—0
புட்பவிதியும் பலனும்	... 0— 3—0
சிவபூஜைத்திரட்டு	... 0— 3—0
சிவமஹிம்ந ஸ்தோத்திரம்	0— 2—0
சிவபுராணமென்னும் சைவபுராணம்	... 3— 0—0
திருவிளையாடற்புராணம்	2— 0—0
ஷை ஷை சாரவெண்பா	0— 2—0
சூதசங்ஹிதை	... 0— 2—0
சர்வஞாஞேத்தரம்	... 0— 2—0
அருணாஜல புராணம்	... 1— 4—0
திருக்காளத்தி ஷை	... 0— 8—0
அரிச்சந்திர ஷை	... 2— 4—0

திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரிய புராணம் 0—12—0
திருவேங்கைகோவை ... 2— 8—0
கந்தரநுபூதி உரையுடன் 0— 6—0
கந்தபுராணசாரசங்கிரகம் 0— 1—0
தூலாக்காவேரி மஹாத்மியம் ... 0— 8—0
சிவராத்திரி ஷை ... 0— 6—0
சமிவனகூடத்திர ஷை... 0 — 8—0
சிதம்பர ஷை (கிரந்தம்) 0 — 8—0
பிராசீனதர்மங்கள் ... 0— 4—0
நித்யாநுசந்தானம் ... 1— 8—0
மறுமுறைகண்டவாசகம் 0— 4—0
தேவாரத்திரட்டு(கண்ணுசாமி பிள்ளையால்)பெரியது 0 — 6—0
ஷை சிறியது ... 0— 2—0

தேவாரத்திரட்டு(அற்புத)0— 4—0
வைசியகுலவிளக்கம் ... 0— 4—0
சைவசித்தாந்தவரலாறு 0— 6—0
வேளாளசூளாமணி ... 0 — 4—0
புலால் மறுப்பு ... 0— 4—0
மகாபாரதம் (ஆதி-சபா பருவங்கள்) ... 1— 0—0
ஆநந்தராமாயணம் ... 5— 0—0
பாலராமாயணம் (கிரந்தம்-தமிழ்) ... 0— 6—0
பக்தலீலாமிருதம்வசனம் 3— 4—0
பட்டினத்தார் பிரபந்தம் 1— 4—0
ஷை விருத்தியுரை ... 3— 0—0
சுமாரதேவ்சாஸ்திரக் கோவை 0—12—0
அவதூதசம்வாதம் ... 0— 4—0

பிரபுலிங்கலீலை-செய்யுள்	1—	0—0	
சூசேலோபாக்யானம்(மூலம் உரையுடன்)	... 3—	0—0	
சாலடியார் (இங்கிலீஷ் -தமிழ்)	... 2—	0—0	
சைடதம் (மூலம்)	... 1—	0—0	
பெருந்திரட்டுகுறுந்திரட்டு	... 3—	0—0	
அணியிலக்கணம்	... 0—	4—0	
யாப்பிலக்கணம்	... 0—	3 - 0	
கல்லாடம் (மூலம்-உரை)	3—	4—0	
தொல்காப்பிய பாயிர விருத்தியுரை	...2—	0—0	
புலவராற்றுப்படை	... 0—	4—0	
பாட்டியல்கொத்து	... 0—	8—0	
திருக்காமிருதம்	... 0—	8—0	
பர்த்ருஹரிவைராக்கிய சதகம்	... 0—	4—0	
தலாட்டுபிரபந்தம்	... 0—	6—0	
திருப்புகழ்	... 0—	6—0	
ஸ்ரீகிருஷ்ணன்செய்திருப் புகழ்	... 0—	1—0	
மதுரைமீனாக்ஷிபிள்ளை தமிழ்	... 0—	4—0	
அகோரராந்தாதி	... 0—	1 - 0	
பதிற்றுப்பத்தந்தாதி	... 0—	2—0	
அழுக்கணிசித்தர்பாடல்	0—	1—0	
கட்டளைக்கொத்து	... 0—	1—0	
நான்மணிமாலை	... 0—	1—0	
கன்றுங்கனியுதவும்	... 0—	6—0	

ருக்மாங்கதசரித்திரம்	...	0	6—0
மூதலாவது கரிகாலன் ஆராய்ச்சி	}	0	12—0
திவேந்திரபாகசாஸ்திரம்		2	0—0
ஜோதிட பாலசிக்ஷை	...	0	6—0
ஜோதிட பிரபஞ்சசேகரம்		0	12—0
நவக்கிரகபலன்	...	0	2—0
நவக்கிரகசூக்ஷ்மதூரியநாடி		0	12—0
காட்வர்ட் ஹோ ! (Godward Ho !)	}	0	2—0
நீலக்கடலேபருப்புவிலே விவரம்	...	0	8—0
மெஞ்ஞான்க்கும்மி	...	0	4—0
ஸம்ஸ்கிருதபாலபோதம்		0	5—0
ஸம்ஸ்கிருத எழுத்துப் படம்.	}	0	0—6

நாவல்.

அநவத்யா	...	0	0—6
திலோத்தமா	...	0	0—6
பிருந்தை	...	0	0—6
விசுவநாதியம்	...	0	1—0
நீதிக்கதை	...	0	1—0
தங்கக்கிளி	...	0	10—0
சுந்தராராஜா	...	0	12—0
பஞ்சாயித்து நாடகம்	...	0	6—0
மதிமுகி (1- பாகம்)	...	0	4—0
மதிமுகி (2-பாகம்)	...	0	4—0